CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஓம் குமரகுருதாச குருப்யோ நம:

அத்தியாச்சிரம சுத்தாத்துவித வைதிக
சைவசித்தாந்த ஞானபானு
பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள்



சிவஞான தேசிகம்

கடவுளைக் குறித்த வியாசம்
தேவர்களைக் குறித்த வியாசம்
பரமசிவ மென்பதைக் குறித்த வியாசம்
வேதத்தைக் குறித்த வியாசம்
சமயங்களைக் குறித்த வியாசம்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

C.S.S.
CENTRE FOR SHAIVA STUDIES Puducherry

உ
குமாரஜெயம்
ஸ்ரீமத் குமரகுருதாச குருப்யோ நம:

திவோதய ஷடக்ஷரோப தேசம் என்னும்

சிவஞான தேசிகம்

ஒன்றாவது கடவுளைக் குறித்த வியாசம்
இரண்டாவது தேவர்களைக் குறித்த வியாசம்
மூன்றாவது பரமசிவ மென்பதைக் குறித்த வியாசம்
ஆறாவது வேதத்தைக் குறித்த வியாசம்
ஏழாவது சமயங்களைக் குறித்த வியாசம்
7–12–1925 தேதியிட்ட ஸ்ரீமத் சுவாமிகளின் நீண்ட கடிதம்

அத்தியாச்சிரம சுத்தாத்வைத
வைதிக சைவ சித்தாந்த ஞானபானு
பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள் அருளிச் செய்தது

வெளியிடுவோர்
N. ஜெயராமன்
குமரகுரு நூலகம்
27, புஷ்பாவதி அம்மாள் வீதி,
சென்னை - 600 033.
போன்: 4893298

மகா தேஜோமண்டலத்தார்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

முதற்பதிப்பு : 1893
இரண்டாம்பதிப்பு : 1969
மூன்றாம்பதிப்பு : 2001

Rs 150 00
விலை: ரூ. ~~55.00~~

அச்சிட்டோர்:
பாம்பன் பிரிண்டர்ஸ்,
46, சித்திரக்குளம் வடக்குத் தெரு,
மயிலை, சென்னை - 600 004.
தொலைபேசி எண்: 4951876

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஸ்ரீ மயூரநாதப் பெருமான்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

"பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள் நூலகம்
சுவாமிகள் சமாதி நிலையம், திருவான்மியூர்,
சென்னை - 600 041.
மஹாதேஜோ மண்டல சபை (பதிவு எண்: 15/1938)

ஓம்

ஸ்ரீமத் குமரகுருதாச குருப்யோ நம:

பதிப்புரை

பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச முனிந்திரர் தம்முடைய அனைத்துப் படைப்புக்களிலும் தெள்ளிதின் குறிப்பிட்டவாறு, அவர்களின் அருளாற்றல் அனைத்தும் ஸ்ரீ குமாரபரமேஸ்வரனது திருவருள் நோக்கே ஆகும்.

தங்கள் 13ஆம் வயதினில் சுவாமிகள் அருளிய "கங்கையைச் சடையிற் பரித்து" எனும் முதல் திருப்பாடலை எவர் நோக்கினும், இவ்வுலகில் பிறந்த ஒருவர் படித்து புலமைப் பெற்று எழுதியதாக அதைக் கணிக்க முடியாது. திருவருள் விலாசமே அவர்களுக்கு அந்த மேலான பேற்றினை அளித்தது என்பதை அனைவரும் உணர்வர். "குமரகுருதாச சுவாமிகள் பாடல்கள்" எனும் தங்கள் முதல் மண்டல நூலை அருளிச்செய்து கொண்டிருக்கும் போது ஸ்ரீ குமாரபரமேஸ்வரன், ஸ்ரீமத் சுவாமிகளுக்கு திவோதய ஷடக்ஷரோப தேசம் செய்து அருளினார்கள். அதன் ஆற்றல் கொண்டு, உலகோபகாரமாய் சைவ உலகத்தவர் யாவர்க்கும் எளிதில் உபயோகமாகும் பொருட்டு, "குளவிகள் பல பூக்களிலுள்ள தேனை கிரகித்தொன்றாய் கூட்டுவது போல" பல நூல்களின் சாரத்தை எல்லாம் ஒன்றாய் திரட்டி உள்ள மாபெரும் அருள் நூலே 32 வியாசங்களை உள்ளடக்கிய சிவ ஞானதேசிகம். யாதொருவாதாக உள்ள வாயிலை இடையிலா தடைப்பதற்குப் போந்தகபாடமாயும், விருப்புற்றதை நல்குங் கற்பகத்தை யொத்ததாயும், வேத வேதாகம புராண இதிகாச ஸ்மிருதி முதலியவைகளின் பொருள் நிச்சயங்களையும் துவைதாத்து வைத ஜெகசீவ பரலக்கண உண்மைப் பாடுகளையும் சுருதி, யுத்தி, அனுபவமென்னும் மூவகை மூலமாய் ஸ்தூலார்த்த சூட்சுமார்த்தத்துடன் ஐயம் திரிபற அதிஷ்டித்துக் காட்டத்தக்கதாக 1000 வினாவு தரங்களாய் 10 படங்களுடன் 32 வியாசமாக உள்ளதாகும் இந்நூல்.

ஸ்ரீமத் சுவாமிகள் பிறப்பையறுக்கும் பிரப்பன் வலசை யம்பதியில் 35 நாட்கள் நிட்டை சாதித்து செவ் வேட்பரமனின்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

உபதேசம் பெற்று, துறவற மேற்கொண்டு இல்லத்தை விட்டு வெளிப் போந்த பின்பு தாம் இயற்றியருளிய 32 வியாசங்களில் 24 வியாசங்கள் காணாமல் போயிற்று. மிகுதியான 8 வியாசங்களிலும் 31 & 32 ஆகிய இரு வியாசங்களே இப்போது அச்சிடப்பட்டுள்ளன. எஞ்சிய 6 வியாசங்களில் 5 வியாசங்கள் இப்போது பதிப்பித்து வெளியிடப்படுகின்றன. 1893 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட முதல் வியாசத்தின் முன்னுரையை நோக்கும் போது அனைத்து வியாசங்களுமே அச்சிடப்பட்டு, 2 பெரிய புத்தகங்களாக பைண்டு செய்யப்பட்டுள்ளன எனும் குறிப்பு தெரிகின்றது.

இப்போது முற்றிலும் கிடைக்கப் பெறாதவை அடியில் காணும் 24 வியாசங்கள் ஆகும்.

1. நான்காவது :- பிரம்மாவின் சிருஷ்டியைக் குறித்த வியாசம்.
2. ஐந்தாவது :- சுவர்க்கத்தையும் நரகத்தையும் குறித்த வியாசம்.
3. எட்டாவது :- சத்தியின் பூர்வத்தைக் குறித்த வியாசம்.
4. ஒன்பதாவது :- தேவர் ஆராதனையைக் குறித்த வியாசம்.
5. பத்தாவது :- திரு லீலைகளைக் குறித்த வியாசம்.
6. பதினொன்றாவது :- மாயையைக் குறித்த வியாசம்.
7. பன்னிரெண்டாவது :- கடவுள் காருண்யத்தைக் குறித்த வியாசம்.
8. பதின்மூன்றாவது :- கடவுள் வல்லமையைக் குறித்த வியாசம்.
9. பதிநான்காவது :- மதி விதிகளைக் குறித்த வியாசம்.
10. பதினைந்தாவது :- பிறவியைக் குறித்த வியாசம்.
11. பதினாறாவது :- சூதைக் குறித்த வியாசம்.
12. பதினேழாவது :- லாகிரியைக் குறித்த வியாசம்.
13. பதினெட்டாவது :- வலக்காரத்தைக் குறித்த வியாசம்.
14. பத்தொன்பதாவது :- கள்ளத்தைக் குறித்த வியாசம்.
15. இருபதாவது :- வியபிசாரம் முதலியவற்றைக் குறித்த வியாசம்.
16. இருபத்துரெண்டாவது :- அறத்தைக் குறித்த வியாசம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

17. இருபத்துமூன்றாவது :- சிற்றின்பம் பேரின்பங்களை குறித்த வியாசம்.
18. இருபத்து நான்காவது :- மோக்ஷத்தையுஞ் சுவர்க்கத்தையும் குறித்த வியாசம்.
19. இருபத்தைந்தாவது :- சரியையாதி நான்கு பாதங்களைக் குறித்த வியாசம்.
20. இருபத்தாறாவது :- கல்வியைக் குறித்த வியாசம்.
21. இருபத்து எழாவது :- பெரியாரைக் குறித்த வியாசம்.
22. இருபத்து எட்டாவது :- குருவைக் குறித்த வியாசம்.
23. இருபத்தொன்பதாவது :- சீடரைக் குறித்த வியாசம்.
24. முப்பதாவது :- ஐம்பொறியடக்கத்தைக் குறித்த வியாசம்.

மேலே குறிப்பிட்டபடி ஸ்ரீமத் சுவாமிகள் காலத்திலேயே அனைத்து வியாசங்களும் அச்சிடப்பட்டுள்ளன எனும் விவரம் இருப்பதால் ஒருசில பிரதிகளாவது எங்கேனும் எவரிடமேனும் இருக்கக்கூடும்.

மேற்கண்ட வியாசங்களில் ஏதாவது, மெய்யன்பர்களிடம் இருக்குமேயாயின் எங்களுக்குத் தெரிவித்தால் உடனே அதனை நகல் எடுத்துக் கொண்டு, கொடுத்து விடுவோம். ஏனெனில் அனைத்து வியாசங்களும் அடியார்களுக்கு கிடைக்க வேண்டும் என்பதே எங்களது குறிக்கோள். இதன் மூலமாக அனைத்து நூல்களும் உள்ளன என்ற மன நிறைவைப் பெறுவோம்.

இந்த ஞானநூல் வெளியீட்டில் மிகவும் ஒத்துழைப்புத் தந்த திரு. சத்குரு அவர்களுக்கும், மற்றும் திருவாளர்கள் A. கதிர்வேலனார், ப. வேணுகோபாலன், T. இராஜரத்தினம் அவர்களுக்கும் எனது மனமுவந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

இங்ஙனம்

N. ஜெயராமன்
குமரகுரு இல்லம்,
27, புஷ்பாவதி அம்மாள் வீதி,
மேற்கு மாம்பலம், சென்னை - 600 033.
போன்: 4893298

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஓம்

சரவணோத்பவ பரப் பிரம்மணே நம:

சிவஞான தேசிகம் முதற்பதிப்பின் பிரகடனம்

கர்த்தனருள் பற்றி உலோகோபகாரமாய் எவருக்கு மெளிதி லுபயோகமாம் பொருட்டு வசனரூபத்தில் குயிற்றிய இவ்வருமை நூலானது:— குளவிகள் பல மலரின் மதுவை கிரகித் தொன்றாய்க் கூட்டியது போல பல நூல்களின் சாரத்தையெல்லா மெடுத் தொன்றாய்த் திரட்டியதாகும். யாதொரு வாதமாகிய வாயிலை இடையிலா தடைப்பதற்குப் போந்த கபாடமாயும், விருப்புற்றதை நல்குங் கற்பகத்தை யொத்ததாயும், வேத, வேதாகம, புராண, இதிகாச ஸ்மிருதி முதலியவைகளின் பொருணிச்சயங்களையும் துவைதாத்வைத ஜகஜீவ பரலக்கண வுண்மைப் பாடுகளையும் சுருதி யுக்தி அனுபவ மென்னும் முவ்வகை மூலமாய் ஸ்தூலார்த்த சூட்சுமார்த்தத்துடன் ஐயம் திரிபற அதிஷ்டித்துக் காட்டத் தக்கதாயும் 32 வியாசங்களாய் 1000 வினாவுத்தரங்களாய் 10 படங்களுடனேற்பட்ட 2 பெரிய புஸ்தகங்களாயுமுள்ளது.

வாசிக்கும் போதே ஆநந்தத்தை விளைவித்து அதி ரசத்தையூட்டும். விவரிப்பதென்றால், இச்சிறிய காகிதம் இடந்தராது; பார்த்தே தெளியற்பாற்று.

இங்ஙனம்
சா. முத்தையா பிள்ளை
தெற்கு வீதி, பாம்பன்

'சிவஞான தேசிகம்' என்ற பதம் சிவஞானத்தை யருள்வதில், ஆசாரிய பீடமாய்ப் பிரகாசிப்பதொன்றாம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

உ

ஓம்:

ஸ்ரீ சரவணோத்பவ பரப்பிர்ம்மணே நம:

திவோதய ஷடக்ஷரோபதேசம் என்னும்

சிவஞான தேசிகம்

பாயிரம்

காப்பு

கலிவிருத்தம்

ஆதி யாயு மனாதியு மாய்ப்பரஞ்
சோதி யாயுந் துலங்கு சர்வேசுர
பூதி யாமெய்ப் பொருள்புகழ் ஷண்முக
சோத ரன்கய துண்டனைப் போற்றுவாம்.

வழிபடு கடவுள் வணக்கம்

எழுசீரடியாசிரிய விருத்தம்

சொல்லும் வேத சொரூப மாகி சொரூப மும்ம தீதமாய்
எல்லை யற்ற வியோம மாகி யெங்கு மான பராபரம்
இல்லை யென்று மிருப்ப தென்று மிசைக்கொ ணாதொரு (சூக்கும
வல்ல பப்பொரு ளென்னு ளத்துறை மாகு கன்றனை (வாழ்த்துவாம்.
2

அறுசீரடி யாசிரிய விருத்தம்

அருமறை பெருக வாண்ட வகத்தியர்க் குபதே சித்த
ரவனைக் கீரற் கன்று குணவடி கொடுத்திட் டானை
புருணிறை யருணை யானை யடிமைகொண் டானை யெந்தன்
இருதய முறையா சானை யேத்தியே போற்றி செய்வாம். 3

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

நூற்பயன்

கலி விருத்தம்

கற்ற வற்குங்கல் லாதவர்க் கும்மிது
உற்ற செத்தை யொழிக்கு மறைநெறி
பற்றும் பண்பு பயிற்று மிருவகைப்
பற்று நீத்துப் பரத்தி லிருத்துமே. 4

இதுவுமது

வான நாயகன் மான்மியஞ் சொல்சிவ
ஞான தேசிக மென்னுநன் னூலிதைத்
தானஞ் செய்பவர் சாற்றுவர் கேட்பவர்
ஈன மற்று விகபரத் துய்குவர். 5

நூற்பொருள்

அறுசீரடியாசிரிய விருத்தம்

சதுர்மறை சாத்தி ரங்கள் சாற்றிய புராண மற்றும்
விதியியல் கலைக ளுண்மை விளக்கியுட் சமய நாட்டிப்
பதிபசு பாசங் காட்டிப் பரஞ்சுட ராறெ முத்தைக்
கதிபெற வுபதே சிக்குங் கணக்கிது காட்டு மாமால். 6

நூலியற்றிய காரணமும் அவையடக்கமும்

எழுசீரடியாசிரிய விருத்தம்

ஆதார தேவ வருள்வந்து கூடி யாநந்த வாழ்வு றுகுரு
ஆதார மான முந்நூலி லுள்ள வதிகார முறைபி றழ்வுறா
ஆதார மாக வாதாடு சீட ரறியவறி வித்த திதனை
*ஆதான மாக மாபேணு மறிஞ ராள்வினை பரிந்து கொள்வார்.

"ஆதானமாக மாபேணுமறிஞ ராள்வினை பரிந்து கொள்வார்" என்றது அறிவைப்பேணு மறிஞர்கள் ஸ்திரமாக வேணுமென்று அன்போடு முயற்சித்துக் கொள்வார்களென்பதாம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஆக்கியோன் பெயர் முதலியன

எண்சீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்

பொய்யாத சீராமன் பூசை கொண்ட
புநித சிவம் வளரும்ரா மேச்சுரத்தி
னையணவு பாம்பனெனும் பதி யுடையா
னலநிகழு மகம்ப்டிய மரபில் வந்தோன்
ஐயேறு மைமுகவ னருளா லேசாத்
தப்பனுத வப்பாவு வெனுநா மத்தோன்
ஐயாறு ளோனடிக்கு மரகு ருதா
சன்னென்ற பெயர்வாய்ந்தி தளிக்க லானான்.

பாயிர முற்றிற்று.

குமரகுரு கோமான் திருவடி வாழ்க.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

நூல் வரலாறு

உபராக சராங்கனுக்கு உண்மைப் போதகன் போதிக்க வெளியாதல்

அனுமான தேச வாசியான *உபராக சராங்க னென்பவன் தனுகரண புவனபோகங்களைத் தனதென நேசித் தனுபவித்து வந்ததாலெய்திய பவப்பிணிகள் அவனினெவ்வித முயற்சியானுந் தொலையாமை கண்டு இனி யாஞ்செய்வ தொன்றுங் காணேம் ஆனால் கடவுள் வத்சலமுளார்களெனு மகான்கண்மூலம் இது. தீர்ந்தா லொருவாறு தீருமென்றெண்ணி தன்பதி விட்டு ஸ்ரீபகவானை நோக்கித் தவமியற்றற் குரித்தாகிய சிரத்தை மாநகரில் வந்திருக்குங்கால் ஆங்குள்ள உண்மைப்போதகன் என்னும் ஓர் விற்பனன் தானே வெளிப்பட்டான். அவனை உபராக சராங்கனுற்று நோக்கி இவர் புண்ணியமுள கண்ணியவானாயிருக்கலாம். இவரிடத்து நந்துயரை நவில்வது தகுதியென்றுள்கி ஓ! உத்தம புருஷரே! எமக்குற்ற துன்பு தீர்த் தருளுமென்று தண்டாகாரமாய் வீழ்ந்து வணங்கி வாழ்த்தினான். அதுகண்ட உண்மைப் போதகன் அவனின் பெயரூரெல்லாந் தீர்க்க விசாரித்து நீ அஞ்சேலென்றாதரவு கூறி ஏ! ஆர்வமுடையாய்! நின்பதி துறந்து விசேஷமுள விப்பதியை நீ மிதித்த போழ்தே, நின் கம்பலைகளனைத்துங் கால்கூட்டியோட்டம் பிடிக்கத் தலைப் பட்டுவிட்டன. ஆயின், கடவுளை நன்றாய்த் திரிகரணமொத்து விசுவாசித்து அன்பு பாராட்டி யடிமைத்தரம் பூண்பாயேல், உற்ற பவப்பிணி யொல்லையி லொழியுமென்றான். அஞ்ஞான்று அவன், ஓ!. ஐயா! கடவுள் என்றவோர் மொழியை யான் கேட்டதும் எழுதப் பார்த்ததுமே யொழிய அவரை யான் கண்டிலேன். அவரித்தன்மை யுடையாரென்று மறிந்திலேன். ஆகலால் சுவாமிகள் தானே அது நன்கு புலப்படத் துலக்கமாய்ச் சொல்லி யருளவேண்டு மென்றனன். அஃதோர்ந்த போதகன்:- அப்படியாயின் திராவிட

*உபராகமென்பது :உபத்திரவம். அதாவது:- பிரபஞ்சவாசனை, சராங்கனென்பது: ஷ உபத்திரவத்திற்றராளமானவன்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

வசனரூபமாய் குரு சிஷிய சம்வாதமாயுள்ள திவோதய சடக்ஷரோபதேச மென்னும் சிவஞான தேசிகமாம். நூலைச் சம்பூரணமாய்க் கேட்பாயேல் பிறவும் விசாரிக்கவேண்டிய தொன்றுமிராது. நின் பழம் பவநோயுஞ் சிதைந்துபோம் என்றது கேட்ட உபராக சராங்கன் ------- அங்ஙனம் மிகவும் வயாவுற்று ஓ! மெய்யுடையையா! அப்படிப்பட்ட குரு சிஷிய சம்வாதம் எப்போது நிகழந்ததென்றும், அஃதெப்படி யுண்டாயிற்றென்றும், அக்குரு சிஷிய ரெங்குளாரென்றும் அவரபிதான மின்னதென்றும், அவர்கதி யென்னவென்றும் பிரசாதித் தருளவேண்டு மெனலும்; அவ்வுண்மை போதிப்போன், வழிபடு கடவுளை வந்தித்து வழங்கத் தொடங்கினான்.

கடவுட் பிரதாபம்

அநந்தரம் ஜ்ஞானாநந்தைகஸ்வரூபம் ஜ்ஞான சக்தி யாதி கலியாணகுண கணநிலயம், சர்வஜகத் ஸர்க்கஸ்திதி ஸம்ஹார கர்த்தவ்யம், தர்மார்த்த காமமோக்ஷாக்ய சதுர்வித பலப்பிரதர விலக்ஷண குருமூர்த்தம், நித்யம், நின்மலம், நிராமயம், நிரம்பரம் நிரந்தரம், சச்சிதாநந்தம், சுத்த சித்த முக்த பரமான்ம பாபநிவாரண காருண்ய சர்வ ஜீவதயாபர விராட் பரப்பிர்ம்மமென விளங்காநின்ற ஸ்ரீகுமாரஸ்வாமியின் பதாம் புஜங்கட்கு ஏகாங்க, துவிதாங்க திரிவிதாங்க பஞ்சாங்க சாஷ்டாங்க, அஷ்டாங்கமாக வந்தித்துவழிபடு வார்கட்குச் சிந்தித்த பொருள் கைகூடும்.

ஓம் தத்ஸத்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

குரு சிஷிய சரித்திர சூசகம்

ஏ! உபராகசராங்கா! கேள். கலியுகாதி வருஷம் 4990-ன் மேற் செல்லா நின்ற சாலிவாகன சகாப்தம் 1811 - ல் நிகழும் சர்வதாரி வருஷத்தில் அந்த சம்வாதம் தாராளமாய் நடந்ததாகும். விவரம் - பஞ்சபூத பிரவிருத்தியால் நல்வள மோங்கிய அங்க தேசத்திலுள்ள ஹிருதயபுரி வாசியாகிய விவேக பூரண னென்னும் *வித்யாரண்ய ஸ்வாமிகளென்ற ஓர் சத்புருஷனிடம் என்று மிடைவிடாப் பணிவிடைக் கெதிர்பார்த்திருந்த விஷயப் பிரியனாகிய குதர்க்கியென்னும் ஓர் சிஷியன் அதிச்சிறிய பிராயம் தொட்டு அவரண்டையிலிருந்தனன். அப்பாலவனுக்குக் கௌமார திசை சமீபிக்கும் போழ்து அக்குருவுக்குரிய பணிவிடைகளை மறந்து, விஷய சுகங்களை வியந்து எக்காலிவரைக் கடந்தேகுவோ மென் றெண்ணுற்று, அவ்வாசிரியர் பராமுகங்கண்டு, திருஷ்டிக்குத் தென்படாது விரைவில் விரைந்து வேற்றுழி புக்கனன்.

அவ்வாறு புக்கிய விஷயப்பிரியன், பல்லிடங்களுஞ் சென்று பல் பொருள்களையு மிச்சித்துத் திரியா நிற்கையில், தனக்குத் தெரிந்த சுவல்ப வித்தையைக் கொண்டே தன் கருத்திற் கிணங்கலான சிற்றின்பக் கதைகளையும் கட்டுக் கவிகளையும் சங்கீதப் பாடல்களையு மிக விரும்பிச் சிரவணஞ் செய்தும், அப்புத்தகங்களை அகோராத்ரம் வாசித்தும் மனனம் பண்ணியும், அதின் சங்கதிகட்காகச் சித்த சன்னதை கொண்டும் வரும் போழ்து, தனக்குள்ள நுண்ணிய மனதைத் துணை கொண்டு வேதாகம புராணப் பிரசங்கிகளிடம் பலமான விபரீத குதர்க்கங்களைச் செய்யவுந் தொடங்கினான். அப்படி அவன் செய்யும் விவாதங்கட் கனேகர்களாற்றாது மதி மருண்டேகினார்கள். இவ்வண்ணமாய்க் குதர்க்கங்கட்குரிய விர்த்தாந்தங்களை வெளியிடுவதற்காக உட்சமய புறச்சமயங்களினூல்களையும் கற்றுக் கொள்ளவுமானான். கற்றதினும் தன்னுடைய யுக்தியாகிய சாமார்த்தியத்தால் அளவறு நாவன்மை கொண்டு ஆதியு மந்தமு மற்றென்றுமுள சர்வேசுவரனையு மில்லை யெனவே மனப்பூரணமாய்ச் சாதித்து நிரீச்சுரவாதியாய், தன்னுட்டானே இந்த ஜீவேஸ்வர ஜகத்தையும் ஓர் வகையாய்த் தீர்மானித்திதனை யெண்ணலுற்றான்.

---

* வித்யாரண்யனென்பது - கல்வியென்னுங் கானகத்தில் வசிப்போன்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஆதியில் நாம் பணிவிடை புரிந்த குருவானவர், ஏதோ தேவனொருவனுண் டென்றது போற் பிதற்றும் வீண் கதைகளை நம்பி அநேகமாய்த் தன்னுடைய இஷ்ட காம்யார்த்த நோக்கத்தை யெல்லாங் குறைத்து இலவு காத்த கிள்ளை போலல்லவா இன்னுமிருக்க வேண்டும். ஐயோ என்ன துன்பம்! அவருக்கு நாம் இது காரியத்தைச் செவ்வென வெடுத்துரைத்து அவரவலப் பிடிப்பைவிட்டு நீக்குவது நன்றென வுள்கியும், நம் வழியிலவரைத் திருப்புவது தான் தகுதியெனவுமாகச் சிந்தித்து அவ்வாசிரிய ரிருப்பை நோக்கினான் குதர்க்கி.

அங்ஙனமவனேகிய தெவ்வண மிருந்த தென்னில், உவர் சம்பந்தமாயுள்ள ஒராறானது, பல வாவி கூவங்களையுந் தன் சார்புறப் பரவியெழுந்து, நன்னீர்ச் சாகரத்தையுங் தன்னின மாக்குவேனென, அடர்ந்து பாய்ந்தது போற் காண்டலாம்.

இவ்விதமாயெய்திய அவ்விஷயப் பிரியன், ஆசாரியராகிய வித்யாரண்ய ஸ்வாமிகளைத்தரிசித்து அவர் பாதங்களில் வீழ்ந்து வணங்கி, ஓ! ஐயன்மீர்! யான் தங்கள் சிஷியனாகிய விஷயப்பிரியனாகும்; இதன் முன்னந் தேவரீர் செலவின்றிச் சென்ற தொன்றே தமியேன் பேரிற்றாழ்வு; அதை க்ஷமித்துக்கொண்டென்னை யாசீர்வதிக்கப் பிரார்த்திக்கின்றே னென்றனன். அம்மொழிகேட்டகுரவர் ஓ! விஷயப் பிரியா! நீ இயற்றிய தவறெத்தனையாயினும் அவைகளை யாஞ்சிந்திக்கத்தக்க தெட்டுணையேனுமில்லை. நீ விவேகியாயி யங்கவேண்டுமென்ற தொன்றே சிந்திக்கத்தக்கதாயிருக்கும். ஆதலால் நீ இதுவரை எந்நிலைமையுற்றாய்? இஞ்ஞான்றிவண் வந்ததேதுக்கு? இயம்புதியென்றனர். ஈதுரையோர்ந்த குதர்க்கி குயிலலுற்றான் - ஓ! எனது நற்புருஷோத்தம சாமீ! யானென்னுணர்வுக்கியன்ற மட்டும் நல்ல தீர்மானத்திலேயே இருக்கின்றேன். அதில் தங்களுடைய தீர்மானமுஞ் சாதிப்பு மெத்தன்மைத்துள? அதை எனக் கறிவிக்க வேண்டுமென்றும் அப்படி யறிவிக்குங் காரியங்கட்கு முதற் காரணமெது வென்றும் முதலிற் சுருக்கி

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

யுரைக்கக் கோருகின்றே னென்றனன். அதற்கு வித்யாரண்ய சுவாமிகள் விளம்பலுற்றார்; கேளா யன்புடையாய்! எக் காரியங்கட்கு முதற்காரணம் ஈஸ்வரனாகிய கடவுள். இதையலாது வேறு காரணம் யாதொன்று மில்லவே யில்லையென்றனர். அதைச் செவிக்கெடுத்த சிஷியன் தன்னுடைய அபிப்பிராயத்தை யதிஷ்டித்திடற் கிதுதான் றருணமென்றெண்ணி குருவுடன் குதர்க்கங்கள் செய்ய முயன்றான்.

குரு சிஷிய சரித்திர சூசகம் முற்றிற்று.

சகல கலாவல்லபன் சரணம் வாழ்க.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஸ்வாமிகள் சமாதி நிலையம், திருவான்மியூர்,
சென்னை - 600 041.
மஹாதேஜோ மண்டல சபை(ஸ்தாபிதம்:192
(பதிவு எண்:15/1988)

ஓம்:

பாலசுப்ரமண்ய பரப்பிர்ம்மணே நம:

1-வது

கடவுளைக் குறித்த *வியாசம்

சம்வாதம்

(1)

சிஷியன்:- கடவுளென்பது என்ன?

குரு:- என்றும் நித்திய வஸ்துவாய், எங்குஞ் சர்வ வியாபகமாய், என்றுஞ் சர்வ காரணமாய், அருவாய், உருவாய் சர்வ வல்லபமாய்த் தானதுவா யிருப்பதெதுவோ அதுவே கடவுளாம். அக்கடவுளே சர்வ நியாயமுள்ள சத்திய பரிசுத்த தேவனாவார்.

(2)

சிஷி:- இப்படிப்பட்ட வாக்கியங்க ளாகச் சொல்லியதைத் தவிர அந்தக் கடவுளென்றொருவர் எவற்றுளுந் தலையாயிருக்கிறா ரென்பதை நான் அடியிற் சொல்லுங் காரணங்களால் இல்லையென்றே மெய்ப்பிக் கின்றேன். தாங்கள் ஞாபகமாய்க் கேட்கவேண்டும். சாதாரணத்தில் மனிதர்களிலனேகர்கள் தங்கட்குச் சங்கடஞ் சம்பவித்தபோழ்து, கண்கெட்டவனே! சண்டாளா! பாழுந் தெய்வமே யென்று நினைந்த வண்ணம் ஏசுவதையும், அநியாயமாய்க் கொலைகள் செய்வதையும், சத்திய விரோதமாய் மனதாரப் பாவங்கள் செய்வதையும் பெரும்பாலும் நாம் கண்ணாற்பார்த்து வருகிறோம். இவைகளெல்லாம் கடவுளானவர்க்குப் பிரியமில்லாது போற் காட்டுந் தங்கள் சம்மத நியாயப் படிக்கு அக்கடவுள் அப்போதைக்கப்போது அப்பாவங்கட்குரிய ஜீவர்களைத் தண்டிக்கப் படாமல் இவ்வுலக விராஜாங்கத்தாரால் ருஜுவறிந்து ஏதோ நியாயம் புலப்பட்டமட்டும் செய்வதிலும் அனேகமாய்த் தப்பியும் விடுகிறது. அனேக குற்றங்கள் மறைவாகியும் விடுகிறது. இது நிச்சயமே. இவைகளையெல்லாந் தெரியுங் கடவுளிருப்ப

* வியாசமென்பது - பகுத்தறிதலென்றாம்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

துண்மையாயின், அவர் சத்தியத்தின் பொருட்டு வெளிப்பட்டு அக்காரியங்களை யெப்போதாவது செய்திருக்கவேண்டும். அப்படிச் செய்யவுமில்லை. ஏதோ முன்னமே சிலதுகள் அப்படி நடந்திருப்பதாகச் சொல்கிற வார்த்தைகளும் புத்தக வாக்கியங்களுமே தவிர நாம் நம்பற்குரிய தொன்றுமில்லை. அன்றி, தாங்கணவின்றபடி கடவுளரூபி யெனினும் இப்படிப்பட்ட சமயங்களில் நியாயத்தினிமித்தம் அவருடைய சர்வ வல்லமை போய்விடத்தக்க தல்ல. மேலும், நீதி பரிபாலனத்தினிமித்தம் ஒருவனையவரே தண்டிக்கும் பக்ஷத்தில், மற்றவனும் அநியாயஞ் செய்யத் தக்க தன்று. அது விடயம் மிகவேண்டியதில்லை. ஆகாயத்திலிருந்து ஒரு கல்லை அவன்றலையில் விழும்படி செய்தாலே போதும். இப்படிக்கெல்லாம் ஒன்றுங் காணப்படாததால், யாவு மனிதர்களுடைய சுபாவத்திற்குத் தக்க செயலாகவே யிருந்து கொண்டிருக்கிறதென்பதுண்மையே. இதனால் கடவுளென் றொன்றில்லை யென்றும் அது வலியவரை எளியவர் காரியங் கொள்வதற்காக வேற்படுத்திய வற்புறுத்து வாக்கிய மென்றும் நிச்சயமாயறியலாமே.

குரு:- நீ,யிப்பொழுது சொன்ன யுக்தி சமாசாரங்களெல்லாம் கடவுளை யில்லையென்று காட்டியா போகும் காட்டாது. ஆதியந்த மற்றவனான பராபரன் நீதி பரிபாலனமானது மிகவும் பரிஷ்காரமாகவேயிருக்கிறது. கடவுள், ஒருவன் செய்த அநியாயத்தைக் கண்டு தண்டிக்க உலகத்தி லரசர்களையு நியமித்து அந்தப்படி குற்றத்திற்கான தண்டனையையும் விதித்து வருகிறார். நியாயாதிபதி நியாயத்தைக் கொடாவிடில் அவன் செய்யும் அநியாயத்திற்கு அவன் வேறு தண்டனையை யடைவான். தகுந்த ருஜுவேற்படாமற் குற்றத்திலிருந்து ஒருவன் விடுதலை யாவானே யாகில் அந்த ருஜுவை எவனாற் கெடுக்கப்பட்டிருந்ததோ அவனையும் அதற்குடன் பட்டவனையும் தேவ நியாயத்திற் றெண்டிக்கப்படும். இப்படிக்கெல்லாம் வல்லவனாகிய கடவுள் எவ்விடத்து மிருந்து நியாயங் கொடுக்கிறாரே யலாமற் கொடாமல் விடத்தக்கதன்று. இவ்வாறு அவருடைய நீதி பெருகிக்கொண்டிருக்கும் பொழுது அவர் ஒருவன் றலையில் ஆகாயத்திலிருந்து கல்லைத் தூக்கிப்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

போடவேண்டிய தவசியமன்று. நிற்க, ஒருவன் குற்றஞ்செய்த காலமானது தீவினை யென்னும் விதையை விதைத்த காலமாகும். அவ்விதை முளைத்துத் தழைத்துப் பூத்துக் காய்த்துப் பழுக்கும் போது பலனாய்வருகும். ஆதலால், தேவ நிந்தை முதலியவைகளுக்காக, அவரப்பொழுது கோபப்பட வேண்டியதுமில்லை. அவர் மிகவுஞ் சாந்தமுடையவரே.

நீ, எல்லாம் மனிதருடைய சுபாவத் தன்மையென்று காட்டுகிறாய். அந்தப்படி மனிதருடைய சுபாவ காரியங்களுமுண்டு. அதிலற்பத்தொழில்க ளெல்லாஞ் ஜீவர்களையே குறிக்கும். பஞ்ச பூதங்களாகிய ஆகாயம் வாயு அக்கினி ஜலம் மண் முதலானவைகளை மனுஷன் சிருஷ்டிக்கவறியான். அவைகளை யிரக்ஷிக்கவு மறியான். அவைகளைக் கெடுக்கவு மறியான். ஆதலால்:- மலரகிதனாகிய சருவேசுரன் ஒருவ னுண்டென்றும், அவைக ளவனாற்கூடு மென்றும், அவைகள் பிரமணாதீதமான பெரிய காரியங்களென்றுந் தெளிவாகவே யிருக்கின்றன.

(3)

சிஷி:- பஞ்சபூதங்களை மனிதனுண்டு பண்ண மாட்ட னென்றும், அவைகளை யிரக்ஷிக்கவுங் கெடுக்கவு மறியானென்றுந் திருஷ்டாந்தஞ்செப்புவது சரியன்று. ஏனெனில், நீராவி எந்திரத்திலிருந்து ஜலத்தையும், வாயுவில்லாத விடத்தில் ஊதும் அல்லது அசையும் எந்திரத்தால் வாயுவையும், அக்கினியில்லாத வமயம் கந்தக மருந்து அல்லது கடினக்கடைசலிலிருந்து அக்கினியையும், சில ஓஷதிகளின் சேர்க்கை சிகிச்சையின் மூலம் மண்ணையும், ஆகாயந் தோன்றா விருட்டறைக்குள் பிரகாசத்தைக் கொடுக்கும்படிக்கான தீபமேற்றி அவ்வுழி நல்ல ஆகாயத்தையும், சகஜமாய் மனிதர்க ளிப்பொழுது முண்டுசெயத் தாங்களும் வீக்ஷணித்திருப்பீர்கள். அவைகளை இரக்ஷித்து நசிப்பிக்குந் தன்மையும் அப்படியே கூடும். அதுபோற் பெருக்க வனையுந் திரமுடை மனிதருமுண்டென்று நிச்சயிக்கலாமே -- தாங்களிதன் மேலும் வலத்திடத் துணிவது யாதோ?

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

குரு:- மனிதன், அப்படிக்கெலாங் காரியப்படுத்தி எந்த வானத்தையும், எந்த பூமியையும் சிருஷ்டித்தானோ வறியேம்! மேலும் மனிதன் அவைகளைச் செய்வது எந்தப் பொருள்களைக் கைக்கொண்டென்பதை நீ யுய்த்துணரா துரைத்த தறிவீனம்! கேள், ஒவ்வொரு பொருளின் உதவியால் ஒவ்வொன்றை மனிதன் விருத்தி புரிவதுண்மையே. ஆதலால். அந்தப் பொருள்களை யுண்டு பண்ணியது முதலாவது யார்? அவைகளைப் பின்னுதவிகொண்டு காரியஞ் செய்யுமனிதனுக்கு ஆதியான பிதா மாதாக் கடான் யார்? என நன்கோரில் அவ்வுண்மை வெளியாமே.

(4)

சிஷி:- ஆரம்ப காலத்தில் இயல்பாய்த் தோன்றிய அசர சரங்களிலிருந்து எப்பொருளும் ஜனித்ததா யிருக்கும். அவைகளில் ஒரு மனிதனும் ஒரு மனுஷியும் விசேஷமாய் அப்பொழு- திருந்திருக்கலாம். அவர்களிலிருந்து மகமகவாய் இரங்கி வந்தவர்களா யிருக்கவேண்டியது சர்வ மனிதர்களும். அந்த ஆதி பிதா மாதாக்கள் மரித்தவர்களாயிருக்கலாம். அவர்களின் புத்திர பௌத்திராதிகளான நாம் முதலான ஜீவர்களைக் கடவுள் படைத்தார் படைத்தாரென்று கதைப்பது அல்பமு மொவ்வா தொழியும். மேலும் அப்படிக் கொருவனிருந்து படைத்துக் கொண்டிருப்பதென்னில் அந்தரமாய் ஒரேயிடத்திலிருந்து ஒவ்வொன்றாய் வந்துகொண்டே யிருக்கவேண்டும். அப்படி வரவுமில்லை தவிர, அனங்காகமம் ஆயுள் வேத முதலானவைகளில் சொல்கிறபடி ஸ்திரீ புருஷா ளிடத்தில் குன்மரோக முதலிய மலடுகளிருந்தால் கருப்பந் தரிக்காதென்றும், ரஜஸ்வலையான 16 தினத்திற்குட்டான் கருப்பம் ஜனிக்குமென்றும், அதில் ஒற்றைப்பட்ட நாட்களில் பெண்ணென்றும், இரட்டைப்பட்ட நாட்களில் ஆணென்றும், கலவிக்குக் குறிக்கப்பட்ட காலத்தைத் தவிரக் கலந்த கருப்பத்திற் கருத்தரித்தால் அது அற்பாயு ளென்றுமுள்ள பலிஷ்ட பிரமாணங்களாலும் மனுடர்களின் செயலிலேயே ஆண், பெண் ஆயுள்பாக முதலானவைகளெல்லாம் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது அன்றி, ஆணும் பெண்ணுந் தேக சம்பந்த மில்லாவிடில் கடவுள் ஜீவனையெப்படிப் படைப்பரோ! இப்படிக்காய முகாந்தரங்களால், கடவுள் படைப்பும், அவரிருப்பும் நிஜமன்று.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

குரு:- இயல்பாய்த் தோன்றிய அசர சரங்களிலிருந்து எப்பொருளும் ஜனித்ததாயிருக்குமென்று மதித்து நொடித்த வாதீ! ஒரு பொருளாவது இக் காலத்திற்றானே தோற்றிட நீ கண்ணுற்றிருப்பதுண்டா? எழுவகைத் தோற்றமும் நாலு யோனியினுற்பனமென்பதை அறியாததிர்க்கலாமோ? யாவும் ஒன்றிலிருந் தொன்றுண்டாவ துண்மையே. அன்றிலாத காரியம் இன்றுண்டாவதுமன்று. விருக்கத்தை வெளியிடற்கு வித்திருந்த தொப்ப பிரதமத்தி லனைத்திற்கும் ஈஸ்வரனே ஒரு வித்தாக விருந்திருக்கிறார்.

நாம் முதலான வெல்லா ஜீவர்களையுங் கடவுள் படைத்தாரென்று கதைப்பதொவ்வா தொழியுமென்றும், கடவுளிருந்து படைப்பதென்னில் அந்தரமாய் ஒரேயிடத்திலேயே யிருந்து ஒவ்வொன்றாய்ச் சிருஷ்டித் தனுப்பிக்கொண்டே யிருக்கவேண்டுமென்ற விதமாயும் *உதாகாரம் வைத்துரைத்தனை - தேவனானவர் யாவற்றுக்கும் ஆதி விரையாயிருந் திருப்பதிலிருந்து தோற்றம் பகிர்முகப்பட முளைதோன்றித் தழைத்து அவைகள் காய்த்து அக்காய்க்குண் முந்தவிருந்த தோற்ற மடங்க வித்தாகச் சமைந்து அவ்வித்திலிருந்தே அவன் கருணையால் அது முளைத்து அப்படிப் பல் வித்துக்களா யுருப்பட்டு அனேக தோற்றங்களா யிருந்து கொண்டிருப்பதில், எல்லோரையுங் கடவுள் படைத்தா ரென்றேன் சொல்லக்கூடாது. இவ்வாறவரரு டோற்றும்படி செய்வதிலிருந்து அந்தரமாய் ஒரேயிடத்திலிருந்து ஒவ்வொன்றாய்ச் சிருஷ்டித் தனுப்பவேண்டிய தென்பதவருக் காவசியகமன்று.

அனங்காகம முதலிய ஆயுள் வேதங்களையும், உதாரணங் கணித்துக் காட்டி மனித ஜனனமானது மனிதருடைய செயலிலேயே ஏற்பட்டிருக்கிறதாகவும், ஸ்திரீ புருஷாள் தேக சம்பந்தமில்லாவிடில் எப்படிப்படைப்பா ரென்றதாகவும் காரணங் காட்டிக் கடவுள் படைப்பும், அவரிருப்பும் நிஜமல்ல வென்கிறாய் - எல்லாம் வல்ல கடவுள் ஜீவகாருண்ய வித்துக்குள் வித்தாயிருந்து கொண்டிருப்பதால், ஜீவனுள் ஜீவனாகவுமிருக்கிறாரென்றும் பரிஷ்காரமாய் வெளியாகும். இதனால் அந்த ஆயுள்வேத முதாலனதுகளிற் கூறிய நியாயங்களும் தலைமையான கடவுளுடைய சர்வ வியாபகமேயாகும்.

---

* உதாகாரம் என்பது - உதாரணம்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

(5)

சிஷி:- இப்போழ்து தாங்கள் விவரித்த காரணங்க ளனைத்து தேவனாகிய வித்திலிருந்து யாவும் வந்திருக்கிறதாகவு வித்தில்லாமற் றான்றோன்றியா வொன்றுந் தோற்றாவ மென்றும், அப்படித் தோற்றுமென்ற ருஜுவுக்கு எடுத்துக் காட் இப்போழ் தொன்று மின்றென்றும், ஜீவனுள் ஜீவனாய்க் கடவு சர்வ வியாபகமா யிருக்கிறாரென்றும் உள்ள நியாயங்களை காட்டுகின்றன. அப்படியேல், எல்லாச் செயலிலும் எல்லாவுயிரிலும் கடவுளிருப்பதாய் முடிகின்றப ஜீவர்களியற்றும் அக்கிரமங்களும் சராமரண முதலியவும் கெட் ஆபாசவாசனைகளும் கடவுளாலே யாமே? ஈண்டும் அவரை கனஞ் சொல்வ தியாதோ?

வித்தில்லாமல் யாதொன்று மிக்காற் றோற்றுவதின்றென்று தாங்கள் சொல்வது கூடாத காரியம். ஏனெனில், யாதொ புற்பூண்டு மில்லா திருந்த ஓர் பூமியின் கண்ணே மழைத் தண்ணீ தங்கி அது வறண்டபின் அனேக நீர்க்கரைப் பூண்டுக ளுற்ப மாகவும், யாதொரு மீனுள்ள ஏரி முதலிய நீர்ப் பாய்ச்சலில்லா மழைத் தண்ணீர் நூதனமாய்த் தங்கிய பள்ளத்தில் அனே மச்சங்களுற்பனமாகவும் தாங்களும் பார்த்திருப்பீர்கள் இவைகளை எந்த விதையும், எந்த மச்சங்களுமீன்றன? இவை டான்றோன்றிகளல்லவா? ஈதெல்லாமோராதுரைப்ப தென்னை

குரு:- இங்ஙனம், நீ முதலின் மொழிந்ததற்குரிய முகாந்தர கேள். ஜீவர்கள் செய்த நன்மைக்குத் தக்க நல்ல தேகங்களையும் தீமைக்குத் தக்க தீய தேகங்களையும், தேவனுடை நியாயத்திலேற்பட்ட படிக்குச் சிருஷ்டிக்கப்படுவதாயிருக்கிற அந்தப்படிக்கவைக ளனுபவிக்க நல்லதையுங் கெட்டதையு நீ வழுவாமலுதவியதாகும். அதிலும் மனிதனென்கிற உய ஜென்மத்திற்கு மட்டும் ஆதியிலேயே பகுத்தறிவை பிரகாசிக்கும்படியாக நன்று தீதறிந்து கொள்ளுமா செய்தவாறே, இப்போதும் ஒவ்வொருவ ரிதயத்திலும் அவ்வறி விளங்கிக் கொண்டிருக்கிறது. சுத்தப் பாமரனானாலும், கொடு பாவங்களையே செய்பவனானாலும், அவன் செய்த தீமை

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

அவனிருதயம் தீமையென்றே காட்டிக் கொண்டிருக்கிறது. இது சத்தியம். இப்படிக்கென்றும் ஈஸ்வரன் அறிவாகவே யிருந்து கொண்டிருக்கிறார். இதனால் அவர் சர்வ வியாபியாகும். இதை நீ துர் அர்த்தம் பண்ணியது சுத்தப் பிசகு.

நீ, இரண்டாவ துரைத்ததற்குரிய நியாயம் யாதெனில், ஆகாயத்திலிருந்து மேகங்கள் வருஷித்த நீரானது பிருதிவியாகிய பூமியிற் றங்கினால் நீர்க்கரைப் புற் பூடுகளும் மச்சங்களும் உண்டாவதற்கு அப்பிருதிவியும் நீருமே கருவாகவிருந்து கொண்டிருக்கின்றன. இதினால், அவைகள் வித்தில்லாத தோற்றமென்றாய்விடுமா? அவைகளின் சம்பந்த மில்லாத அந்தரத்தி லுண்டான தென்றான் மட்டும் தான்றோன்றியாகும். "வித்தில்லாத சம்பிரதாய மேலுமில்லை கீழுமில்லை", என்ற வாக்கியத்தையேனு நீ யறிந்த தில்லையோ? ஐயோ! என்ன விபரீதம்!!

(6)

சிஷி:- பேஷ். இப்பொழுதுதான் என்னபிப்பிராயத்திற் சிக்குண்டவர்க ளானீர்கள். அதாவது பிருதிவி முதலானதிலிருந்து புற்பூண்டு மீன் முதலியவைகளும் எப்படி யுற்பத்தியானதோ, அப்படியே நாலுயோனி தோற்றங்களுந் தோற்றியதாய் முடிந்தன. இதனால், கடவுளென் றொருவரிருந்து சிருஷ்டிக்க வேண்டியது ஆவசியக மானதுமல்ல, அவருண்டெனலும் பொய் எனவும் அறியலாமன்றோ? நவிலுக.

குரு:- ஆ அ! "பொரிமாவைக்கண்டு பொக்கை வாய்ச்சி மெச்சிக் கொண்டாளாம்" என்பதுபோல, இந்த நியாயத்தைக் கண்டு சந்தோஷப்படுகிறாய் - அப்படிப்படாதே. அந்தப் பிருதிவி முதலானவைகளைச் சிருஷ்டித்தவன் யாரென்று நீயுணர வேண்டாமா? அதை யுணர்ந்து பார்.

(7)

சிஷி:- நல்லது. தாங்கள் சொல்கிற கடவுள் எதிலிருந்து தோன்றினாரென்பதைச் சொல்வீர்களாகில், யான் சொன்னவைகளும் இன்னதிலிருந்து தோன்றியதெனச் சொல்லக்கூடும்?

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

குரு:- ஆதியாயும், அனாதியாயுமிருக்கிற தலைவனானவர், ஒன்றிலிருந்து தோன்றவும் வேண்டுமா? ஐயோ! இப்படி முரட்டாட்டஞ் செய்பவரை யாங் கண்டது மில்லை கேட்டது மில்லையே!

(8)

சிஷி:- முரட்டாட்ட மென்றால், யார் செய்கிறது முரட்டாட்டமென்று தீர்க்க வல்லோ வேண்டும் ஓ! ஐயா! ஆதியாயுமனாதியாயு மிருக்கிற கடவுளென்கிறவர், ஒன்றிலிருந்து தோன்றவில்லை யென்றெப்படிச் சொல்கிறீர்களோ அப்படியே இந்தப் பிருதிவி முதலானவைகளும் ஒன்றிலிருந்து தோன்றியதில்லை யென்று யானுஞ் சொன்னாலொவ்வாதோ?

குரு:- ஒருக்காலு மொவ்வாது. ஏனெனில், நாம் சொல்கிற நித்ய வஸ்துவைப் போலல்ல நீ சொல்கிற அநித்ய வஸ்துவாகிய பிருதிவி முதலானவைகள். அவைகள் சேதமாவது தானென்று நீயே ஒத்துக் கொள்பவனா யிருக்கிறாய். மேலும் சேதப்படும் பொருளெதுவானாலும் அது ஒன்றிலிருந்து தோன்றியழியுமே தவிர தான்றோன்றியா யிருக்கத் தக்கதன்று. அசேதனப் பொருள்களாகிய ஜட வஸ்துக்களைக் கொண்டு அநேக வலங்காரங்கள் பொருந்திய பெரிய கோபுர மோன்றிருக்கப் பார்ப்போமேயாயின், அதைச் சமைத்தவொருவ னுண்டென்று பூரணமாய்த் தெளிதலனைய, பல தோற்றங்களாகிய வலங்காரங் கண் மிகவுமுடைய இவ்வகண்ட தோற்றமாம் பிரபஞ்சத்தையும் ஒருவனுண்டு பண்ணியிருக்கிற துறுதி யென்றும், சர்வாங்கங்களுமுள ஒரு பிரதிமையை ஒருவ னிருந்தாட்டுவிப்பதுபோல, சர்வப்பிரபஞ்சத்தையுந் தொழிற்படுத்தி நிற்பதற்கும் ஒருவனுண்டென்றுங் காண்க.

(9)

சிஷி:-அப்படிக் கொருவனா லிவ்வுலகஞ் சிருஷ்டித்திருப்ப துண்மையாயின், அச்சிருஷ்டிகன்றானோ கடவுள்?

குரு:- ஆம் அப்படிப்பட்ட பெரிய காரியத்தைச் செய்த அவரே கடவுள்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

க

பிரம்ம நியமம்



"பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள் நூலகம்"
சுவாமிகள் சமாதி நிலையம், திருவான்மியூர்,
சென்னை - 600 041.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

(10)

சிஷி:- அற்றேல், அக்கடவுளர் வாசஸ்தலமும், நாமமும், கிருத்தியமும், சொரூபமும் யாதென விளம்ப வேண்டும்?

குரு:- அவ்விறைவற்கு ஸ்வயம்புவில் தேசவாச மொன்றுண்டா - இல்லை. நாம மொன்றுண்டா - இல்லை. கிருத்திய மொன்றுண்டா - இல்லை. சொரூப மொன்றுண்டா - இல்லை. எங்குந்தானாய், தனிப் பழம்பொருளாய், சதுர் மறைகட்கு மடங்காத அத்துவித சைதன்ய சாக்ஷாத்காரமாய் இருக்கின்ற சுத்தப் பிரம்மமேயாம்.

(11)

சிஷி:- இங்ஙனஞ் சொன்ன வண்ணம் யாதொன்றிலுஞ் சம்பந்தப்படாத சுத்தப் பரப்பிரம்மத்திற்குத்தான் செயலொன்று மில்லையென்று செவ்வென வெளிப்படுகின்றதே? அந்தப் பிரம்மம், இப்படி அகண்டாகண்ட மாயிருக்கிற உலகங்களை எப்படிச் சிருஷ்டிக்கத் தொடங்கிற்று?

குரு:- இதோ வரைந்துள்ள பிரம்ம நியமப் படத்தை நீ பார்வை யிடுவதனாலேயே, இவ்வுலகத் தோற்றமாகிய ஜட ஜீவேஸ்வர உற்பத்தி, பட்டப்பகற் போற் றெளியலாகும்.

(12)

சிஷி:- ஆம் பார்த்தேன். - இதைச் செவ்வையாயெற்குப் புலப்படும் பொருட்டு விவரித்துரைக்க வேண்டும்?

குரு:- யாதொரு களங்க ரகிதமான சிவ சைதன்ய மாகிய சுத்தப் பிரம்ம மென்னுஞ் சர்வ சாக்ஷியினிடத்தில் அக்கினியிற் சூடு போலவும், ஜலத்திற் சீதளம் போலவும், புஷ்பத்தில் வாசனை போலவும், மனதி னினைப்புப் போலவும், கண்ணாடியிற் பிம்பம் போலவும், வித்தினுண் முளையைப் போலவும், முளையினு ளுயிரைப் போலவும் அபின்னமாக ஓர் சக்தி யுளது. அந்தச் சக்திக்கு யாதொரு செயலின்றி அச்சர்வ சாக்ஷியினிடத்தில் அடங்கியிருக்கும் போழ்து அதையே சுத்தப் பிரம்மம் எனச்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

சொல்லலாகும். அந்தச் சக்தி விஜ்ரிம்பித்து பிரம்மத்தைச் சூழ வியாபிக்கும் போது அப்பிரம்மம் சக்தி வியாபகத்திற் குள்ளானதால் அதைச் சுத்தப் பிரம்மமெனச் சொல்லாமல் பிரம்மம் எனப் பெயர் பேசலாயிற்று.

இப்படிக்கான பிரம்ம சன்னிதானத்தில் சுரும்பிற்கு அலரிலின்பங் கண்டது போலும், ஸ்திரீக்குப் புருஷனிடத்தின்பம் பயந்தது போலும், விகிர்த சூன்யமா யிராநின்ற அந்தச் சத்தியினிடத்தில் அவிகிர்த சத்துவம் ரஜசு தமசு என்னுமுக்குணங்கள் ஜெனித்தன. அந்தச் சுத்த சத்துவத்திற்கு ஆநந்த ரூப சத்தி யென்றும், சுத்த ரஜசுக்கு சித் ரூபசத்தி யென்றும், சுத்த தமசுக்கு சத்ரூப சத்தி யென்றும் மூன்று சத்திகளுண்டாயின. அப்படிக்குண்டான மூன்றுள் பிரதமமான ஆநந்தரூப சத்தியை அப் பரப் பிரம்மம் கலந்து ஆநந்தசுழுத்தியைப் பொருந்துங்கால் பரமாநந்தன் என்றும், அப்பரமாநந்தன் மேலே சொன்ன சித்ரூப சத்தியுடனே கூடிச் சர்வப் பிரகாச சொப்பனத்தை யடையுங்கால் பரிபூரணன் என்றும், அந்தப் பரிபூரணன் மேற்கண்ட சத்ரூப சத்தியுடனே சேர்ந்து சர்வ வியாபக ஜாக்ரத்தை யடையுங்கால் பரன் என்றும் விளங்கலாகும். இங்ஙனஞ் சொற்றதுக ளெல்லாம் குண பேதகத்தாற் பெயரும் வேறுபட்டன வென்றும், பிரம்மமே பரமாத்மா சத்திய சரீரம் என்றும் அறிதி.

மேலுரைத்த பிரம்மத்தினிடத்தில் இன்னமும் சுத்தியில் *இரஜிதந் தோன்றினாற் போலும், தீபத்தி னிடத்தினிழல் தோன்றினாற் போலும் மூலப்பிரகிருதி என்னும் ஓர் சத்தி யுண்டாயிற்று. அதையே பிரம்மத்திலோர் அணுவென்றுஞ் சொலத் தகும்.

அந்த மூலப் பிரகிருதி விகிர்த சத்துவம் ரஜசு தமசு என்னு மூன்று குணங்களுடனே யுள்ளது. அம்முக் குணங்களில் பிரதமமான சத்துவ குணமே சுத்த மாயை யென்று சொல்வதாகும். அம்மாயையினிடத்தில் நிர்மலஜல பிரதி பிம்பம் போல பிரம்மம் சுலக்ஷணமாய்ப் பிரதிபிம்பிக்கும். அந்தச் சைதன்னியத்திற்கு சர்வ ஜனனாகிய "ஈஸ்வரன்" என்று பெயர் சாற்றுவது. இவ்வீஸ்வரனுக்கு மேற் சொன்ன சுத்த மாயையே காரண சரீரமாம்.

* இரஜிதம் என்பது - வெள்ளி.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

அந்தச் சத்துவகுண சுத்த மாயையினிடத்தில் சத்துவத்திற் சத்துவம், சத்துவத்தில் ரஜசு, சத்துவத்தில் தமசு என்னு முக்குணங்களுண்டு. அதில் சத்துவத்தில் சத்துவஞ் சிலாக்கியமாம்போது அதிற் பிரதி பிம்பித்த ஈஸ்வரனுக்கு *உருத்திரன் என்று பெயர். சத்துவத்தில் ரஜசு பிரதானமாம்போது அதிற் பிரதி பிம்பித்த ஈஸ்வரனுக்கு விஷ்ணு என்று பெயர். சத்துவத்தில் தமசு சிரேஷ்டமாம்போது அதிற் பிரதி பிம்பித்த ஈஸ்வரனுக்குப் பிரமன் என்று பெயர். இவைகடான் மூலப்பிரகிருதியின் சத்துவகுண கற்பனைகளாகும்.

மூலப் பிரகிருதியின் ரஜோகுணம் அனேக ரூபமாய் தாரதம்யமுள்ளவைகளாய் ஜீவகாரண சரீரமெனப் பேருடையதாய் விளங்கும். அதையே அசுத்த மாயை என்றும் அவித்தை என்றும் சொலத்தகும். அவ் வவித்தைகடோறும் மலினஜல பிரதி பிம்பம்போல பிரம சைதன்யம் பிரதி பிம்பிக்கும். அவைகட்கு சிதாபாசர் என்றும், கிஞ்சிக்ஞ ரென்றும் பெயராம். அந்த அவித்தையினிடத்தில் ரஜசில் சத்துவம், ரஜசில் ரஜசு, ரஜசில் தமசு என்ற முக்குணங்களுளது. அவற்றுள் ரஜசில் சத்துவம் சிலாக்யமாம்போது அதிற் பிரதிபிம்பித்த சிதாபாசர் தத்துவஞானி யாவர். ரஜசில் ரஜசு பிரதானமாம் போது அதிற் பிரதிபிம்பித்த சிதாபாசர் காமக் குரோதராவர். ரஜசில் தமசு சிரேஷ்டமாம்போது அதிற் பிரதிபிம்பித்த சிதாபாசர் சோம்பு நித்திரை மயக்க முடையராவர். இவைகடான் மூலப் பிரகிருதியின் ரஜோகுண கற்பனைகளாகும்.

மூலப் பிரகிருதியின் தமோ குணத்தில் அஞ்ஞானம் தோன்றி அவ்வஞ்ஞானத்தில் ஆவரண சத்தி விட்சேப சத்தியென இரண்டு சத்திகளுண்டாயின. ஆவரண சத்தியானது தத்துவ ஞானிகளையும் ஈஸ்வரனையுந் தவிர ஜீவர்களுக்கு சரீரத்திரயம் சிதாபாசன் சாக்ஷி சைதன்ய மென்பனவற்றுள் ஒன்றற்கொன்று பேதந் தெரிய வொட்டாது மறைக்கத் தக்கதாகும். இதுவே ஆவரண சத்தியின் பிரேரகம்.

* உருத்திரன் தமோகுணத்திற் றோன்றினாரனச் சின்னூற்கள் செப்பும். அதுகாலனாகிய வுருத்திரனென்றறிக.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

விட்சேப சத்தியானது - இல்லாததை யுண்டு செய்யத் தக்கது. இதுவே விட்சேப சத்தியின் பிரேரகம். இந்தச் சத்தியினிடத்தில் சப்த தன் மாத்திரையான சூக்கும ஆகாயம் தோன்றிற்று. அவ்வாகாயத்தில் பரிச தன்மாத்திரையான சூக்கும வாயு தோன்றிற்று. அவ்வாயுவில் ரூப தன்மாத்திரையான சூக்கும அக்கினி தோன்றிற்று. அவ்வக்கினியில் ரச தன்மாத்திரையான சூக்கும அப்பு தோன்றிற்று. அவ்வப்புவில் கந்த தன்மாத்திரையான சூக்கும பிருதிவி தோன்றிற்று. இவ்வாறு தோன்றிய சூக்கும பஞ்ச பூதத்திற்கு உபாதானமா யிருக்கின்ற அவ் விட்சேப சத்தியினிடத்தில் தமசில் சத்துவம், தமசில் ரஜசு, தமசில் தமசு என்ற முக்குணங்களுந் தோன்றி அதன் காரியமாகவே மேற்கண்ட பஞ்சபூதங்களு முண்டாயின. இப்பூதங்களைத் தன்மாத்திரைகளென்றும், அபஞ்சீகிருத பூதங்களென்றும் சொல்லப்படும். இந்தச் சூக்கும பூதங்களின் சத்துவாம்சத்தில் ஒவ்வொரு பூதத்திற்கு ஒவ்வொரு மாத்திரை யொன்றாகக் கூடி உள்ளம், மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்னும் அந்தக் கரணங்களைந்தும், மேலுரைத்த சத்வாம்சத்தில் ஒவ்வோர் பூதத்தி னொவ்வோர் மாத்திரை தனித் தனியே சுரோத்ரம், துவக்கு, சட்சு, சிங்குவை, ஆக்ராணம் என்னும் ஞானேந்திரியங்களைந்து முண்டாயிற்று.

மேற்படி பூதங்களின் ரஜோம்சத்தில் ஒவ்வோர் பூதத்தின் ஒவ்வோர் மாத்திரை யொன்றாகக் கலந்து சமானன், வியானன், உதானன், அபானன், பிராணன் என்னும் பிராண வாயுக்களைந்தும், மேற்படி ரஜோம்சத்தில் ஒவ்வோர் பூதத்தின் ஒவ்வோர் மாத்திரை தனித்தனியே வாக்கு, பாணி, பாதம், உபஸ்தம், பாயுரு என்னுங் கருமேந்திரியங்களைந்து முண்டாயிற்று. இப்படிக்கு சூக்கும பஞ்ச பூதங்களின் சத்துவாம்ச ரஜோம்சங்களிலுண்டான இருபது தத்துவங்களுமே ஜீவர்களுக்கு சூக்கும சரீரங்களா யேற்பட்டிருக்கின்றன. இன்னமும் சூக்கும பஞ்ச பூதங்களின் தமோம்சத்தில் ஐந்து பூதங்களும் ஒவ்வொன் றிரண் டிரண்டாகி முதற் பாதியைந்தும் ஒவ்வொன்று நான்கு பிரிவினையான அரைக்கா லரைக்காலாகப் பகுக்கப்பட்டு மேற்கண்ட விரண்டாம் பாதியின் ஆகாய அம்சத்தோடு அதன் முதற் பாதியில் அரைக்கா லரைக்காலாகப் பகுபட்டதில் ஒன்றுஞ் சேராமல் வாயுவின் முதற் பாதியாகிய அம்சத்தில் முதலாவ

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

தரைக்காலும், தேயுவின் முதற் பாதியாகிய அம்சத்தில் இரண்டாவதரைக்காலும், அப்புவின் முதற் பாதியாகிய அம்சத்தில் மூன்றாவதரைக்காலும், பிருதிவியின் முதற் பாதியாகிய அம்சத்தில் நான்காவதரைக் காலுமாகவும்; மேற் குறித்த இரண்டாம் பாதியின் வாயுவம்சத்தோடு அதன் முதற் பாதியில் அரைக்கா லரைக்காலாகப் பகுபட்டதிலொன்றும் பொருந்தாமல் ஆகாயத்தின் முதற் பாதியாகிய அம்சத்தில் முதலாவதரைக்காலும் தேயுவின் முதற் பாதியாகிய அம்சத்தில் இரண்டாவதரைக்காலும், அப்புவின் முதற் பாதியாகிய வம்சத்தில் மூன்றாவதரைக்காலும், பிருதிவியின் முதற் பாதியாகிய வம்சத்தில் நான்காவதரைக்காலுமாகவும்; மேற் சொன்ன இரண்டாம் பாதியின் தேயுவம்சத்தோடு அதன் முதற் பாதியில் அரைக்கா லரைக்காலாகப் பகுபட்டதிலொன்றுங் கூடாமல் ஆகாயத்தின் முதற் பாதியாகியதில் முதலாவதரைக்காலும், வாயுவின் முதற் பாதியாகியதில் இரண்டாவதரைக்காலும், அப்புவின் முதற் பாதியாகியதில் மூன்றாவதரைக்காலும், பிருதிவியின் முதற் பாதியாகியதில் நான்காவ தரைக்காலுமாகவும், மேல்விளம்பிய இரண்டாம் பாதியின் அப்புவம்சத்தோடு அதன் முதற் பாதியில் அரைக்கா லரைக்காலாகப் பகுபட்டதிலொன்று மமையாமல் ஆகாயத்தின் முதற் பாதியில் முதலாவ தரைக்காலும், வாயுவின் முதற் பாதியில் இரண்டாவதரைக்காலும், தேயுவின் முதற் பாதியில் மூன்றாவதரைக்காலும், பிருதிவியின் முதற் பாதியில் நான்காவதரைக்காலுமாகவும்; மேற்கூறிய இரண்டாம் பாதியின் பிருதிவி யம்சத்தோடு அதன் முதற் பாதியில் அரைக்காலரைக்காலாகப் பகுபட்டதில் ஒன்றுஞ் சம்பந்தப்படாமல் ஆகாயத்தின் முதற் பாதியோடு முதலாவ தரைக்காலும், வாயுவின் முதற் பாதியோடு இரண்டாவ தரைக்காலும், தேயுவின் முதற் பாதியோடு மூன்றாவதரைக்காலும், அப்புவின் முதற் பாதியோடு நான்காவதரைக்காலுமாகப் பஞ்சீகரணஞ் செய்யப்படலாயிற்று. இப்படிக்கான ஐந்தும் ஒவ்வொன்றுக்கெட்டு மாத்திரையுளதென்பதேதென்னில் - அந்தச் சூக்கும பஞ்ச பூதங்களைந்தும் பகுபடாத பாதிக்கு நான்கு மாத்திரையும் பகுபட்ட பாதிக்கு அரைக்காலரைக்கால் வீதம் கூடிய நான்கு மாத்திரையுஞ் சேர்ந்து ஒவ்வொரு பூதமு முழுத் தன்மை பெற்றதாகும். இவ்வித முழுத் தன்மை பெற்ற வைந்து பூதங்களையுமே ஆகாய மாதி ஸ்தூல பூதங்கள் என்றெண்ணுக.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

இப்படிக் காய ஸ்தூல பூதங்களுள் ஆகாயத்திற் பரிச, ரூப, ரச, கந்த மென்னும் நான்கு குணங்களும் அரைக்காலரைக்கால் மாத்திரை வீதம் வியாப்பிய மானதில் அவை யதிருசியமாய் நிற்க நிஜகுணமாகிய சப்தம் திருசியமாய்த் தோன்றலாயிற்று.

ஸ்தூல வாயுவில் ரூப ரச கந்த மென்னும் மூன்று குணமும் அதைக்காலரைக்கால் மாத்திரை வீதம் வியாப்பியமானதில் அவை யதிருசியமாய் நிற்க அரைக்காலரைக்கால் மாத்திரையான காரண குணமாகிய சப்தமும் நிஜகுணமாகிய பரிசமும் திருசியமாய்த் தோன்றலாயிற்று.

ஸ்தூல தேயுவில் ரசகந்த மென்னும் இரண்டு குணமும் அரைக்காலரைக்கால் மாத்திரை வீதம் வியாப்பியமானதில் அவை யதிருசியமாய் நிற்க அரைக்காலரைக்கால் மாத்திரையான காரண குணங்களாகிய சப்தமும் பரிசமும் நிஜகுணமாகிய ரூபமும் திருசியமாய் நிற்கலாயிற்று.

ஸ்தூல அப்புவில் அரைக்காலரைக்கால் மாத்திரையான கந்தகுணம் வியாப்பிய மானதில் அது யதிருசி யமாய் நிற்க அரைக் காலரைக்கால் மாத்திரையான காரணகுணங்களாகிய சப்தமும், ரூபமும், பரிசமும், நிஜ குணமாகிய ரசமுந் திருசியமாய் நிற்கலாயிற்று.

ஸ்தூல பிருதிவியில் அரைக்கால் மாத்திரையான காரண குணங்களாகிய சப்தமும், பரிசமும், ரூபமும், ரசமும், நிஜகுணமாகிய கந்தமும் திருசியமாய் நிற்கலாயிற்று.

இவ்வாறு பஞ்சீகரித்த ஸ்தூல பூதங்களில் அப்புவின் கூறாய்உதிரமும் மஜ்ஜையும் பிருதிவியின் கூறாய் நரம்பும் சர்மமும் மாம்சமும் என்பும் என்ற ஆறு தத்துவங்களு முண்டாயின. இப்படிச் குண்டான தத்துவங்களாறையுமே ஸ்தூல சரீர மென்றுரைக்கப்படும்.

முன்னஞ் சொன்ன சூக்கும தத்துவம் இருபதுடன் இப்போதிசைத்த ஸ்தூல சரீர தத்துவம் ஆறுஞ்சேர்ந்து ஆக இருபத்தாறு தத்துவங்களால் ஏற்பட்டதுதான் ஸ்தூல சூக்கும சரீர மென்னும் காரிய சரீர மென்றறிய வேண்டியது. இக்காரிய சரீரமே உத்தம ஜாதியாகிய மனிதர்கட் கேற்பட்டதென்றும், இன்னும்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பசு, பக்ஷி முதலான மத்திம ஜாதிகட்கும் விருக்ஷ முதலான அதம ஜாதிகட்கும் தக்க தக்க தத்துவங்களா லுருவ மேற்பட்ட தென்றும் காணலாம். மேற்குறித்த மனித ஜனனத்திற்கு இகலோக வின்பமும் பரலோக வின்பமும் பெற வறிவுடைத்து. ஆதலால் அவைகளை உத்தம ஜாதி யென்றும் பசுபக்ஷியாதி ஜெனனத்திற்கு இகலோக வின்பத்திலும் அற்ப விருப்புடைத்து. - ஆதலால் அவைகளை மத்திமஜாதி யென்றும், விருக்ஷ முதலானவைகள் இகபரசுகமிரண்டையும் விரும்பச் சக்தியிலது. ஆதலால் அவைகளை அதமஜாதி யென்றும் பகரலாயிற்று.

இம்மூவகை ஜாதிகளுமே நாலுயோனிஎழுவகைத் தோற்றம் எண்பத்து நான்கு நூறாயிரம் ஜீவபேதங்களாய் பல்புவனங்களாய் எண்ணரிய ஜீவ கோடிகளாயியங்குகின்றனவாம். இப்படிக்கான ஜீவேஸ்வர ஜகத்தைச் சிருஷ்டிக்கக் காரணமாயிருந்தவன் பிரம்ம, சைதன்ய பிரதிபிம்பனான ஈஸ்வரனென் றறியக் கடவாய்.

(13)

சிஷி: அறிந்தேன். அதில், துவித மற்ற அத்துவித சைதன்ய சுத்தப் பரப்பிரம்மமே கடவுளென இதன் முன்ன முரைத்த தாங்கள் இப்போது துவித பாவனையான சங்கற்பங்கட் குட்பட்ட ஈஸ்வரனையே கடவுளாய்ச் சொல்வதென்னை?

குரு:- நாமரூபமற்ற சுத்தப் பிரமத்தை யாதொரு சங்கற்பங்கட் குட்படுத்தவாவது இன்ன தன்மையுள தென் றுரைக்கவாவது நியாயங்காணப்படாமையால் அதனின்றும் பிரதிபிம்பித்த சாக்ஷாத் ஈஸ்வரனையே அனைத்துக்குங் காரணக்கடவுளாய்ப் பகரலாயிற்று. அஃதெப்படியேல்:- ஒரு கருப்பாசயத்துட் கருத்தோன்று முன்னம், அக்கரு இன்ன நிலைமையுடையது இன்ன வினைக்குரியது என்று சொல்லக் கிஞ்சித்தும் அடையாளந் தோற்றப்படா வருபமாயிருத்தலனைய அச்சுத்தப்பிரம்மத்தையும் அரூபமாயெண்ண வேண்டும். அக்கரு மாதாவினுடைய கருப்பாசயத்துட் பூந்தபின் சொரூபப்பட்டுத்தோன்றியதை இன்ன மாதிரிக்குரிய தென்று வீக்ஷணிக்கத் தக்கதாயிருப்ப தனைய சுத்தமாயையே காரண சரீரமாகவுள்ள அவ்வீஸ்வரனையுமெண்ண வேண்டும். தவிர, இந்த ஈஸ்வரனே "ஆதி", எனவும், அந்த பிரம்மமே 'அனாதி"

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

எனவும், அவ்வனாதியாகிய சத்தே இவ்வாதியாகிய ஈஸ்வர சொரூபத்தில் அறிவாகாரமாயியங்குகின்ற தெனவும் அவ்வறிவாகிய சித்தே எச்சங்கற்பத்தையும் ஸ்வயம்புவாய் *பிரேரிக்க வல்லமையுடையதெனவும் அவ்வணம் பிரேரிப்பதில், சிருஷ்டி, திதி, சம்ஹார, திரௌபவானுக்ரகமென்னும் பஞ்ச கிருத்தியங்களு முளதா மெனவும், இவ்வித கிருத்தியங்கள் புரியுமிடத்து அவருக்குச் சகளேஸ்வரனெனப் பெயர் வருமெனவு மவைகட் கன்னியமா யிருக்கு மிடத்து நிஷ்களேஸ்வர னெனப் பெயர் வருமெனவு மறிக. சகள நிஷ்கள மிரண்டினும் நினைப்பும் மறப்புமற்று நித்ய வஸ்துவாய் விளங்கு நின்மல சொரூபனாகிய வொருவனையே ஈஸ்வரனாகிய கடவுளெனக் கருதுவதே யுண்மை.

(14)

சிஷி:- அந்த ஈஸ்வரனுக்கும் முதற் காரணமாயிரா நின்ற மூலப் பிரகிருதியையாவது அதற்கு முதற் காரணமாயிராநின்ற பிரமத்தையாவது கடவுளெனக் கருதுக வென்றுன்னாமல் மூன்றாங்காரணமாய்த் தோன்றா நின்ற ஈஸ்வரனைமட்டும் கடவுளெனக் கருதுக வென்றதிர்த்த காரணமென்ன?

குரு:- ஓர் செடியிற் புஷ்பித்த இதழையும் அதன்மகரந்தத்தையும் திவ்விய புஷ்பமெனப்புகல்வதல்லாமல் மகரந்தத்தை மட்டும் புஷ்பமென்றாவது இதழை மட்டும் புஷ்பமென்றாவது புகல நியாயந்தோன்றப் படாதது போன்று பிரமமெனவும், பிரகிருதி யெனவுமான இரண்டு மொன்றாய் நின்ற ஈஸ்வரனையே பொருளெனவும் அப்பொருளைச் சிருஷ்டிக்க ஈஸ்வரனாயிருந்தவனொருவனுங் காணப்படா மையால் அப்பொருளாகிய அவரே கடவுளெனவும் பகர்ந்ததே காரணமாம். இதனால், நீ விளம்பிய வண்ணம் ஈஸ்வரனை மூன்றாங்காரணமென்றெண்ண விடமின்றி முதற்காரண மென்றெண்ணவேயிடமுண்டாயிற்று.

(15)

சிஷி:- இவ்வா றெடுத்துரைத்ததில் எனக்குச்சிறிது சந்தேகமுளது. அதைத் தீர்த்தருளப்பிரார்த்திக்கின்றேன். ஈஸ்வரனுக் கறிவாயிருந்த சுத்தப் பிரம்மம் அவ்வீஸ்வரனைச்

* பிரேரிக்க வென்பது - காரியப்படுத்த - நடத்த

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

சிருஷ்டிக்க வெண்ணித் தானே அவரை யுண்டு பண்ணினதாகும். அற்றேல், பிரம்மத்தை ஈஸ்வரனுக்கு ஈஸ்வரனாகிய உபாதானக் கடவுளெனச் சாற்றுவதை விட்டுப் பேதித்துப் பேசுவதென்ன? அன்றி ஈஸ்வரனைப் பிரம்மம் படைத்ததால் ஈஸ்வரனுக்குப் பிரம்மப் பிரதிபிம்பனெனப் பெயரும் வந்திருக்கிறது. இதை மறுத்தற்கு மேதுவுளவோ?

குரு:- யாமுரைத்த நியாங்களின் தாத்பரியங்களை நீ யுணரா தவலமாயறைகின்றாய்! அதை யின்னமுந் துலக்கமாகவே சொல்வேம்: கவனித் தாய்ந்து கொள். சுத்த மாயையே காரண சரீர முதலாய தத்துவங்களாகவும், அதனுட் சைதன்னியமாகிய தானே உள்ளமாகவும், விளங்காநின்ற சாக்ஷாத் ஈஸ்வரனாய்த் தோன்றுமுன்னர் அப்பிரம்மம் யாவு மடங்க விருந்த மௌனமேயாம். அம்மௌனமாகிய சுத்தப் பிரம்மமும் அதின் பிரகிருதியாகிய சுத்த மாயா சத்தியும் தனித்தனியே யாதொரு காரியத்தைப் பிரேரிக்கச் செயலற்றதெனவும், பிரகிருதி மாயா சத்தியுடன் சேர்ந்த பிரம்மம் எக்காரியங்களுஞ் செயவல்ல தெனவும், அவ்வல்லமையுள ஈஸ்வர ஹிருதயமாகவே அறிவதற் கரிதாய் வாக்குக்கு மனதுக்கு மெட்டாத அகண்டாகாரமாகிய பரப்பிரம்மம் நின்ற தெனவும் அப்படி நின்ற சுத்தப் பிரம்மத்தையே இரவு பகலற்று இன்ப துன்பம் விட்டு ஆதியு மந்தமுமின்றி, ஆணுமன்றிப் பெண்ணுமன்றி அலியுமன்றி, அருவுமன்றி உருவுமன்றி, இறப்புமின்றி பிறப்புமின்றி, விருப்புமின்றி மறப்புமின்றி, ஞானமுமின்றி மோனமுமின்றி, நிறமுமின்றிக் குலமுமின்றிச் சிறிதுமின்றிப் பெரிதுமின்றி ஏகமின்றி யனேகமின்றிப் பாவமின்றி புண்ணியமின்றி நன்றுமன்றித் தீதுமன்றி *நானுமன்றி நீயுமன்றி எங்குஞ் சம்பூரணமாய் விளங்குவதெனச் சொல்லலாகும், இதைத் தவிரப் பிரம்மம் பிரத்யேகத் தொன்றுளதென் றெண்ணொணாது. ஈஸ்வரனைப் பிரம்மப் பிரதிபிம்ப னென்று சொன்னது சொரூப நியாயம் பற்றியே ஆதலால், ஈஸ்வரனாய்த் தீர்க்கப்பட்ட வொருவனே காரணக் கடவுளாகிய கர்த்தனாவான்.

* நானுமன்றி நீயுமன்றி யென்றது - துவிதபாவனையை.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

(16)

சிஷி:- மௌனப் பிரம்மமே தானாய் விளங்காநின்ற ஈஸ்வரனுக்கு நினைப்புப் பிரம்மமயமே யாமாகில் யாதொன்றை நினைக்கவாவது நிருமிக்கவாவது கூடாமையாய் விடுமல்லவா? ஆயின், அவர் பஞ்ச கிருத்தியங்க ளெவ்வாறியலும்?

குரு:- அந்த நிச்சயங்க ளெல்லா முனக்குத் தெளித்துச் சொல்லி யிருக்க வறிந்திலை. ஆதலால், உனக்கிதுவரை யுறுத்திய வனைத்தும் கடலிற் காயங் கரைத்தது போறற் காண்டனை. இப்படிப்பட்ட மௌட்டிய முனக் குண்மையா யிருக்குமேல் இப்பரம சூட்சுமங்களை யாமெத்தனை கால மிடைவிடாதிசைக்கினும் அத்தனையும் பயனிலதேயாகும். ஆகலால் நின் கருத்தெவ்வணமுளதெனக் கிளத்துவா யாயின் பின்னர் நீ கடாவுங் காரியங்கட் குரயமொழி யாம் புகலத் தகுமன்றோ.

(17)

சிஷி:- சுவாமி! என் சற்குரு நாதா! தமியேன்பேரில் வியசனம் வேண்டாம். தங்களை விட்டகன்றிருந்த பின்னர் என்னுடைய மனதிலோர் தீர்மானத்தைக் கோரி யிவண் வந்தேன். அதாவது: தேவனொருவ னுண்டென்றதுபோற் சிந்தித்து நங்குரு வானவர் அந்நிலையினின்று சாதிப்பதாயிருக்கின்றதே அதைத் தவிர்த்து நம் வழியி லழைத்து விடய சுகங்களில் விடுத்து நன்று செய்ய வென்று குறித்து யான் வந்ததாகும். அப்படி வந்த தமியேற்குள்ள சந்தேகங்களைத் தேவரீரிடந் தர்க்கித்து வாது விளைத்ததில் கடவுளில்லவே யில்லை, கண்டதே காக்ஷி கொண்டதேகொள்கை யென்ற என்னுடைய தீர்மானத்தைத் தங்களுடைய வல்லமையாகிய கல்வியானது பேதித்துக் கடவுளுண்டெனவே சாதித்து வருகிறதாயிருக்கிறதில், இதுவரை பிரம்ம நிச்சயத்தைப் பற்றி யாதொரு *சகடுமெனக்கில்லை. அது உறுதியாயிற்று. இதன் மேல் நிரூபிக்கின்ற ஈஸ்வரன் விஷயத்தில் எனக்கின்னுஞ் சகடு நிவர்த்தி யுண்டாகாததால், மறுத்து மறுத்து யான் தங்களை வினாவும்படி நேரிட்டது. ஓ! ஐயனே! இதைத் தவிர வேறு

*சகடென்பது - சந்தேகம்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

காரணங்க ளென்னிடத்திருக்க வினிக் காண்பதன்று. தாங்கள் கிருபை கூர்ந்து என்னுடைய வினாவுக்கெல்லாம் ஐயமற விடைதரப் பிரார்த்திக்கின்றேன் அருள் செய்மின்.

குரு:- ஓ! விஷயப் பிரியா! மிகவுஞ் சந்தோஷம். நீ கடாவிய சங்கைக் கருத்தம் அதற்கு முன்னதாயுரைத்த காரணங்கண்மூலம் பரிஷ்காரமாய் வெளிப்பட்டே யிருக்கிறது. அதாவது:- மௌனமாகிய பிரம்மத்திற்கு யாதொரு நினைப்புக்குரிய உளமில்லையெனவும், ஈஸ்வரனாய் வந்த பின் சர்வ வல்லமையுமுள அந்நினைப்பாகிய உள்ளம் உண்டாயிற்றெனவும், அதனாற் பஞ்ச கிருத்தியங்களு நடத்தப்படுவ தெனவும் அறியவேண்டியதே. அதிற் சங்கற்ப விகற்பமு மற்ற சுத்த சைதன்யத்தை ஈஸ்வரர்க் கிருதயமாய்ச் சொல்லப் பட்டதில் அதையே **துவிதமாகவும் ***அத்துவிதமாகவும் இரு வகையாய்ச் சொன்னது யாதென *****ஈண்டு தர்க்கிக்கக் கூடும். அதன் றன்மையையுஞ் சுருக்கமாயிங்ஙனம் பகரக்கேள்; ஈஸ்வரனுக்கு ஸ்தூல சூக்கும காரணமென மூன்று சரீரங்களுளது. அவற்றுள், ஸ்தூல சரீரமோ, ஸ்தூல பஞ்ச பூதங்களிற் றோன்றிய ஸ்தூலசரீர *****சமஷ்டியுமான பிரபஞ்ச வடிவம். இதையே விராட்டென்றும் ஈஸ்வரனுக்கு ஜாக்கிர மென்றும் சொல்லலாகும். சூக்கும சரீரமோ, சூக்கும பஞ்ச பூதங்களிற் றோன்றி சூக்கும சரீர சமஷ்டியுமான வடிவம். இதையே ஹிரண்ய கருப்பமென்றும் ஈஸ்வரனுக்குச் சொப்பன மென்றுஞ்சொலத்தகும். காரணசரீரமோ, மேற்குறித்த ஸ்தூல சூக்கும மிரண்டிற்குங் காரணமாயிருக்கின்ற மாயை. இதையே, அவ்வியாகிருத மென்றும் ஈஸ்வரனுக்குச் சுழுத்தி யென்றுஞ் சொல்லலாகும். இப்படி மூன்று சரீரமா யிராநின்ற ஸ்தூல பூதம் - 5, ஸ்தூல சமஷ்டி - 6, சூக்கும சமஷ்டி - 20, மாயை -1, ஆக 32 தத்துவங்களுடனும் பொருந்திச் சகல புவனங்களிலுங் கலந்து நிற்பன் ஈஸ்வரன். அது எப்படி யென்னில்: சிதாபாசன் *தன் மூன்று சரீரத்துக்குரிய 27-தத்துவங்களுடனும் பொருந்தித் தன் சரீர ஆத்யந்தமுங் கலந்து நிற்பது போலவாம். இவ்வாறு கலந்து நிற்கும் ஈஸ்வரற்கே ஆத்மாவாகிய உள்ளம் - துவிதமான நினைப்பா யிருந்து

**துவிதமென்பது - இரண்டு ***அத்துவிதமென்பது ஏகம் ****ஈண்டென்பது இவ்விடம். *****சமஷ்டி யென்பது: எல்லாம் * சிதாபாசன் என்பது ஜீவன்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

கொண்டிருக்கும். அந்த நினைப்பு, சர்வ ஜீவன்களுடைய பிறப்
இறப்பு, பசி, தாகம், சுகம், துக்கங்களிலும் வியாபித்து
கொண்டிருக்கின்றது. அந்தப் பிறப்பிறப்புக் குரிய பிராண
வாயுவுக்கும் சுகதுக்கத்திற்குரிய மனதுக்கும் யாதொ
சம்பந்தமுமின்றி, அழிவு படாததாய் அளவில்லாத தாய் பரமாத்
ஸ்வரூபமாய் ஆகாயத்தைப் போல நிறைந்து * நிபிடீகரமா
எல்லையற்றியங்குவதையே ஈஸ்வரனுக்கு பிரம்மவுள்
மென்றியற்றலாகும். அவ்வுள்ள மெங்கணு நிறைந்தளவு படாத
வென்பதெப்படி யெனில்: சிதாபாசர்களுடைய நினைப்பிலிருந்
நிமை கொட்டற்குள் இன்ன காரியம் பிறக்கு மென்றாவது அ
இவ்வள வென்றாவது அளவிடக் கூடாமையா யிருப்ப
போலுமாம். அப்படிக்கான நினைப்பைச் சுத்தப் பிரம்ம ஞானிக
வசமாய்க் கண்டிருப்ப தொப்ப ஈஸ்வரனு
பிரபஞ்சாதீதமாயிருந்து அத்துவிதமான பிரம்ம ஹிருதயத்தை
வசமாய்க் கண்டிருக்கின்றனன். இவ்வண்ணம் பிரபஞ்சாதீதத்தி
பிரபஞ்ச சகிதத்தை மறந்து நினைப்பில்லாமலும் பிரபஞ்
சகிதத்தில் மறப்பில்லாமலு மிருப்பதால் ஈஸ்வரனை நினைப்
மறப்பு மற்றவனென லாயிற்று. இன்னமும் அந்த ஹிருதயத்திற்
உள்ள மென்றும், உள்ளென்றும் பெயருண்டா யிருத்தலா
ஈஸ்வரனைத் திருவுள மென்றும், கடவுளென்றுஞ் சொல்
வந்தன. எப்படியேல்: - திரு = மேன்மையாகிய, உள்ளம்-ஞா
மென்றருத்தமான பிரகாரம் மேன்மையுள ஞானமென்கிற திருவு
மென்றும், கடம்-சரீரம், உள்-ஞானம் என்றருத்தமான பிரகார
சரீரமும் அதில் ஞானமு மென்கிற கடவுளென்றாம். இப்படிக்கா
தன்மையை உன்னுள்ளத்திலேயு மறிய நீ பாத்தியப்படுவாயே
அறிவ தெளிதாகும்.

(18)

சிஷி: இப்படிக்கான கடவுளர்க்குச் சூக்குமபஞ்ச பூதங்களி
றோன்றிய சூக்கும சரீர சமஷ்டியும் சூக்கும சரீர மெனவு
ஸ்தூல பஞ்ச பூதங்களிற்றோன்றிய ஸ்தூல சரீர சமஷ்டியு

* நிபிடீகரமென்பது : இடைவிடாத் தன்மை

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஸ்தூல சரீர மெனவு மாயின், அந்த ஸ்தூல சூக்கும பூதங்களைத் தோற்றுவித்த விட்சேப சத்தியின் காரியமே அந்தச் சரீரங்களை யுண்டு செய்ததாய்க் காண்கின்றது. அவ்விதம் உண்டு செய்யுஞ் சத்தியை யன்றி ஈஸ்வரனுக்கு ஸ்வயம்புவாயுண்டு செய்யுங் கருமம் உண்டோ வெனவும், ஸ்தூல பூதத்திற்குக் காரணமாயிருந்தது சூக்கும பூதம்போல சூக்கும பூதத்திற்கு காரணமா யிருந்த பூதமெதுவெனவும் விளம்ப வேண்டும்?

குரு: விட்சேப சக்தி யென்பதே ஈஸ்வர சங்கற்பமா யிருத்தலால், அதின் காரியமும் ஈஸ்வரனுக் கன்னியமல்ல. சூக்கும பூதத்திற்குக் காரணமாயிருந்தது விட்சேபசக்தியி னினைப்பேயாம் பிறவும் மாயா காரணமாகிய காரணபூதமென்பர்.

(19)

சிஷி: இன்னு மொரு சந்தேகம்; சிதாபாசரை மூன்று குணங்களில் விபரீதப்படச் சிருஷ்டிப்பதற் குண்டாய காரணம் யாது?

குரு: அச் சிதாபாசர் அசுத்த மாயா பிரதி பிம்பர்களாதலால், அம் மாயைக்குரிய சுபாவகுண மூன்றும் அவர் கூடப் பிறந்தன. அதுவே காரணமாம்.

(20)

சிஷி: விட்சேப சக்தியினிடமாய் ஆகாய முதற் பஞ்ச பூதியங்கள் முறையே தோன்றின தென்பதாய் இவ் வியாசத்திற் றாங்கணவின்றதற்கு முழு விரோதமாய், "பிரம்மாவானவர் முற்காலத்தில் ஜலத்தைச் சிருஷ்டித்து அதில் வீரமாகிய விந்துவை விட்டார். அஃது முட்டையாய் மிதந்தது கண்டு அதை யுடைத்த போழ்து, மூன்று குணங்க டோன்றி அக்குணங்களிற் கெடாத பஞ்ச பூதங்களு முண்டாயின" என்று விருத்தாசல புராணம் கிரிச் சருக்கம் 12-வது கவியிற் கூறிய தென்னை?

குரு: ஞானமாகிய அக்கினியைப் பிரகாசிக்க விடாமல் மக்னஞ் செய்து கொண்டிருக்கிற ஜல ரூபமாகிய அக்ஞானத்தி னிடமாய்ப் பிரணவமாகிய விந்தை பிரம்மன் மகிமைப் படுத்தியவுடனே அங்ஙனம் விட்சேப சக்தி யுதயமாக ஓர்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

கருவாய்த் திரண்டது. அக்கரு பூரண மெய்தியது தெரிந்து இரகசியத்தை விட்டு பகிர்முகப் படுத்தியபோது அது சாத்விக ராஜத தாமத மென்னு முக்குணங்களுந் தோன்றக் கெடாத சூட்சும பஞ்ச பூதங்களு முறையே அச்சக்தியினிடமிருந் துண்டாயின, என்று குறிப் பருத்தத்தாற் றெளிந்து கொள்வாயாக.

(21)

சிஷி: இன்னொன்று. மானவதர்ம சாஸ்திர மென்பதின் 1-ம் அத்தியாயம் 8-9-12-23-ல் "கடவுள் தியானஞ் செய்து பலவித பிரஜைகளைச் சிருஷ்டிக்க வேண்டுமென் றாசை கொண்டு முதலில் ஜலங்களைச் சிருஷ்டித்தான்: பின் அந்த ஜலங்களுக்குள்ளே ஒரு வித்தை வைத்தான்" என்றும் "அந்த வித்தானது பொன் ரூபமாயுஞ் சூரியப் பிரகாசமாயுமிருக்கிற ஒரு முட்டையாயிற்று; அம்முட்டையில் அக்கடவுள் பிரம்மாவாகிப் பிறந்தார்" என்றும் "அந்தப் பகவான் அம்முட்டையில் ஒரு வருஷம் வாசம் பண்ணி பின்பு தன்னுடைய தியானத்தினால் அம்முட்டையை இரண்டு துண்டாகப் பிளந்தார்" என்றும், "அவ்விரண்டு துண்டுகளினால் வானத்தையும் பூமியையு மேற்படுத்தினார், நடுவில் ஆகாயத்தையும் எட்டுத் திக்குகளையும் ஜலங்களினிடத்தையும் ஸ்தாபித்தார்" என்றுஞ் சொல்கிற வரலா றென்னை?

குரு: அது காரண தேயுவிற் பிரதிபிம்பித்த தேவன் காரண அப்புவினிடமாய்த் தோன்று மாறையும், அங்ஙனந் தோற்றியதினின்றும் காரண பிருதிவியினிடமாய்த் தோன்றி ஈஸ்வரானுக்ரகத்தாற் கீழ்மேல் என்கிற மாயா பிரபஞ்சத்தை ஜாக்ரத்தில் வெளிப்படுத்து மாறையும் குறிப்பால் வெளிப்படுத்தியதாகும்.

(22)

சிஷி: தோற்றிய கடவஸ்துக்க ளெல்லாம் நிலை யின்மையாகவே காண்பனவா யிருத்தலால், ஈஸ்வர சரீரமும் நிலையின்மையாமல்லவா? ஆயின், அது ஈஸ்வரற்குக் கேவலமலவோ?

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

குரு: ஸ்தூல சரீர சமஷ்டியும், சூக்கும சரீர சமஷ்டியும் ஒன்றுக்கு ளொன்றாய்த் தோன்றியபடி யொடுங்கும் போழ்து ஈஸ்வரனுக்கு ஸ்தூல சூக்கும சரீரங்களின்றி காரண சரீரமாத்திரமா யியங்கும். அது மஹாகாரணத்தி னிலைத்து நித்ய வஸ்து தத்துவமாய் நின்று பரிசுத்த ஞானத்தாற் பழையபடி பஞ்ச கிருத்தியங்கட்குரிய தன்னுடைய மூன்று சரீரங்களாகிய தோற்றங்களையு முறையே வெளிப்படுத்துவதாகும். இவ்வடை வாற்றான் மூன்று சரீரங்களையும் ஈஸ்வரனுக்குச் சகள மென்றும் நிஷ்கள சகள மென்றும் அவைகட் கக்கிரகித்து மஹாகாரணமாய் விளங்கும் போது நிஷ்கள மென்றும் அதுவே கேவல மென்றும் உரைக்க ஹேதுவாயிற்று. மேற் சொன்ன மஹா காரணமானது விந்து தத்துவ மென்கிற மூலப் பிரகிருதியின் சுபாவ நிலயமெனக் கணிப்பாய்.

(23)

சிஷி: ஓ! சுவாமீ! இப்படிக்கு அண்டபிண்ட சராசரமாய், அதற்கப்பாலு மப்பாலாய் விளங்கிய சர்வேச்சுரனை ஒருவன் றரிசிக்க வென்னில் எப்படிக்கியலும்?

குரு: ஐங் கிருத்தியத்தி னிமித்தம் பஞ்ச பூதங்க ளென்னும் ஐந்துருவும் ஒருருவாய் ஈஸ்வர னானவர் சித் சொரூமாய்ப் பிரதி பிம்பித் திருக்கின்றனர். அப் பிரதி பிம்ப தரிசனத்திற் குரிமைப்பட்ட சத் புருஷர்கட்கு அத்தரிசனங் கிடைக்கும். அதில் எவரெவர் என்னென்ன பாவனையாய்ச் சிந்தித்தார்களோ அன்னன்ன பாவனையாயும் அந்தப் பிரதிபிம்பன் பிரகாசிப்பன். அதற்குப் பிரமாணம் ஏதென்னில், மனிதனுடைய சரீரத்தில் ஸ்தூல தத்துவமாயிருக்கிற ஆறினுக்குள் சூக்கும தத்துவம் 20-ம் ஓர் சொரூபமாகவும், அதனுள் காரண சரீர தத்துவமான அவித்தை மாயை 2-ம் ஓர் சொரூபமாகவும், இதின் முறையே பிரதி பிம்பித்த ஜீவன் ஈஸ்வரம் என்னும் 2-தத்துவமும் ஓர் பொருளாகவும் இவற்றிற் கெல்லாம் அதிஷ்டானமாக விரா நின்ற அறிவாகார ஆன்மா ஓர் பொருளாகவுங் காணப்படுதல்போல ஈஸ்வர சொரூபத்திலேயுங் காணத்தகும். அப்படிக்கான பிரமாண்ட சொரூபத்திற்குரிய தத்துவங்களில் அபஞ்சீகிருத பஞ்ச

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பூதங்களுமொன்றாய் நின்ற ஆன்மதத்து வத்தையே மேற்கண்டபடி ஈஸ்வரனானவர் பிரதி பிம்பித் திருக்கின்றனரென விசைத்தேம் யாம். அவ்வான்ம தத்துவமாகிய சைதன்யம் ஸ்வயம்புவா எவ்வித சொருபத்தையு முண்டுசெய்து கொள்ளவும் அதை *ஆவரணிக்கவும் சக்தியுள தென்றறி.

(24)

சிஷி: இந்தப் பிரகாரம் அகண்டாகார சொரூபத்தில் ஆன்ம தத்துவமா யிராநின்ற ஈஸ்வர சைதன்யம் **ஏனைய தத்துவங்களிலும் கூடுங்கால் அஃதெத்தனை விதமாகும்?

குரு: அஃது இன்னு மைந்து விதமாகும். எவ்வாறென்னில்; அவ்வித்தையோடு கூடின சைதன்யத்தை ஜீவசைதன்யமென்றும், அந்தர்க்கரணங்களோடு கூடின சைதன்யத்தைப் பிரமாத்துரு சைதன்யமென்றும், அந்தர்க் கரணங்களின் விருத்தியோடு கூடின சைதன்யத்தைப் பிரமாண சைதன்யமென்றும் இந்திரியங்களோடு கூடின சைதன்யத்தைப் பிரமேயசைதன்யமென்றும், இந்திரிய விஷயங்களோடு கூடின சைதன்யத்தைப் பல சைதன்ய மென்றும் பகரலாகும். இந்தச் சைதன்யமாகிய ஆத்மாவையே மாயா சக்திக் காதாரமான அத்வைதாநந்த சொருப மென்றும், அதற் கைந்தி லக்ஷண முளவென்றுஞ் சொல்லப்படும். எப்படி யென்னில், - ***காலத்திரயத்திலும் ஆதியாத்மீக ஆதி பௌதீக ஆதி தெய்வீக மென்னுந் ****தாபத்திரயத்திலும் ஒன்றாயிருக்கையால் அது சத்து லக்ஷணம். இருட்டறைக்குள் நன்றாய் மூடி முக்காடிட்டுக்கொண்டு வெளிச்ச முதலிய பிரகாசமின்றியிருந்து தான் முன்னம் பார்வையிட்டிருப்பதுகளை எண்ணுகில் அவைகள் பிரத்தியட்சமாய்த் தோற்றுவதனால் அது சித்துலக்ஷணம். சர்வ ஜீவர்கள் சம்மதமாகச் சுழுத்தியவத்தையி லிருக்கிறபடியால் அது ஆநந்த லக்ஷணம். ஒரு காலத்திலும் அழியாதபடியினால் அது நித்யலக்ஷணம். எங்கணும் வியாபகமாய் நிராமயமா யிருக்கிறபடியால் அது பரிபூரண லக்ஷணம் என ஐந்தாம்.

---

* ஆவரணித்தல் - மறைத்தல், ** ஏனைய - மற்ற. *** காலத்திரயம் - சென்ற, நிகழ்கிற, வருகிற காலம். **** தாபத்திரயம் - அவஸ்தாத்திரய சம்பந்தமானவைகள்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

உ.

சூட்சும பூதங்களின் தமோகுண அம்சமான பஞ்சபூதங்களிலிருந்தோன்றிய ஸ்தூலதத்துவம் ௨௰ அதற்குள்ளாகிய சூட்சும சரீரதத்துவம் ௨௰ம் சேர்ந்த பூத காரியமாயுள்ள

காரிய சரீர பாவனை.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

(25)

சிஷி: இப்படி ஆத்ம தத்துவமா யிராநின்ற ஈஸ்வரனுக்குச் சித் சாருபம் எத்தன்மை யெனவும், அவருடைய வினோத சாருபமாகிய அண்ட புவனங்களில் அவருக்கு நிலயமான ஈசஸ்தல மெங்கெனவும் விரித்துரைக்க வேண்டும்?

குரு: ஓ! நுண்ணறிவுடையாய்! இந்த நியாயத்திற் கந்த நியாய மடுத்துரைக்க வேண்டியது தக்கதுதான். ஞாபகமாய்ச் செவி காடுப்பாயாக. இதோ வரைந்திருக்கிற காரிய சரீர பாவனைப் டத்திற் கண்ட சூக்கும தத்துவம் 20, ஸ்தூல தத்துவ மென்கிற ட்பாகத்துவம் - 6, ஜீவன் -1, ஆக 27 தத்துவங்களாலேற்பட்ட தாபாச மென்னும் வியவகார ஜீவ தேகத்தில் ஆத்ம சாருபமாகிய உள்ளம் உச்சியி லிருப்பதொப்ப அண்ட கிரண்டங்கட்குந் தலையாய் விளங்கும் ரம்மாண்டத்தினுச்சியே சர்வேசுவரனுக்குப் பிரதான லயமாகும். சிதாபாசதேகத்தில் நினைப்பாகிய மனம் விருத்தி கட லலாடத்திலிருப்ப தொப்ப அவ் வண்டவுச்சிக்கும் ழண்டமே ஈஸ்வரனுக்கு இரண்டாவது நிலயமாகும். சிதாபாச ரீரத்தின் கண்ட ஸ்தானத்தில் நினைப்பாகிய மனமிருப்ப தாப்ப கிருத்தியங்க ணிமித்தம் மண்ணும் விண்ணும் பொருத ன்ற மத்யஸ்தானமே ஈஸ்வரனுக்கு மூன்றாவது நிலயமாகும். தாபாச சரீரத்தி னெஞ்சு ஸ்தானத்தில் விசாரிப்பாகிய புத்தி ருப்பதொப்ப மேலே சொன்ன மண்ணும் விண்ணும் பொருத ன்ற மத்ய ஸ்தானத்திற்குங் கீழுள்ள புவனமே ஈஸ்வரனுக்கு ன்காவது நிலயமாகும். சிதாபாச சரீரத்தின் நாபி ஸ்தானத்தில் ாதொரு காரியத்தை நடாத்த ஆயத்தப்படுகிற சித்த ருப்பதொப்ப மேலே கண்ட புவனத்திற்குங் கீழுள்ள புவனமே ஸ்வரனுக்கு ஐந்தாவது நிலயமாகும். சிதாபாச சரீரத்தின் பௌத்ர தானந் தொடங்கி தேக ஆத்யந்தமுங் கலந்து னென்றபிமானிக்கிற அகங்கார மிருப்ப தொப்ப மேற்சொன்ன வனத்திற்குங் கீழுள்ள புவனமே ஈஸ்வரனுக்கு ஆறாவது லயமாகும். இந்த ஆறு நிலையங்களினும் விளங்கா நின்ற ர்வேசுரனுக்கு இன்னும் பிரீதியான ஓர் நிலய முண்டு. அதுதான் சான்களிருதயம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

இப்படி வாசஞ் செய்யா நிற்கும் ஈஸ்வரனுடைய சித் சொருபம் விஸ்வனென்னுஞ் சிதாபாச வடிவ பாவனையாய் லலாடஸ்தான ஞானநேத்ர தேஜோ மயமாய் ஆநந்தமூர்த்தம யிருப்பதென்றறியக் கடவது. இந்நியாயத்தைக் கொண்டே ஈஸ்வரன்! "தன்னைப்போல ஜீவனையும் படைத்தார்" என்று சாற்றற்கும் ஓர் நியாயம் வந்தது காண்க.

(26)

சிஷி: சர்வேசுரனாகிய தேவனானவர் இன்னணஞ் சொருபிய யிருந்து கொண்டிருக்க சிலர்கள் "தேவன் அரூபி" என்றதிர்ப் ததெதனால்?

குரு: நல்வினையுந் தீவினையுமின்றி ஆத்மாநந்தா தீதமாயுள்ள பரப்பிரம்மம் தனக்கன்னியமல்ல தானும் வேறல்ல; சர்வமு பிரம்மமயம்; அதுவே தான் என்கிற நிர்விகற்பத்தினிலைத்து இன்ப துன்பமின்றி நிர்ச்சலனமாய் நிர்ச்சங்கமாய் நிர்விகாரமா நிர்க்குணமாய் நிர்மலமாய் நிராமயமாய் இராநின்ற சுத் மெய்ஞ்ஞானி யானவர்கள் ஈஸ்வரற் குள்ளமாயிலங்கு பரமபதத்தைப் பெறத்தக்கவர்க ளாதலால் அவர்கண் மட்டு தேவனை அரூபியென நுவல நியாயமுண்டு. மற்றையோர் கவ்வித நுவல எட்டுணையேனு நியாயமில்லை. இவ்விருதன்மை முணராமல் தேவனை அரூபியென வெண்ணிக்கொண்டு ஒருவ தேவாராதனை முதலிய சத்கர்மங்களைச் செய்யி அக்கர்மங்களை அரூபியாகிய தேவன் எப்படித்தானறிவா அதற்கெவ்வித பதவியைக் கொடுப்பார், அவர் தரிச மெப்படித்தான் கிடைக்குமென்றும்; ஆராதனை செய்பவ ஸ்தோத்திரங்களை அரூபியாகிய தேவன் எந்தக் காதாற் கேட்பா பின்னரெந்தவாயா லுத்தரஞ் சொல்வார். அவன் பணிவிடைக எந்தக் கண்ணாற்பார்ப்பார் என்று மெண்ணுவதோடு தேகமில்லா விடில் ஹிருதயமில்லை ஹிருதயமில்லாவிடில் தேகமில்லை எனவறிந்தபடி ஹிருதயமில்லாத அரூபத்தை யிருதயமுள் கடவுளெனச் சாற்றுவதுந் தப்பெனச் சிந்திக்க வேண்டும். ஆண் பெண், அலி எனுமடையாள மேதுமின்றி அருபமாகி வஸ்துவை ஆண்டன்மையாய்த் தேவனென்று

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஆண்டவனென்றும் ஒருவன் பேசுவதற் கெப்படித்தானிடம் வந்தது? தேவனை அரூபி யென்று சொன்னால் அவர் கிருத்தியங்களாகிய இவ்வுலகையும் அவர் ஸ்வயம்புவாய் நடத்த ஹிருதய மற்றவரென்றே யாகும்.

ஹிருதயமுள்ள கடவுள் தான் தேவன் என்னில், அந்த ஹிருதயமிருக்க ஓரிடமும் வேண்டும். அப்படிக்கிடமுள்ள ஹிருதயத்தின் கோருதற்படி ஒன்றைப் பார்க்க விழியும், கேட்கச் செவியும், வாசனை யறிய நாசியும், ஒரு வாயும் இந்திரியங்களாயிருக்க வேண்டியதுடன் அந்த ஹிருதயம் வசிக்குமிடமாகிய வீட்டின் கண்ணே ஏதேனுங் கிராண முண்டாகில் அதையறிய உடம்பும் அவசிய மிருக்க வேண்டும். இப்படிக்கில்லாமல், அந்த ஹிருதயமானது தனியே யிருக்க யாதொரு முகாந்தரமுங் காணப்படவில்லை.

தேவன் சொரூபியா யில்லாமல் அரூபியா யிருக்கில் அவருக்கு நிலயமாகிய நித்ய வாசஸ்தலமும் ஓரிடத்துமில்லாமல் ஏகமேயாகும். அப்படிக்கேகமேயானால் அவருடைய சொந்த வீடென்கிற சுவர்க்கம் - இவ்வுலகுக்குமேலென்னவாவது அதினனு போகஞ்சிலாக்ய மென்னவாவது அதைப் பரலோக மென்னவாவது எவ்வளவுங் கூடாதாய் முடியும்.

பராபரனை அரூபியென்று சொல்பவன் - பராபரன் பேசினா ரென்றாவது நோக்கினாரென்றாவது செவி கொடுத்தா ரென்றாவது வாசனையறிந்தா ரென்றாவது யாதொன்றைக் கொடுத்தா ரென்றாவது சொல்லப்படு வதிலொன்றை ஒத்துக்கொள்வானேல், அது பராபரனுக்கு ரூபமுண்டெனவே காட்டும்.

இத்யாதி காரணங்களால் பிரபஞ்ச சகிதத்தில் ஈஸ்வரனுக்குச் சொரூப முண்டெனவே ரூபகமாகும்.

இத்தை நன்காயத் திடமில்லாமல் கறுத்ததெல்லாந் தண்ணீர், வெளுத்ததெல்லாம் பால் என்னு மந்த மதியோர்கடான் அரூபமெனப் பேசுவார்கள். அதுபற்றியுனக்கு எவ்வளவேனுஞ் சந்தேகம் வேண்டியதின்று.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

(27)

சிஷி: அற்றேல், சில புராணங்களில் "கடவுள் *அசரீரியா யுத்தரஞ் செப்பினார்" எனச் சொல்லப் படுகின்றதே அஃதெவ்விதம்?

குரு: கடவுள் தமது சித் சொரூபத்தை ஆவரணித்து சங்கதி தெரிவிப்பதற்காக மட்டும் சப்தமிட்டுத்தரங் கொடுப்பதே அது.

(28)

சிஷி: அற்றேல், "கைகால்களில்லாம னடக்கிறவனும், கிரகிக்கிறவனும், கண்ணில்லாதவனாய்க் காண்கிறவனும், செவியில்லாதவனாய்க் கேட்கிறவனும், ஒருவனாலும் அறியாப்படாதவனா யிருக்கிறவனு மெவனோ அவனைத் தேவெனச் சொல்லுகிறார்கள்" என்பதாய் நூல்கணுவல்வ தென்னை?

குரு: ஈஸ்வரனுடைய உள்ளமாம் போதப் பிரமத்தினின்றும் நினைப்பாய்க் கணிக்கப்படும் ஞான தத்துவத்திற்கு அத்தன்மைகளுளவால், அவ்வாறு நூவலலாயிற்று. அந்த தத்துவம் கர்த்தாவுடைய ரூபாரூப நிஷ்கள சகள ஸ்வரூபத்திலேயே உள்ள தென்று திட்டமாய்த் தெளிக.

(29)

சிஷி: சத்கர்ம நெறிநின்று கர்த்தாவை அரூபி யெனக் கருதித் தொழுபவர்கட்கு ஏதேனுஞ் சுகம் லபிக்குமோ? லபிக்காவோ?

குரு: அப்படிப்பட்டவர்கள் அறம்பட வியற்றும் ஜீவகாருண்ய தர்மங்களானவை மட்டுந் தங்களைச் சாரப் பெறுவார்கள். இலதேல், அவையும் பொருந்தா. தேவாராதனை வணக்க முதலியவைகள் அவரைச் சேரா தொழியும். ஏனெனில், ஒரு தனவானிடம் அனுதினம் யாசித்து ஜீவனஞ் செய்து வந்த ஓர் வறுமையாள னானவன் தன் பேரவாவால் அந்நிதியின் பெருந்திரவியமெல்லாம் தனக்குச் சொந்தப்படக் கனவு கண்டு தன்னுடையதென வெண்ணி அக்கனகனிடம் யாசிப்பதையும் விட்டுத் தானோர் தனவானெனத் தீர்மானித்துத் திரியுங்கால்

---

* அசரீரி என்பது - உடம்பில்லாதது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

அவனை முன் னறிந்த வொருவன் கண்டு,ஓ! யாசகீ! உன் கலாக்ஷேபஞ் செவ்வையாய் நடந்து வருகின்றதோ வென்ற நிமிஷம் மிகச் சினந்து என்ன சொன்னாய் உன்னைப் போலவா நாமும், இவ்வூர்ப் பொன்னன் பொருளெல்லாம் எம் முடைய தென்றறியாயோ என்று விரைந்து பறைந்து அப் பொருளி லோர் சிறு காசேனுந் தனக்குபயோகப்படாமலும் யதார்த்தப்படி யாசித்துயிர்வாழாமலுந் தொலையலானது போல, தனக்குக் கிரமமாய்க் கடவுள் வத்சலத்தாற் கிடைக்கப்பட்ட அறிவைக் கொண்டே ஜீவகாருண்யம் ஈஸ்வரபக்தி பாசவைராக்கியம் பிரம்மக்ஞானம் என்னு நான்கு முறைமையு முணர்ந்து தன்னாலியன்ற மட்டும் அறத்தின் வழி நின்று அத்தன் பதந் தொழுதேத்தி யருள் பெற்றுய்யாமல் பிரம்மக் ஞானப் பிரயோஜன மென்னும் பெருங்கதிக்கு மட்டும் ஆசை வைத்து அதற்குரிய சாந்த சாஸ்வத நியாய நிருபணங்களையும் நூல்களையு நன்குணராது நெருப்பென் றெழுதிய ஏட்டை அடுப்பில் வைத்துக் கொண்டயராம லூதியதனைய அத்வைத மார்க்கம் போற் கடவுளை அரூபமாய்ப் பேசித் துவைத மார்க்கம் போல் அனுஷ்டிப்புகளைச் சொல்லா நிற்கும் புஸ்தகங்களைச் சதா வாசித்து அவ்வழி நடந்து அனன்ய பாவகுண ஐக்யரசப் பிரதான ஜன்மரகித பரம மோக்ஷந் தனக்குச் சுதந்தரந் தானெனச் சிந்தித்து நியாயமாயேற்பட்ட நூல்களையும் நூலாய்ந்தோர்களையுஞ் சந்தித்தாற் சீறி விழுந்து தன் வழியே பெரிதாய் மெய்ஞ்ஞானிகள் போற் பிதற்றி அம்மெய்ஞ்ஞானத்தில் லேசமுஞ் சொந்தப் படாமல் இல்லறந்துறவற மென்னும் இரண்டுங் கெட்ட தன்மையாய் "ஆய்ந்தோர்ந்து பாராதான் தான்சாகக் கடவன்" என முடிவதாலென்க. பிறவும் கேள்.

சூரிய அஸ்தமான காலத்தின் மூடுண்ட அந்தகார இருண் முழுதுஞ் சூரியதரிசனத்தாலன்றி நாசமாகா தென்றறியா அவிவேகிகள் அனந்தம்பேர் கூடி அனந்த ஆயுதங்களால் அவ்விருளை யகற்ற வென்று அடித்தும் வெட்டியும் குத்தியுமான முயற்சியிலிருப்பதுபோல மனோலயமாகாமல் மனந்தடித்து மனம் உருவமாகவுள்ள இச்சாவசத்தோர் அக்ஞானத்தைக் கெடுத்துப் பிரக்யா மாத்ரமான அரூப மெய்ஞ்ஞானத்தைப் பெற வேணு

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

மென்று விடா முயற்சி செய்வதையு நினைக்க நியாய முண்டா யிருப்பதுமன்றி; ஆத்மார்த்த மறியாமல் வேதாந்திக ளெனவும் சூன்ய மார்க்க மறியாமல் சந்யாசிக ளெனவும் தன்னைத் தானறியாமல் பந்த மோக்ஷ மெனவும் சொல்லிக் கொள்ளுஞ் சுமடர்களை *மான அவர்களை யெண்ணவும், மகிஷம் ரிஷபத்தையும், கர்த்தபம் துரகத்தையும், நேசிக்க எண்ணியதுபோலும் தரைவாழும் ஜெந்து நீர் வாழும் ஜெந்துவையும் நீர் வாழும் ஜெந்து தரை வாழும் ஜெந்துவையும் பிரிவற்று நேசித்திருக்க முயன்றது போலும் அவர்கணின்ற நிலையை ஊகிக்கவும் ஹேது வுண்டா யிருக்கிறது. இன்னமும்;

இப்படிக் கொவ்வாவழி நிற்பவர் காரிய மெப்படிப்பட்ட தேல், அதிமோகத்தால் அழகிய மானைப் புணரவென்றெண்ணிய வொருவன் அம்மானைப்போ லுருப்பட்டுத் தானுந் தொடரச் சாத்தியமின்று, தன் மனித உடம்பொடு தொடர்ந்து கானகந் திரிந்து பரதவித்துக் கடைசியிற் றன் கருத்து நிறைவேறா தவலப்பட்ட தொக்கும்.

இவ்வித பிரமாணங்களால் சம்சாரதுக்க நிராகரண நிரபேட்சா பிரகாச அரூப ஞானத்தை விரும்பினவர், தானும் அத்தன்மையையே பொருந்திற்பயன்படு மென்றும் இலதேற் பயன் படாதென்றும் தீர்க்கமாய்க் காணலாமன்றோ. இதனால், சம்சாரதுக்க பீடித மான பெந்த தொந்தங்கட் குள்ளான வியவகாரஜீவர்கள் அஜட அத்வைத நிலையைக் கருதுவ தொழிந்து துவைத நிலையைக் கருதுவதே சிலாக்யம்.

(30)

சிஷி:- நன்று. யாதொரு தத்வாதத்வ நிண்ணயமும் ஆய்ந்தறியச் சக்தியில்லா வொருவன் மூடபக்தி யாகக் கடவுளைத் தொழுவானேல், அவனுக்கேதேனும் பயனுண்டோ? இன்றோ?

குரு:- அவனுக்கு ஈஸ்வரனானவர் மூட நீங்கும்படி அறிவைக் கொடுப்பதே பயன்.

* மான என்பது - போல

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

(31)

சிஷ்:- வித்தையிற் சிறந்து சித்தந்தெளி தேசிகனாகிய என் சற்குரு நாதா! இவ்வியாசத்திற் காட்டிய பிரம்ம நியமப் படத்தில் கிஞ்சில் சந்தேகங்கஎெற்குள. விவரம்-சத்ரூப சத்தி சித்ரூப சத்தி ஆநந்த ரூபசத்தி எனக் கண்ட முச்சத்திகளும் அச்சத்திகளோடு கூடிய பரன் பரிபூரணன் பரமாநந்தன் என்பவர்களும் ஈஸ்வரனுக்கு அன்னியம் போற் காணுமாறையும், சக்தி யென்பதும் மாயை யென்பதும் எந்நிலைமையுடைத் தென்பதையும், மூலப் பிரகிருதியின் ரஜோகுண அவித்தையிலுதித்த சிதாபாசர் ஈஸ்வரனுக்குப் பிரத்தியேகமா யுதித்ததுபோ லிருக்குமாறையும், சூக்கும பஞ்ச பூதங்களின் ரஜோம்சத்தில் ஒவ்வோர் மாத்திரை யொன்றாகச் சேர்ந்து சமானனாதி வாயுக்கள் 5 - மட்டு முண்டானதாகச் சொல்கிறபடிக் கில்லாமல் 10 - வாயுக்களுள தென நூல்க ணொடிக்கு மாறையும், அப்புவின் கூறாய் உதிரமும் மஜ்ஜையும், பிருதிவியின் கூறாய் நரம்பு சர்மம் மாம்சம் என்பும் உற்பனமெனக் கூறியதினின்றும் சின்னூற்க ளதிகமுரைக்கு மாறையும் விளக்கியருள வேண்டும்!

குரு:- இந்த வியாசத்தின் 24 - வது வினாவுத்தரத்தைக் கவனியாமல் இங்கு சில கடாக்களைக் கடாவினாய். ஆனாலும் வியத்தமாயருள்வேம். சத்தில்லாமற் சத்தி யொன்று மில்லை. அந்தச் சத்துக் காலத்திரயத்தும் நாசமில்லாததாய் நிகழும். அதுவே வஸ்து. அந்த வஸ்தாகிய சத்தின் ஞானமே சித்து. அதின் சுகமே ஆநந்தம். இம் மூன்றையுமே 'சச்சிதாநந்த' மெனச் சாற்றுவது. இச்சச்சிதாநந்த லக்ஷணமானது ஒன்றை விட்டு ஒன்று விளங்கா. அதனால் மூன்றும் ஒன்றேயாகும். இஃது சர்வாத்மாக்களின் தன்மையினும் பொருந்தியதே. எவ்வாறேல், பாவத்தை யாற்றுவதும் புண்ணியத்தை யாற்றுவதும் தனக் காநந்த முண்டாக வென்றே. இன்னணம் பொருந்தி நிற்பதில் ஒவ்வொன்று விசேஷித்த பண்பு பற்றி சத்ரூபசத்தி சித்ரூபசத்தி ஆநந்தரூப சத்தி யென்றும் பகுதிகூற லாயிற்று. அன்னணமே பரன் முதலிய மூவர்களும் அச்சத்திகட்க்கு நாயகனாய்க் காணப்பட்டார்கள். அவர்கள் சச்சிதாநந்தப் பிரம்மமே அறிவாகாரமாய் விளங்கிய ஈஸ்வரனேயன்றிவேறின்று. அருளாகிய விகிர்தமற்ற சுத்த சத்தியினின்றும் வேறு கலையாய்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

வந்த ஜகத் உபாதான குண ரூப பிரகிருதியே மாயை. அதுவே சத்துவத்தில் சுத்த மாயை, ரஜசில் அசுத்த மாயை, தமசில் ஆணவமாகிய அஞ்ஞான மென்றாம். சுத்த மாயையைக் காரணவுடம் பாகவுள்ள ஈஸ்வரனைப் பதி யெனவும், அசுத்த மாயையைக் காரண வுடம்பாகவுள்ள சிதாபாசரைப் பசு வெனவும், அஞ்ஞான மாயையைப் பாச மெனவும், இம் மூன்றும் அனாதிநித்ய மெனவும் சிவாகமங்கள் செப்பும். ஈஸ்வர பிம்பமாகிய சிதாபாசர்களைப் பிரம்ம அம்சங்களாகவே யெண்ண வேண்டும். அதினால் அழிவற்று அனாதித் தன்மை குரித் தாயிற்று. அவைகள் மூலப் பிரகிருதியினிடமாய் அணுக்களா யடங்கி யிருக்கும். பிரகிருதியின் ரஜோகுணஞ் சொரூபப் படுங்கால் பகிர்முகப்படும். அணுக்களா யடங்கி யிருப்ப தெவ்விதமேல், வித்தின் அங்குரத்துள் அனேக வித்துக்கள் அடங்கியிருப்பது போன்றாம். அங்குர மென்பது முளை. இவ்வணமான ஜீவாத்மாக்கட்குச் சரீரங்களைக் கற்பித்ததும் ஈஸ்வர சங்கற்பமே. சமானனாதி வாயுக்களைந்தில் பிராணவாயு வொன்றே நாகன் கூர்மன் கிரிகரன் தேவதத்தன் தனஞ்சயன் என்ற வாயுக்களாகவும் பிரித்து காட்டுவதாற் பத்து வாயுக்களெனவும், பிருதிவியின் கூறாகிய ரோமத்தைச் சருமத்தினின்றும் பிரித்தியேகமெனவும், அப்புவின் கூறாகிய வேர்வை சுக்கிலம் நீர் இவைகளை உதிரம் மஜ்ஜை இவைகளினின்றும் புறம்பெனவும் சின்னூற்கள் செப்புகின்றன. அவைகளுமொவ்வும்.

(32)

சிஷி:- ஈஸ்வரனானவர் சித்சொரூபியா யியங்குவதில் அவருக்கு எக்காலெனும் ஊனுறக்கமுண்டா?

குரு: காரிய சரீர பாவனைப் படத்தில் விவரிக்கப்பட்டபடி உதிரம் மஜ்ஜை மாம்சம் சருமம் நரம்பு என்பு என்ற ஆறு தத்துவமாம் ஸ்தூல சரீரம் அன்னமயகோசத்திற் குட்பட்டது. இதோ வரைந்திருக்கின்ற படத்திற் கண்டபடி 20 - தத்துவமுள்ள சூக்கும சரீரமானது : பிராண வாயுவுங் கருமேந்திரியமுங் கூடிய பிராணமய கோசம், மனதுங் கருமேந்தி ரியமுங் கூடிய மனோமய கோசம், புத்தியும் ஞானேந்திரியமுங் கூடிய விஞ்ஞானமய கோசம்,

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ட.

சூட்சும பூதங்களின் சத்துவகுண ரஜோகுண அம்சமான-உஅ-தத்துவங்களை
லேம்பட்ட இலிங்க சரீரமாகிய

சூட்சும சரீர பாவனை



சர்வாங்கத்திலுமுள்ள

அஹங்காரம் - பிருதிவிஅம்சம் - ௩
தவக்கு - வாயுஅம்சம் - எ
வியானன்-வாயுஅம்சம்- ௰௭

இந்தச்சரீரம்

பிராணமயம் மனோமயம் விஞ்ஞானமயம் என்னும்-௩- கோசம் எனப்பட்டது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

காரண சரீரமாகிய ஆனந்தமய கோசம் எனு நான்கு கோசங்கட்கும் உட்பட்டதாகும். இன்னணம் 5-கோசங்கட்கு முள்ளான மூன்று சரீரங்களும் சிதாபாசர்கட்கே யுரியதாகும். ஈதெல்லா மல்லாத ஆன்ம மயமாகிய சித்சொரூபம்; உருவமும் அருவமு மில்லாமல் ரூபா ரூபமாய் விளங்கும். இதுதான் அந்தரங்காதிரேகம். உதாகரண மென்னையேல், ஜீவான்மாக்கள் ஸ்தூலத்தை மறந்து சூட்சம சொற்பனங் காணுங்கால் தன்னோடு ஸ்தூல பிரபஞ்சமும் அனுபவமும் மெய்யாய்ப் பார்ப்பது போலன்றோ சித்சொரூப வுண்மை. அன்றி கடவுளடியார்களாகிய ஜீவன் முக்தர்களே ஊனுறக்க மின்றுய்வாராயின் கடவுள் அதற் கெவ்வாறுள்ளாவார்? சொல்!

(33)

சிஷி: இன்னண சொரூபக் கடவுளை என் போலிய ஸ்தூல சரீரி தரிசிப்ப தென்னில் எப்படிக்கியலும்?

குரு: தசேந்திரிய சமுதாயமின்றி அந்தர்க் கரண சுத்த நிர்ச்சலன யோகத்தி னிலைத்துத் தரிசிக் கலாமே யன்றி, ஜாக்ரத்தில் அச்சித் சொரூப தேவைத் தரிசிக்கக் கூடா. ஆனால் ஒருவன் ஈஸ்வர பக்தியிற் சிறந்து சத்தினி பாதம் அதாவது மந்தம் மந்ததரம், தீவரம், தீவரதரம் என்னு நான்கு பருவங்களில் எதிலேனும் பொருந்துவனேல், அம்முறை கண்டு சரியை யனுஷ்டிப்பாகிய சமய தீக்ஷையை யேனும் கிரியா யோக அனுஷ்டிப்பாகிய விசேக்ஷ தீக்ஷையை யேனும் ஞானமாகிய நிருவாண தீக்ஷையை யேனும் அனுக்கிரகிப்பதற்காக குருமூர்த்த மாய் மானைக் காட்டி மானைப் பிடிப்பதுபோல கர்த்தா வானவர் லலாடஸ்தான நேத்திர மொழித்து மானிடச் சட்டை சாத்தி ஊரும் பேரு முருவு மொழிக்க ஊரும் பேரும் உருவுங் கொண்டு எழுந்தருளுவாரேல் ஸ்தூல திருஷ்டியாற் றரிசிப்பதுள.

(34)

சிஷி: கடவுளுக்குத் தேவனென்றும் தெய்வமென்றும் ஆக்குவயம் வந்த தென்ன?

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

குரு: அவ்வாக்கு வயத்தின் பகுதி: திவ் அல்லது தியா. அர்த்தம்; - பிரகாச மென்பதே. திவ் என்ப திலிருந்து தேவ் தேவனென்றும் தியா என்பதிலிருந்து தெய்வமென்றுஞ் சொல்ல வந்தன. இதனால் சொற்ற சமஸ்கிருத அர்த்தப்படி கடவுள் ஜோதியானவர், பிரகாசமானவர் எனச் சொல்வதன்றி, கற்பிதமான பெயராய்க் கணிக் கொணா.

(35)

சிஷி: மெய்யே. சர்வமகத்துவந் தங்கிய சர்வேஸ்வரனுக்கு அடியிற் கிளத்து மபிதானங்கள் நூலா தாரங்களில் வழங்கப்படு கின்றதற்குறு மருத்தங்களையு மடியேற்கருள வேண்டும்! அவைகளாவன: - நிர்மலன், நிரஞ்சனன், நிர்விகாரன் நிர்விசாரன், நிர்ச்சங்கன், நிராமயன், நிர்விகற்பன், நிஷ் பிரபஞ்சன், நிர்ச்சிந்தனன், நிரவயவன், நிராகாரன், நிராசூசன், நிராலம்பன், நிர்விஷயன், நிரபேக்ஷன், நிராசனன், நிர்ச்சலனன், நிமலன், நிர்க்குணன், நிருத்தன், நிதானன், நிஷ்களன், நிர்நாமன், நிரபிதானன், நிர்ஜனனன், நிருபாதானன், நிரந்தரன், நிரஸ்தியயன், நிரம்பரன், நித்தன், நிகரிலான், நிஷ்கன்மன், நிராவரணன் நிர்விசனன், நிரதிசயாநந்தன், நிஷ்களங்கன், நிராங்கரன், நிலைவரன், நிர்வசனன், நிராகுலன், நிர் நாசன், நிர்வாணன், நிர் விக்கினன், நிராகன், நிரபராதி, நிரபாயன், அப்பிரமேயன், அனாதரன், அபரிச்சின்னன், அகளங்கன், அனங்கன், அனந்தன், அசங்கன், அவிகிர்தன், அம்பரன், அவிசனன், அமலன், அனன்னியன், அதிகுணன், அதீதன், அபேதன், அகண்டன், அகண்டாகாரன், அபரோக்ஷன், அவிக்ஷேபன், அக்ஞானரகிதன், அபகிதன், அபிதானரகிதன், அசத்தியரகிதன், அனுகுணரகிதன், அனுசிதரகிதன், அசுத்தரகிதன், ஆநந்தன், ஆண்டவன், சர்வக்ஞன், சர்வ கற்பிதன், சர்வசக்தன், சர்வகத் திருத்துவன், சர்வாதாரன், சர்வசமன், சர்வாத்மகன், சர்வபூரணன், சர்வகாரணன், சர்வநியந்துரு, சர்வதாசாக்ஷி, சர்வேந்திரியாமி, சர்வாந்தரியாமி, சர்வோபாதி சூன்யன், சச்சிதாநந்தன், சம்யுக்தன், சதாநந்தன், சமயாதீதன், சாந்தன், சாஸ்வதன், ஷாட்குண்யன், சாதாரணன், சாயுஜ்யன், சைதன்யன், தானவன், தற்பரன், தத்துவன், பரமன், பரமாத்துமன், பராபரன், பகவான், பராதீனன், பவாதீதன், பக்தவச்சலன், விரக்திப் பிரகாசியன், விரக்தி ஞானப் பிரகாசியன்,

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஆத்ம பிரகாசியன், ஆத்ம ஞானப் பிரகாசியன், ஆத்ம சொரூப ஞானப் பிரகாசியன் என்பவைகளே.

குரு: இந்த நாமங்கட் கருத்தம் முறையே, மாசில்லாதவன், இருளில்லாதவன், விகார மில்லாதவன், கவலை யில்லாதவன், தனிமையானவன், நோயில்லாதவன், ஒருமை யுணர்ச்சியன், உலகங்கட்கன்னியத்தான சாந்த முள்ளவன், நினைப்பற்றவன், உடலற்றவன், எங்குமுள்ளவன், சூதக மற்றவன், யாதொரு சார்புமற்றவன், தொழிலற்றவன், ஆசையற்றவன், இருப்பிட மற்றவன், அசைவற்றவன், சுத்தமானவன், குணமில்லாதவன், கட்டுப்பாடில்லாதவன், நிச்சயமான ஆதிகாரணன், கலப்பில்லாதவன், நாமமில்லாதவன், பெயரில்லாதவன், பிறப்பில்லாதவன், துணைக் காரண மில்லாதவன் எப்பொழுது முள்ளவன், குற்ற மில்லாதவன், ஆகாயத்தைப் போல நிருவாணமானவன், அழிவில்லாதவன், ஒப்பற்றவன், கிருத்திய மில்லாதவன், பகிரங்கமானவன், கவலையற்றவன், அற்புதங்குறித் தளவிடப்படாத ஆநந்த முள்ளவன், மாசற்றவன், இறுமாப்பற்றவன், உறுதியானவன், மௌனமானவன், சந்தோஷ முள்ளவன், என்றுமுள்ளவன், மோக்ஷமுள்ளவன், இடையூறில்லாதவன், உருவிலாதவன், பிழையிலாதவன், நாச மிலாதவன், அளவிடப்படாதவன், ஆதரவிலாதவன், குறிப்புக்கான அடையாள மொன்று மிலாதவன், அழுக்கிலாதவன், அரூபி, முடிவிலி, கூட்டமிலி, வேறுபாடிலி, பரவெளியுடையவன், மகிழ்ச்சியுடையவன், பரிசுத்த முடையவன், எல்லாமுடையவன், நற்குண முடையவன், மேலானவன், பேத மிலாதவன், எல்லை யிலாதவன், எல்லை யில்லா வடிவமானவன், தான் தானே திரிசியமானவன், அஞ்ஞான காரியமா யிரா நின்ற சஞ்சலத்துவ மில்லாதவன், ஞான முடையவன், கீழ்மை யில்லாதவன், ஆக்குவய மில்லாதவன், பொய்யில்லாதவன், குணத்தொடர் பில்லாதவன், அசுத்த மில்லாதவன், தூய்மையுள்ளவன், பேரின்ப முள்ளவன், ..ாவு மாள்கையா யுள்ளவன், எல்லா மறிகிறவன், எல்லா நிருமிப்பவன், எல்லா வல்லமையு முள்ளவன், எல்லா அதிகாரமு முடையவன், எல்லாவற்றிற்கு மாதாரமானவன், எல்லாத்திலுஞ் சமமானவன், எல்லா ஆத்மாக்களுமானவன், எல்லா நிறைவுமானவன்,

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

எல்லாத்துள்ளும் பிரதானமானவன், எல்லாந் தன்னேவலிலுள்ள வன், எல்லாவற்றிற்குந் திருஷ்டாந்தமானவன், எல்லாவிந்திரியங் களிலும் பிரவேசித்திருப்பவன், எல்லா விருதயங்களிலு மந்தரங்கமா யிருப்பவன், எல்லா வுபாதியுமற்றவன், சத்து சித்தாநந்தமாக வுள்ளவன், யாதொருவர் போதகமின்றித் தானே பொதுவாய் நடத்தும் யோசனையை யுடையவன், என்று மின்ப முடைவன், உட்சமயம் புறச் சமயங்கட்கு மெட்டாதிருப்பவன், பொறுமையை யுடையவன், நித்யமானவன், சர்வஞ் ஞத்துவ - சர்வேச்சுரத்துவ - சர்வ நியந்திருத்வ - சர்வாந்த்திரியாமித்வ - சர்வ கற்பிதத்துவ - சர்வ சத்தித்துவ மென்னும் ஆறு குணங்களையு முடையவன், அனைத்துக்கும் பொதுவானவன், ஆத்மாக்களுக்குக் குணஐக்ய முத்தியை அளிப்பவன், பூத பௌதிகங்களல்லாத சுத்த ஆத்மாவானவன், தானே தானானவன், தானே ஆதியானவன், உண்மையானவன், முன்னும் பின்னு மானவன், அவாவற்றவன், ஞான மானவன், பிரதானமானவன், பரமாத்ம சொரூப மானவன், ஜீவர்கட்குக் கொடுக்கும் இறப்புதிப்பிலா மோக்ஷத்தை யாதீனமாக வுடையவன், பாவங்கட்குப் புறம்பானவன், தாசர்கள் பேரிற் றயவுடையவன்,ஆத்மாக்க ணிமித்தம் துறவுமார்க்கத்தில் விளங்குபவன், துறவுமார்க்க ஞானத்தில் விளங்குபவன், ஆத்மாக்களில் ஒளி செய்பவன், ஆத்மாக்களில் ஞான ரூபமாய்ச் சின்மாத்திரமா யொளி செய்பவன், ஞானத்தைச் சொரூபமாயுள்ள ஆத்மாவிலொளி செய்பவன் என்பனவாம். இன்னமும் எம்பிரானாகிய ஈஸ்வரனுக்கு காரணப் பெயர்களுண்டு. அவைகட்கு மிவைகட்கு மனந்த விதமாய்த் தனித்தனி யருத்தம் பயக்கவும் இடமுண்டெனவும் அவைகளை யெல்லாம் சொல்லத் துணிவ தென்றால் *மகாவாக்கிய வியாக்யானமாய் முடியு மெனவும் இங்ஙனங் குறிப்பா யெடுத்துனக்கியம்பலுற்றேம். மேற்கண்ட நாமார்த்தங்க ளெல்லாம் ஈஸ்வரனுக்குச் சகளமும் நிஷ்கள சகளமும் நிஷ்களமுமாம்.

* மகாவாக்கிய வியாக்யான மென்பது : நாலு வேதங்களிலு முடிந்த பொருளை சொல்லு நான்கு வாக்கியங்களையு மருத்தம்பண்ணி விரித்துக் காட்டல்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

(36)

சிஷி:- ஓ! சுவாமி! கடவுட் டன்மையை யுணர்த்தக்கூடிய பல் பெயர்களை யான் தெரிவித்து அருத்தந் தெரிந்து கொண்டதில், கலியாண சந்தடியிற் றாலிகட்ட மறந்துவிட்ட தென்ன, கடவுளுக்கு ஈஸ்வரன் என்ற பெயரெதனால் வந்ததென்பதை வினவாது விட்டுவிட்டேன். அதையு மறிவிக்கவேண்டும்!

குரு:- இறையவனா யிருந்து சிதாபாச ஜீவகுழாங்கட் குரிய சகல வனுபவமுங் கொடுக்குந் தன்மையால் ஈஸ்வர னென்றும், அவ்வனுபவ நிமித்தந் தானுண்டாக்கும் பிரபஞ்சத்தை ஒருத்தராலுந் திருப்பப்படாது கொண்டு சர்வேஸ்வர னென்றும் கடவுளுக்குத் தகைமையான இரண்டாக்குவயம் வந்தனவாம்.

(37)

சிஷி:- ஈஸ்வரனுடைய சகளமும் நிஷ்களமுமுண்டென்பதை யுணர்த்துந் திருஷ்டாந்தங்களெவை?

குரு:- இச்சையற்ற பகவானுக்கு இவ்வுலகங்களைச் சிருஷ்டிக்க இச்சை வந்ததும், கற்பித்த வுலகங்களை ஐங்கிருத்தியங்களால் பிரேரிக்க அபேட்சை வந்ததும், தன்னை நாடி வழிபடுவார் ஸ்தோத்திரங்கட் கிரங்கி யுளமகிழ்ந்து கருணை செய்ய நயப்பு வந்ததுமே சகளத்தை யுணர்த்தப் போந்த திருஷ்டாந்தமாம். இந்தச் சகளம் அநித்ய மென்பது சத்யமாதலால், இச்சையற்ற நித்யமாகிய ஈஸ்வரனுக்கு நிஷ்களமொன்றன் யத்தா யுண்டென வுணர்த்த இதுவும் போந்த திருஷ்டாந்தமாம்.

(38)

சிஷி:- சர்வேசுரனுடைய விர்த்தாந்தங்க ளெல்லாம் அநேகமா யறிந்தேன். நால்வகை யோனி எழுவகைத் தோற்றம் எண்பத்து நான்கு நூறாயிரம் ஜீவ பேதங்களென்று இவ்வியாசத்தின் 12-வது உத்தரத்தின் கடாசியில் தாங்க ணவின்றதற்கும் வகை விபரம் வழங்க வேண்டும்!

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

குரு:- பை, முட்டை, நிலம், வியர்வை என்பது நால்வகை யோனி * தேவர், மக்கள், விலங்கு, புள், ஊர்வன, நீர் வாழ்வன ஸ்தாவர மென்பது எழு வகைத் தோற்றம், அவற்றுள் தேவர் பதினான்கு நூறாயிரம், மக்களொன்பது நூறாயிரம், விலங்கு பத்து நூறாயிரம், புள் பத்து நூறாயிரம், ஊர்வன பதினொரு நூறாயிரம், நீர்வாழவன பத்து நூறாயிரம் ஸ்தாபரம் இருபது நூறாயிரம் ஆக எண்பத்து நான்கு நூறாயிரம் ஜீவபேதங்களாம் இந்தப் பேதங்க ளொவ்வொன்றிலும் அளவிறந்த ஜீவன்கடோன்றிக் கொண்டிருக்கின்றன.

(39)

சிஷி:- இஃது சரியே. விஷ்ணு வைனதேயனுக்குச் சொன்னதா யிருக்கின்ற புராணத்தின் 2-வது ஆத்தியாயத்தில் அண்டஜமாகிய பறவை முதலியன 21-லக்ஷம், உத்பிஜமாகிய தாவர முதலியன 21 லக்ஷம். ஜராயுஜமாகிய மக்கள் முதலியன 21 - லக்ஷம் சுவேதஜமாகிய கொசுகு முதலியன 21 - லக்ஷம் ஆக யோனி நாலுக்கும் என்பத்து நான்கு நூறாயிரமென்று ஒரே தொகுதியாய்ச் சொல்லி யிருப்ப தென்னை?

குரு:- அஃதாவது : அண்டஜமாகிய முட்டையிலிருந்து பறவைகள் 10 - லக்ஷம், ஊர்வன 6 - லக்ஷம், நீர்வாழ்வன 5 - லக்ஷம் ஆக அண்டஜம் 21 - லக்ஷமென்றும், உத் பிஜமாகிய நிலத்திலிருந்து தாவரம் 20 - லக்ஷம், நீர் வாழ்வன 1 - லக்ஷம், ஆக உத்பிஜம் 21 - லக்ஷ மென்றும்; ஜராயுஜமாகிய பையிலிருந்து தேவர் 1 - லக்ஷம், மக்கள் 9 - லக்ஷம், விலங்கு 10 - லக்ஷம், நீர் வாழ்வன 1 - லக்ஷம் ஆக ஜராயுஜம் 21 - லக்ஷம் மென்றும் சுவேதஜமாகிய வியர்வையிலிருந்து தேவர் 13 - லக்ஷம் நீர்வாழ்வன 3 லக்ஷம் ஊர்வன 5 லக்ஷம் ஆக சுவேதஜம் 21 - லக்ஷமென்றும் சொன்னதா யறியலாம். ஈதும் யாஞ் சொற்ற கணக்கின்படியேயாம்.

* தேவர், மக்கள், பைசாசு, நாகர், விலங்கு, புள், ஜெந்து என்பவைகள் எழுவகைத் தோற்ற மென்றுஞ் சின்னூற் செப்பும்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

(40)

சிஷி:- அந்த எழுவகைத் தோற்றங்களில் அசுரர் முதலியோர் தொகை ஏன் வரவில்லை?

குரு:- அது தேவர்கட் கேற்பட்ட தொகையிற் சேர்ந்திருக்கிறது.

(41)

சிஷி:- சொல்லிய தோற்றம் ஏழில் மக்கள் முதல் ஆறும் யான் பார்த்திருக்கிறேன். தேவர் என்பதையான் பார்த்ததில்லை. ஆதலால் அவர் யாவர்?

குரு:- அவர்கடான் தேவர்கள் பதியில் வாழுந்தேவர்கள்.

(42)

சிஷி:- ஈ தென்னை? ஆச்சரியத்திலாச்சரியமாயிருக்கின்றது ஓ! எமதையனே! அந்த விர்த்தாந்தங்களை யெல்லாந் தங்களிடத்தில் வினாவ இன்று நேரம் போதாமையா யிருக்கின்றது. நாளை யுதயத்தில் படிக்கத் தயவு செய்வீர்களாக. ஈஸ்வரன் இல்லை யென்றிருந்த வெற்கு ஈஸ்வரனுண்டென் றொப்புவித்த இப்பெரிய திருவடிகட்கு உரிய தண்டன் சமர்ப்பித்தனன்றோ.

குரு:- நன்று நன்று சற்குருநாதன் கடாக்ஷிக்க!

கடவுளைக் குறித்த வியாசம் முற்றிற்று.

ஆக வினா 42.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

உ

ஓம்:

ஸ்ரீ சரவணோத்பவ பரப்பிர்ம்மணே நம:

2-ஆவது

தேவர்களைக் குறித்த வியாசம்

மறுநாட் காலையில் விஷயப்பிரியனாகிய சிஷியன் விவேக பூரணனாகிய குருவைத் தரிசித்து வணங்கி இதைப் பேசலுற்றனன்.

(1)

சிஷியன் :- சென்றதினம் தேவர்கள் பதியில் வாழு் தேவர்களென்று தாங்கணுவன்றதற்கு விவர மென்னை?

குரு:- அமரர் கற்பத்திற்கு ஆண்டகையாகிய ஆகண்டலன் முதலிய முப்பத்து முக்கோடி தேவர்களும், சத்தியலோகத்திற்கு் தலைவனாகிய தமனியனாதியரும், வைகுந்த பதவிக் கரையனாகிய மாதவனாதியரும், உருத்திரபதிக்கு நாயகனாகிய உருத்திரன் முதலியோரும், மகேஸ்வரபதிக்கு அதிபனாகிய மகேஸ்வரன் முதலியோரும், சதாசிவபதிக்கு இறையாகிய சதாசிவன் முதலியோரும், மற்றுந் தெய்வீகத்தன்மை பொருந்தினோரும் தேவர்களாவார்கள்.

(2)

சிஷி:- அந்தத் தேவர்கள் அப்பதிகளில் எதற்காக வேற்பட்டிருக்கின்றனர்?

குரு:- சர்வேஸ்வரனுடைய பஞ்ச கிருத்தியங்களாகிய (1) சிருஷ்டி, (2) திதி, (3) சங்காரம், (4) திரோபவம், (5) அனுக்கிரகம் என்னுமைந்து தொழில்களால். சகல லோகங்களையும் பேதாபேதமின்றி நீதியாய் நடாத்த வேற்பட்டிருக்கின்றனர்.

(3)

சிஷி:- அவ்வைந்து கிருத்தியங்கட்குஞ் சர்வ வல்லமையுடைய சர்வேஸ்வர னொருவன் நித்தியமாயிருந்து கொண்டிருக்க வேறு தேவர்களிருந்து நடாத்த வேண்டிய தவசியமின்றே. ஆதலால்,

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

அவ்வித முண்டென்று தாங்கள் தீர்மானிக்கிற அத்தேவர்களிருக்கிறார்களென்பதை நம்பற்கு நியாயமென்ன?

குரு:- நீ, எதைத்தான் இலேசாய் நம்புகிறாய் ! இதை நம்பற்கு. ஆயினும், நின் சந்தேக விபரீதத்தைப் பரிகரிக்க வேண்டியது நங்கடமைதான். கேள்; ஓர் நகரத்திற் கதியனாயிருந்து அந்நகரைத் தன்னைக்யமாயாளு மரசன் தன்னிடத்துளா ரெவரையு *நிஷேதஞ் செய்து ஏகனாயிருந் தெத்தொழில் புரிவன் எத்தன்மை யாவன் என்பதை யுற்றுணர்வாயேல், யாஞ்சொற்றது மித்தன்மைத் துளவென் றருத்தமாமன்றோ?

(4)

சிஷி:- யானைக்கும் பானைக்குஞ் சரியென்று தீர்த்தாற் போற்றீர்க்கின்றீர்கள். அவ்வரசனைப் போலவா தேவன்? அவர் சர்வ வல்லமை யுடையவராயிற்றே; அவருக்கு வேறொருவர் துணை யாதுக்கு?

குரு:- சர்வவல்லமை யுடையவரேனும் பஞ்ச கிருத்தியங்களை அவர் நேரே வைத்துக் கொள்ள வேண்டிய தவசியமின் றென்பதாய்த் தேவர்களுடைய தீர்மானத்திற்குள் வைத்திருக்கிறா ரென்பதற்குப் போந்த பிரமாணங்க ளுண்டு. அவற்றுளொன்றைப் பகர்கின்றோம். நம்முடைய சரீரத்தில் ஹிருதயமானது பிரதானமா யிருந்தும், அஃதொரு கருமஞ் செய்க வெனின் இந்திரியங்களை யேவல்கொண்டு முடிக்கின்றது. இஃது கிரமமுறையா யிருப்பதுபோலச் சர்வேஸ்வரன் தன்னாலாகு மனைத்திற்குந் தலையாயிருந்து கொண்டு தன்னீதிவழி பிரேரித்தல் தக்கது.

(5)

சிஷி:- அத்தேவர்களைக்கொண்டு அவ்வைந்து தொழிலும் பிரேரிக்கப்படுவதேல், அவ்வைவர்களாகத் தானேயிருக்க வேண்டும்? அபாரியா யோதக் காரணம் யாது?

குரு:- ஒவ்வொரு காரியம் புரிதற் கொவ்வொரு வித எண்ணம் வேண்டுதல் போல, அவரவர்களாளுகைக்குரிய பரிக்கிரக வினோத விளையாட்டுக்குத் தகுமாறு அப்படிப் பல தேவர்களு மேற்பட்டனர்.

---

* நிஷேதம் - விலங்கு

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

(6)

சிஷி:- அப்பஞ்ச கர்த்தாக்கள், எத்திறங் கொடு அத்தொழிலியற்றுகின்றனர்?

குரு:- அஃது, எம்பிரானாகிய ஈஸ்வரன் றிறங்கொடு.

(7)

சிஷி:- அப்படியாயின், அவர்களைத் தேவர்களென் றுயர்த்துவானேன்?

குரு:- சித்ரூபமாய் விளங்கிய ஈஸ்வர பிரதிபிம்பர்களாகிய பஞ்சகர்த்தாக்கள் ஜாக்ர, சொப்பன, சுழுத்தி, துரிய, துரியா தீதம்வரையில் ஒன்றிற் கொன்று விசேஷித்து காலத்திரய வர்த்தமானத்தோடு பிரபஞ்ச சகிதமாயும், பிரபஞ்ச ரகிதமாயும் விளங்கா நிற்பதால் அவ்வாறுயர்த்தலாயிற்று.

(8)

சிஷி:- சகல ஜீவான்மாக்களையும் இப்போழ்து நாம் பார்த்தமட்டில் மனிதருக்கு விசேஷமாய் ஒன்றுங் காணப்படவில்லை. அப்படிக்கான மனிதருக்கே காலத்திரயம் பிடிபடாமலும் மேற்கூறிய விசித்திர சங்கதிக ளின்னதென் றுணரத் தகாமலுமிருந்தக்கால் தாங்கள் பகர்ந்த துண்மையென் றெவ்வாறு நிச்சயிக்கலாம்?

குரு:- 'எல்லா மிருட்டென் றெண்ணிக் கொண்டானாம், பொல்லா வினைசேர் பிறவிக்குருடன்', என்றது போல, நினக்கப்படிப் பட்டவைகள் தென்படாதிருக்கின் ஏனையோர்கட்கு மப்படியிருக்குமென் றெண்ணுவது தகுதியன்று மனிதர்கள் செய்யக்கூடியதை மட்டும் மனிதர்கள் செய்து முடிக்கலாமே தவிர, அத்தேவர்களைப்போற் சாதாரணமாய் விசித்திரவிலாசம் புரியத்தரமில்லை. ஆனால், மனிதர்களில் ஜோதிர்ஷ நூன்மூலமாய்க் காலத் திரயத்தையும், யோகபூரணத் தால் அஷ்டமாசித்தி முதலானவைகளையும் தெரிந்தனுபவிக்கத் தக்கவர்களாவார்கள். மற்றையோர்கட்கவைதெரிய வெளிதன்று.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

(9)

சிஷி:- ஜோதிர்ஷம் அஷ்டமாசித்தி முதலானவைகளை, மனிதர்கள் தெரிந் தனுபவிப்ப திருக்கட்டும்; தேவர்களிருந்த துண்மையா யிருந்தாலும், இவ்வுலகஞ் சிருஷ்டிக்கப்பட் டெவ்வளவோ அளவிறந்த காலங்களா யிருக்கவேண்டும்; ஆயின், அவர்களிது காறு மிறப்பின்றி யிருக்கிறார்களெனுங் கூற்றை யேற்றுக்கொள்ளலாமோ?

குரு:- அக்கோ! அக்கோ! ஈதென்னவநியாயம்; தேவர்கள், சத்தியமான பகவானுடைய ஐங்கிருத்தி யங்களை அண்ட பிண்டமுள்ளளவும் அவரவர்கட் கேற்பட்ட தேவவயது நூற்றுக்குக் குறைவின்றி நிலை பரமாயிருந்து நடாத்தும்படி நியமிக்கப்பட்டவர்களாயும், தன்னையுந் தலைவனையு மறிவதென்னுந் தத்பதத்தைச் சார்ந்தவர்களாயு மிருக்கிறார்கள். அவர்களையும் நரர்களை மான நுவலில், அறிவீனமன்றோ?

(10)

சிஷி:- அவர்க ளிருக்கிறார்களெனற்குப் பிரத்தியக்கப் பிரமாண மென்னை?

குரு:- பஞ்சபூத பௌதிகப் பிரவிருத்திகளும் அவைகள் தத்தம் ஆணைகடவா தியங்குகின்றதுமே பிரத்தியக்கப் பிரமாணம்.

(11)

சிஷி:- இவைகளெல்லாம் 1-ஆவது வியாசத்துழி கடவுளருளா யியம்பிய தாங்கள், ஈண்டு தேவர்களருளா யியம்புவ தென்னை?

குரு:- இவ்வியாச்தின் 6-வது வினாவுத்தரம் இதற்குப் பொருளா யிருப்பதால், இவ்வினா வீணேயாகும்.

(12)

சிஷி:- இந்த வியாசத்தின் 1-ஆவது வினாவிடையிற்சொன்ன பலதேவர்களில் சிருஷ்டி யாதி பஞ்ச கிருத்தியங்களையும், முறையே பிரேரிக்குந் தேவர்கள் பெயரையும், அவற்களுற் பனமான விவரத்தையும் லக்ஷணத்தோடு விளங்கியருண்மின்!

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

குரு:- ஆன்மாக்கள் பொருட்டு ஜட சிருஷ்டி செய்பவருக்குப் பிரமா வென்றும், அவைகளைக் காத்தலாகிய திதி புரிபவருக்கு விஷ்ணு வென்றும், அவைகட்குள வினை தீர்த் தழித்தலாகிய சங்காரம் நடாத்துபவருக்கு உருத்திர னென்றும், அவ்வினைப் பயன்களாகிய போக்கியப் பொருள்களில் ஆன்மாக்களை யமிழ்த்துதலாகிய திரோபவம் வழங்குபவருக்கு மகேஸ்வரனென்றும், அவைகட்குப் பாசத்தை நீக்கிச் சிவத்துவத்தை விளக்குதலாகிய அனுக்கிரக மருள்பவருக்குச் சதாசிவ னென்றும் பெயர். இவ்வைவரையுமே பஞ்ச கர்த்தாக்களென்றும்., பஞ்சமூர்த்திகளென்றும், பஞ்ச தெய்வங்களென்றும் பகரப்படும்.

இவர்க ளுற்பன மெப்படியெனில், 1-ஆவது ஆகிய பிரம்ம நியமப்படத்தில் விவரித்தபடி விட்சேபசலனமே சுபாவமான மாயாந்தகாரத்தில் சப்ததன்மாத்திரையான அரூப ஆகாய முண்டாயிற்று. அதிற் பிரதி பிம்பித்த ஈஸ்வரனே சதாசிவன். அரூப ஆகாயத்தில் சப்தத்துடன் பரிச தன்மாத்திரையாயான வாயுவுண்டாயிற்று. அதிற் பிரதிபிம்பித்த ஈஸ்வரனே மகேஸ்வரன். ரூபாரூபமான அவ்வாயுவில் சப்த பரிசத்துடன் ரூபதன் மாத்திரையான தேயு வுண்டாயிற்று. அதிற் பிரதிபிம்பித்த ஈஸ்வரனே உருத்திரன். ரூப முள்ள தேயுவில் சப்த பரிச ரூபத்துடன் ரச தன்மாத்திரையான அப்புவுண்டாயிற்று. அதிற் பிரதிபிம்பித்த ஈஸ்வரனே விஷ்ணு. ரூப முள்ள ஜலமாகிய அவ்வப்புவில் சப்த பரிச ரூப ரசத்துடன் கந்ததன் மாத்திரையான பிருதிவி யுண்டாயுற்று. அதிற் பிரதிபிம்பித்த ஈஸ்வரனே பிரமா. இங்குரைத்த பூதிய மைந்தும் காரணபூத மாகுமென்பர் கற்றுவல்லோர்.

இப்படிப் பஞ்சபூதாத்மகமாக வுண்டான பஞ்ச கர்த்தாக்கட்கு முறையே ஜாக்ரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் என்ற ஐந்தவஸ்தைகளு முள.

இந்தப் பஞ்சமூர்த்தங்களும் ஈஸ்வரனுக்குப் பிரதான ஸ்வரூபங்களாகும். அவற்றுள் ஈஸ்வர ஸ்தூல சரீர முழுதும்

(1) பிரதான ஸ்வரூபவுண்மையை, 9-வது வியாசம் 17-வது வினாவுத் தரத்தில் திரீயத்துவ ஸ்வரூபம் விளக்கிய விடத்து நன்கு தெளியலாம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஜாக்ரமாயிருத்தலால், அதைப் பொருந்திய ஈஸ்வரனை வைஸ்வாநர னென்றும், அதிஷ்டான சைதன்யம் பிரமாவென்றுஞ் சொல்லலாம்.

ஈஸ்வர சூக்கும சரீரமுழுதும் சொப்பனமாயிருத்தலால், அதைப் பொருந்திய ஈஸ்வரனைச் சூத்திராத்மா வென்றும், அதிஷ்டான சைதன்யம் விஷ்ணுவென்றுஞ் சொல்லலாம்.

ஈஸ்வர காரணசரீர முழுதும் சுழுத்தியாயிருத்தலால், அதைப் பொருந்திய ஈஸ்வரனை அந்தரியாமி யென்றும், அதிஷ்டான சைதன்யம் உருத்திரனென்றுஞ் சொல்லலாம்.

இந்தப் பிரகாரம் மூன்று சரீரத்திற்கும் மூன்று கர்த்தாக்கள் அதிஷ்டான சைதன்யமா யிருக்கிறதில், முற்கூறிய மகேஸ்வரன் சதாசிவன் என்ற இரண்டு கர்த்தாக்களும் ஈஸ்வர காரணசரீரமாகிய சுத்த மாயையில் அந்தரங்கமாய் வாயுவைப்போலும் ஆகாயத்தைப்போலும் கலந்து நிற்பவர்களா யிருக்கிறார்கள்.

(13)

சிஷி:- நன்று - அவயவசொரூப மல்லாத ஜலம், அக்கினி, ஊதை, சூரியன் முதலிய கிரகங்கள் என்பவைகளைத் தேவர்களென்றும்; மண்ணாகிய பூமியைப் பூமிதேவி யென்றும், தண்ணீராகிய கங்கையைக் கங்கா தேவி யென்றும், வெளியாகிய ஆகாயத்தை ஆகாய வாணி யென்றும் அவயவ சொரூபப்படுத்திச் சொல்லுவ தென்னை?

குரு:- அத்தோற்றப் பொரு ளொவ்வொன்றுக்கு முரிய அதி தேவதைகட்கு அந்தந்தத் தானங்களும் அந்தந்தப் பொருள்களுஞ் சுவதந்தரமா யிருத்தலால், அந்தந்தப் பெயர் கொடு அந்தந்தத் தேவதைகட்கே சொல்லப்படுகின்றன.

(14)

சிஷி:- ஆயின், பிருதிவியாகிய மண்: பிரம தத்துவமென்றும், அப்புவாகிய ஜலம்: விஷ்ணு தத்துவமென்றும், தேயுவாகிய அக்கினி: உருத்திர தத்துவமென்றும், வாயுவாகிய ஊதை: மகேஸ்வர தத்துவமென்றும், ஆகாயமாகிய வான்: சதாசிவ தத்துவமென்றும் தாங்கள் பயிற்றியதற்கு விரோத மாய்;

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

இஞ்ஞான்று மண்ணைப் பூமிதேவியென்றும், ஜலத்தை வருணனென்றும், கங்கையென்றும், அக்கினியை அனற்கடவு ளென்றும், ஊதையை வாயு தேவ னென்றும், விண்ணை *ஆகாயவாணியென்றும் பொருள்பட விகற்பமாய்ச் சொல்லுவதென்ன?

குரு:- அந்த ஐந்து பூதாத்மகமான பஞ்சகர்த்தாக்களின் காரண தோற்றமாகிய வஸ்துக்களில் அவர்களே காரணமாயும் பிற தேவதைகள் இரகசியமான சூட்சுமமாயும் வியக்தமான ஸ்தூலமாயுமிருப்பதால், அவ்விருவகையாயும் விளம்பப்பட்டன. இதினால், அவ்வதி தேவதைகளும் பிரதிதேவதைகளாய் விளங்கிற்றெனற்குப் - பூமிதேவி பிரவிருத்திசத்தியாதலால் அஃது பிரம தத்துவமென்றும், கங்காதேவி வருணனுடைய சத்தியென்பது தொட்டு அவ்விரு வகையு மொருவகை யாகுமென்றும், அஃது இரக்ஷகசத்தியாதலால் விஷ்ணு தத்துவமென்றும், அக்கினி சங்காரதேவதை யாகையால் அஃது உருத்திர தத்துவமென்றும், வாயு துரியாவஸ்தையாகிய மயக்கு தேவதையாகையால் அஃது மகேஸ்வர தத்துவமென்றும், ஆகாயம் சப்த தன்மாத்திரையாகையால் அதற்கு ஆகாயவாணி அசரீரிவாக்குத் தெய்வமென்னும் அபிதானங்கள் வந்தனவென்றும், அஃது நிர்மல ஆகாயத்தைப்போல தெளிவைக் கொடுக்குந் தெய்வமாதலால் சதாசிவ தத்துவமென்று முணரக் கடவாய்!

(15)

சிஷி:- சரி, ஈஸ்வர பிரதிபிம்பர்களான தேவதைகளின் தன்மையை யுணர்ந்தேன். அமரர் கற்பத்திற்கு ஆண்டகையாகிய ஆகண்டலன் முதலிய முப்பத்து முக்கோடி தேவர்களுமென்று இவ்வியாசத்தின் றுவக்கத்தில் தாங்களோதிய விவரமென்ன?

குரு:- ஜீவர்களியற்றும் நல்வினைப் பயனுக்குந் தீவினைப் பயனுக்குந் தக்கபலனை யளிக்கவெனவும், படைக்கப்பட்ட தேவர் முனிவர் முதலியோரைப் பாதுகாத் திரக்ஷிக்கவெனவும், அரசனாகப் பிரமதேவனா லுண்டாக்கப்பட்ட இந்திரனென்னும்

*ஆகாய வாணியென்பது அசரீரி வார்த்தை; வாணி = வார்த்தை.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஆக்குவயத்தையுடைய தேவனையே - ஆகண்டலனென்றும், அவரொடு அவராளுகைக்குட்பட்ட தேவர்களையே 33 கோடி தேவர்களுமென்றுஞ் சொற்றதாகும்.

(16)

சிஷி:- சிருஷ்டி கர்த்தாவாற் படைக்கப்பட்ட தேவர் முனிவர் முதலியோரை யிரக்ஷிக்க இரக்ஷக கர்த்தாவாகிய விஷ்ணுவும், பாவ புண்ணியங்கட்குரிய பலனையீய மேன்மூன்று கர்த்தாக்களும் நிலையாயிருக்க, இந்திரனைப் பொறுத்துச் சொல்லுவதென்னை?

குரு:- இரக்ஷா பெருமானாகிய ஸ்ரீ - விஷ்ணுவே அவ்விந்திரனாய்ப் பிரதிபிம்பித்திருக்கின்றார். பஞ்ச கர்த்தாக்கள் அவரவர்கட்குரிய நன்மையைப் புண்ணிய ஜீவர்கட் குதவுவதேயல்லால், பாவ ஜீவர்கட்குரிய பாவப்பலனைச் சாதாரணத்துதவுவதில்லை. அப்படிக்கான பாவப்பலனை ஜீவர்கட்குத் தண்டனையாய் விதிக்கத் தகுதியுடைத் தேவர்களையும் நமனையும் வைத்து நடாத்துந் தேவ நியாயாதி பதியெனும் பெரிய வரசனாயிருப்பவர், - அவ்விந்திரனேயாம்.

(17)

சிஷி:- நன்று-தேவர்களுண்டெனற்கு நூலாதார முண்டா?

குரு:- ஆம். அவைகள் வேத முதலிய கலைகளே.

(18)

சிஷி:- அவற்றுள்; ஹரன், ஹரி, அயன் என்னும் முத்தேவர்களை மட்டும் பெரும்பாலுங் கூறக் காரணமென்னை?

குரு:- ஆக்கல், காத்தல், அழித்தலென்னும் முத்தொழில் கட்குள்ளேயே சர்வகிரியைகளு மடக்க மாயிருப்பதால், அவைகளையும் அவைகட்குரிய தேவர்களையும் பெரும்பாலுங் கூறப்பட்டுள. எஞ்சிய துவிதகர்த்தாக்கள் கிரியைகுறைந்த துரிய, துரியாதீத தேவதைகளாயிருத்த றொட்டு கிரியைகட் கெடுத்துக் கூறப்படாதது முறைமையே. ஆனால், சுத்த யோகாதி நூற்களில் விசேஷித்துக் கூறப்படுவதுண்டு. தவிர, இங்குணர்த்திய நிச்சயம் பகர்ந்த 12-ஆவது வினா விடையிற் கணிக்கும் விவரிப்பைக் கவனிக்கச் செவ்வேதோன்றும்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

(19)

சிஷி:- தொழில் குயிற்றுமிடத்து அவ்வைந்து கர்த்தாக்கட்கும் தனித்தனி யொவ்வொரு தொழிலை யன்றி அதிகம் வாராவோ?

குரு:- ஈசனருளால், தனித்தனி யாவும்வரும். ஆயினும் அவரவர்கட் கேற்பட்டிருக்கிற தொழிலே லௌகீகத்திற் பிரதானமாயிருந்து கொண்டிருக்கும்.

(20)

சிஷி:- அவ்வைவர்கட்குஞ் சுவதந்தர சத்திக ளுண்டென்றும், அவர்கள் சத்தியோடுகூடி யுய்வார்க ளென்றும் நூல்கண் முறையிடுகின்றனவே? அதனாலவர் பரதந்திரரோ?

குரு:- பிரபஞ்சம் மாயாமயமாதலால், அஃதை யுண்மைபோற் பிரேரிக்கும் ஈஸ்வரனுடைய மாயா சத்திகளைத் தானே தன் வயத்தாளு முறைமையிற் சுவதந்தரத்தொடும் பிரபஞ்சாதீத வுண்மையில் பரதந்திரத்தொடும் விளங்குகின்றார்கள். இந்நியாயம் விளங் கற்பாலதாய் 1-ஆவது வியாசம் 15-ஆவது வினாவுத் தரத்தினும் இந்த வியாசம் 7-ஆவது வினாவுத்திரத் தினுமுரைத்தோம்.

(21)

சிஷி:- அவ் விரண்டிலக்கணமும் ஒருவர்பாற் பொருந்துவ தெவ்விதம்?

குரு:- இந்த்ரஜாலவித்தை செய்கிறவன் அத்தைப் பிறருக்கு மெய்யெனக்காட்டி தன்னுட்டானே பொய்யென நினைந்திருப்ப தேய்ப்ப அவ்விருவகையும்.

(22)

சிஷி:- கிருத்தியங்க ளைந்தினுள்ளும் தலையா யிருக்கின்ற சிருஷ்டிக்குரிய திசைமுகன், அவ்வைவர்களினுந் தலைக்கர்த்தர்வா யிருந்துகொண்டிருக்கக் கடைக்கர்த்தாவாய்க் கூறக் காரணம் யாது?

குரு:- பூதமைந்துள் ஆகாயமுதல் அப்புவரை நான்கின்வழித்தாய் நான்குகர்த்தாக்க டோன்றியதற்பின்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஐந்தாவதாகிய பிருதிவியினிடமாய்ப் பிரமன் தோன்றி கடபடாதி தோற்றங்கள் கற்பிக்கப்பட்டன வால், ஜென்மத்தில் நால்வர்கட்குங் கடைசியாயும் தொழிலில் முதன்மையாயும் சிருஷ்டிகர்த்தனைச் சொல்லலாகும். உரியதிருஷ்டாந்தம்:- (1) முதலிலொரு வித்தாகவிருந்து, (2) பின்னர் அதனுளி முளை தோன்றி, (3) தழைதோன்றி, (4) பற்பல கிளைதோன்றி, (5) தகுந்த விருக்கமாய்ப் பிரவிருத்திப்பட்டதின்மேல், அவ்விருக்கமே யனேக வித்துக்களைத் தரற்கு ஒரு காரணமா யிருத்தல் போன்றாம்.

(23)

சிஷி:- சிலர்; பஞ்சகர்த்தாக்க ளைவருள்ளும் விநாயகரென்பவர் தலையாவாரென்றும், எக்கிருத்தியங்கட்கும் முதன்மையாவ ரென்றும் தீர்மானித்து அவ்வாறு நடப்பதென்னை?

குரு:- ஆகமத்திற் சொல்லப்படுகிற சரியை கிரியை யோகமெனு மூன்றினுள்ளும் விநாயகமூர்த்தி முதல்வனா யிருக்கிறரென்றும், அந்த யோகத்திற்கான ஆதாரபீடங்க ளாறினுள்ளும் பிரதமமாகிய மூலாதாரத்தில் அவர் பதியாயிருக்கிறாரென்றும், முக்கிருத்தியங்களும் பிரணவத்தா னடத்தப்படுத றொட்டு அதற்கும் பிரணவ சொரூபியா யிருக்கிறாரென்றும் சாஸ்திரங்கள் வெளிப்படுத்துகின்றமையால் அவ்வாறு நடப்பதாயிற்று.

(24)

சிஷி:- அம்மூர்த்திக்குரிய ஸ்வய கிருத்திய மெது வென்பதையும், அவருக்குச் சிந்தூர முகம் வாய்த்த தெவ்வாறென்பதையும், வாசஸ்தானம் இவ்வண்டத்தி லெங்ஙனென்பதையும் விவரிக்க வேண்டும்?

குரு:- மொழிந்த தொழில்களில், விநாயகருக்கு மூலகாரணமா யிருத்தலைத்தவிர வேறில்லையென்றும், அப்படிக்கான நிஷ்களமூலம் தேவர்கள் வேண்டுதற்படி கஜமுகாசுர சம்மார நிமித்தம் *ஓரவதரம் அக்கஜ முகாசுர தோற்றத்திற் கெதிர் வடிவமாய்ச் சமைந்த தென்றும், நிலை அண்டத்தின்

*ஓரவதரம் = ஓர்தருணம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

மூலஸ்தானமென்றும் அறி! அவ்வடிவஞ் சமைந்த வர்த்தமானத்தையும் இவ்வுளி சுலப முரைக்கக் கேட்டி!

மாகத னென்னு முனிவனுக்கும் விபுதையென்னும் இராக்கத ஸ்திரீக்கும் யானைமுகத்துடன் புத்திரனாயுற்பவித்து தேவர் பூதம் மனிதர் மிருகம் ஆயுதம் முதலியனவால் இறவா வரம் சிவபிரானிடம் பெற்றனன். பின்பு அக்கஜமுகாசுரன், உம்பர்களை ஹிம்சித்துவருந் துன்பொழிக்கற்கென்று சிவபிரானார் கிருபை கூர்ந்து *வேதண்டச் சாரலில் ஓர்சோலை மத்தியிலுள்ள விசித்திர மண்டபத்திற் கெழுந்தருளி வந்து அவண் வரைந்துள ஓவியங்களிற் சித்திரித் திருந்த சிவசத்திபிரணவங்களை ஆண்யானை வடிவும் பெண்யானை வடிவுமாய்ச் சேரும்படிசெய்து அக்கருவினிடந் தாமே யம்சஞ் செய்தவுடன் யானைமுகத்துடன் பல வுருக்கலந்த திவ்ய திருமேனியுடன் வெளி வந்தார்; அவரே விநாயகர். அவர் தமது நான்கு கொம்புகளில் வலக்கொம்பை முறித்து அமர் முனையிற் கஜமுகாசுரன் பேரி லெறிந்து கொன்ற நிமித்தம் துன்பு தீர்ந்த வமரர்கள் தாங்க ளவ்வசுரனுக்குச் செய்து வந்த மரியதையான தலையிற் குட்டிக் கொள்ளுதலையும் தோப்புக்கண்டம் போடுதலையும் அவ்விநாயக மூர்த்திக்குச் சமர்ப்பித்து வருவதானார்கள். அம்முறையே நம்மவர்களு மியற்றி வருகின்றனர்.

(25)

சிஷி:- அவ்விநாயகரைப் பிரமசாரியென்றும், வல்லபை நாயகனென்றும், சித்தி, புத்தி நாயக னென்றுஞ் சிலர் பன்னுவதென்னை?

குரு:- மூல ஸ்வபாவீகத்தில் அவர் பிரமசாரியென்றும், அசுரசம்மார காலத்தெதிர்த்த வல்லபை யாகிய மாயாசக்தியைத் தன் வயப்படுத்திக் கொண்டதுதொட்டு வல்லபை நாயகனென்றும் சித்தி புத்தி யென்கிற சத்திகளோடுகூடி நிற்றலினால் சித்தி புத்தி நாயகனென்றும் சொற்றதாகும். இவ்வரலாறு கணேசபுராணத்தில் விசேஷமாய்க் காணலாம். மேல்வழுத்திய தாற்பரியங்கள் ஞானார்த்தமுமாகும்.

* வேதண்டம் = வெள்ளியங்கிரி.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

(26)

சிஷி:- அவருக்குப் பிள்ளையாரென்ற ஓர் நாமம் கற்பிதமாகவும், வயிறு விசாலமாகவும், ஊர்தி உந்துருவாகவும் ஏற்பட்டதெது நிமித்தம்?

குரு:- ஈசனுடைய பிள்ளையென்பதுபற்றிப் பிள்ளை யாரென்ற வபிதானமும், பால்யதிசை மாறாத நித்திய பருவத்தையும் சமஸ்த கற்போதயத்திற்கு இடமாகிய வுதரத்திற்குந் தானேபிரணவ மென்பதையும் ஆரோபிக்கத் தொந்திவயிறும் அதனாலவருக்கு "லம்போதரன்" என்கிற பெயரும் கஜமுகனொடு பொருதும் *ஆயோதனத்தில் அவ்வசுரன் மாயமாய் உருவெடுத்து வந்த **கந்துளத்தை மிஞ்சவொட்டாமற்பிடித்து மேல் ஆரோகணித்ததுமுதல் அஃதூர்தியாகவு மேற்பட்டன.

(27)

சிஷி:- அற்றேல், கற்போதயத்திற்கு மாத்திரமோ பிள்ளையார் பிரணவமா யிருப்பது?

குரு:- தொழில்களைந்துள் சிருஷ்டி துவக்கமாயிருந்து கொண்டிருத்தலினால், கிரியா நியாயம்பற்றி அன்னண மாயது. அதுவே முன்னும் பின்னும் வினைக்கீடாகிய சர்வ புவன காரியமாய் விளங்கும்.

(28)

சிஷி:- அவ்விநாயகரை அயன் கற்பித்ததாகத் தானே யிருக்கவேண்டும்? அவரை முன்னோனென்று மொழிவதெற்றோ?

குரு:- இலௌகீகத்தில் இருவினைக்குட்பட்ட ஜீவர்களை வேதன் படைப்பதென்றும், அதன்மேல் விசேஷார்த்தமாய் தம தருட்சத்திகொடு ஈஸ்வரனே படைப்பதென்று முள்ளபடிக்கு அவ்வானை முகத் தேவை ஈஸ்வரனே படைத்தாரென்றும், சகல கர்மங்கட்கும் அவரை முன்னிட்டு நடாத்துதலால் அவைகட்கு முன்னோனெனப் பெயரேற்பட்டதென்றும் அறி!

*ஆயோதனம் = போர், **கந்துளம் - பெருச்சாளி

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

(29)

சிஷி:- பிரமன், பிரபஞ்ச சிருஷ்டி கர்த்தாவாயிருந்து கொண்டிருக்கச் சித்தஜ னென்பானொருவன் சிருஷ்டிக்குக் காரணமாயிருந்துகொண்டிருக்கிறானென்றும் நூல்களுரைப்பதென்ன?

குரு:- ஜீவாத்மாக்களுடைய ஜடவுற்பத்திக்குக் காமங் காரணமா யிருத்தலாலும் அக்காமத்திற்குக் கந்தர்ப்பனாகிய சித்தஜன் கர்த்தாவா யிருத்தலாலும் அவன் விட்சேப தத்துவமாய்ச் சதுர் முகனுக் கநுஜனாய்ச் சிருஷ்டிக் குபபலனாய் அவதரித்ததனாலும் அப்படி யுரைக்கலாயிற்று. இப்படியே ஒன்றுக்கொன்று பகரணமான காரிய நிமித்தம் காலகரணாதிகட்கும் அனேக தேவதைகளுண்டென்றறி!

(30)

சிஷி:- கந்தர்ப்பனாகிய இரதிகாதலன் உதயமா முன்னம் அவனதுவினை புரிந்தவர் யாவர்?

குரு:- பிரவிருத்தி மாயை.

(31)

சிஷி:- அம்மாயை காமனேற்பட்ட காலமாகிய இக்காலத்தின்றோ?

குரு:- எக்காலத்தும் பிரவிருத்தி மாயையினாலேயே எழுவகைத் தோற்றங்களும் விருத்தியாகிக் கொண்டிருக்கின்றன. அம்மாயையின் பிரேரகர்களாகவே *மறைக்கயிற்றோனும் **அலர்க்கணையோனும் பிரதிஸ்வரூபிகளா யிருந்துகொண்டிருக்கிறார்கள்.

(32)

சிஷி:- இவ்வியாசத்தின் 12-ஆவது வினாவுத்தரத்தில் பிரமதேவனை ஈஸ்வர பிரதிபிம்பனென்றும் இங்ஙனம் மாயையின் பிரதிஸ்வரூபனென்றும் இருபிரிவாய்ச் சொல்லுவதென்ன?

---

*மறைக்கயிற்றோன் = பிரமன் **அலர்க்கணையோன் = மன்மதன்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

குரு:- அணுவாகிய ஜீவான்மா ஈஸ்வர பிரதிபிம்ப மென்றும் அதின் பிரதிதத்துவ முதலாய சரீரம் மாயா பிரதிபிம்பமென்றும் இருவகையாய்ச் சொல்லப்படும். அதினாலெனவும், இவ்வுவளக வகையும் எவர்க்கும் பொதுவெனவு மறிதி!

(33)

சிஷி:- மேற்கூறிய காமனுக்குரிய விருதுகள் இயல்புக்கு விரோதமாய் கரும்பு, சுரும்பு, அரும்பு, காற்று, கடல், மடல், மதி, மகரம், குயில், தையல் என்பனவாயேற்பட்டிருக்கிறதுமன்றி அவன் அனங்கனாயு மிருக்கிறதாக வெளியாகிறது. அப்பிடிக்கானால் அவன் காரிய மெற்று?

குரு:- அவையனைத்தும் காமத்திற்குரிய சின்னங்களாகுமென்றும், விஷ்ணு புதல்வனாகிய அம் மன்மதன் சுயசொரூபம் ஓர் காலத்திற் சங்கரனாற் சாம்பராகி விட்டதென்றும், பின்னர் அனங்கனாய்ச் சூட்சும மாயாரூபம் பெற்றுச் சர்வஜீவாத்மாக்களின் சித்தத்தி னிடமாய்ப் பிரவேசித்துச் சித்தஜனென்னும் பெயர் பெற்றிருக்கிறானென்றும் புராணங்கள் புகலும். இதினால், எரிந்தெழுந்தவ னிவனென்றாம்.

(34)

சிஷி:- சரி விஷ்ணு, உருத்திரன், மகேஸ்வரன், சதாசிவன் என்னும் நால்வர்களும் விநாயக மூர்த்தியும் வேதத்திற் குரித்தாகாமல், விதி உரித்தான தென்னை? (விதி - பிரமா).

குரு:- அவர்களும் ஆதிவேதத்திற் குரியவர் கடான். அதில், அவ்வேதம் கர்மநூலாக வனந்த விதமாய் விரிந்து சகலதர்மமும் நீதியுமாய் விளங்கிய நிமித்தம், ஜீவாத்மாக்கள் செய்யும் இருவினைக்குத் தக்க பாவ புண்ணியங் கண்டு பலனுதவிச் சிருஷ்டி செய்வ தவசியம் பற்றி, ஈஸ்வரன் சிருஷ்டிகர்த்தாவிடம் வேதத்ததை யொப்புவித்தார். அதனாலவ ருரித்தானார்.

(35)

சிஷி:- அம்மறையோனுக்கு நாமக ளென்னுஞ் சாரதாள் நாவிலிருக்கிறாளென்று நூல்க ணுவலு கின்றன. அற்றேல், அவர் சுயமாய் ஓத்தோதச் சக்தி யிலரோ? (ஓத்து - வேதம்)

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

குரு:- ஈசனை நோக்கித் தவஞ்செய்து கலைமகளாகிய வேதசத்தியைத் தான் பெறுமுன்னரேயே, அப்பிரமன் வேதத்திற் குடையோரா யெழுந்தருளப் பெற்றார். ஆயினும் ஒத்தோதுங் காரியம் எங்கணும் விசேஷிக்கும் பொருட்டு, அப்பாமகளை நாவில் அந்த ரங்கமா யிருத்திக் கொண்டார். அச்சத்தி வாக்குக்கதி தேவதையாயுள்ளாள்.

(36)

சிஷி:- இம்மட்டில், தேவர்களின் றன்மையைத் தெளியலானேன். அதில், அயனைச் சிலரும், ஹரியைச் சிலரும், ஹரனைச் சிலரும் விசேஷமாய்ப் பிதற்றித் தர்க்கங்கள் பண்ணிக்கொள்ளுவதற் கிணங்க, வேத முதலிய கலைகளும் ஏற்பட்டிருப்பானேன்?

குரு:- மூலப் பிரமாவின் சிருஷ்டித் தொழிலிற்காக அவராலேற்பட்டிருக்கிறவர்களையும், அவருரு வடைந்தவர்களையும், அவரடியார்களையும் பிரமா வென்றும், மூல விஷ்ணுவின் இரக்ஷகத் தொழிலிற்காக அவரா லேற்பட் டிருக்கிறவர்களையும், அவருரு வடைந்தவர்களையும், அவரடியார்களையும் விஷ்ணு வென்றும், மூல வுருத்திரன் சங்காரத் தொழிலிற்காக அவரா லேற்பட் டிருக்கிறவர்களையும், அவருரு வடைந்தவர்களையும், அவரடியார்களயையும் உருத்திரரென்றுஞ் சொல்லப்படும். அவற்றுள், அம்மூல விஷ்ணு பிரமாக்களுக்கு அனேக பிரமா விஷ்ணு உருத்திரர்கள் தாழ்ந்தவர்களாயும், மூல விஷ்ணுவுக்கு அனேக விஷ்ணு உருத்திரர் பிரமாக்கள் தாழ்ந்தவர்களாயும், மூல வுருத்தினுக்கு அனேக உருத்திரர் விஷ்ணு பிராமாக்கள் தாழ்ந்தவர்களாயும் கிருத்திய நிமித்தம் பிரமாண்டங்கடோறும் இருத்தலால், அவரவர் புராணகலைகள் அவரவரை யுயர்த்தியும் மற்றவரைத் தாழ்த்தியும் விளம்புகின்றன. இவ்வுண்மை யறியாமல், வாய் மதம்பேசி வெறும்புளித்தின்று நாக்கெரிகின்றார்கள். அதனானமக்குறும் பயனென்னை? கிருத்திய நிமித்தம் பிரமாண்டங்க டோறும் பிரம விஷ்ணு உருத்திரர்களுண்டெனற்குப் பிராமாணியம்: ஸ்காந்தம் வீரமாகேந்திர காண்டம், 6-ஆவது அத்தியாயம் 8, 9, 10, 11, 12, 13-ஆவது சுலோகங்களினருத்தம் "அத்தூத னெங்கு மோடிச்சென்று

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பார்த்ததில் அந்தப் பிரமா சகல தேவர்களுடனும் ஸ்ரீ முருகேசனண்டையி லிருப்பதைக் கண்டு பிறகு திரும்பி வந்து செய்தியை யுள்ளபடி யுரைக்க" "சூரபத்மனும் அத்தூதன் வசனத்தைச் செவியுற்று அப்போது மனசில் பிரமாதி தேவர்களையெல்லாம் கோபித்து கொண்டு" உடனே மற்றோரண்டத்திற் கதிபரான பிரமனையழைப்பித்துத் தூதன் முகமாய் அவரை நோக்கி ஓ! பிரமனே! நமது நகரத்தை முன்னிருந்த மாதிரி செய்து விடென, உடனே யப்பிரமன்" "சீர்திருத்தி விட்டுச் சூரனிடஞ் செல்ல" "பின்பு சூரனும் அவரை வெகுமானத்துடன் தனது தூதர்களொடுகூட அவரது சுய அண்டத்திற்குச் செல்லும்படி யனுப்பினான் உடனே" அத்தூதர்கள் பிரமனை இப் பிரமாண்டத்திற்கு வெளியிற் கொண்டுபோய்விட அவர் சென்றுவிட்டனர்" என்பனவே.

(37)

சிஷி: அஃதப்படிக் காயினும் திரிகர்த்தர்களில் வேதன் இருவரையும் படைத்ததாகவும், விஷ்ணு பிரமாவைப் படைத்து அவரா லுருத்திரனைப் படைத்ததாகவும், உருத்திரன் விஷ்ணுவைப் படைத்து அவராற் பிரமாவைப் படைத்ததாகவும், பராசத்தி உருத்திரனையும் விஷ்ணுவையும் படைத்தாகவும் புராண கலைகள் புகலுவ தென்னை?

குரு:- யாம் மேலே சொற்றதனைய அவரவர்கள் தன்மைக்குத் தாழ்ந்த வகையிற் படைத்ததையே அவ்வாறாகவும் ஈஸ்வரனுடைய சத்தியினின்று சதா சிவாதி பஞ்சகர்த்தாக்கள் தோற்றியதனால் அவர்களைப் பராசத்தி படைத்ததாகவுங் கூறலாயிற்று. அதில், எவற்றுக்குங் காரணம்:- இதுகாறும் விளக்கி வந்ததில் வாசாமகோசரமாய்ச் சேட்டித்து நின்ற ஈசனாகிய பரமசிவனேயாம். அப்பரமசிவ பெருமானின் வர்த்தமானங்களை அடுத்த வியாசத்திலருள்வேம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

(38)

சிஷி:- மெய்யே. இதுகாறுந் தேவர்களுண்டோ வில்லையோவென் றிருந்துள சந்தேகங்க ளொழிந்து உண்டென்பது கண்டு சந்தோஷமானேன். என் விஷயத்தில் இவ்வளவு சிரத்தை யெடுத்துக் கொண்ட தேவரீர் திருவடிகளைப் பன்முறை பணியா நின்றேன். மற்றுந் தெளிய வேண்டுவனவற்றை நாளைக் காலை யறிவித்துக் கொள்ளுகின்றேன். அவ்வண மருள் செய்க!

குரு:- நன்று நன்று. சற்குருநாதன் தயவு பாலிப் பாராக.

தேவர்களைக்குறித்த வியாசம் முற்றிற்று.

ஆக வினா 80

****

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஓம்

குமாரபரமேஸ்வர பரப்பிர்ம்மணே நம:

3 - ஆவது

பரமசிவமென்பதைக் குறித்த வியாசம்

மறுதினோதயத்தில் விஷயப்பிரியன் வித்யாரண்யனைத் தரிசித்து வாழ்த்தி இதனை இயம்புகின்றனன்

(1)

சிஷியன்:- பரமசிவ வர்த்தமானங்களை அடுத்த வியாசத்தி லருள்வேமென்று நேற்றையத்தினம் நிகழ்த்தி யிருக்கிறீர்கள். ஆனால், அந்தப் பரமசிவ மென்பதைப் பஞ்சகர்த்தாக்களி லொன்றென் றுள்க லாமோ?

குரு:- அவர்கட்கு மதீதப்பட்டிருக்கின்ற ஸ்வயம் பிரகாச வஸ்தென்னும் பரப்பிர்ம்மமாய் விளங்கிக் கொண் டிருப்பதொன்றே பரமசிவமென் றறியக் கடவாய்! அதீதப்பட்ட தெப்படியென்னில் - ரூபமா யுள்ள பிரம விஷ்ணு உருத்திர மகேஸ்வர வென்னும் நான்கு கர்த்தாக்கட்கும், அதன்மேல் ரூபாரூபமாயுள்ள சதாசிவ மூர்த்திக்கும் மேலதாய், அருபமாயிராநின்ற பிந்து நாதம் சத்தி சிவம் என்ற நான்காகவும் விளங்கு மென்பதாம். இவ் வொன்பதையுமே சிவபேதமென் றுரைக்கப்படும்.

பதமூர்த்திகளாகிய அனந்தேசுரர், ஸ்ரீகண்டர், காலச்செந்தீ யுருத்திரர், ஏகாதசவுருத்திரர், துவாதசவுருத்திரர்; புத்தியஷ்டகர், கூர்மாண்டர், ஆடகர், சதவுருத்திரர், அஷ்ட மூர்த்திகள், நீலலோகிதர், கங்காளகபாலர், அஸ்வாரோகணர், அஷ்டபைரவர், வீரபத்திரர் முதலியவர்களையும் உருத்திர ருரு வடைந்த 11 கோடி யுருத்திரர்களையும், அவருரு வடைந்தோர்களையும், அவர் நாமமுடையோர்களையும், அக்கினிதேவனையும், பதத்தலைவர்களாகிய காபாலிகன், அசன், புதன், வஜ்ரதேகன், பிநாகி, கிருதசாதிபன், உருத்திரன், பிங்கலன், சாந்தன், க்ஷயாந்தகன், பெலவான், அதிபெலவான், மஹாபெலவான், பாசரத்தன், சுவேதன், ஜெயபத்ரன், தீர்க்கபாகு, ஜெலாந்தகன்,

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

மேகவாகனன், சௌமியகேசன், ஜடாதரன், ரத்னந்திரன், ஸ்ரீதரன், பிரசாதன், பிரகாசன், வித்யாதிபன், ஈசன், சர்வக்ஞன், பெலிப்பிரியன், சம்பு, விபு, கணாத்தியக்ஷன், கிரியக்ஷன், திரிலோசனன் முதலியவர்களையும், சிவனாற் சிருஷ்டிக்கப்பட்டவர்களையும், உருத்திரனாற் சிருஷ்டிக்கப் பட்டவர்களையும், அவர்கணங்களையும் ஆகுபெயராற் சிவனெனு நாமம் சென்றபடியுரைப்பதுண்டு. ஆதலால், ஈண்டு குறிக்கப்பட்ட சிவனெனப்படுவாரெல்லாம் அவ்வதீதச் சிவனல்லவாம். ஸ்ரீகண்ட ரென்பவர்--பிரகிருதியின் கீழுள்ளகிருத்திய மைந்தையும் நடத்தும் அனந்தேசுரர் வாயிலாகத் தம்மை யதிஷ்டித்து நின்று நடத்தப்படுகிற சிவபெருமானுடைய முத்தொழில்களையும். பிரமா விஷ்ணு காலவுருத்திர ரென்பவர்களை யதிஷ்டித்து நின்று நடத்துபவராயும், பிரம விஷ்ணு முதலிய தேவர் முனிவர் அறுபத்துமூவர் முதலாயினோர்கட்கு நிக்கிரக அநுக்ரகங்களைச் செய்யுங் கர்த்தாவாயும், சைவம் புகுந்து சமயதீக்ஷை பெற்றவர் வழிபடும் மூர்த்தியாயுமுள்ள வுருத்திரராவார். மேலே ரூபாரூபமென்றது· உருவும் அருவுமில்லாததாகும். எப்படியேல், ஸ்தூலமுள்ள வொருவன் அபமிருத்தியுவைத்தள்ளற்கான காயகற்பங்களை யுண்டு ஸ்தூலத்தைப் பொன்மயமாக்கி அதன்மேற் பிராணா யாம யோகத்தால் இப்பாலிருந்து பார்க்க அப்பாலுந் தோன்றுங் கண்ணாடி போன்ற பிம்ப பிரகாச தேகியாகி அதன்மேன் மந்திர சித்தியாகிய தவத்தால் தேவ அருளால் மேனவின்ற பிரகாச வடிவமும் இலகுவாய்க் கரைந்து மனிதர் கட்புலனுக் கெட்டாச் சூக்கும வடிவத்தை அதாவது தெய்வீக வுடம்பைப் பெற்று ஜனனமரணமும் ஊணுறக்க சஞ்சலமுமின்றி யிருக்குந் தன்மை போலாம். ஆனால், அவ்வுடம்பு கைப்பிடிக் ககப்படத் தக்குதுதான். சதாசிவ சொரூபம் அப்படியகப்படா.

(2)

சிஷி:- ஆயின் சிவமெனும் நாமத்திற்குத்தா னருத்தமென்னை?

குரு:- சிவமென்பது: மோக்கம். அம்மோக்க மாகிய கேடற்ற முத்தியை நல்கும் பகவா னெவனோ அவனே சிவனென்றாம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

(3)

சிஷ்:- அம்முத்தியை நல்குவது அதீதச் சிவனன்றி வேறின்றோ?

குரு:- அவனருளின்றி அஃதெஞ்ஞான்று மின்று.

(4)

சிஷ்:- அற்றேல், ஏனையோர்கட்குஞ் சிவனெனும் பெயர் எதால் வந்தது?

குரு:- சிவமெனும் மோக்ஷமானது சர்வோபாதியு நசித்த சூனியமாதலால், பிரவிருத்திக்கு நிவர்த்தியா யேற்பட்ட சம்ஹார கர்த்தாக்களாகிய உருத்திராதி தேவதைகட்கும் அவர் கணங்களாதியோர்க்கும் தொழிலால் அப்பெயர் வரலாயிற்று. நிற்க, ருத்தரமென்பது: அக்கினியென வடமொழியிற் பொருள்படுகின்றமையால், அக்கினி ஸ்படிவமாகிய உருத்திரருக்கும் அவர் கணங்கட்கும் உருத்திரரென ஆகுபெயராலழைக்கப்படும். இன்னமும், தேவர்கள் பொருட்டும் அடியார்கள் பொருட்டும் பல வேடங்கொண்டு திருவிளையாடல்கள் புரிந்தது குறித்து குறிப்புப்பொருள் செம்பொருள் படும்படிக்கான நாமங்கள் அனந்தமாய் வந்திருக்கிறதென்றும், இத்தியாதி காரணங்களனைத்தும் சிவனுக்குச் சகள லீலையென்றும், அந்த லீலைக் கதீதப்பட்டு ஸ்வயம்புவாய் ஆதியந்தமற்ற அனாதியாய் நிற்பதையே சிவனுக்கு நிஷ்கள மென்று முணர்வாயாக!

(5)

சிஷ்:- உணர்ந்தேன். பிரவிருத்திக்கு நிவிர்த்தியா யேற்பட்ட சம்ஹார கிருத்தியமானது -- இயற்றுவார்க்குச் சிவனெனும் பெயரை நல்குவதாயின், அந்தச் சிவனெனப்படுவார் சர்வநாச சகிதர் தானோ?

குரு:- என்ன போதித்துங் குதர்க்கம் விட்டிலை. இதனால் நீ குதர்க்கியே. ஓ! குதர்க்கீ! அதுபற்றி யின்னு மியம்புதுங்கேள்! எல்லா ஆத்மாக்களுக்கும் சகலதுக்க அஞ்ஞான சந்தேக பாவமென்பவைகளை நாசஞ்செய்து தெளிவைக் கொடுக்கின்றதே நிஷ்கள சகளச் சிவன் றன்மையாகும். அத்தெளிவினாற் றானாகிய வஸ்துவை யுணர்ந்து சாயுஜ்ய மென்கிற ஐக்யமாய்ச் சிவத்திற்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

சேர்வதே ஜன்மரகித முக்தியாகும். இதனால், சிவனெனுந் தன்மை சர்வபாவ நாசமென்றும், உருத்திரனெனுந் தன்மை துஷ்ட நிக்கிரகமென்றும், இவையில்லாவிடில் ஜீவர்கட்கு நன்மை யெவ்வளவேனும் பயக்காதென்றும், சகல நியாயத் தீர்ப்பும் இன்னணமிருந்து முடிவில் சர்வ சம்ஹார பையிரவமாகவு நடிக்குமென்றும், மாயா தோற்றமாகியவிஷ்ணு பிர்மாக்களை முடிப்பதே சர்வ சம்ஹாரமென்று மெண்ணுக!

(6)

சிஷி:- இப்போழ் துரைத்த பாவநாசம் துஷ்ட நிக்ரக முதலியவனைத்துக்கும் ஈஸ்வரனாயும் மோக்கத்திற்குப் பரப்பிரம்மமாயு மிருப்பவர் விஷ்ணுவே யல்லாது வேறில்லையென்றும், அதே விதமாய்ப் பிரமாவைத் தவிர வேறில்லையென்றும் பலவாறு சின்னூற்கள் பகர்வதென்னை?

குரு:- மனிதர்களில் முமுட்சுத்துவத்தையடைந்த சுத்த ஞானியைத் தேவனாய் யாவருந் தரிசித் துபாசிப்பதாங்கு, மூல விஷ்ணுவுஞ் சர்வஞ்ஞத்துவ சர்வஞான சொருபியாய்ப் பிரபஞ்சாதீத மாயாகுகையில் ஈஸ்வரனென்றும் துரியப் பிரமமென்றுமே சொல்லப்படும். அதேவிதமாய்ப் பிரமாதி தேவதைகளையு மெண்ணவேண்டும். நிற்க; முன்னொருகால் நீ நிகழ்த்துவண்ணம் "மாயையால் உலகி லுண்மை யிழந்து தங்களைப் பரத்துவமாகப் பேசிக்கொள்ளப்படுவதைக் கடிந்து உண்மைஞானம் பிரகாசிக்கும்படியருள்க" என்று பிரம விஷ்ணுக்களே பரமசிவனிடம் விண்ணப்பித்துக் கொண்டதை ஸ்ரீகந்த புராணத்தின் பாயிரத்தினு மறியலாம். ஆதலால், உண்மையுளுண்மையாயும் எத்தேவர்களின் அறிவாயும் விளங்குவது பரமசிவமேயாம்.

(7)

சிஷி:- அம்மூலவிஷ்ணு க்ஞான முடையவராய் சிவகட்டளையை வதியப்பெற்றவராயிருக்க, அவரைச் சத்தியாகிய மாயையின் றோற்றமென்றும் மாலென்றும் சொல்லுவதி யாது?

குரு:- பரமாணுவிற் றோன்றிய மாயையின் பிரகிருதி தோற்றங்களாகிய அண்டகோடிகளெல்லாம் அயனாற்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

சிருஷ்டிக்கப்பட்டதென்றும், அவ்வயனுக்கு விஷ்ணுவுந்தியாகிய வனசம் பிறப்பிடமாகுமென்றும், அதினால் விஷ்ணுவுந்தியி லுலகங்க ளடக்கமென்றும், அம்மாயை புருஷரூபமாய்ச் சொரூபப்பட்டதில் விஷ்ணு மாயைக்குப் பிரதான வடிவமென்றும், மாயையின் காரியங்களாகிய புவனரக்ஷணையே அவருக்குப் பிரகிருத தொழிலென்றும், இரக்ஷணைக்காதாரம் அம்புதமாதலால் அந்த ஸ்தானமே அவருக்குப் பள்ளி யாகுமென்றும் புராண கலைகள் புகலுவதால் மாயையின் றோற்றமெனப்படுமென்றும், தாருகாவனத்தவர் நிமித்தம் சிவன் பிக்ஷாடன வடிவங் கொண்டபோ துண்டான மிக்கவழகினை மோஹினியுருவான விஷ்ணு கண்டு மோஹித்ததால் மால் என்ற நாமம் வந்ததென்றும், இன்னும் பல காரணங்கள்பற்றி அவருக்கு அனந்த நாமங்க ளேற்பட்டன வென்றும், இவைகளெல்லாந் திருலீலைக்குள்ளான விஷ்ணுலீலையாகு மென்றுந் தெளிய வெளியாம்.

(8)

சிஷி:- இத்தகைய மாட்சிமை தங்கிய மஹா விஷ்ணுவைக் குறித்து "விஷ்ணுவைத் தரிசிக்கிறதினாலேயே சிவத்துரோக முண்டாகிறது, சிவனுக்குத் துரோகஞ் செய்வதனாலேயே பயங்கரமான நரகத்தையடைகிறார்கள் சந்தேகமில்லை, அதனா லொருபோதும் விஷ்ணுவின் பெயரையேனுஞ் சொல்லத் தகாது." என்று கிரந்த நூல்களிற் கூறப்படுவானேன்?

குரு:- சகள நிஷ்களத்திற் சர்வமும் சிவமயமாயிருத்தலினால் கிருத்திய நிமித்தந் தோன்றிய விஷ்ணுவுஞ் சிவத்திற் கன்னியமாகார். அப்படி அன்னியபாவனை கொள்வது சிவத்துரோக மாகுமென்றும், அத்துரோகம் எத்தேவரையும் பற்றக்கூடியாதா யிருத்தலினால் அது நரகத்துக் காளாக்குமென்றும், அதனால் ஒருபோதும் உண்மைப் பொருளாகிய சிவத்தைப் பேதித்து அரிய விஷ்ணுவின் பெயரையெனுஞ் சொல்லத்தகாது, அது குற்றமா மென்றுங் கூரியதாகும். இதில், உண்மையி லுண்மையாக வைத்து எத்தேவரை யேத்தினும் போற்றினும் பிழைபடா வென்றும், அவ்வுண்மையை யிகழ்ந்து நிற்றல் அங்ஙனம் பிழைபடுமென்றும்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata

அறியலாமன்றோ. இன்னமும் அவ்வுண்மை யெப்படியேல், சிவமே வானமும் விஷ்ணுவே புவனமுமாம். இதினாலேயே விஷ்ணுவுக்குப் "பிருதிவி பதி" என்ற நாமம் ஏற்பட்டிருக்கிறதாக வேதத்திலும் விளம்பலுற்றது. காண்க!

(9)

சிஷி:- நன்று, மூவருக்கும் மற்றியாவருக்கும் முதல்வனெனுஞ் சிவனானவர் தன்னைப்போற் பாரதி கொழுநற்கும் ஐந்து சிரமிருக்கப் பார்த்துப் பொறாமை கொண்டு ஓர் சிரசைக் கிள்ளியதெதுபற்றி?

குரு:- சிருஷ்டிகர்த்தா நம்மைத் தவிர வேறொருவருண்டோவென்று மமதைகொண்ட கமலயோனியினகங்காரத்தை மாற்றி யதார்த்தத்தைத் தெரிவிக்கும் பொருட்டு பைரவமூர்த்தமாய் நின்று பரமசிவத்தை யவமதித்த நடுச்சிரசைக் கிள்ளி அச்சிரசையு மோரடையாளமாய்த் தன்வயப்படுத்தியும், அப்பிரமன் மமதைக்குக் காரணமாயிருந்த அசுத்த ரக்தத்தையும் வெளிப்படுத்திக் கபாலத்திலேந்தினார் ஷாட்குண்யனாகிய சகளச்சிவன். அன்று முதலயனுக் கைந்து முகமின்றி நான்குமுகங்களாயினவென்று நூனுவலும். இவ்விடயம் புநீதமன்றிப் பொறாமையன்று.

(10)

சிஷி:- அன்னணஞ் சிரங்கொய்த தேவனைப் பிரமன் கோபித்ததாகவும் அப்போது பிரமதேவனுடைய பிரமஹத்தி பூமியின் கடையாந்தரம்வரை துரத்தித் தொடர்ந்து பன்னிரண்டாண்டு பீடித் தலைத்த தாகவும், அக்கபாலிக்குத் தான் பிதாவுங் குருவுமாக வுள்ளவனென்று பிரமன் பேசியதாகவும் புராணத்திற் பொறித்திருப்ப தென்ன?

குரு:- அந்தப்படி சிரந் துண்டுபட்டவுடனே அகங்கரிப்பின்றி பிரமாவும் அவர் சிரமுந் துன்புற்றுத் தன்னை நாடி வருந்துந் துயரொழிக்கும் பொருட்டும், பரமசிவ கட்டளையை நிறைவேற்றும் பொருட்டும் அத்தேவன் பரமசிவ தியானம் புரிந்து உலகெங்கு நடமாடியதையே சில ரவ்வாறுரைக்கத் துணிந்தார். புராண தாற்பரியம் மாறுபடுமாயின் நாலு மறைகட்கு முன்னம்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பரமனருளிய ஆகமங்க ளுண்மைகூறப் பிரமாணமாயிருக்கின்றன. நிற்க ; மேனொடித்த அயன் ஈஸ்வர பிரதிபிம்ப னாகலால் அத்தேவனாகிய கபாலியும் யாவற்றிற்கு மாதியான பரமசிவத்தைத் தியானிக்கலானார். அயன் சிருஷ்டிதேவனும் வேதனுமாதலால் அக்கபாலியாகிய பைபிரவர்க்கு அவர் பிதாவுங் குருவுமாமெனப் பேசியது பொது நியாயம் பற்றியே. பைபிரவர் கொய்த சிரமாகிய பிரமகாபாலம் பைபிரவர் கையிலிருப்பதால், அவருக்குக் (கபாலி) காபாலியென்றும் பெயர் வரலாயிற்று.

(11)

சிஷி:- அந்தப் பைபிரவர்க்கு யாதா மொருவர் தீண்டினாலும் தோஷ மென்கிற துர்ப்பிஷ்ட மிருகமாகிய நாயானது வாகனமா யேற்படுவானேன்?

குரு:- அம் மிருகத்தினுடைய புசிப்பு அனாசார மென்பது பற்றியும், குரூரகுண முடைத்தென்பது பற்றியும், அதைத் தீண்டினுந் தோஷமென்றாம். பைபிரவர்க்கு ஊர்தியான் சுணங்கன் வேதமாகும். பின்றொடருங் குணங் குறித்து அவ்வுருவாயிற்று.

(12)

சிஷி:- நன்று. இவ்வியாசத்தின் 4-ஆவது வினாவுத்தரத்தி லுரைத்தவாறு நிஷ்கள சகள மிரண்டிலுஞ் சிவனுக்குத் தனித்தனி நிலய மெவணென. வருண்மின்?

குரு:- 1-ஆவது வியாசம் 17-ஆவது வினாவுத் தரத்திற்பகர்ந்தபடி சகளத்தில் மூன்று சரீரங்களும் நிஷ்களத்திற் சமஸ்தமும் நசித்த சூனியமும் சிவனுக்கு நிலயமாகும். அச்சூனியத்தையே *இருவகைப் பற்றையும் ஞானாக்கினியினா லெரித்துநின்ற பரவெளியாகிய மயான மென்றும், சகலசொரூபமும் அவருக்குச் சகளமென்றும், அவையல்லாத அதீதஞான ஸ்வயம் பிரகாசமாய் அணுவுக்கணுவா யெங்கணு நிறைந் திருப்பதே நிஷ்களமயமென்றும் வேதாகமங்கள் கூறும்.

*இருவகைப் பற்றென்பது: தன்னுடைய தல்லாத புவன போகங்களைத் தானென்கிற புறப்பற்றும், தானல்லாத அந்தக்கரணங்களைத் தானென்னும் உட்பற்றுமாம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata

(13)

சிஷி:- இவ்வண்ணமாயின், விபூதி யுத்திராக்கந் தரித்த நந்திவாகன மான் மழு சதுர்ப்புஜ காளங்கண்ட திரி நேத்ர தாரியென் றெவரைச் சொல்லுவது?

குரு:- 4-ஆவது வினா வுத்தரத்தில் "சிவனுக்குச் சகளலீலை" யென்று பொதுப்பட வுரைத்ததிலேயே இவை யனைத்தும் பொருந்திய தென்றறியக் கடவாய்! சொற்ற அவ்வேடத்தையே சர்வ உருத்திரர்களுமுடையவர்களா யிருக்கிறார்கள்.

(14)

சிஷி:- சாற்றுஞ் சகளச்சிவன் நிலவரமோ? அநிலவரமோ?

குரு:- ஈஸ்வர சங்கற்பமெனுந் தமது சங்கற்பமுள்ளளவு மிருந்து நிஷ்களத்தி னிலைப்பர்.

(15)

சிஷி:- அப்படியேல், அவருக்கது பிறப் பிறப்பாகாவோ?

குரு:- சதுர் யோனியி லெதிலேனும் ஜெனிப்பதும் மரிப்பதுந்தான் பிறப்பிறப்பு. பிராகிருதத்தில் மற்ற வேடங்க ளெல்லாம் சித் விலாசங்களாகும். அப்படிக்கான சித்விலாச சொரூபமா யிராநின்ற சகளேஸ்வரனுருவில் வந்தவர்களும் யாதொரு சித்விலாச சொரூபத்தைக் காட்டில் அதுவும் பிறப்பிறப்பாகா. ஜீவர்கள் சிவத்தை மறந்த அகங்காரத்தா லெடுக்கும் ஜனனமே பிறப்பும் அது மரிப்பதே யிறப்புமாம். அது சிவனுக்குச் சம்பந்தமிலதென்றறி! சிவனுருவில் வித்துக்குண் மரமடங்கி யிருந்ததொவ்வ அனந்த இரகசிய சொரூபங்களுண்டு. அவற்று ளிதுகாறும் அம்சித்தவைகள்போக இன்னமும் அம்சிக்க வேண்டியவைக ளெவ்வள வுண்டென்பதைப் பெரிய மறையாதி கலைகளு மறிந்திலது.

(16)

சிஷி:- அச் சகளேஸ்வரனே கிருத்திய கர்த்தாக்களா யிருக்கின் அக்கர்த்தாக்கட்கு முதற் கர்த்தாவெனப் படுவார் யாவர்? அவரபிதானமும் பிற்கூறும் விவரிக்க வேண்டும்!

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

குரு:- அவரே ஐமுக முள்ள சதாசிவன். அவரையே சகளலீலையின் மஹேஸ்வர னென்றும், அப்பா லுருத்திரனென்று மெண்ணத் தக்கது. இதினால் நிகழ்த்திய மூவரையும் மூன்றொன்றாயுள மூலவுருத்திரனென்றாவது, மூலச்சிவனென்றாவது சொல்லத்தக்கது, இவரோடு அபரசிவமாகிய நந்திகேஸ்வரரையும், சக்தியையும், விஷ்ணுவையும், பிரமாவையுங் கூட்டப் பஞ்சகர்த்தாக்களென்றாம்.

(17)

சிஷி:- ஆயின், ஆதியான சகளேஸ்வரனுக்கு மாடு வாகனமும் துவஜமுமாகவும், கரியதள் வரியதள் உடையாகவும், என்பும் பாம்பும் அக்கும் உருத்திராக்கமும் அணியாகவும், வெண்சாம்பர் பூச்சாகவும் மானும் மழுவும் சூலமும் கபாலமும் கைக்குச்சுமையாகவும், குழவிவிதுவும் புனன்மகளிரும் தலைக்குச்சுமையாகவு மிருந்தக்காற் சிவனென்பார் சிறப்புடையரோ?

குரு:- கேள்! திரிபுர சம்ஹாரத்தில் சிவனடியைத் தாங்கமாட்டாமல் இரதம் நெறநெறென முறிந்திடும்போழ்து விஷ்ணு விருஷபமா யெழுந்து சிவனடியைத் தாங்கினார். அதுபற்றியும், தரும தேவதையானது சிவனுள்ளளவுந் தானழியா திருக்கவும், சிவனைப் பூஜித்து விசுவாசிக்கவும், அவர் தரிசனமென்றும் இடைவிடாதிருக்கவும், அவர் திருவடிகளைச் சுமக்கற்கோர் பணிவிடைப் பொருளாயிருக்கவும், அவர் காரியத்தை அவருத்தாரப்படி தான் பிரேரிக்கவும், அவர் தன்மையை மாயையாற் பேதித்துள்ள சமயபாவனா தேவர்களைப் புகழாமல் அவரையே புகழ்ந்திருக்கவும், பரலோக அந்தராளச் சாளரத்தை மறைத்துச் சதா வவர் பார்வையிலேயே படுத்திருக்கவுமாக வெண்ணங்கொண்டு அனேக கால நோன் பிழைத்துங் கைகூடாமல் ஓர்காற் சிவானுக்ரகத்தாற் புனித சொரூபமாகிய வெள் விருஷபமாய்ப் பரமனண்டையிற் சென்று அவர்க் கிதம் பிறக்கும் படியாகத் திருச்சரணை மெதுவாய் நக்கி நக்கிக் கொண்டு நிற்பதற் கிரங்கித் தேவர்களுந் திருப்திபட இஃது சத்திருபமென அங்கீகரித் தாண்டுகொண்டார். இது பற்றியும் அவ்விடை வாகனமாகவுங் கொடியாகவு மமைந்ததாகும். தேவர்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

முனிவரைத் தொந்தரித்த கயாசுரனாகிய யானையும் அகங்காரத்தால் தாருகாவனத் திருடிகளேவிய வேள்விப் புலியும் ஈசனை யெதிர்த்ததனால் அவைகளை வதைத்து அதளையுரித்து ஜீவர்க ளகங்காரங் கொளாமல் அடையாளமாய்த் தரித்துக்கொண்டது தொட்டு அவைகண் முறையே உசிதமுள போர்வையாகவும் உடையாகவும், பொய்யாகிய மாயையை மெய்யாகிய மயானத்திற் சுட்டெரிப்பது தாமென்று எவரு மறிந்து பிழைக்க என்பையுஞ் சாம்பரையும் அடையாளமாகவும், எவருக்கு முதவாதவைகளுந் தமக்குதவுமென்றும் அரவவடிவான குண்டலி சக்தி தம் வசமென்றுங் காட்டவெனக் கருடனுக்குப் பயந்தொளித்த பாம்புகளுடன் சேர அவ்விருடிகளேவிய பணத்தைப் பணியாகவும், தாம் பெருமையில்லாச் சமநிலையை யுடையேமென்றுலகுக் கறிவிக்க நவமணிக ளல்லாத அக்குமணியை அணியாகவும், தமது திரிநேத்திரங்களையும் விழித்த காலையிலுதிர்ந்த கண்ணீர் உருத்திரர்க ளணியத்தக்க வுருத்திராக்ஷமானதைத் தாமுமணிந்து காட்டியதாகவும், மேனொடித்த தாருகாவனத் திருடிகளால் வேள்வியினின்று முண்டுசெய் தேவப்பட்ட கலைமானைத் திருச்செவிகண் சிரவணஞ்செய் திருக்கும்படி யிடக்கரத்தினும் எதிர்த்துவந்த சூலத்தையும் மழுவையும் மற்ற கரங்களினுமாக விருத்தி அச் சூலத்தைத் திரிமூர்த்திகளும் திரித்துவமும் இவ்வணமே என்றுஞ் சாக்ஷிசெய்து வேத நெறியை விட்டவர்க ளெவ்வருக்குந் தமது கரம் அக்கினியை யளிக்கத் தக்கது அதுவே யுருத்திரர்கள் தன்மையாகுமென் றறிவிக்க வென்று மேற்படி ரிஷிக ளேவிய வேள்வித் தீயைப் பாணியின் மழுவாகவும், அந்தத் தாருகாவனத்து ரிஷிகளைப்போலக் "கர்மமே தெய்வம்" என்று மாறுபட்டவர்களையுந் தெளிவிக்கப் பிக்ஷாடனவடிவந் தாங்கியதென்று காட்டக் கையிற் *கங்காள கபாலமாகவும், சர்வ ஜீவர்களையுந் தாம் இரக்ஷிக்கும் பொருட்டு பாற்கடலிலெழுந் தெங்கும் பரவக்கூடிய விஷத்தை யுண்டுவிடவென்று விண்டுவாதி தேவர்கள் கேட்டுக் கொண்டபடிக்கும் உமாதேவியார் சம்மதப்படிக்கும் தம துத்தரப்படி கணத்தலைவரான ஆலாலசுந்தரர் திரட்டிக் கொடுவரக்கண்டு ஒரு திவலையாய்

*கங்காள கபாலமென்பது முழுவென்பாகிய தலைமண்டை

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

அகங்கையில் வாங்கி யுட்கொண்டு மேலுங்கீழுஞ் செல்லொட்டாது கண்டத் திருத்தியும், தம்மை சரணென்றடைந்தவர்களைப் பாதுகாப்பதென் றெவரு மறிய இளமதியை வேணியிலடையாளமாகவும், பரமனை உமையவள் கண்புதைத்த காலையில் விரல்களிற்றோன்றி ஆயிரநூறுகோடி முகங்களாய்ப் பரவிய புனலாலும் பகீரத னிமித்தம் அளவுகடந் தெழுந்த கங்கையாலும் உலகுக் கபாய முறாதிருக்கவென்று அவைகளை ஓர் துளியாகத் தங்கிடை யைக்யமாகவுஞ் செய்துகொண்ட பரமனுக்குச் சிறப்பவர் செப்பவல்லார்! சிறுமை யெவர் செப்பவல்லார்! நீயே சொல்லுக!

(18)

சிஷி:- இன்னமும், சிவனானவர் : பரசு கட்கம் வஜ்ரம் அங்குசம் என்னு மாயுதங்களையும், *பாசத்தையும், **கண்டையையும் கரங்களிற் றரித்திருக்கின்ற தாகத் தெரிகின்றனவே : அவைகள் யாது காரணம் பற்றி?

குரு:- கேள், மேற்கோள்.

"உருவருள் குணங்க ளோடு முணர்வரு ளுருவிற் றோன்றுங்
கருமமு மருள ரன்றன் கரசர ணாதி சாங்கந்
தருமரு ளுபாங்க மெல்லாந் தானறு டனக் கொன் றின்றி
யருளுறு வுயிருக் கென்றே யாக்கினன் சிந்த னன்றே."

என்றபடி சிவனுடைய உபாங்க சாங்க அங்கங்களெல்லாம் ஜீவர்கட் கருளுண்டாகி நன்மை பயக்கும் பொருட்டேயுள தெனத்தெளிக! பரசு சத்தியத்தையும், கட்கம் பிரதாபத்தையும், கண்டை சத்தநாதத்தையு முணர்த்துவதுபோல பிறவற்றையு மெண்ணுவதோடு நாகம் - இருத்தியாதி சுத்தமாயையுங் குறிப்பதனைய ***பதி பசு பாசமென்னு மூன்றனு ளொன்றாகிய பாசமானது : அனாரதம் அளவிறந்த வலிமை யுளதும் செம்பிற் களிம்புபோல ஜீவனைப்பற்றி ஆத்ம சொரூபமாகிய அறிவைப் பந்தித்து ஆவரணிப்பதும், சிவ புண்ணியமாகிய கருமம் பக்தி உபாஸனை யோகம் ஞானம் என்னும்

* பாசமென்பது - கயிறு **கண்டையென்பது = மணி ***பதி பசுவினிலக்கணங்கள்; 25-ஆவது வியாசம் 21-ஆவது வினாவுத் தரத்தில் செவ்வென வெளியாம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

அதிகார வகைகளின் மேலீட்டாற் பக்குவப்படுவதும், எல்லினிருளிலும் அதியிருளா யிருக்கின்றதுமான அஞ்ஞான மாயையாகிய அதோ மாயையையும் உணர்த்துவதன்றி அபயகரம் அனுக்ரகத்தையுமுணர்த்து மென்க. இருளிலும் அதிவலி யென்றது; எல்லிருள் தன்னைக் காட்டிக்கொண்டு பிரபஞ்சத்தை ஆவரணிக்கும். ஆணவ விருளானது - தன்னையும் பதியையும் அபவாரணிக்கும் அதனா லென்க. (அபவாரணம் - மறைப்பு)

(19)

சிஷி:- பரமனார் கையில் தமருகத்தையும் சிரசில் நகுவெண்டலையையும் தரித்திருக்கவும், ஆமையோடு பன்றிக்கொம்பு மீன்கண் இவைகளைத் தலைமாலையோட ணிந்திருக்கவு முண்டாய காரண மென்னை?

குரு:- மேற்றுலக்கிய தாருகாவனத் திருடிகள் அதர்வண வேத மந்திரங்கள் யேவினார்கள், அவைகளொருங்கே தமருக ரூபங்கொண்டு வருவதைத் தெரிந்து இது தமது சத்திநாதத்தை யுணர்த்தற் கோரடையாளமாமென்று தமது திருப்பாணியிலே தரித்துக் கொண்டார். தம்மை மோஹித்துப் பின்றொடர்ந்த தன்மையால் 48,000 முனிவர்களைப் பெற்ற பெண்களுக்கு நாயகர்களான மேற்படி தாருகாவனத் திருடிகள் "சிவனைத் தின்றுவரக்கடவாய்" என்று ஏவிய நகுவெண்டலையையும் அடையாளமாகச் ஜடாமகுடத்திற் றரித்தார்.

க்ஷீராப்தியை கடையும்போது மந்தரகிரியாகி மத்துக் கடலிலமிழ்வதைக் கண்ட தேவர்கள் விஷ்ணுவைத் தியானித்தார்கள். அவர் ஆமையாகி மத்தை முதுகி னிற்கும்படி தாங்கியபின் சரீர விகற்பத்தான் மமதை மேலிட்டுக் கடலைக் கலக்குகையில் கைலாய பதிக்கு விண்ணப்பித்த தேவாதிகட் கிரங்கி அச்சிவபிரான் விநாயக மூர்த்தியை யனுப்பினார். அவர் தமது துதிக்கையாற் கடனீரனைத்து முள்ளேறச் செய்கையில் அவ் வுன்மத்த ஆமையு முள்ளே சென்றது. பின்னர் வினாயகர் புழையி னின்று நீரைச் சிந்தியவுடனே பலங்குன்றி மதிமயங்கி வீழ்ந்த ஆமையின் ஓட்டினைத் தமது கோட்டினாற் பெயர்த்துக் கொடுவந்து கடவுட்குக் காணிக்கையா யளித்ததையும் அடையாளமாய்த் தரிக்கவெனத் தேவாதிகள் வேண்டுதலையும் பரமனா ரோர்ந்து மார்பில் தரித்துக் கொண்டார்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பூமியைக் கவர்ந்துகொண்டுபோன ஹிரண்யாக்ஷனைச் சங்கரித்த விஷ்ணு வவதாரமாகிய பன்றி உன்மத்தங் கொண்டு உலகங்களை நிலை பெயரச் செய்ய வாரம்பிக்கையில் தேவர்கள் செய்த மனுவுக்காகத் திருவுள மிரங்கி வேலாயுதக் கடவுளை யனுப்பினார். அவர் தமது வேலாயுதத்தை அவ்வராகத்தின் றலையீற் குத்தி யமுக்கிக் கூரிய கொம்புகளைப் பெயர்த்தெடுத்து வந்து ஈஸ்வரனிடம் வைத்தபோது அதையும் முன்னமனைய வடையாளமாக மார்பிற் றரித்துக் கொண்டார்.

வேதங்களைத் திருடிச் சென்ற அசுரனைக் கொன்று இரத்தபானஞ் செய்து மஸ்தேறிய விஷ்ணு வவதாரமாகிய மீன் - உலகம் வருந்தும்படி கடலைக்கலக்கியதைத் தீர்க்கவென்று பிரார்த்தித்த அண்டர்கள் துதி கண்ட சிவபெருமான் 'அருள்சுரந்து ஓர் பைபிரவரை யனுப்பினார். அவர் அம்மீனை வலைவீசிப் பிடித்து அதன் கண்களைப் பெயர்த்துச் சிவ சன்னிதானத்தில் வைத்தகாலை தேவர்கள் வேண்டற்படி அஃதையு மடையாளமாக மார்பிற் றரித்து கொண்டார்.

(20)

சிஷி:- இந்த வியாசத்தின் 17-ஆவது வினாவுத்தரத்துட் சொன்ன பிரகாரமாகச் சிவபிரா னுரித்த யானையின் வர்த்தமானத்தையும் அவண் கூறிய மெய்யாகிய மயானச் சுடலைக்கண் தரித்த என்புகளைப் பிரம விஷ்ணுக்களின் என்புக ளென்றும் சிவனணிந்த உபவீதம் கேசமென்றும் புராணங்க ளதிர்ப்பதையுஞ் சற்றே துலக்கி இம்ப ரருளவேண்டும் !

குரு:- பூருவத்திலுள்ள கயாசுர னென்னும் ஓரவுணன் பிரமாவை நோக்கித் தவஞ்செய்து "தேவர்களை யெல்லாம் வென்று ஜெயம்பெற" வேணுமெனக் கேட்டவரத்தையும், "பரமனிடஞ் சென்றா லழிந்துபோம்" எனப் பிரமர் கொடுத்த வரத்தையும் ஏற்றுக் கொண்டு தேவர்களை வென்று முனிவர்களைத் தொடர்கையில் அவர்க ளஞ்சி நடுநடுங்கிக் காசிமாநகரஞ் சேர்ந்த போது அங்குமவன் றொடர்ந்து வந்ததைக் கண்டு மணி கர்ணிகை யென்னும் ஆலயத்துட் போய்ச் சிவனைச் சரணாகதியென் றடைந்தார்கள். கயாசுரன் தன் பராக்கிரம வலியை யெண்ணி ஆண்டெய்தி முனிவர்களைக்கண்டு

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

கொல்லவேண்டுமென் றுறுமுகையில் பரமேஸ்வரர் உக்ரமூர்த்தியாய்த் தோன்றி யானையாய் நிற்குங் கயாசுரனுடைய மத்தகத்தின் மிதித்துக் குப்புற வீழ்த்திப் பிடரியைக் கிழித்துத் தோலையுரித்துத் தாருகாவனத்து ரிஷிகள் போட்டப்பட்ட சாபங்களால் ஒரு தீங்கு மணுகாத் தன்மை வாய்ந்தவரும் விஷ்ணு வவதாரமாகிய சிம்மத்தைக் கொன்றுரித்த சர்மத்தை உத்தரீயமாய்த் தரித்துக் கொண்ட வருமான சிவபெருமான் திருமேனியிற் போர்த்துக் கொண்டனர்.

சர்வ சங்கார காலங்கடோறும் மாயா தோற்றங்களாகிய பிரம விஷ்ணுக்களின் சரீரங்களை யொழித்து நிற்கக்கூடிய வவதார அச்சரீரங்களையுந் தமது ஞானச் சுடலையின் கண்ணே சுட்டெரித்து மீந்த வென்புகளையும் மாலைகளாக வணிந்தருளினார். அவர் சிரங்களைச் சிரமாலையாக வணிந்தார் கேசங்களை உபவீதமாக வணிந்தார். இவைக ளெல்லாம் அடியார்களாகிய அவர்களுடைய சரீரம் வீண்போகக் கூடாதென்றும், நன்மை யுண்டாகவென்றும் அங்கீகரித்த காருண்யமே யொழிய வேறன்று. இந்நிகமங் கொண்டே நம்மவர்களும் மாய்ந்த களேபரங்களைச் சுடலைக்காக்குகின்றா ரன்றோ. இதில் ஸ்தூலார்த்தமும் சூட்சுமார்த்தமும் பொருந்துகின்றனவுங் காண்க!

(21)

சிஷி:- இத்தகைய சகளேஸ்வரன் முப்புர 'சம்மாரத்தில் கணபதியைப் பூஜித்ததா யிருக்கின்ற தெக்காரணங் கொடு?

குரு:- சர்வ சங்கற்பங்கட்கும் முன்னோனாகிய விநாயகனை முன்னிட்டுக் கொள்வதென்ற சிவனுடைய வரம் ஏற்பட்டபடிக்கு ஆங்கது நியாயமாயிற்று. அதினின்றுந் திரிபுரத்தைச் சிவன் செயலால் நகைத் தெரித்த திஞ்ஞால மறியாத தல்லவே ! துரருத்தம் பண்ணற்கு.

(22)

சிஷி:- சிவனுடைய சகள கோலாகலங்க ளெல்லாந் தாங்கள் சாற்று மருத்தப்படிக் கானதா யிருக்கின் சத்துருக்களை நேராமல்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

தடுக்கவும், உலகத்திற்குத் தாம் உண்மையானவரென்று அவரவர் ஹிருதயத்திலேயே காட்டவுஞ் சக்தி யற்றவ ரிலரன்றோ?

குரு:- உருவப்பட்ட ஜீவர்களுடைய ஆவரணஹிருதயம் உண்மை ஞானத்தைப் பொருந்தும் வரையில் எவ்விதத்தானும் பிரகாசிக்கத் தக்கதல்ல. அப்படிக்கான அக்ஞானத்தா னினைக்குஞ் செயல்கள் பல கோடியா யிருந்துகொண்டிருக்கும். அவைகளை யனுபவிக்க அவர்களே கன்ம வசத்தரா யிருத்தலினாலும் நிரவயவமா யிராநின்ற பிரமம் - ஜீவர்கணிமித்தம் ரூபாரூப ரூபங்களானது தொட்டு காக்ஷியிற் பிரமாணப்படுத்தி அறிவிலார் நினைக்க ஹேது வானதினாலும் அந்தச் சிவன் அவ்வணங் காட்ட வேண்டிய தவசிய மின்றே.

(23)

சிஷி:- நன்று, சிவன் பஸ்மாசுரனுக்கு வரங்கொடுத்த காலை, அவ்வரத்தைப் பரீட்சிப்பதாக அவ்வசுரன் தன்கையைச் சிவன் சென்னியில் வைக்க வெத்தனப் படுகையில் அவர் பீதிகொண்டு ஐவேலிக் கொட்டைக்கு ளொளித்த தென்னை?

குரு:- அவ்வசுரன் கொடிய தவஞ்செய்து "எவன்றலையி லென்கரம் வைக்கப்படுமோ அவன் றலை சாம்பராகுக" என்ற துஷ்ட வரத்தை அவன் கோருதற்படி வரவள்ளல் இனி நடக்குங் காரியமின்ன தென் றுள்ளிக் கொடுத்தபின், அவன் துணிவு கண்ட நிமிடம் தமது வரத்தைத் தாமே யழித்தல் தகுதியன் றெனவும் நாம் மறைய இவன் றேட விஷ்ணு வருக இவன் தொலைவானெனவுஞ் சிந்தித்து அங்ஙன முள்ள ஐவேலிச் செடிக்குண் மறைவதாய்ப் போக்குக் காட்டிய வவதரம் அவன் றொடர்ந்து அச்செடியை வகிர்ந்து வகிர்ந்து தேடுவதில் விடா முயற்சியாயிருந்தான். அஞ்ஞான்று ஹரியானவர் மாலெனும் பேர் மகிமைப்பட ஜகன் மோகினியாய்த் தோன்றி அவனைத் தன் பேரின் மோஹிக்கச் செய்து நதியின் மூழ்கித் தவவேடம் நீக்கி வா வென்றிசைத்த வண்ணம் மாயமா யுண்டாக்கிய நதியின் மூழ்கித் தன்றலையைத் தேய்த்துக் கழுவும் போழ்து நவசத்திகளிலொரு தோற்றமாகிய திருமாலைத் திரோபவானுக்ரகத்தாற் கலந்து பிரமனைப் பெற்ற பிதாவாகிய பரமசிவனுடைய வரமே அவனைப் பஸ்பமாக்கி அவனுக்குப்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பஸ்மாசுரனென்னும் பெயரும் வழங்கும்படி செய்தது. இதினால் வரோதயனாகி யெங்கு நிறைந்த விறைவற்கு நீ சிறுமை செப்பத் துணிவ தென்னை?

(24)

சிஷி:- ஸ்திரிகளின் வனப்பில் திலமத்தனை திலமத்தனை யெடுத்துப் பிரமன் படைக்கத் தோன்றிய திலோத்தமை யென்பவளின் அழகைச் சிவனானவர்; தமது ஒரு முகத்தாற் பார்த்து மாளாது நான்கு புறத்தும் நான்கு முகங்களை யுண்டுசெய்து கொண்டனர் என்பதாய்ப் புராணத்தில் வெளியாகின்றதே; அது கடவுட்கு நன்மார்க்க மாமா?

குரு:- துஷ்டராகிய சுந்தோபசுந்தா ளென்னுந் தமையந் றம்பிக ளிருவரையும் நாசஞ் செய்யவென்று பிரமாதி தேவர்கள் திலோத்தமை யென்பவளை மன்மதனைப் போற்றேற்றி "நீ உருத்திரமூர்த்தியினிடத்தில் வாக்குப் பெற்றுக்கொண்டு செல்" எனத்திட்டஞ் செய்தனுப்பிய பிரகாரம் உருத்திர மூர்த்தியை வணங்கிப் பிரதக்ஷண நமஸ்காரம் புரிகையில் அவள் வணக்கம் மிகவும் அழகா யிருந்தமையால் அவ்வாறு நான்கு வதனங்களையுந் தோன்றச் செய்துகொண்டு கண்ணுற்று "உன்னெண்ணப்படி யாகுக" என்று வாக்களித்தார். அஃது காமக்கருத்தை காட்டுவதன்று.

(25)

சிஷி:- பிருகு முனி பத்தினி நாகவல்லியென்பவள் அழகின் மிக்கவளா யிருக்கிறாளெனக் கருதி சிவனானவர் மால் பிரமனுடன் சென்று மாறுவேடங்கொண்டு நிருவாண பிக்ஷை கேட்டகாலையில் அவள் மூவரையுங் குழந்தைகளாக்கிப் பாலூட்டிக் கோபித்ததாய் வெளியாகின்றதே, அதனாற் சிவன் எத்தன்மையுளாரென் றெண்ணலாம்?

குரு:- அவள், கற்பெனு மிலக்கணத்தில் மிக்க வளாயிருக்கிறாளென் றின்புற்று அன்னணம் மூவருஞ் சென்று அவளின் பதிவிரதா தன்மத்தையே வெளிப் படுத்தினதாகும். அங்ஙன மவள் தங்களை மதியாமற் கோபித்தது குற்றமென்று "நீ யழகின்றி மாறுவடி வாகக் கடவாய்" என்று சபித்தபடி உலகில்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஆதியென்னுந் தாய்க்கும் பகவனென்னுந் தந்தைக்கும் ஊற்றுச்காட்டிற் பிறந்து மாரியம்மையா யிருக்கிறாள் - இவ்விடயத்தில் அணுமான மேனுந் தோடமின்று.

(26)

சிஷி:- ஈதிப்படிக்காயினும், தெருவிலே மதுரமான பாடல்களைப் பாடித் தாருகாவனத் திருடிகளின் பத்தினிகளைச் சிவன் கற்பழித்தார் என்னலும் பொய்யாமோ?

குரு:- அவ்விருடிகள் பிரமனை நோக்கித் தபஞ் செய்து சில வரங்களைப் பெற்ற பின்னர் "கடவுளன்றிக் கர்மங்களே தெய்வம்" என்னும் மீமாம்சா மதம்பற்றி பலமாய் நின்றதை மாற்றி அவர்கட்கு யதார்த்தத்தைத் தெரிவிக்கும் பொருட்டும் அவர்கள் தமதடியார்களாகி சிலாக்கியமாம் பொருட்டுமாக; "அவர்களிடம் மோஹினியாய்ச் சென்று அவர்களைக் காம்க் கனலால் அறிவழியும்படி செய்" என்று உலகளந்தோனையனுப்பி தாம் அழகிய பிக்ஷாடனபடிவந் தாங்கி அவர்களது பத்தினிகளிடஞ் சென்றகாலை, அம்மாதர்கள் தங்களைக்கூடி மருவவென்று பின்றொடர்ந்து கற்புநிலை குலைந்து கைவளைகளையும் உடைகளையும் நழுவவிட்டு "இவ்வளைகளை யெங்கள் கைகளிலிடுமே" என்றவுடனே "இப்போழ்துகூடா இனிமேற் கூடும்." என்று அவ் வளைகளைப் பொறுக்கிக் கொண்டு மறைந்தனர். அவர்கணிலை குலைந்தனர். அவ்விருஷி பத்தினிகளினிச்சையைத் தமது அற்புத விலாச மாயா கோலாகலலீலா வினோதத்தாற் றீர்த்து மருளினர். பின்னர் அதை அவ்விருடி களறிந்து. "நீங்கள் வைசிய ஸ்திரீகளாய்ப் பிறக்கக் கட்வீர்கள்" என்று சபித்து நன்மார்க்கந் தெரிந்து கடவுளை நிதானித்துய்ந்தார்கள். இதனால் ஒருபாத்தியாயனானவன் துஷ்டர்களாயிருந்த பள்ளிப் பிள்ளைகளை, நன்றாய்க் கண்டித்து வித்தை வருத்தியது போன்று அவர்களைப் பெருமைப்படுத்த வந்ததே யொழியச் சிறுமைப் படுத்தவாவது காமக் கருத்தோடேயாவது வந்த தன்று.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

(27)

சிஷி:- பாலசந்திரனையும் 1 மந்தாகினியையும் (மந்தாகினி - கங்கை) வேறு தானங்களிற் பொருந்தாது, விசேஷமான மூர்த்தினியிற் பொருத்திய சிவன் கருத்து யாதோ?

குரு:- அஃதாவது : நோற்ற நோன்பி னிமித்தம் அவர்களென்றும் விளங்கிடும் ஆகாயத்தி னிடமாயிருக்கும்படியாகத் தமது சென்னியாகிய பெரிய விண்ணிடை பொருத்தியதும், அக்கினிக் கண்ணினனலைச் சமஞ்செய்திருக்க வெனவுமே கட்டளையிட்ட கருத்தாம்.

(28)

சிஷி:- மார்க்க சீர்ஷ ஆர்த்திரை யென்கிற 'மார்கழித் திருவாதிரையில் சிவன் பிறந்தார் எனப்பகர்வதால், சிவன் பிறப்பிறப்பற்ற கடவுளென்ப தெவ்விதம்?

குரு:- அப்படிப் பிறந்ததெனல், ஒருருத்திர தோற்றமே யொழிய வேறல்ல.

(29)

சிஷி:- அற்றேல், சிவன் மூங்கிலினிடத்தும், ஞண்டுக் குழியினிடத்தும் பிறந்தா ரென்ப தென்னை?

குரு:- தொண்டைநாட்டிலுள்ள சிவஸ்தலங்கண் முப்பத்தி ரண்டில் திருப்பாசூரென்னுந் தலத்தில் ஓர் மூங்கி லடியினும், மேற்படி நாட்டில் திருமாகற லென்னுந் தலத்தில் ஓர் ஞண்டுவளையினுங் காரணம் பற்றி மூர்த்திகரமாய் முளைத் தெழுந்ததையே, அவ்வாறு சிவன் பிறந்தாரென் றதிர்ப்பதுள. அஃது பிறப்பன்றே.

(30)

சிஷி:- அந்தச் சிவன் முதலவனாயின், தமது பிள்ளையாகிய பாலசுப்ரமணியரிடம் கைகட்டி வாய் பொத்தித் தாமொரு சிஷ்யனாகவும், அவரொரு குருவாகவுமிருந்து; அக்குமரகுருவிடம் பிரணவத்துக்குப் பொருள் கேட்பானேன்?

(1) மந்தாகினி - கங்கை

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

குரு:- அவ்விருத்தாந்தம் ஈண்டிசைத்தல் கூடா. 31-ஆவது வியாசத்திற் றெளிவாய் வெளியிடுவோம்.

(31)

சிஷி:- ச்ரி. கஜேந்திரனென்னும் ஓர் யானை முதலையாற் பீடிக்கப்பட்டு "ஆதிமூலம்" என்று கூப்பிட்ட காலையில், ஹரியானவர் உதவியது போல உதவாதிருந்த சிவனை ஆதிமூலமாகக் கொள்ள நியாயமும் வருமா?

குரு:- அப்படிக் கூப்பிட்ட சமயம் இரக்ஷக கர்த்தாவாக நேமிக்கப்பட்ட திருமாலானவர் காவாதே விடின் அவர் - கர்த்தராகிய சிவபெருமான் தனக்கிட்ட கட்டளையை ஆலசியஞ் செய்தவரே யாவார். அன்றியும் அந்நேரம் அம்மாதவ னுதவா விடிற்றாமே யுதவுவார். நிற்க, முதலில் விஷ்ணு பிரமாக்களைச் சிஷ்டிக்கும் பிதாவும் முடிவில் அவர்களை மாய்த்துத் தமது சூலத்திலேந்தி நுதலம்பகத்தா லெரித்துண்டாகும் பராகத்தைத் திருமேனிக்கண் அணியும் சங்காரகிருத்தியத்தை வகித்த தேவும் அவரால் விளங்கத் தகுவாரேல், ஆதிமூல மவரன்றி வேறு முண்டோ? அறிதி!

(32)

சிஷி:- முயலக னென்னும் ஓரரக்கனை அப்பரம சிவனானவர் என்றும் மிதித்துக்கொண்டு நிருத்தம் புரிவதாய்க்காணும் நியாயமென்னை?

குரு:- முன்னம் பன்னிய தாருகாவனத் திருடிகள் வேள்வியிலுண்டு பண்ணிப் பரமபிதா பேரிலேவிய முயலகனைப் பிடித்து அவர் காலின்கீழே போட்டு மிதித்துத் தம்மை யெதிர்க்கும் அறிவில ரெவரும் அபஜயப் படுவாரெனச் சாக்ஷிப்படுத்தி நிர்த்தனம் புரிந்தனர். அந்நிர்த்தன மெப்படிப்பட்டதென்னில், முன்னொரு காலத்தில் "நுமது சன்னிதானம் எனது அருள்" என்ற பராசத்திக்குத் தமதருள் வலியைக் காண்பிக்க வென்று சத்தியை விட்டுப் பிரிந்த போது அச்சத்தியுஞ் செயலற்று சர்வ ஜீவகோடிகளும் பிரேதமாய்ப் போனபின் அவள் தியங்கி 'அருள் செய்க', என்று வேண்டிய காலை முதலிற் றமதருள் வடிவான உருத்திர கோடிகளையும், பின்னர் ஏனைய ஜீவ

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

கோடிகளையும் எழுப்பிக் கலந்து நடித்த தன்மையாகும். இன்னமும்; உண்ணு முணவானது ஸ்தூல தேகாதி யந்தமும் பிரவேசித்து இரக்த தாதுவைப்பலப்படுத்தி ஓட நடக்க இருக்க படுக்கப் பண்ணுமாறாய் சர்வ ஜீவாத்மாக்களின் தேகங்க டோறுங்கலந்து உயிரை யெல்லாம் ஆட்டுவித்து பஞ்சகிருத்தி யங்களையும் அவ்வக் கர்த்தாக்களை யதிஷ்டித்து நின்று நடாத்துந் திருக்கூத்தாகிய நட்டுவத்தன்மையுமாம். இதுதான் "அவனசையாம லணுவசையா" தென்பதும். அணுவென்றால், பரப்பிரம்ம சிவசாயை யென்றும், உயிரென்றும் ஞானார்த்தமாகும்.

(33)

சிஷி:- ஏகாதச வுருத்திரர்களுடைய நாமங்கள் எல்லாம் சிவனுக்குச் சம்பவித்த மூல மென்னை?

குரு:- அவர்களுடைய நாமங்கள் அவருக்குச் சம்பவித்ததில்லை. அவருடைய திருவருட் டிருநாமங்கயையே பன்னொரு வுருத்திரருந் தரித்தனர்.

(34)

சிஷி:- ஆயின், சிவனுக் குண்டான ஆகு நாமங்கள் பலவுள், ஹரன், ஆலமர்கடவுள், ஈசானன், எண்டோளன், ஐமுகன், கரியன், சங்கரன், ஜடைமுடியோன், சம்பு, தாணு, நக்கன், பாண்டரங்கன், பிஞ்சகன், பித்தன், பூதநாதன், பேயோடாடி, யோகி, வாமதேவன், நம்பன், நீலலோகிதன், வீமதேவன் என்ற நாமங்கள் பல விபரீதார்த்தங்களைத் தருகின்றனவாய்த் தெரிகிறது. ஆதலால், அவைகளின் பொருள்களைக் கிருபை கூர்ந் தெளியேற் கியம்பவேண்டும்!

குரு:- ஹரன் என்பது: நாசஞ் செய்கிறவர்; அதாவது பாவங்களை நசிக்கிறவர், எப்பொருட்கு மிறைவரென்றாம். ஆலமர்கடவுள் என்பது : பிரம புத்திரர்களான ஜனகர் ஜனந்தனர் ஜனாதனர் ஜனற்குமாரர் என்னு முனிவர்களுக்காகக் கல்லாலின் கீழ் தக்ஷிணாமூர்த்தமா யெழுந்தருளி மறைகளுக் கெட்டாததாய் எப்பொருளுமாய் அப்பொருள் களல்லாதது மாயிருந்த வுண்மையை அது நிர்ச்சலனமா யிருந்த தொப்பத் தாமு மசைவற

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

விருந்து வாக்கினாற் சொல்லாமல் சின்முத்திரை பிடித்துக் காட்டிக் குறிப்பா லறி வித்தவரென்றாம். ஈசானன் என்பது: ஸ்படிக நிறத்தோடு மேனோக்கு வீக்ஷண்யத்துடன் உள்ள ஈசானமும், பொன்னிறத்தோடு கிழக்கு நோக்காயுள்ள தத்புருஷமும், நீல நிறத்தோடு தெற்கு நோக்காயுள்ள அகோரமும், பொன்னிறத்தோடு வடக்கு நோக்காயுள்ள வாமமும், வெண்ணிறத்தோடு மேற்கு நோக்காயுள்ள சத்தியோஜாதமு மென்ற ஐந்து வதனங்களும் வெளிப்படையாயுள்ள சிவமூர்த்தத்தில், அனைத்தும் ஆளுகிற ஈசான முகத்தோர் என்றாம். எண்டோளன் என்பது: ஒரு மூர்த்தத்தில் எட்டுப் புஜங்களுளரெனவும், ஐமுகன் என்பது: மேற்றுலக்கிய ஐந்து வக்திரங்க ளுளரெனவும், கரியன் என்பது; அனைத்திற்குஞ் சாக்ஷியா யிருக்கிறவரெனவும் பொருள்படும். சங்கரன் என்பது: சங்காரகர்த்தாவென்றும், குலமிலாரென்றும், முடிந்த விஷ்ணுக்களின் பாஞ்சசன்னியமாகிய சங்குகளைத் தரித்தவ ரென்றும் கூறுவர் கூற்றாயும் வரும். இப்பொருள்களன்றி, சம் -- சுகம், கரன் -- செய்கிறவர், அதாவது சுகத்தைச் செய்கிறவர் எனச் சமஸ்கிருத தாற்பரியப்படி பொருள் கொள்வதே தக்கது. ஜடைமுடியோன் என்பது: தமது திரோபவமாயையால் ஜீவர்களுடைய தபசுகள் கெடா தியங்கற்கென்று தபக்கோல முடையாரென்றும், சம்பு என்பது : ஆத்மாக்களின் தரந்தெரிந்து உரிய சுகங் கொடுக்கிறவர், உயிர்த்தொகைகட்கெல்லாம் பிதாவென்றுமாம். தாணு என்பது: விண்டு விரிஞ்சனெனும் இருவரும் மாயையின் வசப்பட்டுப் "பரத்துவ நிச்சயம்" தெரியாமல் நான் நான் என்று அகங்கரித்துப் பொருதுங்கால் இருவருடைய நடுவில் அடி முடி ரகிதமாய்த் தோன்ற வென்றும், அக்காலத் தவ்விருவரும் சிவலிங்கப் பிரதிஷ்டை செய்து பூஜிக்கும் புண்ணியத்தால் தங்கள் பதிகளை மீட்டும் பெற்றுக்கொள்ள வென்றும், அவர்கள் தரிசித்த அன்றிரவு மாசித்திங்கள் அமர பக்கத்துச் சதுர்த்தசியாகிய மஹா சிவராத்திரியில் சுயம்பிரகாச சொரூபமாகிய வன்னிமலையி லிங்கமாய் வெளிப்பட்டா ரெனவும், சஞ்சலமின்றி ஸ்திரமாயுள்ளவரெனவும் பொருளாம். நக்கன் என்பது நிருவாணமாகிய மோக்கமுடையாரெனவும், பையிரவ மூர்த்தமா

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

யானவரெனவும், பாண்டரங்கன் என்பது: பாண்டரங்கமெனுந் திருக்கூத் துடையாரெனவும், பிஞ்சகன் என்பது: பிரம்ம விஷ்ணுக்களுடைய தலைகளை யாபரணமாக வுடையார், சங்காரகர்த்தா வெனவும், பித்தன் என்பது: அக்கினி சொரூபர், ஞானலகிரியுள ஞானாநந்த ரெனவும் பொருள்படும். பூதநாதன் என்பது : தாருகாவனத் திருடிகளேவிய பூதங்களைத் தமக்குப் படைகளாக்கிக் கொண்ட கொடிய கணங்கட்கும் தமது சொந்தப் பூதகணங்களாகிய ஞான தத்துவங்கட்கும் நாதரெனவும், சர்வபூத பௌதிகங்கட்கும் நாதரெனவும் விசேடப் பொருள் பெறப்படும். பேயோடாடி என்பது: ஞானச் சுடலைப் பராகாசத்தின்கண்ணே வசிக்கும் மேற்படி ஞானதத்துவங்களாகிய பேயாங் கணங்களோ டாடிய ஆன்ம நாயகரெனவும், யோகி என்பது: ஆலமர் கடவுள் எனும் நாமார்த்தத்தில் வெளியான ஜனகாதிகணால்வரும் மஹாதேவனிடந் தெளிந்துகொண்ட வேதநிச்சயப்படி ஞானபாதத்தை யெய்த மனமடங்கா துழலுங்கால், உமையவளைப் பருப்பத மன்னனுக்குப் புத்திரியா யனுப்பிவிட்டுத் தனித்திருந்த பரமனார் அசரீரியா யுரைத்தவாறு கயிலைக்குத் தென்பாலுள்ள ஆலின் கீழிட மகன்று வெள்ளியங்கிரி யாலயத்துட் பரமசிவனைத் தரிசித்த நிமிடம் அவர்கட்கு இரண்டா முறையாகச் சரியை கிரியை யோகம் என்ற விவரஞ் சொல்லி அனிர்வசனமான ஞான நிச்சயத்தைக் குறிப்பாற் காட்டவென்று தமது திருக்கரத்தைச் சின்மய முத்திரை பிடித்தவாறு மனமடக்கும் வகையை யோக நிஷ்டை கூடித் தெரிவித்திருந்தார்; அது பரமசிவனுக்கு அற்பகாலமாயிருந்தாலும் பிரம விஷ்ணுவாதிதேவர்கட்கனேக யுகங்களாய்க் காணப்பட்டு சிருஷ்டிகண் மல்காமல் புணர்ப்பின்றி உயிர்களிடத்தே மோனத் தன்மையு முண்டாயிற்று. இதனால், உயிர்க் குயிராய் ரூபாரூபியா யுள்ள பரமபதியை யோகியென்றியம்பத் தகுமெனவும் பொருளாம். ஆயினும், முடிவிற் *சூனியோபாதானமாய் நிற்கத் தக்கவரென்றே விசேடப் பொருள்படும். வாமதேவன் என்பது; ஈசனது ஐமுகங்களில் அழகிய வாமமென்ப தொன்றை யுள ரெனவும், நம்பன் என்பது: தலைமையிற் சிறந்தோ ரெனவும், நீலலோகிதன் என்பது; விஷத்தையும் சர்ப்பத்தையும்

*சூனியோபாதனம் = சூனியசிந்தனை.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

உடையாரெனவும், வீமதேவன் என்பது: சமஸ்த வுயிர்கட்கும் பயங்கரமாயுள்ளவர், அதாவது எல்லாந் தமக்குக் கீழ்ப்படிந்து நடக்க வுள்ளவரெனவும் அருத்தமாகும்.

(35)

சிஷி:- இவ்வணம் பரமசிவன் மகத்துவமுள தேவனாயிருக்க, எதை யுத்தேசித்து எந்தத் தேவனை நோக்கிக் காவிகாஷாய தண்டுகமண்டல தாரியாய்ச் சன்னியசித்துக் கொண்டார்?

குரு:- இதற்கும் மேல்விளக்கிய விடையில் ஜடை முடியோனென்னும் நாமார்த்தத்தின் பொருளே யல்லாது வேறில்லை. மேலும், அவ்வேடத்திற்குரிய வானப்பிரஸ்தாச் சிரமத்திற்கு நாயகர் அவராதலால், பரிசுத்த *பஞ்சமுத்திரை யென்னும் ஜடை, காஷாயம், உருத்திராக்கம், தண்டம், கமண்டலமும் விளங்க விருந்து யோகம் புரிவார்கட் கவரையன்றிப் போக்கிடம் வேறின் றெனவும் அதிஷ்டித்த முறையது வென்பதாம்.

(36)

சிஷி :- பராபரனாகிய சிவன் பத்திரைகேள்வனை நோக்கி " தக்ஷன் நமக்கு அவிப்பாகங் கொடுப்பதாக வேண்டிக் கொள்வனேல், மகத்தை நீ சட்டியாதே; இலதேல், நாஸ்திசெய்து இவணெய்துக" என்றாக்ஞாபித்ததாய்க் காண்கின்றது. அவ்விதம் அவிப்பாகத்தை யாசிப்பதும் அது கிடைத்தாற் புசித்துத் திருப்திப்பட வெண்ணுவதும் கர்த்தத்துவ மாமோ?

குரு :- அதன் பண்பு கேள். மந்திர பூர்வமாகச் செய்யும் மகத்தின் பிரயோஜனமாகிய புண்ணியத்தை அவிப்பாகமாகச் சேர்க்கப்படலாயிற்று. அப்புண்ணியவஸ்துவை எந்தத் தேவனுக்காகவாவதீந்து அந்தப் பதவியை யடையக் கருதுகிறவன் வேண்டற்படி அத்தேவ னங்கிகரித் துதவ வேண்டுமென்று வேத நியாயமுள்ளபடிக்குப் பிரத்தியக்ஷம் ,அல்ல தப்பிரத்தியக்ஷமாக அவியை யேற்றுக் கொள்ளப்படும். அதைப் புசிப்பதென்பது; சூட்சுமம் அல்லது ஸ்தூலமாக விருந்துண்டு எச்ய கர்த்தாவை

* விபூதி, உருத்திராக்கம், காஷாயம், இலிங்கம், பஞ்சாக்ஷரம் எனுமைந்தும் பஞ்ச முத்திரை யென்றுஞ் சின்னூற்செப்பும்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஆசீர்வதித் தாவரணிப்பதாகும். இது பொதுவிதியே. பரமனை நோக்கி 10000 ஆண்டு தவமிழைத்துப் பெரிய செல்வத்தைப் பெற்ற தக்ஷப்பிரஜாபதியும் அவன் றாதையாகிய சதுர்முகனும் தங்க ணோக்கப்படி எளிவந்து ஈசனிணங்கவிலையென அகந்தை கொண்டு ஈசனுக்குப் பிரதியீச னியமிக்க வெனவும் யதார்த்த வீசனை நிஷேதஞ்செய்து விஷ்ணுவாதி தேவர்கட்கு அவிப்பாகங் கொடுப்பதாகவுந் தீர்மானித்து இறைவனாகிய ஈசனும் அவர் கணங்களும் சிவ கடாக்ஷாதிக்க முனிபுங்கவர்களுந் தவிர மற்றைய தேவர் எண்டிசைப் பாலர் முனிவர் முதலிய யாவரு மொருங்குகூடித் தேவாதி தேவனுக்கு விரோதமான மாரண ஹோமம் செய்ததை நாசஞ்செய்யவென்று சிவம் திருவுளம் பற்றுகையில் அவர் சர்வ ஜீவான்மாக்களிடத்துந் தயையுள்ள தயாளு வாகையால் மிகவு மிரங்கி "நமது உருவாகிய நந்திதேவன் பிரமயாகத்தில் முன்னஞ் சென்று கேட்டவாறு விரோதமின்றி அவிப்பாகத்தை யளிப்பனேல், மகத்தை நீ சட்டியாதே" எனவுங் கட்டளையிட்ட காரியமா மென்றும், -- எக்கியகர்த்தா பிரார்த்தனையான ஆரம்ப கிரியையே தீப மேற்றும் பண்டமென்றும், எக்கிய பிரேரகமே திரியென்றும், எக்கிய அவிப்பாகமே எண்ணெயென்றும், அவிப்பாகத்திற்குக் குறிப்பிட்ட தேவனே தீபத்திற்கு உபாதானச் சுடரென்றும், அவிப்பாக மேற்குஞ் சொரூப தேவனே ஏற்றிய தீபமென்றும், அவிப்பாக புண்ணிய பலனே தீபத்திற் கன்றித் தீபமேற்றியோனுக்குப் பிரயோஜனமான வெளிச்சமென்றும் உதாகரணப் பொருள் கணித்துணர்க! பரமசிவத்தின் அனுக்கிரக கயிங்கரியங்களை நடாத்தி வருகிறவர் நந்திதேவராவார்.

(37)

சிஷ் :- அதிர்த்தபடி தக்கனுடைய யாகத்தைக் கெடுத்துத் தேவர்களையும் அதஞ்செய்யும்படி கட்டளையிட்ட சுவாமியான வருடைய உத்தரவுக்கு விரோதமாய் வீரபத்திரரை நோக்கி "விஷ்ணுபேரில் கோபிக்கவேண்டாம் கோபிக்கவேண்டாம்" என்று சொன்னதாய்க் கந்தபுராணத்திற் காணுமாறு தடுத்த தெய்வம் யாது?

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

குரு :- சிறுவிதி மக மழிக்கவென்று உமாதேவியின் கோபாக்கினியிற் றோன்றிய பத்திரகாளியுடனும் பரமனுடைய பாலநேத்திரத்துளி தோன்றி ஆயிரம்சிரமும் இரண்டாயிரங் கரமும் பிரகாசிக்க விபூதி முதலிய ருத்ர சாதனங்களும் சூலமுதலிய அஸ்திரதேவ சின்னங்களுந் தரித்துள்ள வீரபத்திரனாகிய சிவன், தக்ஷயக்ய நாசஞ்செய்யுங்கால் அவரொடு பன்முறை போர்தொடுத்துவந்த ஹரியானவர்: அந்தச் சிவனின் ஓங்காரிப்பால் அசைவின்றி ஸ்தம்பிக்கப்பட்டும் அளவிலா ரௌத்ராகார சீற்றத்தைக் கண்டஞ்சியும் அங்ஙனம் மிக வருந்தி பரமசிவனை நினைக்கையில் பிதாவானவருடைய கிருபாகடாக்ஷத்தாலேயே ஆகாசத்தில் அவ்வித வாக்குண்டாயிற்றென அப்புராணமே புகலும்.

(38)

சிஷ்:- சிவன் நாணி பிகுந்த சிந்துவாரத்தைத் தாத்திரியிலூன்றிக்கொண்டு மேனுனியிற் றலைசாய்த்துத் துஞ்சுங்கால் அந்நாணியைச் சிதலரித்துச் சிலை விசுக்கென நிமிர்ந்த நிமிடம் சிவனுடைய சென்னி பசியுண்டதை விண்டு கண்டு ஒட்டி யுயிரளித்தாரெனவும், ஓதிம முயர்த்தோனுக்கு ஒருகோடி சிவன் உயிர் மாண்ட காலம் அரை நிமிடமாகுமெனவும், சிவன்சத்தியின் வயிற்றில் விஷ்ணுவின் வேர்வையில் பிரமாவின் றொடையில் தாமதகுணத்திற் றோன்றினார் எனவும், சிவன் ஜாதியில் வைசியனாம் எனவும், ஓர் காலத்தில் விண்டுவுடன் சிவன் யுத்தஞ்செய்து அபஜய மடைந்து உயிர்வெளியாகக்கூடிய தருணத்தில் அவருக்குப் பிதாவாகிய பிரமா வந்து விண்டுவிடம் மிகமுறையிட்டுக் கெஞ்சிக் கேட்டுக் கொண்டதன்மேல் சிவன் உயிர்பெற்றார் எனவும், ஓர் சமயம் மார்க்கண்டேயர் சிவனைப் பூஜிக்கக் கைலை முதலிய பதிகளிற்றேடியுங் காணாதலைந்து பின்பு மதுசூதனன் அனுமதியால் அவருடைய வாய்வழி புகுந்து உதரத்தெய்தி விண்டு விழுங்குண்ட சிவனை ஆண்டு கண்டு பூஜித்தாரெனவும், சிவன் இலிங்கமறுத்திழந்து அதைப் பெற்றுக்கொள்ளத் தபஞ்செய்தார் எனவும், நீ பிரம மல்ல உன்னை

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

யடைந்தவர்கள் மோக்ஷம் பெறார்கள் விஷ்ணுவே பிரமம் என உரைத்துப் பிருகு ரிஷி சிவனைச் சபித்தார் எனவும் நூல்கள் முறையிடுவதை யோசித்தாற் சிவன் தன்மை யென்னவாம்?

குரு:- சிலைநுனியிற் சிரம் பறிபோனவன் உருத்திர குழாங்களிலொருவ னென்றும், மூலப் பிரமாவுக்குக் கோடி யுருத்திர கணங்களி னாயுளொழிந்தால் அரை நிமிஷ மாகுமென்க் கூறுவதுளவென்றும், பக்தர்கணிமித்தம் சிவன் வைசியனாய் வருவதுண்டு, அந்த நியாய மவருக்குச் செல்லுமா றுளவென்றும், சிவகணங்களிலொருவர் ஹரியுட னெதிர்த்து அபஜயப்பட்டார் அவரைக் கற்பித்தவர் பிரமாவே யென்றும், சிவ கடாக்ஷத்தாற் சர்வ புவன சராசரங்களையுஞ் சிருஷ்டித்த திசைமுகனானவர் விஷ்ணுவி னுந்தியிலடங்குங் கற்பாந்த காலத்தில் உயிர்த் தொகைகளின் ஸ்தூல பிரவர்த்தியு மொடுங்கிச் சூட்சுமமாய் நின்ற ஆத்மகோடிக ளனைத்தும் கற்பித்தவனோடு அவ்வுந்தியிற் றங்கிச் செயலற நிற்குந் தருணம் சிவனுடைய சகள ஸ்தூலமுங் காணாது நிஷ்கள சகள சூட்சுமமாய் நின்றதைச் சதாபூஜக மார்க்கண்டேயர் திரிசியத்திற் றரிசிக்க முடியாதலைவதைத் தானேவேலையிற் றுயில்வோ னோர்ந்து இவ்வழிபுக்குக் காணெனப் பணித்தனரென்றும், அரிய சங்கார கிருத்தியமாகிய மாயையி னொடுக்கம் சிவன்செயலாதலாற் சிவனைச் சிந்தித் துந்தியி லடக்கினாரென்றும், அன்னணஞ் சிந்தித்ததையே விஷ்ணு சிவனை விழுங்கினாரென்றும், பிறவுஞ் சிவனெனும் நாமமுள கணங்களையே அவ்வாறு விழுங்கினா ரென்றும், இலிங்கமறுப் புண்டவரும் பிருகுரிஷியாற் சபிக்கப்பட்டவரும் உருத்திர சங்கத்தா ரென்றுங் காண்பஃதோடு சிவ உருத்திர கணங்களாதியர்க்கும் சிவனெனும் பெயர் வருமாறு முன்னரேயே பன்னலுற்றேம். சிவன் சத்தியின் வயிற்றிற் பிறந்தாரென்பது சிவதத்துவமாகிய நாதம் பிந்து சாதாக்கியம் மயேஸ்வரம் சுத்தவித்தை எனுமைந்தில் பிந்து தத்துவமாகிய சத்திதத்துவத்தி னின்று சதாசிவாதிகள் தோற்று முறைமையாகும். விஷ்ணுவின் வேர்வையில் பிரமாவின் றொடையில் சிவன் பிறந்தாரென்பது 11 கோடி யுருத்திரர்களையுஞ் சிருஷ்டித்த 11 உருத்திரர்களும்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

சிவானுக்கிரகப்படி பிரமதேவரது நெற்றியிலிருந்து தோற்றிய முறைமை போலவும் பிரமன் விழித்துளிகளிற் றோற்றிய பேய்க்கூட்டங்களைப் போலவும் பல உருத்திரர்கள் தோன்றியதாகும். சிவன் தாமசகுணத்தரென்பது: உயிர்த்தொகை கட்கு விதிப்படி கண்டனை தண்டனை கொடாநிற்கும் உருத்திர தோற்றமாகிய (காலாக்கினி ருத்திரன்) கால மூர்த்தியாகும். தவிர முக்குணங்களுஞ் செயற்கையேயன்றி இயற்கையன்று. ஆதலால் குணரகித ஸ்வபாவனே சிவன். பிராமாணியம் :-

ஸ்ரீ மாணிக்கவாசகர் திருவாசகம் குயிற்பத்து

"கீதமினியகுயிலே கேட்டியே லெங்கள்பெருமான்
பாதமிரண்டும் வினவிற்பாதாள மேழினுக்கப்பாற்
சோதிமணிமுடி சொல்லிற்சொல் லிறந்துநின்ற தொன்மை
யாதிகுணமொன்று மில்லானந்தமி லான்வரக்கூவாய்."

இந்தப்படியே கந்தபுராணம் ததீசியுத்தரப் படலத்திலும் வெளியாம். (செயற்கை - மாயையின் கூட்டுறவு.)

(39)

சிஷி :- சிவன் அவ்விதகுண ரல்லவெனில் க்ஷீராப்தியி னமிர்தத்தையும் அதிற் பிறந்த விருத்திகளையும் கேசவன் தேவர்கட்குப் பங்கிட்டுத் தள்ளுண்ட விஷத்தையும் எருதையும் தாமதகுண முள்ள சிவனுக்குக் கொடுத்தார். அஞ்ஞான்று விஷத்தை விஷமென்றறியாமல் வாங்கியுண்டார் என்றும், "ராஜத சாத்துவிக குணத்தாற் பிரம்மாவையும் ராஜத தாமதகுணத்தா லென்னையும் விஷ்ணுவே பிறப்பித்தார்" எனச் சிவனே அகஸ்தியருடன் சொன்னாரென்றும் சின்னூற்களில் வெளியாவ தென்னை?

குரு :- சிவபிரானுக்குரிய சர்வ வல்லமையில் பிரம விஷ்ணுக்களுக்கரிய துஷ்டகண்டன மாதியும் ஒரு செயலா யிருக்கிறது. அச்செயல் தாமதகுணம் பற்றியாமென வுள்கி அவரைத் தாமதகுணத்தா ரெனப் பிதற்றியதாகும். இங்ஙனம் அப்படி யுள்கற்கிடமின்றென மெய்ப்பிக்கின்றேம். நீ கேட்டி!

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

சாதுவாகிய வொருவன் யாதாமோர் காரணத்தாற் றனக்குண்டான கோபத்தைக் கோபிப்பதும், ஒருவன் ஆத்மலாபத்தை முன்னிட்டு அசன முண்ணாது நோன்பிருப்பதும், ஞானியானவன் ஜகத்திச்சையை வெறுத்துப் பரத்திச்சையை விரும்புவதும் அணுத்துணையேனும் அகிர்த்தியங்களாகிய கோபத்தையும் வயிற்றுத் துரோகத்தையும் இச்சையையும் முறையே பொருந்தா திருப்பதுபோல பரமபதி நஞ்சுண்டது துஷ்டகண்டனமே யொழிய தாமதகுண சுபாவமல்ல. விஷமென் றறியா துண்டாரென்பது; தக்கன் யாகசாலைக்கண் டோன்றிய ததீசிமுனிவரானவர் அங்குற்ற சிவதூஷணை கண்டு வெகுண்டு "சிவனை நீவிரிகழ்ந்து அவன் கதிசேராமலுழலக் கடவீர்" என்றவிதமாய் அன்றேயிட்ட சாபத்துக் குள்ளாகி மாறுபட்ட (வைஷ்ணவப் பிராமணர்) தக்கன் மரபிலுளார் துணிபேயாம். தள்ளுண்ட எருதென்பது: தருமதேவதையை ஊர்தியாகக் கொள்ளுந் தன்மை அவருக்கேயல்லால் ஏனைய தேவர்க்கில்லையென்பதுந் துணிபுதான். நீ பகர்ந்த பிரகாரம் அகஸ்தியரோ டுரைத்தவர் உருத்திரர்களி லொருவராவார்.

(40)

சிஷி :- இன்னொரு ஆசங்கை. பிரசேதனனென்னு மரசன் செய்த தவத்திற்காகச் சிவன் தரிசனமாகிய போது "எவர் பரப்பிரமம், எவராலெமக்கு மோக்ஷமுண்டு, அவரை யனுக்கிரகஞ் செய்யவேண்டும்," என்று அவ்வரசன் கேட்க. அதற்குச் சிவன் "விஷ்ணுவே பரத்துவம், விஷ்ணுவே மோக்ஷங் கொடுக்கிறவர், நாமும் விஷ்ணுவையே ஆராதிக்கிறோம், நீயும் விஷ்ணுவையே ஆராதித்து மோக்ஷம் பெறுவாய்" என வுரைத்தா ரெனவும்; "எவர்கள் சிவ விரதத்தைத் தரித்திருக்கிறார்களோ எவர்கள் அவர்களை யனுசரிக்கிறார்களோ அவர்கள் நல்லசாஸ்திரங்களுக்கு விரோதிகளான பாஷண்டி களாகக்கடவர்கள், மோக்ஷத்தை விரும்புகிறவர் பொறாமையற்றவராய் சாந்தமுள்ள விஷ்ணுவி னம்சங்களை யடைகிறார்." எனவும் பாகவதத்திற் பகர்ந்த தெற்று?

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

குரு :- பிரசேதனனுக்குத்தரிசனமானவன் விஷ்ணுபாலுதித் தவ்வழிநின்ற கீழ்ப்பட்ட வுருத்திரனாவான். இவ்வித வுருத்திரர் பல ரிருந்தன ரென்பதைத் தக்ஷயக்ஞ ஹதத்தில் ஈசானன் முதலிய பலர் பங்கப்பட்டாரெனுஞ் சரிதங்களால் ஸ்காந்தத்தி னன்குணரலாம். வேத வேதாகம புராணங்களில் பரமசிவனைப் புகழ்வதன்றி பிரமவிஷ்ணுவாதியரையும் புகழ்வது முகமனாகும். பிரகிருதி அபின்ன நிமித்தோபாதானமாய் விளங்கிய விஷ்ணுவைக் கிரியாபாதத்திற் கைவிட்டு அரிய சிவவேடத்தைத் தரித்தவர்களானாலும் அனுசரிக்கிறவர்களானாலும் அவர்கள் நற்சாஸ்திரங்களை விரோதித்த பதிதர்க ளாவார்களென்றும், அத்வைத மோக்ஷத்தை நாடுகிறவர்கள் விகிர்தாகார பூதகணாதிபதிகளை வழிபடாது திரிமூர்த்திகளில் பிரம ருத்திரர்களை வழிபடுவதனை யத் திருமாலையும் வழிபட்டு அவரம்சங்களைப் பொருந்தி அல்லது அவ்வுபாசனாமூர்த்தி சகாயங்கொடு பரமமுக்தியையெய்துகிறவர்கள் பொறாமையற்ற மகான்களாவார்களென்றும் பாகவதத்திற் பகர்ந்த தொழிய பௌராணிகங்கடந்து சகுணபாவனை யேதுமின்றி நின்ற ஈஸ்வரனாகிய மஹாகைலைக்கரசை விட்டு விடச்சொல்லியதல்ல. அப்படிச் சொல்லில், அது தக்ஷனிச்சயமாகிய அக்ஞான மதமாமென்க. வேதத்திலுள்ள சரபோபநிஷத்தில் :-

"யோவாம பாதார்ச்சித விஷ்ணுநேத்ர யதஸ்மை ததௌசக்ர மதீவ ஹ்ரஷ்ட ஸ்ததஸ்மை ருத்ராய நமோஸ்து"

என்று சொல்லப்பட்ட சுலோகத்திற் கருத்தம் : விஷ்ணுவின் கண்ணாற் பூஜிக்கப்பட்ட இடதுபாத முள்ளவரும், அதனால் மஹா விஷ்ணுவுக்கு மேன்மையுள்ள சக்கராயுதத்தைப் பிரசாதித்தவருமான ருத்ரனின் பொருட்டு நமஸ்காரம் என்றும் பரிஷ்காரமாய் வெளியாவதால்; மேற்சொன்ன தாற்பரியம் மிக வுறுதியாம்.

(41)

சிஷி :- சிவனே கடவுளாயின் சிவனுக்கு நாமங்கள் வேறாகவும், கடவுளுக்கு நாமங்கள் வேறாகவும் நிகண்டாதிநூல்களில் இரண்டு பிரிவாய் நிகழ்த்தி யிருப்பானேன்?

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

குரு:- அஃது சமயநியாயம் பற்றியே. அலாமல், நிகண்டியற்றினவர் புறச்சமயத்துள சமணமுனியன்றோ. நிற்க; சிவபெருமானுக்கு அனந்தன், அதிகன், அறவாழியந்தணன், ஞானமூர்த்தி, அஷ்டமூர்த்திதரன், பசுபதி, தேவதேவன், வேதாந்தன், நாதாந்தன், கருத்தன், ஈசன், மஹேசன், நாசமிலி, அகண்டன், பிரமாண்டநாயகன் என்பனவாதிய நாமங்களு முண்டென நூல்கள் கதறுகின்றமையால் சிவனே கடவுளென் றேன் உணரொணா? (சமயம் - சமயமெனும்மதம்)

(42)

சிஷி:- அற்றேல், சிவனுக்குப் பவன் என ஓர் நாம முண்டென்றறிகிறேன். அதுபற்றி யிங்ஙனம் பொருள் காணில், பவம் என்பது பாவம், பிறப்பு, அழிவு என வரும். அதனாற் சிவன் பாவமுடையார், பிறப்புடையார், அல்ல தழிவுடையார் என்பதற் கையமென்னை?

குரு:- இதுதான் *அதிரேகார்த்தம். ஓ! புத்திமானே! பவமென்னு மொழிக்கு நீ பகர்ந்த பொருளன்றி நிலைபரமென்றும்; சுத்தம் சுகமென்றும், மேலானதென்றும் பொருளிருப்பதைச் செவ்வனே நோக்க நின் விழி பார்வையிழந்ததோ? வேணுமென்று விட்டு விட்டதோ? அறியேம் கேள்! கடவுளுக்குங் குருடனுக்கும் "அதரிசனன்" என்று ஓரிய லுள. அதிற் கடவுளைக் குறிக்கும்போது கட்புலனுக் கெட்டாதவனென்றும், குருடனைக் குறிக்கும்போது பார்வை யிழந்தவனென்றும் அர்த்தஞ் செய்து கொள்ளவேண்டியது கல்விமான்களின் கடமையா யிருக்க; நீ பிதற்றியவாறு உவாலம்பனார்த்தம் புரித லொழுங்கன்று. இன்னமும் பவமென்பது சமஸ்கிருத அர்த்தப்படி நீ சொன்ன பிரகாரம் பிறப்பென்றும்: பிரபஞ்ச மென்றும் பொருளாம் அதனால் எல்லாவற்றையும் பிறப்பிக்கிறவர், பிரபஞ்ச கர்த்தாவென்று விசேடப் பொருள்படும். (உவாலம்பனம்- தூஷணை.)

* அதிரேகமென்பது = ஆச்சரியம்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

(43)

சிஷி :- ஈ திவ்வணமாயினும், சிவனுக்கு வேத கௌலேயகன் என்று ஓராக்குவயம் நூல்களில் வெளிப்படுகின்றது அந்த வாக்கியத்திற்கு வேதகுலத்திற் பிறந்தவன் என்றொரே யர்த்தமிருக்கிறது. இதினாற் சிவன் பிறப்புளார் குலமுளாரென்றும் வெளியாகின்றனவே ; அஃதென்னை?

குரு:- அப்படியன்று. கௌலேயகமென்பது நாய். அதனால் வேதத்தை நாயாக வுடையாரென்றாகும். அஃது இவ்வியாசத்தின் 11-ஆவது வினாவுத்தரத்தில் விளக்கிய பைரவருக் குரியதொன்றாம். பிறவும், அர்ச்சுனன் தவத்திற் கெழுந்தகாலை வேதங்களை நாயாகவுடையாரென்றுமாம்.

(44)

சிஷி:- கடவுள், சிவனெனப்படுவராயின் மற்றைய கருத்தாக்களும் அவர் பூண்ட வேடத்தையே பூணாது விவித வேடதாரிகளாயு மிருத்த லென்னை?

குரு:- தொழிலிற்கேற்ற விதமான வேடங்களையும் விடயங்களையும் பிரபஞ்ச சகிதத்தில் அவரவ ருடைத்தாயினர். ஆயினும், சிவனைப் பூஜிக்குங்காலத்து உருத்திர சாதனங்களோடு நிகழுவார்.

(45)

சிஷி:- மனுடரானவர்கள் தொழிலிற்குத் தக்க வேடதாரிகளாயிருப்பதில் கர சிரங்க ளியல்புக்கு விரோதமா யேற்பட வீக்ஷணித்ததில்லை. அது மானத் தொழினிமித்தந் தேவர்களும் பல வேடதாரிகளே யாயினும் பலசிரம் பலகரங்களாயும் உடல் விகிர்த முளதாயும் இருக்கிறதாய் வெளியாகின்றன. அதுவும் சிவன் செயலோ?

குரு:- மானிட ஜென்மத்திற்கும் மேலான ஜென்மமாயய்யுந் தேவவகுப்பில் அவரவர்கட்குத் தக்க தேகத்தைத் தேவன் கொடுத்திருக்கிறார்; மேலும், அவர்களற்புதப் பிரவேச சரீரிகளாகவும் தேவன் சமீபத்து வாழ்கிறவர்களாகவு மிருத்தலினால் அவர்களை மனிதர்களேய்ப்ப வொரேவடிவாய் நினைக்கப்படா.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata

(46)

சிஷி:- அவர்களை நாம் பார்க்கச் சம்பவித்தால் தேவர்களென்று நிச்சயிக்க ஏதாவ தடையாள முண்டா?

குரு:- அனேக முண்டு. அவற்றுட் பொதுவாய்த் தேவர்களெவ்வருக்கும் உள்ள திமை கொட்டாமையே யாம்.

(47)

சிஷி:- அவர்கட் கூனுறக்க முண்டா?

குரு:- கேள்! பசிப்பிணியும் விழித்துயிலும் பூச்சியம். ஆனால், யோக நித்திரையையும் அபேட்சித்ததைப் புசித் தனுபவிக்கும் சக்தியையும் பிரபஞ்ச சகிதத்தி லுடையவர்களா யிருப்பார்கள்.

(48)

சிஷி:- அவ்வித பேறு வாய்ந்த வவ்வமரர்கள் இறந்து பிறந்துழலப் பெற்ற மூலமென்னை?

குரு:- நான்முகன் வனைந்த க்ஷத்ரயாகத்தில் சிறுவிதியானவன் சிவதூஷணை செய்ததை மறாமற் சம்மதித்திருந்த விஷ்ணுவாதிதேவர்களை ஸ்ரீதிருநந்தி தேவர் நோக்கி "நீவீர் ஒரு பகலில் இறந்து பிறந்துழல்வதுமன்றி சூரனென்னும் அசுரனால் வாதைப்பட்டு அளவற்ற யுகம் இன்னலுக் காளாவீர்கள்" எனவுஞ்சபிக்கலாயிற்று! அதுவே பிரதமமூலம். பிரமாணம்:

ஸ்ரீ கந்தபுராணம் : பிரமயாகப்படலம்.

"ஈரமில் புன்மனத் திமுதை மற்றுனைச்
சார்வுறு கடவுளர் தாமு மோர்பக
லாருயிர் மாண்டெழீஇ யளப்பி லாவுகஞ்
சூரெனு மவுணனாற் றுயரின் மூழ்கவே."

(49)

சிஷி:- சரி, நிகழ்த்திய பரமசிவனே தொழிற்படு கர்த்தாக்களாகவும், சர்வ சாக்ஷியாகவும் விளங்குகிறாரென் பதற்குப் பூர்வ லிகிகம் உண்டா?

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

குரு:- ஓம்

ஸ்ரீ திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார் தேவாரம்

திருவெழுகூற்றிருக்கையில்,

"ஒருரு வாயினை மானாங் காரத்
தீரியல் பாயொரு விண்முதல் பூதல
மொன்றிய விருசுட ரும்பர்கள் பிறவும்
படைத்தளித் தழிப்பமும் மூர்த்திக ளாயினை
யிருவரோ டொருவ னாகி நின்றனை"

வேதத்திலுள்ள கைவல்யஉபநிஷத்தின்படி தியானஞ் செய்யப்படுவதில் :-

"உமாஸஹாயம் பரமேஸ்வரம் ப்ரபும் த்ரிலோசனம்
நீலகண்டம் ப்ரஸாந்தம் தியாத்வா முனீர்கச்சதி
பூதயோனி ஸமஸ்த சாக்ஷிம் தமஸ:ப் பரஸ்தாத்."

என்றுங் காண்பதோடு, வேத வேதாகம புராணாதி கலைகள் மிக்கன விளக்கவுங் காண்கலாம்.

(50)

சிஷி:- நன்று. பாரதத்திற் பகர்ந்தபடி தீக்கடவுள் காண்டவவன மெரிக்கும்போது கிருஷ்ணார்ச்சுனாளோ டெதிர்த்த இந்திரன் முதலிய தேவர்கட்குச் சகாயமாய் வந்த சிவனானவர்: அக்கிருஷ்ணார்ச்சுனாளால் தோல்வியடைந்தது எதனால்?

குரு:- அப்படிக்கானவர், திக்குபாலகரி லொருவரான ஈசானனாம். ஈதனைய விவித காரணங்களாற் குறைவாய் வெளியாஞ் சிவனெனப் படுவா ரெல்லாரும் கீழ்ப்பட்ட வுருத்திராதி தேவர்களென் றெண்ணக்கடவாய்!

(51)

சிஷி:- ஆயின், சிவனுடைய மூர்த்தந்தான் எப்படிப்பட்ட தாயிருக்கும்?

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

குரு:- இது குறித்து 1ஆவது வியாசம் 25-ஆவது வினாவுத்தரத்தினும் விளக்கினேம். இன்னமும்: நிலம் நீர் நெருப்பு காற்று ஆகாயம் பருதி மதி ஆன்மா என அஷ்டமூர்த்தமாயும், அஃது ஸ்தூலமாயும், சூட்சுமமாயும், காரணமாயும் மஹாகாரணமாயும், பிறவும் இவையமைந்த பற்பல வடிவங்களாயும், சிலர் கண்டதாயும், காணவரிதாயு மிருக்கின்றனவாம்.

(52)

சிஷி:- மேலேயருளிய நத்திதேவர் என்கிறவர் யாவர்?

குரு:- சிவாதார முனிவருடைய தவத்தினால் அவருக்குப் புத்திரனாய்த் தோன்றி பரமசிவனைக் குறித்துத் திருவையாற்றிற் றவமிழைத்து நெற்றிக் கண் மான் மழு சதுர்ப்புஜம் காளகண்டம் முதலியவை விளங்கச் சிவசாருபமும் இரஜிதப் பிரம்பும் சுரிகையும் கைலைக்காவலும் கணங்களுக்குத் தலைமையும் பெற்றுக்கொண்டார். அன்னணம் பெற்றுக்கொண்ட இரண்டாஞ் சம்புவாகிய ஸ்ரீ நந்தியம் பெருமான்; கைலாய அந்தராளத்தின் யாமியவாயின் மண்டபத்திற் றென்முகமாய்க் கொலு வீற்றிருந்து சிவகட்டளைக் கெதிர்பார்த் திருப்பவராம். சிவதரிசனத்திற்கு முன்னம் அவர் தரிசனமாம். அவர் தரிசனம் சிறந்த யோகீஸ்வரர்கட்கு முபாதானமாகும். இவரே புராணங்களிலும் ஆகமங்களிலும் வேதங்களிலும் "பரமசிவமே பரத்துவம்" என்று முடிபு கூறியிருக்க "விஷ்ணுவே பரத்துவம்" என்று மாயையின் வயப்பட்டு அசத்தியம்பேசி நீட்டிய வியாசருடைய கரங்களைச் சபித்துத் துணித்த அபரசிவமாவார். பிறவும், வசுமணாவதாரஞ் செய்து உலகத்தில் வீரசைவத்தை நிலை நாட்டிய ஆசானு மிவரெனப்படும். மேனுவன்ற கைலைக் காவற் கொலுமண்டபத்தில் மேற்கே சிரசும் கிழக்கே பாதமும் வைத்து வலத்தோள் கீழாய்ப் படுத்து நெற்றிலோசனச் சுடரானது பத்துயோஜனை வரை பரவி யாவரு முண்ணுழையாது காவலிருக்கும் படிக்கும் உள்ளே புகப் பலம்பெற்ற சிவபதிகண் மட்டும் தடையிலாது அச்சுடருட் புகுந்து காற்புறமாயுள்ளே செல்லும்படிக்கும் சிவயோக நித்திரைகொள்வாரும், கோமுகம்போல நீண்ட வதனமுள்ளாரும் ஸ்ரீ சைலவடிவமாகிச் சிவனை வதியப் பெற்றாரும் இவரேயாவார். சிவாதார

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

புத்திரரென்பதைச் சிலாதார புத்திரரென்று அக்ஷரப் பிசகா யதிர்க்கப்பட்டிருப்பதுமுள.

(53)

சிஷி:- இவ்வித தேவ நிச்சயங்களை இந்தப் பரத கண்டமாகிய ஹிமாசலத்திற்குத் தென்பாகஞ் சிறிது தூரமுள்ள பூமிகளில் வசிப்பவர்களிற்றானே சில ரொப்புக்கொண் டிருக்கிறதாய்த் தெரிகிறது. மற்றுந் திசா திசைகளில் வசிப்பவர்களு மொப்புக் கொண்டிருப்பதுண்டோ?

குரு:- அண்டப் பித்திகை வரையி லுலவக்ககூடிய மான்மியதேவர் முனிவர் சித்தர்களும் ஆங்காங்கு அருமறை விதிப்படி தேவ நிச்சயம் புரிந்தே யிருக்கிறார்கள். அதிற்சிலபாகம் சரியை, சிலபாகம் கிரியை, சிலபாகம் யோகம், சிலபாகம் ஞானமாகவும்; சிலபாகம் சரியையாதி நான்கும் ஒழுங்காய்ச் சேர்ந்ததாகவும், சிலபாகம் அவற்றுண் மிகுதியுஞ் சிறிதுங் கலந்ததாகவும், சிலபாகம் நினைப்பின் வண்ணமாகவும் அனுசரித்துத் தேவாராதனை முதலியனசெய்து வருவதாகவுமிருப்பதில், மாயையின் விசித்திர காலகரணத்தால் மத்தியின் மத்தியின் நூதனமான புறச்சமயங்களேற்பட்டு வெவ்வேறு கொள்கைகளாய்ப் பரவிக்கொண் டிருக்கின்றன, ஆனால், பெரும்பாலும் தேவநிச்சயமட்டும் விட்டுப்போக வில்லையென்பதுள்ளதே. நிற்க; உலகெலாம் ஒளிப்பிரகாசமாய்க் காணுங்கிரணங்களானவை பானு வென்னும் ஒரு கிரகத்திலிருந்தே தோன்றல் போலும், உடம்பெங்கும் பரவுமுதிரமானது ஹிருதயக் காயென்கிற ஒரிடத்திலிருந்தே வெளிப்படல்போலும், அவ் வுதிரமாய் மல்கும் உயிருக்காதாரமாகிய ஆத்மா அறிவாகவியங்கினும் அது உள்ள மென்கிற ஒரிடத்திலிருந்தே நிகழ்வது போலும் தெய்வ நிச்சயம் உலகெங்கும் பரவியிருக்கினும் அதற்கு முக்கிய ஸ்தானமாகிய குமரித்தீவு என்னும் இந்தப்பூமியே பிரதானமாய் விளங்கும். காரணம்:- இதுமுன் அனந்த சிருஷ்டிகள் செல்லாகி இப்போது தோற்றமா யீக்ஷணிக்கத்தக்க பூதபௌதிகங்களை முதலிற் சிருஷ்டித்தது இந்தப் பூமியிலேயே யாம். சிருஷ்டித்த பூமியின் புடையே வேதவேதாகம கலைகளின் ஜேஷ்டமும் தேவாலயமும் தேவ வாசமும் துணிபா யிருக்கவேண்டுமென்ற நிகமத்தால்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

அவைகளீண்டு விசேடித்தன, இமயபருவதத்துக்குத் தக்ஷிணத்திலுள்ள செவ்வாயின்பூமியில் தொண்டை மண்டலத்திலுள்ள திருக்கழுக்குன்றில் வேதத்தைக் கடவுளுத்தாரப்படி தேவகாவலில் வைக்கப்பட்டு அங்கெழுந்தருளப்பெற்ற கடவுட்கு வேதகிரீஸ்வரர் என்று திருநாமம் விளங்கிற்று. அதனாலும், தேவாதிகளாற் பரிபூஜனஞ் செய்யப்படும் காசி முதலிய க்ஷேத்திரங்களும் மூர்த்திகளும் கங்கை முதலிய 64 கோடி புண்ணிய தீர்த்தங்களும் மகேந்திரம் பொதியம் முதலிய சப்தகுலாசலங்களும் இங்கே மான்மியமாயேற்பட்டுத் தவங்களதிதமும் பலிக்கத்தக்கதனாலும், இமயகிரிக்கு உத்தரத்திலுள்ள கிம்புருடவருடமாகிய சந்திரனதுபூமியில் 1008 சிவாலயங்களினு மொன்றாகிக் கர்த்தனெழுந்தருளிய வெள்ளியங்குன்ற முள்ள தனாலும் தேவதலமென உசித மாயிற்று. ஏனையவை தாழ்வாயிற்று. இந்தச் சிருஷ்டியி லருளிய உண்மைப் பிரமாணங்களுக்கு மாறுபட்ட ஜீவன்கள் அவ்விதங்கர்த்த னிலையறியாது மாறுபட்டுழல்வதையே ஒரு தண்டமா யனுபவிக்கவென்று பரத கண்டத்தில் இந்திரம் செருகம் தாமிரம் கெபத்தி நாகம் சவுமியம் காந்திருவம் வருணம் எனும் எட்டுத் தீவுகளாகிய தருமமற்ற அன்னிய பூமிக்கண் தள்ளப்பட்டார்கள். தள்ளவும் படுவார்கள். மீட்டுந் தெளிவுறுஜீவன் நவின்ற தேவபூமியாகிய இக்குமரித் தீவிலேயே தோன்றி வேதாகமப் பிரமாணங்களைக் கைக்கொண்டு கடைத்தேறும். கழுக்குன்றில் வேதத்தை ஏன் பந்தகமாய் வைக்கப்பட்டதென்னில், வெளிவந்த வேதப்பிரதிகள் நாளிலே வியாசராதி முனிவராற் பேதப்படுமாயினும் கர்த்தனருளிய வுண்மை உண்மையா யிருந்து இக்கலியுகம் 5,000-ன் மேல் வெளிப்பட் டோங்கவென்றேயாம். அதில், இப்போழ்து வழங்கப்படுகிறபடி சரியையாதி நான்கு பாதங்களெனல் தப்பு, கிரியையாதி நான்கு பாதங்க ளெனலே சரியென்றும்; ஆன பலவித பூர்வ நியாயங்கள் வெளிப்படத்தகும் -- அதுபோலவே பரமசிவ நிச்சயங்களெல்லாம் பரிஷ்காரமாய்க் காணத்தகு மென்றும், அவ்வேதம் -- புறச்சமயங்களைக் கண்டித்து உட்சமயத்தை நிலைநாட்டுங்கால் எடுக்கப்படு மென்றும், அதற்காக ஸ்ரீ சுப்பிரமணியப் பெருமானின் அமிசையில் பிரம கோத்திரத்தில் மனுவாக வுதித்தவொருவர் எழுந்தருளி வருவாரென்றும் திருநந்திதேவர் மார்கண்டேயருக் கருளும்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

உலவாக்கிழியெனுஞ் சாத்திரம் அருளும் வண்ணம் யாமு முரைத்தது மறிதி! நுவன்றபடி சரியையைக் கிரியையெனல், எத்தொழிலுக்குங் கிரியை துவக்கமாய்க் காணப்படலா லென்றும், கிரியையென்று முதலில் சொல்லவேண்டியதையே சரியையென்று மாறிச் சொன்னது மொழிப்பிசகேயல்லான் முறைப் பிசகில்லையென்று முய்த்துணர்க!

(54)

சிஷ் :- இன்னொன்று. சிலர், தேவன் ஒருவனேயுண்டு ஏனை தேவர் இலரென்றும், சிலர், தேவனுமுண்டு தேவதூதர்களு முண்டென்றும் பற்பல விதமாய்ப் பேசுவதென்னை?

குரு:- இரண்டற்ற அத்வைதக் கொள்கையிற் பிரதமமான வஸ்துவைத்தவிர ஏனைதேவர்க ளுண்டென்னவாவது, அவர்களை யுபாசிக்கவாவது கடமைப்படாததால், அவர்கள் - தேவனொருவனே யெனவும்; பின்னுஞ்சிலர் தேவனொருவ னுண்டென்று அந்தந்தத் தேச பாஷியத்தில் அவருக்கு வேறு நாமங்களும் அத்தேவ ஏவலுக் கெதிர்பார்த்திருக்கிற தேவர்களையே தூதர்களென்று அவர்கட்கு மதேவிதமாய் வேறு நாமங்களுமுண்டெனவும் பேசுவார்கள். சிலர் -- ஒன்று முணராமலே தங்கள் புல்லறிவிற் கெட்டின மௌட்டிய மதிப்பாலும், அத்வைத நூல்களைச் சிறிதுபடித்து அதன் கருத்தோரா வறிவீனத்தாலும், அவ்வாறு வழிவழி சொல்லிக் கொள்வதையே சரிசரியென்று வைத்துக்கொள்ளுந் தடித்தனத்தாலும் அப்படிப் பேசுவார்கள்.

(55)

சிஷி:- சரி. பரமசிவ மென்பதை நித்திய நிஜாநந்த சாக்ஷாத்காரமாகிய ஈஸ்வரமெனத் தெளிந்த வண்ணந் தெளிந்துளேன். மற்றது பிற்றையாகும். ஆற்றுமஞ்சலியை அங்கிகரித் தருண்மின்.

குரு:- நன்று நன்று. பெரியதிருவுளந் திருவருண் புரிக.

(பரமசிவ மென்பதைக் குறித்த வியாசம் முற்றிற்று)

....

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

6-வது

வேதத்தைக் குறித்த வியாசம்.

(வேதாந்த சித்தாந்த சமரச விவேகானந்தம்)

மறுநாட்புலரியில் குதர்க்கியாகிய சீடன் வித்யாரண்யனாகிய விவேகபூரண குருவைத் தரிசித்து இதனைக் கடாவலுற்றனன்.

(1)

சிஷியன்: ஐயனே, வேதமென்பதென்ன?

குரு: சம்ஸ்கிருத பதமாகிய வேதமெனுஞ் சொல் வித்-என்னுந் தாதுவினின்று தோன்றிற்று. வித் என்பது (ஞானம்) அறிவு எனப் பொருளாம். அவ் வேதம் வீக்ஷணமுதற் பிரவேசாந்தம் வரையுள்ள சர்வஜகலக்ஷணம், ஜீவபந்தலக்ஷணம்,அவற்றினுற்பத்தி, இலயம், மோக்ஷலக்ஷணம், பரலக்ஷணம், யோகமுறை, ஞானமுறை முதலியனவெல்லாம் அறிவிக்கும் ஆற்றலுடைத்து. அதுவே ஆதிநூல், ஆரணம், எழுதாக்கிளவி, அத்தியாயம், அந்தணர்வாக்கு, ஒத்து, சாகை, சுருதி, நிகமம், மறை, முதனூல் எனும் பெயர்கொண்டு விளங்கும்.

(2)

சிஷி :- அஃதப்பெயர்களைக் கொண்ட காரணம் என்னேயோ?

குரு:- அஃதெல்லா நூல்கட்கும் ஆதியாயிருத்தலினால் ஆதிநூலென்றும், அருணமண்டலாந்தர்க்கத சிவ சூரிய சம்பந்த ஸ்தோத்திரங்களும் ஆரண்யமுனிவர் செய் தோத்திரங்களும் உண்மையால் ஆரண மென்றும், எழுத வமையாப் பொருளோ டெழுதாமல் வந்ததும் வந்தவாறே ஒருவருக்கொருவர் சொல்லப்படும் வழக்கி லிருப்பதன்றி யெழுதி வைக்கப்படும் வழக்கி லிராததுமாதலின் எழுதாக்கிளவி யென்றும் விளக்கும் பொருளை, விளக்கியுரைக்குங் கூறுபாடுடைத்தாதலின் அத்தியாயமென்றும், அருளாளர் வாக்கிலிருந்து வெளிப்படுதலின் அந்தணர்வாக்கென்றும், ஓதப்படுதலின் ஒத்தென்றும், விரிவில் குய்யம் விரித்து விளக்கும் பிரிவுடைமையிற் சாகை யென்றும், நிலைபேறாயிடுதலின் நிகம மென்றும், எப்பொருளையுந்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

தனக்குண் மறைத்து வைத்திருத்தலின் மறையென்றும், ஆன்மாக்களுக்கு முன்னர் இகபரசுகங்களைக் கொடுத்துப் பின்னர் அவ்வான்மாக்களைச் சனனமரண துக்கங்களினின்றும் விடுவிக்குஞ் சாஸ்திரம் யாவற்றுள்ளு முதன்மை பெறீஇ முதல்வன்வாக்கா யிருத்தலின் முதனூலென்றும் வழங்கப்படுவதாயிற்று.

(3)

சிஷி: எழுதவமையாப் பொருளோ டெழுதாமல் வந்ததென்றியம்பியத னுண்மை யென்னைகொலோ?

குரு: ஆதியந்த ரகித நித்தியஞான பரவஸ்துவானது பகாப் பொருளா யிருத்தலினால் அதன் பண்பைப் பகுத் தளவிட்டேதும் வலியின்றி அப்பொருளின தைசுவரியத்தை யுரைக்கடங்கியவா றோதும் வலியுடைத்தாயுளதவ்வேதம். அவ்வுரை யுலகில் யாவரொருவ ரெழுதி வைத்த பழம்புத்தகம் போலாது அனாதியான ஈசுரன் றிருவாக்கிலிருந்து வெளிப்பட்டமையின், எழுதாமல் வந்ததாயிற்று.

(4)

சிஷி: அவ்வேதமானது உதித்தவொழுங் கெப்படி?

குரு: பரமேசுவரனது திருவருளால் நாதப்பிரமமாகிய குடிலையிலிருந்து அகார உகார மகாரங்களாகிய மூன்று பிரணவம் விந்து நாதங்களோடு தோன்ற அவற்றின்கண்ணிருந்து அற்புதமும் வேதமந்திர ரூபமும் பலமும் பெருகற் கேதுவான மூன்று பேதபாதத்தாற் காயத்திரி பிறந்து அது சமஷ்டி வியஷ்டியென இரண்டாகி அவை யீசுவரனுடைய (பூர்வமுகம்) கிழக்குமுகமுதல் நான்கு முகங்களின் வாயிலாக இருக்கு, யஜுர், சாமம், அதர்வண மெனும் நான்கு வேதங்களையு நல்கின. அவற்றுள் அந்த நாதமயமான பிரணவமும் அகாராதி யக்ஷரங்களும் உருவுற்று நிற்கும்படி ஈசன் கீழ்த்திசை முகத்தினின்று இருக்குவேதம் இருபத்தொரு சாகையாகவும், தென்றிசை முகத்தினின்று யஜுர்வேதம் நூற்றொரு சாகையாகவும், மேற்றிசை முகத்தினின்று சாமவேதம் ஆயிரஞ்சாகையாவும், வடதிசை முகத்தினின்று அதர்வணவேதம்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஒன்பது சாகையாகவுந் தோன்றின. அக்கினியிலிருந்து இருக்கையும், வாயுவிலிருந்து யஜுரையும், சூரியனிலிருந்து சாமத்தையும் பிரமதேவர் வெளிம்படுத்தினரென்று மநுஸ்மிருதி 1-ஆம் அத்தியாயம் 23-ஆம் சுலோகஞ் சொல்லுவதும்; மேல் விளக்கப்பட்ட அகார உகார மகாரங்களினின்று அவ்வேத மூன்றும் பிறந்தன வென்பதையே யுறுதிப்படுத்தும். அகாரம் அக்கினி. உகாரம் வாயு, மகாரம்சூரியனெனவாதலை இருக்குவேத ஐதரேய பிராஹ்மணத்திற் காண்க. ருக் என்பது மந்திர மெனவும், யஜுர் எனப்து கட்டளையெனவும், சாம மென்பது ஸ்துதி யெனவும், அதர்வணமென்பது எங்குங் கலப்பு அதாவது மேன் மூன்று வேதத்திலுங் கலந்திருக்கு முண்மையெனவும் அருத்தமாம். மந் = நினைப்பவனை, திர = காப்பதெனும் பொருள் கொண்டது மந்திர மெனுஞ்சொல். இவற்றை யுணருகின்ற நீ! வேத மனந்த மென அவ்வேதமே விளம்பு மெனவு முணர்க.

(5)

சிஷி: அவ்வேதங்கட்குப் பாகுபா டுண்டுகொல்லோ?

குரு: ஒவ்வொரு வேதமுங் கருமகாண்டமும், ஞான காண்டமுமென இருதிறப்படும். இவற்றொரு உபாசனா காண்டமு முளதெனச் சிலர் மொழிப. அவ்வுபாசனா காண்டம் கருமகாண்டத்தோடு சேரற்பாற்று, அவ்வாறன்றி ஞானகாண்டத்தோடு சேரினுஞ் சேரும். ஆகலிற் காண்டம் இரண்டென்றே துணியப்படும். ஞானகாண்டத்திற் பிராஹ்மணங்கள், ஆரண்யங்கள், உபநிஷத்துக்க ளடங்கியிருக்கும்.

(6)

சிஷி: இருக்கு முதலிய நான்கனுக்கும் அவற்றின் பாகுபாடு கட்குமுரிய பெயர் முதலியனவும், மற்ற நூல்களின் பெயர் முதலியனவும் விளக்கின் மிக விரியுங் கொல்லோ?

குரு: ஆயினுஞ் சுருங்கச் சொல்லுதும். இருக்கு வேதத்திற்குப் பவுடிகம், யஜுர் வேதத்திற்குத் தைத்திரியம், சாமவேதத்திற்குக் (கீதை) கீதம், கௌஷிகம், அதர்வ மெனப்படும் அதர்வண வேதத்திற்கு நான்காம்வேதம், கடைவேதமென்னும் பெயர்களுள.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

அவ்வேதங்களே மேல்விளக்கிய கருமகாண்டமான கருமநூலெனவும், ஞான காண்டமான ஞானநூலெனவு மிருபகுப்புடையன. அவற்றுட் கருமநூலென்பது சுவர்க்கபோக முதலியன வளிக்கும் யாக முதலிய கருமங்களை யுணர்த்தும், ஞானநூலென்பது ஜீவான்மாவானது பரமான்மத்தன்மையடையு நெறிக்குரிய வுபாசனை முதலியவற்றை யுணர்த்தும். கருமகாண்டம் - புக்தி காண்டமென்றும், பூருவபாகமென்றும், அற்பசுருதி யென்றும்; ஞானகாண்டம், - பிரமகாண்டமென்றும் உத்தரபாகமென்றும், பிரபலசுருதியென்றும் பெயர் பெறும். ஞானகாண்டத்திற்கு நிமித்தமாகவுள்ளது கரும காண்டமாம். ஞானகாண்டத்தை உபநிஷத்து, வேதாந்தம், வேதசிரசு என்று பெரியோர் பேசுப. உபநிஷத்தாகிய ஞானகாண்டம் வேதாந்த மெனப்படும்போது கருமகாண்டம் வேத மெனப்படுமென்க. அவ்வுபநிஷத்து முக்திகோபநிஷத்தில் வெளியாமாறு நூற்றெட்டாம். அவற்றுள் ஐதரேயம், கௌஷீதகி, நாதபிந்து, ஆத்மபோதம், நிருவாணம், முத்கலம், அக்ஷமாலிகை, திரிபுரம், சௌபாக்கிய லக்ஷுமி, பக்வரிசமெனும்பத்தும் இருக்குவேதத்தைச் சேர்ந்தவை. சுக்கில யஜுரிலுள்ள ஈசாவாசியம், பிரகதாரண்யகம், ஜாபாலம், ஹம்ஸம், பரமஹம்ஸம், சுபாலம், மந்திரிகை, நிராலம்பம், திரிசிகிப்பிராம்மணம், அத்தியாத்துமம், மண்டலப் பிராம்மணம், அத்துவயதாரகம், பைங்களம், பிக்ஷு, துரியா தீதாவதூதம், தாரஸாரம், யாக்ஞவல்கியம், சாட்யாயநி, முக்திகை, கிருஷ்ணயஜுரிலுள்ள கடவல்லி, தைத்திரீயம், பிரம்மம், கைவல்யம், அத்தியாச்சிரமோபநிஷத் தெனப்படு சுவேதாசுவ தரம், கர்ப்பம், நாராயணம், அமிர்தபிந்து, அமிர்தநாதம், காலாக்கிநிருத்திரம், க்ஷுரிகம், சர்வசாரம், சுகரஹஸியம், தேஜோபிந்து, தியானபிந்து, பிரம்மவித்யை, யோகதத்துவம், தக்ஷிணாமூர்த்தி, ஸ்கந்தம், சாரீரகம், யோகசிகை, ஏகாக்ஷரம், அக்ஷி, அவதூதம், கடம், உருத்திரஹிர்தயம், யோககுண்டலி, பஞ்சப்பிரமம், பிராணாக்கிநிஹோத்திரம், வராகம், கலிஸந்தாரணம், சரஸ்வதிரஹஸியமெனும் ஐம்பத்தொன்றும் யஜுர்வேதத்தைச் சேர்ந்தவை. தலவராகோபநிஷத்தெனப்படு கேனம், சாந்தோக்கியம், கூடாருணி, மைத்திராயணி, மைத்திரேயி,

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

வஜ்ஜிரசூசி, யோகசூடாமணி, வாசுவேதம், மஹோபநிஷத், சந்தியாசம், அவ்வியக்தம், குண்டிகை, சாவித்திரி, உருத்திராக்ஷஜாபாலம், தரிசனம், ஜாபாலியெனும் பதினாறும் சாமவேதத்தைச் சேர்ந்தவை, பிரசிநம், முண்டகம், மாண்டூக்கியம், அதர்வசிரசு, அதர்வசிகை, பிருகஜ்ஜாபாலம், நரசிம்ம தபநம், நாரதபரிவிராஜம், சீதை, சரபம், (திரிபாத்விபூதி) மஹாநாராயணம், இராமரஹஸியம், இராமதபநம், சாண்டில்யம், பரமஹம்ஸபரிவிராஜம், அந்நபூரணி, சூரியம், ஆத்மம், பாசுபதப்பிரமம், திரிபுராதபநம், தேவி, பாவனை, பஸ்மஜாபாலம், கணபதி, மஹாவாக்கியம், கோபாலதபநம், கிருஷ்ணம், ஹயக்கிரீவம், தத்தாத்திரேயம், காருடம், பரப்பிரமமெனு முப்பத்தொன்றும் அதர்வண வேதத்தைச் சேர்ந்தவை. இவையற்றை யன்றிப் பலவுபநிஷத்துக்களு முன்னைநாளி லிருந்தனவென அம்முக்திகோபநிஷத்து மொழியும். சொன்ன அஷ்டோத்தரசதோபநிஷத்தாகிய நூற்றெட்டனுள் சுவேதா சுவதரம், கைவல்யம், காலாக்கிநிருத்திரம், அதர்வசிரசு, அதர்வசிகை யெனுமைந்தும் வைதிகசைவத்தை யினிது விளக்கலிற் பஞ்சருத்திரோபநிடத மெனப்படும். இராமதபநம், கோபாலதபநம், நரசிம்மதபநம், ஹயக்கிரீவம், மஹாநாராயணமெனு மைந்தும் வைஷ்ணவத்தைவிளக்கலிற் பஞ்சதபநோபநிடத மெனப்படும். ஈசாவாசியம், கேனம், கடவல்லி, பிரசிநம், முண்டகம், மாண்டூக்கியம், தைத்திரீயம்,சாந்தோக்கியம், பிரகதாரண்யகம், ஐதரேயமென்பன தசோபநிடத மெனப்படுமென்ப. இப் பத்துபநிடதங்கட்கும் ஆதிசங்கராசாரியர் ஏகான்மவாத பக்ஷமாக வடமொழி (வசன) விருத்தியுரையாகிய பாஷியஞ் செய்து வைத்தனர். அங்ஙனந் தைத்திரியோபநிஷத்தின் சிக்ஷாவல்லி, ஆநந்தவல்லி, பிருகுவல்லிகட்கு மட்டும் பாஷியமெழுதி நாராயணவல்லிக் கெழுதாமல் அவர் விட்டு விட்டார். அவர் காலத்தில் விருத்தராயிருந்த நீலகண்டரெனப்படும் ஸ்ரீகண்டாசாரியர் வேதாந்த சூத்திரத்திற் கெழுதிய சைவபாஷியத்திற் கைவல் லியாதி யுபநிடதங்களோடு இப்பத்துபநிடதங் களையுமெடுத்து மேற்கோளாகக் காட்டியிருக்கின்றனர். இராமாநுஜாசாரியர் அச்சூத்திரத்திற் கெழுதிய விசிட்டாத்துவிதவைஷ்ணவ பாஷியத்தில் அப்பத்துப

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

நிடதங்களையே மேற்கோளாகக் காட்டியிருக்கின்றனர். இவ்வாறே ஆநந்ததீர்த்தராகிய மத்துவாசாரியரும் அப் பத்துபநிடதங்களை யொப்பித் துவித வைஷ்ணவபாஷியஞ் செய்திருக்கின்றனர். ஸ்ரீகண்ட பாஷியப் பொருளை விரித்து வேதாகம வுடம்பாடாக வடமொழியிற் சிவார்க்கமணிதீபிகையென வொரு வியாக்கியானம் அப்பைய தீக்ஷிதர் செய்தனர். இத்திறவுரைகளேற்பட்ட காரணத்தானே சிலர் அப்பத்துபநிடதமே முக்கியப் பிரமாண மென்பர். எனவே யேனையவை அமுக்கியப் பிரமாண மெனவாம். இவ்வாறு வேதத்திலாவது வேதாந்தத்திலாவது பிரஸ்தாபமில்லை. ஏன் பிரஸ்தாபமில்லையெனல் வேண்டும்: முக்திகோபநிஷத்தில் பத்துபநிஷத்துக்களை நீ படி எனப் பொருளாதலுண்டே யெனின், அங்ஙனம் மோக்ஷ இச்சையொன்றே யுடையார்க்கு "மாண்டூக்கியோபநிஷத்தொன்றுபோதும், அவ்வளவின் ஞானங்கிட்டாவிடிற் பத்துபநிஷத்தை நீ படி, அவ்வாறு படித்தும் விஞ்ஞானதார்ட்டிய மேற்படாவிடின் முப்பத்திரண்டுப நிஷத்தை நன்கு அப்பியாசஞ்செய், மேல் விதேக முக்தி வேண்டுமாயின் நூற்றெட்டுபநிஷத்தும் படி" எனும் பொருளுங்காணப்படுதலால் அப் பத்தே படிக்க வேண்டுமெனல் கூடாமை யானதை யுணர்வதோடு மற்றவுபநிஷத்துக்கள் பிரமாணமல்ல வென்றாவது முக்கியப் பிரமாணமல்ல வென்றாவது அம்முக்தி கோபநிஷத்து மொழியாமல் நூற்றெட்டனையும் படிக்க விதித்த நுட்பத்தையுமுணர வேண்டும். உணரின், அந்நூற்றெட்டும் முக்கியப் பிரமாணமென்னு முடிவே யுண்டாம். மேற்சொற்ற 32-உபநிஷத்தும் கிருஷ்ண யஜுரிலுள்ள 32-உபநிஷத்தே யெனக் கொள்ளுமிடத்து ஆண்டுச் சொற்ற பத்தும் பாஷியக்கார ரெடுத்துக் கொண்ட பத்துபநிடத மல்லாத இருக்குவேகத்தைச் சேர்ந்த பத்துபநிடதமேயனெக் கோடல் இயைபென்க. பாஷியக்கார ரொப்புவது மொப்பாததும் ஒரு பிரமாணமாக மாட்டாது. ஈண்டுச் சைவர்கள் அப்பத்தே பிரமாணமெனின் வைதிகசைவத்தையினிது விளக்குகின்ற பஞ்சருத்திரோப நிடதங்களையும், சிவமகிமைகளையும்யுஞ் சிவ சின்னங்களையும் பிரதிபாதிக்கின்ற மற்றவுநிடதங்களையு மிழந்து போலிச்சைவராவார்கள். வைணவர்கள் அப்பத்தே

Center for Shaiva Studies; Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பிரமாணமெனின் வைணவத்தை விளக்குகின்ற பஞ்சதபநோபநிடதங்களை யிழந்து போலிவைணவராவார்கள். ஏகான்மவாதிகள் அப்பத்தே பிரமாணமெனின் அவையற்றிற் கூறப்படாத இரஜ்ஜு ஸர்ப்பம் சுத்திகாரஜித முதலிய (தமது சமய) உபமானங்களை விளக்குகின்ற உபநிடதங்களையும், மற்ற வுபநிடதங்களையுமிழந்து போலி யேகான்மவாதிக ளாவார்கள். பஞ்சருத்திரத்தைச் சிவபக்ஷமாக வொப்பலாம். பஞ்சதபநத்தை விஷ்ணுபக்ஷமாக வொப்பலாம். ஏனையவற்றுட் பத்தல்லாதனவற்றை யொப்புங்கால் இரஜ்ஜுஸர்ப் பாதி யுபமானங்களையும், ஜடமாகிய பாசபதார்த்தத்தைச் சித்தாகிய பதியெனக் கூறுதலையும், அற்பசித்தாகிய பசுவை யகண்டசித்தாகிய பதியெனப் பகர்தலையு மொப்பநேரிடும். அது பதிபசுபாசங்க ளுண்மையெனச் சாதிக்குஞ் சைவசித்தாந்தத்திற்குப் பொருந்தாமையின் அவை யேகான்மவாதமான மாயாவாத உபநிடதங்களே யெனச் சில சைவசித்தாந்திகள் பேசத்துணிவரேல்; இவர்கள் பிரமாணமாகக் கொண்டிருக்கின்ற தேவாரத்தில் ''ஊனாயுயிரானா யுடலானாயுலகானாய்-வானாய் நிலனானாய் கடலானாய் மலையானாய்" எனவும் திருவாசகத்தில் "வானாகி மண்ணாகி வளியாகியொளியாகி-யூனாகியுயிராகி யுண்மையுமா யின்மையுமாய்'' எனவும் வருமாறு பல பதிகங்களினும் வருகின்றன. அவைகளும் மாயாவாதப் பதிகங்கள், மாயாவாதப் பாட்டுகள், மாயாவாத அடிகளென வொதுக்கப் படுமெனவும், இவ்வாறு சிவபுராணங்களிலுமொதுக்கப்படு மெனவும் அவ ரறியக்கடவர். இங்ஙனம் அந்த "ஊனாயுயிரானாய்" முதலிய வுரைகட்கு வேறு பொருளுண்டென வவர் விளம்பின், அவ்வாறே யவர்க ளொதுக்கு முபநிடத வாக்கியங்கட்குஞ் சைவசித்தாந்த பக்ஷமாக வேறு பொருளுண்டெனக் கோடலாமே. அவ்வாற்றலின்றிப் பிரபல சுருதியாகிய வுபநிடதங்களை யொதுக்க முயல்வது கொசுகுக்குப் பயந்து கோட்டை விட்டோடுவார் கொள்கையை யொக்குமன்றோ. ஆகலின், அவ்வொதுக்கன் முடிவு எவ்வாற்றானு மொவ்வாது. நிற்க.

சிவனாகிய சங்கரன்றானே சங்கரனென்னு நாமத்தோடு பூமியிற் பிறந்து வேதபாடியஞ் செய்தனன்; இதனைச்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

சிவரகசியத்து ஒன்பதாவது அமிசமுஞ் செப்பும்; அதனாற் சங்கரர் பாடியம் மற்றையர் பாடியங்களினுஞ் சிறப்புடைத்தெனச் சிலர் கூறுப. வேதம் விளம்புமாறு கருப்பப்பையிற் கட்டுண்டு பிறவாச் சங்கரனை யுருத்திரனைப் பிறப்புக்குட்படுத் துலம்பல் அவ்வேதத்திற்கு மாறுகோளாம். அத்திற மாறுகோள் வாக்கியங்கள் பின்னுழைப்பாமெனலே பல்லோரபிப்பிராயம். ஆதலி னச்சரிதமும் உறுதியாமாறில்லை. இவ்வாறு காணப்படு முரையானவையு முறுதியுரையல்லவென மறுக்க. உருத்திரன் பிறப்பிலி யென்பதைச் சுவேதாசுவதராதி யுபநிடதங்களிலும், சிவனுக்கு யாண்டுங் கருப்பவாச மில்லை யென்பதை வேதங் கூறியாங்கு நனி கூறுதலைக் கந்தபுராண சனற்குமார சங்கிதை சைவ புராண சனற்குமார சங்கிதையாதி உபப்பிருதங் கணங்களிலும், தமிழ் மறையாகிய தேவார திருவாசகங்களிலும், பிறநூல்களிலும் காண்க. இதுநிற்க.

சிவகுருவெனும் பெயரிய வேதியனார் மனைவி ஆரியாம்பை கருப்பத்தி லவர்க்கு மகனாகவமைந்து கலியுகம் 3058-வது ஆண்டுக்குச் சரியான விக்கிரமசகம் 14-ல் ஈசுரவருடத்திற் பிறந்தவரெனப்படும் அச்சங்கராசாரியர் மீது அபிநவ குத்தனெனும் பெயருடையானாற் றூண்டப்பட்ட ஒரு மந்திரவேவற் றேவதையானது அவரது ஆசனத்தை யடைந்து உதிரம் வெளிப்படும்படி மூலநோயை யுண்டு பண்ணிற்று:மறுநாளவரது காவியுடையைத் துவைப்பான் கொடு சென்ற சீடர் ஆநந்த கிரியார் அவ்வுதிரங் காணூஉ வருந்தி யிதனை யொழிக்க வேண்டுமெனா விண்ணப்பித்தகாலை அவ்வாசிரியர் அச் சீடரை நோக்குபு மைந்த! ஊழ்வினை வழிவந்த திவ்வுடம்பெனத்தமது தேகத்தைச் சுட்டினதூஉம், பின்றைக் குழீஇய சீடர்க ளந்நோ யொழியவென்று வைத்தியரைக்கொண்டு ஔடதஞ்செய்வித் துண்பித்த காலத்தும் அஃதகலாமைகண்டு அன்னோர் ஸ்ரீவைத்தியநாதேசுரரைப் பிரார்த்தித்திடலும் அங்ஙனம் அவ்வீசுரரருளால் தேவ வைத்தியராகிய அசுவனி தேவர் வேதியர் போற் போந்து நோக்கியிது நோயன்று மந்திரவேவலானுண்டாய துன்பமென வறிவிக்குங்காறும் அவ்வேவலை யச்சங்கர ரறியாதிருந்ததூஉம், சுகமுனிவர் மாணாக்கராகிய கௌடபாதரைச் சங்கரர் தரிசிக்கப் பெற்ற

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata

போழ்து அச்சங்கரர் நங்குருவான கோவிந்த யோகியார்க்கு இவர் குருவன்றோ வெனப் படர்ந்து நன்கு பணிந்து புகழ்ந்து "பரமகுருவே! என்மன மெஞ்ஞான்றும் ஆன்மநிலையுணர்ச்சியிற் கலந்திருக்கும்படி யருளல் வேண்டும்" என்றபடி யக்கௌடபாதரு மநுக்கிரகித்துச் சென்றதூஉம், இவ்வநுக்கிரக காலமானது ஆநந்தகிரியார்-பத்ம பாதர்-மண்டன மிசிரராகிய சுரேசுவரர்-அஸ்தாமலகர் முதலினோர்கட்குக் குருவாய் விளங்கிய அச்சங்கராசாரியருடைய முப்பத்திரண்டாம் வயதினந்தமும் இறுதிநாளுமான முடிவுநாளின் சமீபமாகக் காணப்படுவதூஉம், அவ்வாசிரியர் பன்னிரண்டாம் வயதில் இமாசலம் அண்முற்று வதரிகாச்சிரமத்தி னிருந்து கொண்டு கந்தபுராணத்துச் சூதசங்கிதையைப் பதினெட்டுமுறை படித்தாய்ந்து அப்பொருட் கருத்துப் பொருந்தப் பிரமசூத்திரம்-தசோபநிஷத்து-நரசிம்மதபநம்-கௌஷீதகி-ஸ்ரீருத்திராத்தியாயம்-பகவற்கீதை-விஷ்ணு சகத்திரநாம முதலியவற்றிற்குப் பாஷியஞ் செய்ததுமன்றித் தத்துவாலோகம்-அபரோக்ஷாநுபூதி-அத்து விதசகத்திரம்-உபதேசசகத்திர முதலிய சிறு நூல்களையுஞ் செய்தனரென்பதூஉம் அவரதுசரித்திரனே வெளியாம். அதனால், சங்கராசாரியார் வினைவயப் பட்டுப் பிறந்தவர், முற்றுணர்விலார், முற்றணர்வுக்காகக் குருவை வழிபட்டார், அக்குரு வாய்க்குமுன் (சுவாநுபவமின்றி) கல்விவலி கொளீஇ மேல்விளக்கப்பட்ட பாஷியாதிகளை யேகான்மவாத பக்ஷமாக வியற்றினாரென வெள்ளறிவாளரு மறிவர்.

அதனால், சருவவல்லமையுள்ள சங்கரன் அவரல்ல னென்றும், மற்றுமவர் சரித்திரத்துள்ளவாறு யோக ஞான சித்திக ளவரக முண்டாயிருப்பின் சிவாநுக்கிரகம் பெற்ற ஆன்மாக்களுள் அவருமொருவராக விளங்கத்தக்கவரென்றுந் தீர்மானித்தல் பொருந்துமன்றே. மேற் போந்த சங்கரர் சரித்திர வெடுத்தக்காட்டுக்கள் கேரள நாட்டில் இடபாசலத்துப் பூரணவாகினி நதிக்கரையிற் காலட்டியெனும் அக்கிராரத்திற் சங்கரர் பிறந்தனரெனக் கூறுமொரு புத்தகத்துள்ளனவாகும். அவர் சோழநாட்டின் கன்னதாய ஸ்ரீசிதம்பரமெனுந் திவ்விய க்ஷேத்திரத்திற் பிறந்தனரென்பது வேறொரு புத்தகத் துள்ளதாகும். இவ்விரு புத்தகமும் ஒன்றற்கொன்று மாறுகோளான சரிதைகளை

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

யுடையனவாகலின் அச்சங்கரர் சரித்திரம் ஒராறாக நிலைபெற்றிலது மோர்க. இவ்வாசிரியர் பஞ்ச ருத்திரோபநிஷத்திற்கும், நரசிம்ம தபநோப நிஷத்திற்கும், கௌஷீதகிக்கும், ஸ்ரீ ருத்திராத்தியாயத்திற்கும் பாஷியஞ் செய்திருத்தலினாற் பத்துபநிஷத்தே முக்கியப்பிரமாண மென்பது அவர் கருத்தன் றென்பது முணர்க. பஞ்சருத்திரோபநிடதங்களே முக்கியப் பிரமாணமெனப் பேசுகின்ற சைவருமுளர். இவரு முண்மையறியும் ஆற்றலற்றவரேயாவர் (கேரளம் = மலையாளம்)

சைவபாடியத்தை யேகான்மவாதிகளும், ஏகான்ம வாதபாடியத்தைச் சைவர்களுமொப்பார்கள். இப்பாடிய மிரண்டனையும் இரர்மனுஜ மதத்தினரொப்பார். இவை யாவையு மத்துவமதத்தின ரொப்பார். இராமனுஜ பாடியத்தையும் மத்துவபாடியத்தையுஞ் சைவர்களுமேன்காமவாதிகளு மொப்பார்கள். இன்னும் பாடியஞ் செய்வாரெண்ணமும், வேறு செய்தாரெண்ணமும் இவ்விதமேயாம். ஆதலால் எல்லார்க்கு முபநிடதங்ககள் பொதுவாம். இதுவே சிஷ்டஜன சம்மதம். எல்லா வுபநிடதங்களையும் ஏகான்மவாதிகள் தம்மதச் சார்பாகவும், வைணவர்கள் தம்மதச் சார்பாகவும், சைவர்கள் தமது சித்தாந்தச் சார்பாகவு நிறுவிக்கொள்வார்கள். அவ்வாறாயின் உண்மைதா னென்னையெனக் கடா விடில், பசு பாசமிரண்டனிலும் பதியாகிய வோருண்மைப் பொருளே ஆகாயத்தைப் போலப்பரிபூரண வியாபகமா யுளது. அப்பொருளின தருள்விளக்கமுள்ள பசுவாகிற ஆன்மாக்களையும் அவைகளின் தேகத்தோடு அத் தேக விருத்திக் கேதுவாய பாசப் பொருள்களையும் அவ் வுண்மைப் பொருளாகவே கூறுதலைத் *தானியாகு பெயராக் கோடலும், இத்தீர்வை-மண்-நீர்-தீ-காற்று-வெள்ளிடை-சூரியன்-சந்திரன் ஆன்மா வெனப்படு (சிவனாரது) அஷ்டதனுவி லடங்குமென வுணர்தலும், பசு பாசங்கட் கன்னியமாகப் பதிப்பொரு ளில்லை அப் பொருள்-வேதத்தில் ஈச சப்தத்தானும் உருத்திர சப்தத்தானும் பிரஹ்ம

*விளக்கெனுந் தீபத்தின் பெயர் அதற்கிடனாய தண்டிற்குமாவது போலாவது தானியாகுபெயர். தானி=இடத்தையுடையது. இடம்=தானம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

சப்தத்தானும் சம்பு சப்தத்தானும் மிக்கு விளங்கும். இவற்றினின்றும் வேதஹிருதயமாய் நிற்குஞ் சிவ சப்தத்தானே மிக்கு விளங்கும் அதுவே முடிபெனவுணர்தலும், அதுவே (அந்தரியாமி) பசுபதியாகிய குஹனென வுணர்தலு முணர்வுடையார் துணிபென்க. இவ்வீசாதீ சப்தங்களை வேறுமூர்த்திகளுக் காக்குதல் வலிந்து பொருள் கோடலைச் சேரும். ஆகலின், நூற்றெட்டுபநிஷத்துக்களுஞ் சிவைகத்து வத்தையே விளக்குகின்ற முக்கியப் பிரமாணமாகும். இதனை "நூற்றெட்டாதி வேதமெடுத்தெடுத்துரைத்த விருத்திக் கேற்க வமையுமிலக் கணவடிவா யதுவும் போதா தப்பாலுக் கப்பாலா யருட்கண்ணாகி" எனத் தாயுமானா ருரைக்கு முரையானு முணர்க. இதுவே யெமது கருத்தும். இக்கருத்தை, (துங்கபத்திரா நதிதீரத்தி னொருநாட்டிலிருந்த பூசுரகுலத்து மாயணாசாரியர்க்கு மகனுஞ் சாயணர் போக நாதரென்பா ரிருவர்க்குத் தம்பியுமானவரும், தமது வறுமை தணப்பான் மஹேசுவரியை நோக்கித் தவ நோற்ற காலை யவ்வீசுவரி "நினக் குண்டாகு மறு பிறப்பி லன்னணஞ் செய்குதும்" என்ற திருவாக்கைக் கேட்டவுடன் இதேயோ யாம் பெற்றபே றெனக்கவன்று ஆதிசங்கராசாரியருடைய சீட பரம்பரையில் கலியுகம் 4328-வது ஆண்டுக்குச் சரியான சாலிசகம் 1150-ல் சந்நியாசம் பெற்றுக்கொண்ட வித்தியாசங்கரர்க்குச் சீடராய்ச் சந்நியாச ஆச்சிரமமடைந்தவரும், பின்னர் அம் மஹேசுவரி நீ! துறவு பூண்டமையான் மறுபிறப்படைந்தவ னாயினையென வளித்த இராஜ்ஜிய லட்சுமியைத் தம்மை யடுத்திருந்த புக்கணனெனும் ஓரிடையனுக்கீந்து அவனை யரையனாக்கித் தாம் மந்திரியாகவிருந்து விருபாக்ஷமெனும் ஒரு நகருண்டுபண்ணி யதன்கட் பெருஞ் சிவாலய மமைத்துச் சாலிசகம் 1308-ல் காலஞ் சென்றவரு மெனப்படு மாதவாசாரிய ரெனும் பெயரிய வித்தியாரண்யர் தம தேகான்மவாத பக்ஷமாக வெழுதிய) நூற்றெட்டுபநிஷத்பாஷியமு முறுதிப்படுத்தும். இந்தப் பாஷியத்தில் அந்த வித்தியாரண்யர் கோதாவரி நதிக்கரையிலிருந்த ஏலேசுவர யோகியா ரறிவித்தபடி ஒரு வன்னிமரத்தின் கீழிருந்து சிலபாகம் படிப்பதற்குள் அம்மரத் திலையெல்லாம் உதிர்ந்தமையால் இவ்வுரை பெரிதும் பிழையென அவர் வருந்திநிற்றலை யம்மரத்திலிருந்து கண்ட இரண்டு

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பிரமரக்ஷசுகள் இனி நீர் செய்ய வேண்டிய திதுவென் றறிவித்தவாறே யவரும் ஸ்ரீகாசி மணிகர்ணிகா கட்டத்தி னிறங்குதுறையில் உமியைப் பரப்பி விட்டிருந்திடலும் ஆவயிற்கள் வினைஞனென வுருமாறி வந்த வியாசாமா முனிவரர் அது மிதியா.தொதுங்கிச் சென்றனர்: அதுகண்ட வித்தியாரண்யர் அவரடிபணிந்து தம்பாடியத்தையெடுத்து இதிற் பிழையுளவேல் திருத்தியருள்கவென் றவரிடமளித்தபோது அம் முனிவர்ர் தமது கைக்குண்டிகையினுள்ள கள்ளையதனிற்றடவி யெதிர்நிற்கும் வேதங்களாகிய நாய்களின் முன்னர்விடுத்தவுடன் அதனையவை நாவானக்கின. அவர் பின்றையதிலுள்ள வழுக்களொரீஇ உண்மையே யிருக்கக் கண்டன ராதலின் அப்பாஷியமே யுண்மையெனச் சிலர் மொழி தருப. முக்கியமென வெண்ணத்தக்க இவ்வரலாற்றினை அவ் வியாசமா முனிவரராவது அவர் சீடர்களாவது தாபித்தெழுதிய நூலொன்றுங் கண்டிலம். இது பிரமாணமாமாறு யாங்ஙனம்? இது கிடக்க.

மேல்வந்த முக்திகோபநிஷத்தானது அனுமானுக்கு இரகுராமமூர்த்தியினா லுபதேசிக்கப்பட்டதாகலின், அவர் தங்காலத்தின் பின்னுண்டாகத் தக்க கிருஷ்ண மூர்த்தி வரலாறு கூறு முபநிஷத்துக்களை யதனிடை விளக்கினமை யெவ்வாற்றாற் பொருந்துமெனு மைய முண்டாமாயின் அந்தக் கிருஷ்ணமூர்த்தி முதலினோர் பிறந்ததற்பின்றை அனுமான் இராமமூர்த்தியைத் தியானவாயிலாக வெளிப்படுத்தித் தரிசித்து வேதம் வினாயபோது அவ்விராம சுவாமியினா லம்முக்திகோப நிஷத் துப தேசிக்கப்பட்டதெனக் கொள்வுழி அவ்வைய மறுமென்று ஸ்ரீகந்தசுவாமியினது கருணைக்குரியர் தெரித்தருள்வரே. உபநிஷத்தென்னும் வடசொல்லைத் தாதுவழி யருத்தம் பண்ணின், உப=சமீபம், நிஷத்=அழைத்துச் செல்லத் தக்கது நீக்கத் தக்க தெனவாம். அதாவது பரமான்மாவின் சமீபத்தில் ஜீவான்மாவை யழைத்துச் செல்லத் தக்கது ஜனன மரண துக்கங்களை நீக்கத்தக்க தென்றாம். "கருப்பம் ஜனனம் ஜரை முதலிய துக்கங்களை நீக்கும் பிரமவித்தையை வெளியிடுதலினால் வேதாந்தத்திற்கு உபநிஷத் தெனும் பெயராயிற்று" எனப் பொருளாமாறு தைத்திரியோப நிஷத் பாஷிய அவதாரிகையிற் சங்கராசாரியரெழுதியது மிக்கருத்தேயாம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

வேதமானது மற்றொரு வழியில் மந்திரம், அருத்த வாதம், விதியெனு மூன்று பகுப்புடைத்து. அவற்றுள் மந்திரம் அவரவ ரநுஷ்டிக்க வேண்டிய கருமங்களை விரித்துக் காட்டும். அருத்தவாதம் கேட்பவர்க் கெளிதில் விருப்புண்டாமாறு கூறி அக் கருமங்களைச் செய்வோர் சுகம்பெறத் துணைக்கருவியாய் நிற்கும். விதி காட்சி முதலிய பிரமாணங்களான் அறிதற்கரிய பரம்பொருளை யுணர்த்தும்.

மேல் விளக்கப்பட்ட வேதமானது சிக்ஷை, கற்பம், வியாகரணம், நிருத்தம், சந்தோபிசிதம் ஜோதிடமெனும் ஆறங்கமுடைத்து, அவற்றைப் பிரகாசப்படுத்திக் காட்டு நூல்கள் வேதாங்க மெனப்படும். அவற்றுள் வேத மொழியை உதாத்தம் அநுதாத்தமாதி சுரவேறுபாட்டா னுச்சரிக்கு மொழுங்கை யறிவிப்பது சிக்ஷை. வேதத்தின் விதிக்கப்பட்ட கருமங்களை யநுஷ்டிக்குமொழுங் கறிவிப்பது கற்பம். வேதத்தி னக்ஷரச் சொற்பொருளாதி யிலக்கணங்களை யறிவிப்பது. வியாகரணம். வேதத்தின் வாக்கியப் பொருளையறிவிப்பது நிருத்தம். வேதமந்திரங்களிற் காயத்திரியாதி சந்தங்களின் பெயர்களையும், அவற்றிற் கக்ஷர மிம்மட்டென்பதையு மறிவிப்பது சந்தோபிசிதம். வேதத்தின் விதித்துள்ள கருமங்கள் புரிதற்குரிய காலங்களை யறிவிப்பது ஜோதிடம். இவையாறும் வேதங்களையோதுவதற்கும், அவற்றின் பொருளை யுணர்வதற்கும், உணர்ந்தவா றொழுகுவதற்கும், அத்தியாவசியகமாக முன்னர்க் கற்கவேண்டிய வடமொழிச் சாஸ்திரங்களாம். அன்றி, அவ்வேதங்களெக்காலும் எட்டுணையேனும் மாறுதலடையாமலும், ஒருவரான் மாற்றப்படாமலும் (அரசர்க்கு மெய்காப்பாளர் போலக்) காத்து நிற்குந் தகைமையுடையன இவைகளேயாம். இவையன்றி, வேத உபாங்க மெனப்படு புராணம், நியாயம், மீமாஞ்சை, ஸ்மிருதி யெனு நான்குண்டு. அவற்றுள் பரமேசுரன் ஜகத்தைச் சிருஷ்டித்தல், காத்தல், சங்கரித்தன் முதலியன புகலும் வேதவாக்கியப் பொருளை விரித்துணர்த்துவது புராணம்; வேதப் பொருளைத் தீர்மானித்தற்கு ஹேதுவாய பிரமாணாதிகளை யுணர்த்துவது (தருக்கம்) நியாயம். வேதப் பொருளினது தாற்பரிய மறிதற் கேதுவான நியாயங்களை ஆய்ந்துணர்த்துவது மீமாஞ்சை. அவ்வவ் வருணங்கட்கும் ஆச்சிரமங்கட்கு முரிய தருமங்களை

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

யுணர்த்துவது (தருமசாஸ்திரம்) ஸ்மிருதி இவற்றுள் புராணம் 18. அவற்றுள் சைவம், ஸ்காந்தம், இலிங்கம், கூர்மம், வாமனம், வராகம், பௌஷியம், மச்சம், மார்க்கண்டேயம், பிரமாண்டமெனும் பத்துஞ் சிவபுராணங்கள். நாரதீயம், பாகவதம், காருடம், வைணவமெனு நான்கும் விஷ்ணு புராணங்கள். பிரமம், பத்மம் எனு மிரண்டும் பிரம புராணங்கள், பிரமகைவர்த்தம் சூரிய புராணம். ஆக்கினேயம் அக்கினிபுராணம். இப்பதினெண் புராணங்களின் துணிவெடுத்துக் கூறுகின்ற உசனம், கபிலம், காளி, சனற்குமாரம், சாம்பவம், சிவதன்மம், சௌரம், துருவாசம், நந்தி, நாரசிங்கம், நாரதீயம், பராசரம், மானவம், வாசிஷ்டலைங்கம், வாருணம், பார்க்கவம், ஆங்கிரம், மாரீசம் எனும் பதினெட்டும் அவ்வப் பெயருடையார் பெயர்களால் விளங்கிய உபபுராணங்களாகும். பார்க்கவ புராணமே விநாயக புராணம். சிரஞ்சீவி யர்கிய வியாசமாமுனிவரருளிச் செய்த சிவரகசியமும், மகாபாரதமும், வான்மீகரருளிச் செய்த இராமாயணமுமாகிய இதிகாசம் மூன்றும் புராணங்களுள் அடங்கும். இவற்றுள் சிவரகசியம் மஹேதிகாசமாம். சொற்ற, வியாசர் பாரதமன்றி, ஜயமுனிபாரத மென்பது மொன்றுண்டு. அது வியாசர் பாரதத்திற்குச் சிறிது பேதமா யுளது.

மனு, அத்திரி, விஷ்ணு, யாக்ஞவல்கியம், உசனம், ஆங்கீரசம், இயமம், ஆபஸ்தம்பம், சம்வர்த்தம், காத்தியாயனம், பிரகஸ்பதி, பராசரம், வியாசம், சங்கலிதம், தக்ஷம், கௌதமம், சாதாதபம், வசிஷ்டம் என அவரவர் பெயராலேற்பட்ட ஸ்மிருதி பதினெட்டாம். இவையன்றி வேறு பதினெட்டு ஸ்மிருதிகளு முண்டு. விவரித்த வேதம்-4, அங்கம்-6, உபாங்கம்-4 ஆகப் பதினான்கும் வித்தை யெனும் பெயர் பெறும். இவ்வித்தை பிரமாணமாக அங்கீகரிக்கப்படுவன வென்றும், சுருதி ஸ்மிருதிகள் (பொது) சாமானியநூலென்றும், புராணகலை முதலியன (சிறப்பு) விசேஷநூலென்றுஞ் சொலப்படும்.

ஆயுர்வேதம், தனுர்வேதம், காந்தருவவேதம், அருத்த வேதமெனு நான்கும் உபவேதங்க ளாகும். அவற்றுள் யாவு மநுஷ்டித்தற்குச் சாதனமான தேகத்தைப் பிணியின்றிக் காத்தற்கு உரியவற்றை யுணர்த்துவது ஆயுர்வேதமாம், பகைஞரால் நலியாது நாடுகாத்தற்கு உரிய படைக்கலப்பயிற்சியை யுணர்த்துவது

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

தனுர்வேதமாம். கருத்தாவுக்கு மனோரம்மியத்தை விளைத்தற்கு உரிய இசை முதலியன வுணர்த்துவது காந்தருவ வேதமாம். இகபரங்கட் கேதுவான பொருளைச் சம்பாதித்தற்கு உரியவுபாய முணர்த்துவது அருத்தவேதமாம். இந் நான்கனோடு மேற்சொற்றவித்தை பதினான்கையுஞ் சேர்த்து வித்தை பதினெட்டென்னும் சைவபுராணத்து வாயுசங்கிதை.

வேதாந்தம், வைசேஷிகம், பாட்டம், பிரபாகரம், பூருவமீமாஞ்சை, உத்தரமீமாஞ்சையெனு மாறும் ஆறு சாஸ்திரங்களாகும், விச்சுவ தரும மாதியாக மானவேதம் இறுதியாகவுள்ள முப்பத்திரண்டுஞ் சிற்ப நூல்களாகும். இவை நிற்க. அங்கம், அருணம், கலிங்கம், கௌசிகம், காம்போஜம், கொங்கணம், கோசலம், சாவகம், சிங்களம், சிந்து, சீனம், சோனகம், திராவிடம், துளுவம், பப்பரம், மகதம், மராடம், வங்கம் என்னும் பதினெட்டுப் பாஷைகளுள்ளும் வேறு பல பாஷைகளுள்ளும் பன்னூல்களுள. திராவிடமென்பதற்கு ஓடி வளைந்ததெனப் பொருள் கூறுப. (திராவிடம் = தமிழ்.)

சொற்ற ஆறு சாஸ்திரங்களுள், பூருவமீமாஞ்சையைக் கரும மீமாஞ்சையென்றும், உத்தரமீமாஞ்சையைப் பிரமமீமாஞ்சை பிரமசூத்திரம் வியாசசூத்திரம் வேதாந்த சூத்திரமென்றுங் கூறுப. சாஸ்திர மெனுஞ் சொல்லைத் தாதுப்படி யருத்தம்பண்ணின்; சாஸ்=அருள்புரிவது, திர=காப்பது என்றாம். தாற்பரியம் ஜீவான்மாக்களை நறிய கட்டளைகளானே யருள்வயப் படுத்திக் காப்பதென்றாம்.

ஆயுர்வேதமும், ஸ்மிருதியிலுள்ள தண்டநீதி முதலியனவும் இலௌகிகம். அருத்தம்-இம்மையிற்பலிப்பனவுணர்த்து நூலென்றாம். நியாயம், வைசேஷிகம், பூருவ மீமாஞ்சையென்ற மூன்றும் வைதிகம். அருத்தம்-இம்மையினு மறுமையினும் பலிப்பனவுணர்த்துநூ லென்றாம். இம்மூன்றனோடு கபிலம், பதஞ்சலியம் வேதாந்தமெனு மூன்று சாஸ்திரங்களையுஞ் சேர்த்து வைதிக நூல் ஆறென்றும், அவற்றுள் நியாய முதலிய மூன்றும் அத்தியான்மிக நூலெனப்படும் அவை யான்மாவைக் குறிப்பிட்டே கூறுகின்ற வுபநிடதங்களை யெடுத்துக் காட்டி யான்மஞானத்தைப் பலிப்பிக்கச்செயு நூல்களென்றுங் கூறுதல்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

சிலர் தீர்மானமாகும். இவ்வாறிற்கும் பிறப்பிடம் இருக்கு முதல் நான்கு வேதங்களேயன்றி வேறன்று. நியாயஞ் செய்தவர் அக்ஷ பாதர். வைசேஷிகஞ்செய்தவர் கணாதர். பூருவமீமாஞ்சை செய்தவர் ஜைமினிபகவான். கபிலமெனுஞ் சாங்கியஞ் செய்தவர் கபிலமுனிவர். பதஞ்சலியமெனும் யோகஞ் செய்தவர் பதஞ்சலிபகவான். வேதாந்தஞ் செய்தவர் வேதவியாசர்.

அவ் வேதாந்தம்-நான்கத்தியாயமாகவும், பதினாறு பாதமாகவும், நூற்றைம்பத்தாறு அதிகரணமாகவும், ஐந்நூற்று நாற்பத்தைந்து சூத்திரமாகவு முளது. இதற்கே ஸ்ரீகண்டாசாரியர் சங்கராசாரியர் இராமாநுஜாசாரியர் முதலாயினார் மேற் பிரகாசப்படுத்தியவாறு உபநிடதங்களை மேற்கோளாக வெடுத்துக் காட்டிப்பாஷியங்கள் செய்துள்ளார். இச்சூத்திரத்தைச் சில சைவர் மாயாவாதநூலென வொதுக்குவர். அஃதுபநிடதங்களை யொதுக்கத்துணிவார் கொள்கையையே புல்லும். ஏனெனின், பிரபல சுருதியாகிய வுபநிடதவாக்கியங்களே யந்தச் சூத்திரமாக வமைந்திருத்தலினாலும், வித்தை பதினான்கனி லொன்றாதலினாலும் என்க. வேதத்திற்பிரதி பாதிக்கப்படுகின்ற கிரியாசத்தியின் காரியத்தைத்தானே முடிந்த முடிவாக வமைத்தெழுதிய பூர்வ மீமாஞ்சையினைக் கண்ணுற்ற வியாசமாமுனிவர் இதன்மேல் ஞான சத்தியின் காரியமுண்டெனத் தாபித்தெழுதியதே உத்தர மீமாஞ்சை, அதுவே வேதாந்த சூத்திரமென வுணர்வுடையார் யாவரு மறிவர். அதனில் தேவோபாசனையும், ஜீவான்மா பரமான்மாக்களின் அனாதிசம்பந்தமான அத்துவிதஞானமுமே பெரிதும் விளக்கப்பட்டிருக்கின்றன. "தேவர் குறளுந் திருநான்மறை முடிவும்-மூவர் தமிழு முனிமொழியுங்-கோவை-திருவா சகமுந் திருமூலர் சொல்லு-மொருவா சகமென்றுணர்" என்று மூதாட்டியாகிய ஔவை சொல்லிய வெண்பால் முனிமொழி என வருதலு மிச்சூத்திரமேயாம். ஈண்டு முனியென்பதை மாணிக்க வாசகசுவாமிகளுக் காக்கி வியாசசூத்திரத்தைச் சிலர் நீக்கப்பார்ப்பர். அவ்வெண்பாட்டில் "திருநான் மறை முடிவு" எனும் வேதாந்தங் கொள்ளக் கிடத்தலின் அச்சூத்திரம் விலக்கப்படாதெனல் துணிவென்க.

CENTRE FOR SHAIVA STUDIES Puducherry

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata

வேதஞ்சொற்ற விதிவிலக்குகளையும், பிராமணர் முதலிய ஜாதிகளையும், பிரமசரிய முதலிய ஆச்சிரமங்களையும், பிரகிருதி புருடன் ஈசுரனிலக்கணங்களையும், வேத்ததிற் பிற்பெறப்படும் ஒழுக்கம் வழக்குத் தண்ட முதலியவற்றையும் விளக்கிக் கூறுகின்ற ஸ்மிருதிகளுள் பிரதமமான - மானவதருமசாஸ்திரமெனும் மனுஸ்மிருதியானது முன்னொரு கற்பாந்தமானதின்மேற் சம்பவமான பிரமாவினா லுண்டாக்கப்பட்ட விராட் புருஷனிடத்திற்றோன்றிய சுவாயம்புமனுவானவர் பிருகுமஹ ருஷிக் குரைத்ததின் பின் அவ்விருடியால் இருடிகளுக்கு 2684 சுலோகங்களாற் சொலப்பட்டதாகும். அதனாலதற்குப் பிருகுசங்கிதையென்னும் பெயருமுன்டாயிற்று. இம்மிருதி கிருதயுகத்திலும், கௌதமமிருதி திரேதாயுகத்திலும், சங்கலிதமிருதி துவாபர யுகத்திலும், பராசரமிருதி கலியுகத்திலும் முக்கியமாயிருக்குமென முந்து நூல்கண் மொழிகின்றன.

புராணங்கள்-18-ம் நான்கிலக்ஷத் தெண்ணா யிங்கிரந்த முடையன. விவரம்-சைவம் 24000, ஸ்காந்தம் 100000, இலிங்கம் 11000, கூர்மம் 6000, வாமனம் 14000, வராகம் 24000: பௌஷியம் 31000, மச்சம் 14000, மார்க்கண்டேயம் 32000, பிரமாண்டம் 12000, நாரதீயம் 25000, பாகவதம் 18000, காருடம் 6000, வைணவம் 6000, பிரமம் 10000, பத்மம் 55000, பிரமகை வர்த்தம் 12000, ஆக்கினேயம் 8000. இவற்றுள் இரண்டிலக்ஷத் தறுபத்தெண்ணாயிரங் கிரந்தங்களாயுள்ள சிவபுராணம் பத்தும் சாத்துவிகமென்றும், ஐம்பத்தையாயிரங் கிரந்தங்களாயுள்ள விஷ்ணுபுராண நான்கும் தாமதமென்றும், அறுபத்தையாயிரங் கிரந்தங்களாயுள்ள பிரம புராணமிரண்டும் இராஜதமென்றும், சூரியபுராணமும் அக்கினிபுராணமு முக்குணயுத்த மென்றுங் காந்த புராணங் கழறும்.

ஸ்ரீசிவபெமானானவர் வேதாகமங்களை யோதவுமுணரவு மேலாத வேனையோர் நிமித்தமாக அவ்வேதாகம சாரத்தையுட் கொண்ட சரிதமாகிய புராணங்களையருளி நந்திதேவர் மூலமாக அகஸ்தியராதி பெரியோர்கட் குபதேசித்தனர். இம்முறையுள் வந்தவரும் பிரமகுமாரருமான சனற்குமாரமுனிவரிடத்தில் வேதவியாசருபதேசிக்கப்பெற்றுத் தம் மாணாக்கருளொருவராய

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

சூதமாமுனிவருக்குப் புராணமெல்லா முபதேசித்தனர். அவர் நைமிசாரண்ய முனிவராதி பெரியோர்கட்குரைக்கப் போந்த புராணங்களே இப்பதினெட்டு மென்க. புராணமென்பது பழமையெனப் பொருளாம்.

சிவபெருமானது திருவருள் விலாசத்தினை விளக்கா நின்ற பாத்ம புராணமானது பூருவம் உத்தரமெனும் இருகூற்றது. இதற்கு விரோதமாகச் சிவபெருமானை யிழித்துணர்த்து விண்டு மூர்த்தியை யுயர்த்து நீர்த்தான "விஷ்ணுபாத்மோத்தரம்" எனும் புத்தகமொன்று வைணவர் வைத்திருக்கின்றனர். அது பாத்மபூருவத்திற்கு விரோதப்படுதலினால் வியாசபகவானருளிச் செய்த பாத்மோத்தரமன்று; அவ்வைணவர் கற்பனைச் சுவடிகளிலொன்றென்று சைவத்திருவாளர் சரதஞ் சாற்றுகின்றனர். முன்னை நாளிற் பாகவத விஷயத்தின் விவாதநேரிட்டுப் பகவதிமான்மியமாகிய தேவி பாகவதம் பிரமாணமா? கிருஷ்ணபாகவதம் பிரமாணமா? என வெழீஇய சங்கையின்மீது "பாகவதமெனும் பெயர் வழக்கானே கிருஷ்ணகாதை முதலியவற்றை யெவராவது பிரஸ்தாபிப்பரேல் அவர் குற்றத்திற் கேற்ற தண்டனைக்குளாவர்" என்று வடதேயத்துச் சோதிபுர மெனும் பட்டணத்தரசன் தீர்மானித்த தீர்வையிருத்தலினாலும், சுகர்பாகவதமெனப்படு மிந்தக் கிருஷ்ண பாகவதம் புராணம் பதினெட்டிற் சேர்ந்ததன்றென்பது பன்னீராயிரங் கிரந்தங்களாற் பங்காளதேயத்திற் கௌடப்பண்டிதர்கள் நன்குதாபித்தெழுதிய நூலொன்றிற் காணப்படுதலினாலும், ஜனன முதன் மோக்ஷபரியந்தமுள்ள சுகமுனிவரது வரலாற்றினைச் சால விளக்குகின்ற பாரதாதிகளில் அவர் பாகவதஞ் சொல்லிப்போந்தாரெனல் இல்லாமையால் அம்முனிவராற் பரிக்ஷித்து மன்னனுக்குப் பாகவத முபதேசிக்கப்பட்டதென்றல், சிறுவரையும் பொருந்தா தென வறியப்படுதலினாலும், அப்பாகவதா ரம்பத்தில் எல்லாப் புராணங்களையும் பாரதத்தினையு மருளிச் செய்ததின் பின்னர் மேம்பட்டதோ ருண்மையுணர்ந்து விஷ்ணுபக்ஷமாக இப்பாகவதஞ் செயப்பட்டதெனத்துலக்கியிருத்தலினாலும், வியாசர் திருவாக்காகிய ஏனைய புராணங்களின் வாக்கிற்கும் இப்பாகவதத்தின் வாக்கிற்கும் பேதங் காணப்படுதலினாலும்இது

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata

பதினெண் புராணங்களி லொன்றெனப்படு பாகவதமன்று; இக்காலத்தொரு தமிழ்ப்புலவர்-திருவண்ணாமலைக்குச் சுதரிசனகிரியெனும் பெயரமைத்துச் சுதரிசனகிரிப்புராண மொன்று வைணவமதபக்ஷமாகக் கற்பித்தது போலவே யக்காலத்திலும் வைணவசமயியா யிருந்த பொப்பதேவரெனும் பெயரிய ஒரு வடமொழி வித்துவானாற் சிவபரஞ்சுடரைப் பெரும்பான்மை தாழ்த்தி விஷ்ணுமூர்த்தியை யுயர்த்தி யெழுதப்பட்ட நவீனபாகவதமென்றும். தேவிபாகவதமே யப்பதினெட்டி லொன்றான பாகவதமென்றும், அதனிற் சிவசக்திவடிவம் விஷ்ணுமூர்த்தமெனக் கூறுதலின் அது விஷ்ணுபுராணமாமென்றுஞ் சைவர்கள் தீர்மானிக்கின்றார்கள். சொல்லிய சுகர்பாகவத மன்றி யனேக ஆயிரங் கிரந்தங்களி லனேக பாகவதமுண்டெனவும் வைணவர்கள் பெருமையாய்ப் பேசிக் கொள்வார்கள். எப்படிப்பேசினும் எவ்வித புத்தகத்தை யுண்டாக்கினும் நரசிம்மத்தினது வீறாப்பையடக்கவந்த சரபத்தினது மகிமையை விளக்குஞ் சரபோபநிடதம் "யொவாம பாதார்ச்சித விஷ்ணு நேத்ரஸ்த ஸ்மைததௌ சக்ரமதீ வஹ்ருஷ்ட: தஸ்மை ருத்ராய நமோ அஸ்து" என முழங்கும்வழி விஷ்ணுமூர்த்தி யானவர் சிபெருமானின் இடது திருத்தாளில் தமது கண்ணாகிய கமலபுட்பஞ்சார்த்திவழிபட்டுச் சக்கராயுதம் பெற்றனரென்பது ஒழிக்கத்தக்க தன்றன்றே. என்னை? பிரபல சுருதியாகலின்.

ஐந்தாம்வேத மெனப்படு பாரதம்:- *இலக்ஷத்திருபத் தையாயிரங் கிரந்தமுடைத்து. இதில் வைக்கப்பட்டதாகவுள்ள பகவத்கீதையானது வியாசர் வாக்கியமன்றென்பது அனேக ரபிப்பிராயம். இக் கீதைக்குச் சங்கரர், இராமாநுஜர், மத்துவராகிய மூவரும் தத்தம் மதச் சார்பாகப் பாஷியஞ் செய்திருக்கின்றனர். ரிபுகீதை சிவரகசியத்திலும் பிரமகீதை சூதகீதை யெனு மிரண்டுங் காந்த புராணத்திலும், ஈசுரகீதை கூர்மபுராணத்திலும், சிவகீதை பாத்மபுராணத்திலு முள்ளன இவை யுபநிட தப்பொருள்களையே யுட்கொண்டிருக்கின்றன. வேறு கீதைகளு முளவென்ப.

* "சுலோகந்-தீதறவோ ரிலக்கமதாச் செப்பினான் சுருதியெலாஞ் செப்பி னோனே" என்பது நலலாப்பிள்ளை பாரதம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

சூதமாமுனிவரிடம் புராணங்கள் கேட்டுக் களி தலைமீக் கொண்ட நைமிசாரண்ய முனிவர்களே சௌனகாதி முனிவர்கள். அவர்கள் 26,000-பெயராவார்கள். அவர்கள் நைமிசமெனும் வனத்தின்கண் வசித்த காரணத்தானே நைமிசாரண்யவாசிகளென் றழைக்கப்பட்டார்கள். அன்னோர் தவஞ்செய்வதற்கு யோக்கியமான இடம் அருளிச் செய்யவேண்டுமெனாப் பிரமதேவரைக் கேட்டபோது அவர் தருப்பையை (சக்கரம்) நேமிபோலாக்கிப் பூமியி லுருட்டுவித்து இது நிற்குமிடமே யவ்விடமென் றருளியபடி யேற்பட்ட விடமே நைமிசாரண்ய மெனும் பெயர்த்து. நேமிசம்பந்தம் நைமிசம். அறிதி.

(7)

சிஷி: நவின்றவாறு கடவுள் கழறுற்றதைத்தானே இலிகித ஸ்தாபனஞ் செய்துகொண்டு மற்றையர்க்குக் காட்டாமே பலரும் தத்தம் பெயரால் நூல்களை நிருமிக்கவேண்டிய ஆவசியகமென்னை?

குரு: ஸ்ரீகிருபாநிதியாகிய பரமனாற் சொல்லப்பட்டனவும், சொல்லக் கேட்டவரால் இலிகிதஸ்தாபனஞ் செய்யப்பட்டனவு மாயுள்ள சுருதிகளை அனேகர் வாசித்துப் பொருள்காண்ப தருமையாயிருந்த வவதரம் அறிந்த பெரியார் சூட்சுமமாயிருந்த குறிப்புப் பொருளைத் தூலமாம்படிச் செம்பொருளாக்கி யாங்காங்கு வேண்டிய திருட்டாந்தங்களோடு விரித்துரைத்தனர். அன்னனமுரைக்கப்பட்டவை முன்னைய சுருதி யுக்தி அநுபவமெனு மூன்றையும் பொருந்தினமையின் அவை ஆக்கியோர்கள் பெயர் கொண்டு விளங்கின. அவ்வாறு சுருதி நியாயங்களை யெடுத்துக் காட்டி யுண்மை யிற்றென இலிகித பூருவந் தாபிப்பார்கட்கு நிலையான கீர்த்தியும், உலோகோபகார புண்ணியமும், சரஸ்வதி கடாக்ஷமும், பெரியோர்கள் கொள்கையும், அன்னவர் கேண்மையும், இகபரசௌக்கியங்களும் வாய்க்குமென்பது வாய்மை.

திரண்ட பொருளுள்ளோ னொருவன் தனாது சரீர அநித்திய நீர்மையை யுத்தேசித்துத் தன்னுடைய மகார் பேரில் வைத்த அன்பால் அன்னோர் நனி நடந்துவர வேண்டிய வொழுங்குகளை ஒரு சாசனமாக வெழுதிவைப்ப தேய்ப்ப அறிவின் மிக்க புண்ணிய

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata

மூர்த்திகளாயுள்ளோருந் தாங்கள் தேடியிருக்கின்ற அருமையான ஆரணப்பொருள்களைத் தம் பின்னுள்ளாருந்தெரிந்தவ்வா றொழுகு மொழுங்குகளைக் கருணையால் எழுதி வைப்பர். இதுவே உலோகோபகார புண்ணியம். அத்தகு புண்ணியரெழுது நூல்களெத்திறமாயினும் அவை முத்திறமாகு மென்றே முதியோர் மொழிந்தார். எவ்வாறெனின்; தேவாதிதேவனிடத்திலிருந்து வந்தவைகளும், அவை கேட்டவர் தீட்டியவைகளும் முதனூலாகும் அம்முதனூல் வழியே பொருண் மறையாது வேற்றுமைப் படுத்துபு மஹா வித்துவான்கள் வழங்கியவை வழிநூலாகும். அவ்விரு நூல்களின் கருத்தொத்துத் திரிபுபடப் பண்டிதர் பகர்ந்தவை சார்பு நூலாகும். இவை தந்திரம், சூத்திரம், விருத்தியெனவு மாம். இத்திறம்பற்றி யெவர் புகலினும் பொருண்முடி பொன்றே யன்றிப் பலவிலையெனவும். பலபடக்கூறியுள்ளனவுங் கூறப்படுவனவும் மதவிகற்பங்களா மெனவும் நீ தெளிக.

(8)

சிஷி: வேதங்களையும், வேதாங்கங்களையும், புராணங்களையும், உபபுராணங்களையும், இதிகாசங்களையும், ஸ்மிருதிகளையும், உபவேதங்களையும், ஆறுசாஸ்திரங்களையும், ஏனைய நூல்களையும் அந்நூல்களிற் காணப்பட்டவர்களே யுரைத்தன ரென்பதற்கு இஞ்ஞான்று சாக்ஷி யாவர்?

குரு: ஒவ்வொன்றையு முரைக்கக் கேட்டுளாரை யெங்காயினுங் கண்டுபிடித்து நீ கடாவிய கடாவை யாமடக்க முயலினும் முயன்றபடி யவர்கள் சொல்லினும் அங்ஙன மிவருரைதா னென்ன வுண்மை? இவர் யாரோ? அவரிவருக் குரைக்கும்போ தறிந்தார் யாவரோ? எனவுங் கடாவத் தக்கவன் நீ யாதலால், நினக்கும் நின்போல்வார்க்குங் கடவுள் நேரில் யாதொன்றைப் போதித்தாலொழிய ஆசங்கையற்று ஆணை பிறவாதன்றோ. ஆயினுஞ் சில நியாங்கள் செப்புவாம். நாதமே வேதமென்னு நிச்சயப்படி நாதமாகிய வொலியானது அக்ஷரங்களாக வுருப்பட்டு, அவை வாக்கியங்களாக ஏய்ந்து, அவை சாஸ்திரங்களாகச் சமைந்து, அவை ஜக ஜீவ பர லக்ஷணங்களை யுணர்த்த ஹேதுவாக விளங்கினமை அறிஞர்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0 In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

யாவரு முணரற்பாற்றே. அவ்விளக்கத் தன்மைக்கு ஆதாரமாகிய அவ்வொலியாதி யவ்வா றாகாவிடினும், ஆகியவற்றைப் பயிற்சிக்குக் கொண்டுவராவிடினும் நம்மனோர்களும் உயர்திணை மக்களென்பதின்றி (இழி திணை) அஃறிணை யுயிர்களா யிருத்தற் கையமில்லை. அதனாற் சர்வ வாக்குமயமே யந்தவேதமாம். கேட்டி, மநுஷ்சரீரம் பெற்றுக் கானில்வசித்து மானாபிமானமின்றி விலங்குகள் போலத் திகம்பரமாகத் திரிதந்து ஆ ஓ என்று சப்தமிட்டுக் கொண்டு நக்கவாரமெனும் பெயரிய தீவிலும் வேறு சில கடறுகளிலுமிருந்த காட்டு மனிதர்கள் அக்ஷரங்களையும் வாக்கியங்களையுஞ சாஸ்திரங்களையு மித்தன்மையவென் றுணர்ந்ததுமில்லை; யாதொரு பொருள்பட வாக்கியம் புகன்றதுமில்லை யென்ப துண்டுகண்டாய். அதனாலவர்கள் உயர்திணையல்லா அஃறிணை யுயிர்களாயிருந்தன ரெனலு முண்மையன்றோ. அவ்வுண்மை யானே ஏனைய வுயிர்களையு முற்கூறிய வேதவாக்கியாதிகளே யுயர்திணை யுயிர்க ளாக்கற்கு ஹேதுவாக வுளவென்றறிய வேண்டும். அவற்றினை யுயிர்களே யுண்டு பண்ணி யிருக்கலா மென்றாலோ அன்றெனக் காட்டுகிற்பாம்.

இரௌரவாகமப் பொருளாக ஆசிரியர் மெய்கண்ட தேவ ரருளிய சிவஞானபோதம் 8-வது சூத்திரம் 4-வது யாப்பில் "அறிவிக்கவன்றி யறியாவுளங்கள்" என வருதற்கு அருத்தம்- ஒருவரறிவித்தாலன்றித் தாமேயறியாச் சிற்றுணர்வுள்ள ஜீவான்மாக்களெனவாமாறு மேலுரைத்த காட்டுமனிதர்கள் அக்ஷர நிருபண வாக்கியங்களையும், அவற்றின் பொருள்களையும் அறியு மாற்றலற் றிருந்ததுமன்றி வாயிருந்தும் பேச வேலாமலு மிருந்தார்கள். பின்பு மொழியை வெளியிட் டுணர்த்தத்தக்க மநுடர்கள் அவர்களைப் பலாற்காரமாகப் பிடித்து நன்று தீது புலப்படக்காட்டி வாக்கிய முதலியன கற்பித்து நாட்டு மநுடரைப்போல வாக்கினார்கள். ஆகலின், எழுத்தாக வமையும்படியான சொல்லையும் பொருளையும் யாவனொருவன் கற்றுக்கொண்டு மற்றொருவனுக்குச் போதிக்கத்தக்கவனே யல்லாமல் அவற்றைத் தானே யுண்டு செய்வானென்பதுந் தானே கற்றுக் கொள்வானென்பதும் எஞ்ஞான்று மில்லை.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

கற்றதினின்றும் வேறொன்றை விவேகியானவன் தானே கற்பித்தல் கூடும். இம்முறையின்றி யமையா எழுத்து மொழி பொருளெனத்திகழ்ந்த வேதாகமாதிகளை வெளியிடற்குப் பரமாசாரியரா யிருந்தவர் முற்றுணர்வும் முழுத்தொழிலுமுள்ள பரமேசுரரே. அப் பரமேசுரரான் வெளியிடப்பட்டவைகளைக் கேட்ட பரம சீடரும், அவருபதேசிக்கக் கேட்ட முறையே வெளியிடு குருவும், அம்முறையே யோது சீடருமே பரம்பராக் கிரமமாக வுலகிலிருக்கின்றனர். இனிவந்து கற்போரும் அப் பரம்பரையினரேயாவர். இவ்வுண்மையானே, ஒருவனது வாக்கிலிருந்து வெளிப்பட்டு மற்றொருவனது செவிவழி நுழைந்து ஹிருதயத்தி லுறைந்து பின்ன ரவன் வாக்கு வழியாக வருஉந் தன்மையுள்ள வேதாகமாதிகள்.- ஒருவருக்கொருவர், போதிக்கவந்தனவென்ற லுறுதியேயாம்.

(9)

சிஷி: பரமேசுரப் பரமாசாரிய ரருளிய வண்ணமே கேட்ட பரமசீடர் பிழைபடாது பிறர்க்குப் போதித்தாரென்பதற்கும், அன்னோர் போதித்தபடியே பிறரும் மற்றையோர்க்குப் போதித்தா ரென்பதற்குஞ் சான்றென்கொலோ?

குரு: நன்று கடாயினாய். பரமேசுரர் ஜீவர்கணிமித்த மனுக்கிரகித்த வாக்கியமனைத்தும் மிக வொழுங்காயும், நீதியாயும், ஆழ்ந்த கருத்துக்க ளமைந்தனவாயு முள்ளவை யென்பது சரதம். இந் நீர்மை வாய்ந்தநூல் எதுவானாலும் அது வுண்மைநூலென வங்கீகரிக்க வேண்டியது நியாயமாகலின், அத்திறத்தநூலனைத்தும் பேசிய பெரியோர் பிழைபடா துரைத்தன ரென்பதற்கு அத்திறமையே சான்றாம்.

(10)

சிஷி: அவ்வா றுரைக்கபட்ட வழிநூல் சார்புநூல்களுக்கு முதனூலாகிய சுருதியொடு யுத்தியும் அனுபவமும் ஒவ்வாமை காணப்படுத லின்று கொலோ?

குரு: ஆவசியகமான ஒரோவொன்று குறித்துரைத்த வழியிற் சுருதி யுக்திகட்கு ஒவ்வாமைபோற் காணப்படுவன வெல்லாம் ஒவ்வுதலை யியைய வந்துழி விளக்கல் செய்வோம். ஈண்டு

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

விளக்கல் செய்வதென்னெனின், சுருதி ஸ்மிருதிகளாயுள்ள பொதுநூலானது கரும பக்தி யோகஞானங்களையும், தேவதாகுண ஐசுவரியங்களையும் உள்ளபடி யபிமானமின்றிப் போதிப்பதில் கருத்தாவின் வல்லமையாதி குணங்களையும், அவ்வாணை வழி நிற்கின்ற ஆன்மாக்களின் தொகுதியையும், அவைகளி னெண்ணவிருத்தியையும், சுக துக்கங்களையும், ஈசுரமாயாவிசித்திர விலாசத்தையும் அளவிட் டுரைக்கு மாற்றலின்றித் திகைத்து நிற்கும். அத்திகைப்புண்டாமிடமே யந்நூ லிளைப்பாறு மிடம். இத் திகைப்பு யுக்தி யநுபவ மொவ்வாமை யாகாது. அற்றாகலினன்றே வாக்குமயமான அனந்த மறைகளாலும் அளவிடப்படாதது தெய்வ மென்மனார் கற்றோர். தெய்வமென்றதிற் றெய்வகாரியமு மடங்கும்.

புராண கலை முதலிய சிறப்புநூ லானது பொது நூலிற் சொல்லியுள்ள ஒவ்வொரு பாகத்தையு மொவ்வொரு தெய்வத்தின் பங்காக்கிப் பொது நூலை யநுசரித்தும் அநுசரியாததுபோலக் குறித்து நிற்கும். இங்ஙனம் சிறப்புநூ லபிமானிகள் அவ்வச் சிறப்புநூலையே விரும்பிப் பொதுநூலை விலக்குவார்கள். அஃதவிவேகமே. என்னை? சிறப்புநூலா லுண்டாகின்ற விபரீத வாதங்களைப் பொது நூலே தீர்த்துக் கொடுக்கு மெனல் மேலோர் துணிபாகலின்.

(11)

சிஷி: புராணேதிகாசங்களிற் புகலப்படுகின்ற நாட்டு வர்ணனையையும், ஆண்டோன் வர்ணனையையும், போர்த்திற முதலான பிரபல விஷயங்களையு நோக்குழி யுள்ளபடி சொல்லப்பட்டனவாக நினைக்க ஹேதுவில்லை. அதி வியப்பாக விருக்கின்றன! அவ்வுண்மையென்னேயோ?

குரு: தருமங்குறைந்த இக்காலத்துள்ள சாமானிய பிரபுக்களின் செய்கைகளை யாதியோடந்தமாக வெழுதுவதாயின் அவை யெத்துணையோ விரிவாகவும், உவமிக்க வரிய பல சித்திர விசித்திரங்களாகவு மிருக்கும். இவை யிப்பிடியாயின், அக்காலத்திற் சத்தியம் புனிதம் ஞான மென்பவற்றோடு தேவாநுக்கிரக சாமர்த்திய சாதுரிய தைரிய வீரிய காம்பீரியங்களும் பொருந்தி வாழ்ந்த அரைசர்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata

முதலானோர்களின் நாட்டுவர்ணனையையேனும், ஆண்டோர் வர்ணனையையேனும், போர்த்திறமுதலான பிரபல விஷயங்களையேனும் உள்ளபடியோத வமையா வெனற்கு மையமுண்டோ? அதனாலவற்றுண் முக்கிய மானவைகள் மட்டும் புராணாதிகளிற் புகலப்பட்டன. அவற்றை நாவன்மையுள்ளார் விரீஇ வியாக்கியானஞ் செய்த லினிது பொருந்தும். நல்ல சுரூபிணியாகிய வொரு பெண்ணினது வனப்பைப் புலவர்கள் அனேகவுவமானங் கொண் டியம்பினும் அவை போதாமையாக நிற்குமே யன்றிப் போதுமானவையாக நில்லா. யாங்ஙனமெனிற் கருவிழியை வண்டென் றுவமிப்பதில் நிறமட்டுமியைந்து உருவம் முற்று மியைவதில்லை. அவ்வண்டு விழியைப் போல மிருது தெளிவுக ளுள்ளதுமன்று. மேனியினழகு குறித்து யாதொரு நிறங்காட்டி யுவமிபபதில் ஏற்ற நிறஞ்சாயல் முதலியன இனிதொவ்வுமா றில்லை. இவ் விதமே மற்ற வுவமேய வுவமானங்களினுமாம். ஆதலினால் உவமானம் :- உவமேய விஷயத்திற்போலியாம். சில அலங்காரம் அதிகமுமாம். ஒன்று காட்டுதும். ஓரரையனுடைய (கோட்டை) அரணானது அண்ட முகட்டையளாவியிருந்ததென வறைதல். அத்றகுப் பொருந்து மருத்தமு முண்டு. என்னை? அண்டமுகடு பிரமாண்டத்தின் கடாகமன்று, கண்கூடளவாக மூடுண்ட வாகாயமே யது, அதனை யவ்வரணளாவியிருந்த தெனக் கூற வியையு மகாலின். இது போற் பலவியையும். மற்ற அதி யுவமானாதிகள் அணியிலக்கணத்தில் உவமையணி முதல் ஏதுவணியீறாகக் கூறப்பட்ட நூறணிகளிலெதனை யேனும் பொருந்தும். அவை கல்விச்சாமர்த்தியப் பிரயோக மென்றறிவர் கற்றுவல்லார். நிற்க. (உவமேயம் = உவமிக்கப்படுபொருள்.)

இத் தேயத்தின் கண்ணே யிக்கால மோடிக்கொண்டிருக்கின்ற தூமரதமும், மின்தபாலும் இப்பிராந்தியத்திலேற்படுமுன்னம் அவை கேள்விப்பட்ட வனேகர் துரகம் மாடு முதலிய பிராணிகளிழுத்துக்கொண் டோகாமல் தானே வண்டி தரையிலோடுமா? ஒரு தேசத்திலிருந் தொருதேசத்திற்கு உயிரற்ற இரும்புக்கம்பியுடனே சமாசாரந் தெரிவிக்குமா? இவை பொய்யெனப் புகன்றதைவிட்டு மெய்யென வொப்புக் கொண்டதை யீண்டியாவரறியார்? ஆகலிற் சாதாரணமல்லா அரிய செய்கையைச் செய்யவல்லார் செய்குவரால்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

இருபது வருடங்கட்கு முனனர்ச் சிவகங்கைச் சீமையைச் சேர்ந்த கலியநகரிச் சத்திரத்தின்கண் ஒரு வித்துவான் இரவில் இராமாயணப் பிரசங்கஞ் செய்துகொண்டு வருகையில் வில்லிலிருந்து விடுபட்ட அஸ்திரங்களி லொன்று- ஏகம், தசம், சதம், சகஸ்திரம், அயுதம், (இலட்சம்) நியுதம், பிரயுதம், கோடி, தசகோடி, சதகோடி, அற்புதம், நிற்புதம், கர்வம், மகாகர்வம், பத்மம், மகாபத்மம், சங்கம், மகாசங்கம், கோணி, மகாகோணி, கிதி, மகாகிதி, சோபம், மகாசோபம், பரார்த்தம், சாகரம் பரதம், அசிந்தியம், அத்தியந்தம், அநந்தம், பூரி, மகாபூரி, அப்பிரமேயம், அதுலம்; அகம்மியம், அவ்வியக்தம் முதலான எண்ணிறந்த அஸ்திரங்களாகத் தோன்றிற்றெனச் சொன்னதை மார்க்கண்டேய புராணம் தருமபக்ஷிஜைமினிசம்வாதம்-13வது அத்தியாயத்திற் காலதூதுவன் கூறிய விடையில்.-

"எவன் பகைவனுக்காயினும் நல்லறிவைக் கெடுப் பதன் பொருட்டு எண்ணுவானோ, கெடுதியாகிய நூல்களைப் போதிப்பானோ, நூல்களினுண்மைக் கருத்தினை மாறுபடுத்துக் கூறுவானோ, நன்மை தாராச் சொற்களைச் சொல்லுவானோ அப்படிப் பட்ட பாவத்தையுடைய விவர்தாம் (நரகத்தில்) மலையுச்சியினின்றும் பலகாலுங் கீழே வீழ்பவர்"

என்று போதிக்கப்பட்ட நியாயமுணராத வொருவன் தடுத்து இது சிறுவரையு நம்பத் தகாததென்று மனப் பூரணமாகப் பேசிக் கலாம் விளைக்குங்காலை அவ்வுழிக் கௌபீனதாரியாய் வந்த மஹாத்துமா வொருவரதனை யறிந்து வியசனித்து அந்தப்பிரசங்கச் சவையிற்புக்கு ஆங்கு இலைக்கலந் தைப்பான் வகிர்ந்து செருகியிருந்த ஈர்க்குகளி லொன்றை யெடுத்துச் சாணளவாக முறித்து உயர வெறிந்து சவைமுன் அந்தரத்தில் நிற்இயிடலும் அஃதசைவுண்டு தன்னளவாய எண்ணிறந்த ஈர்க்குகளைக் கக்கியகாலை அம்மஹானாவார் இது பிரணவ மகத்துவமாகும்; அதனையறியாது வாதிக்க வேண்டாமெனப்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பிரமாணங்காட்டி யருளினர். இதனை யச்சவையி லிருந்து கண்ணுற்றவரும், உமிழப்பட்ட அவ்வீர்க்குகளில் ஒரு பிடியளவு தம்மில்லங் கொடுபோந்தவரும், இஞ்ஞான்று *பாம்பனெனும் பதியின் கண் தமிழ்ப்பாட சாலைப் பண்டிதரா யிருக்கின்றவருமான நம் உபாத்தியாயர் முனியாண்டியா பிள்ளையவர்க ளுண்மையாக வுரைக்க யாங் கேட்டனம், இவ்வாறு மற்றொருவருஞ் சொல்லினர். அற்புடையாய்! இத்திருட்டாந்தங்களா னே யாதொரு பிரபலங்கொண்டு யாதொரு பிரபலகாரியம் இக்காலத்து மியற்றல் கூடுமாகலிற் புராணாதிகள் புகல் சரிதங்கண் நம்பத் தக்கனவே.

(12)

சிஷி: நன்று, புராணங்கள் ஒன்றோடொன்று மாறுபட்டும், புராணங்களும் வேதாகமங்களுமொன்றோ டொன்று வேறுபட்டுமுள்ளன: அதனால், புராணமெல்லாம் வெறுங்கதைகளேயென்று சில ருள்ளி யெள்ளி அவற்றைப் படியாதும் விட்டு விட்டனர்; அவ்வுண்மை யெவன்?

குரு: உலகசிருஷ்டி யாரம்பமானது எத்தனையோ யுகங்கட்கு முன்னுளதாய்க் கணித்தற் கரிதாகிவிட்டது. அவ்வாரம்பத்திற் போந்த வேதம் மாறுபடாது. ஏனெனின், வேதத்திலுள்ள வொரு வாக்கியத்தில் ஓரெழுத்துக் குறையினும் மிகினும் மாற்றப்படினும் அவ்வாக்கியமானது சுரத்தோடு ஒவ்வ வோதுதற்கிசையா மையின், அப்படி யிசையாதபோது வியாகரண விரோதமும், சந்தசு எனுமெழுத்துக் கணித விரோதமும், நியாய நூல் விரோதமு முண்டாகலின். பின்னர் வந்த வேதோப நிடதங்களும், மற்ற நூல்களும் நாளடைவிற் பலரானும் பன்முறை பிரதிகள் செய்யப்பட்ட வகையிலும், ஒருவர்க்கொருவர் போதித்த சகையிலும் பரஸ்பர விரோதமடையக்கூடு மென்பது சிந்திக்கத் தக்கதே. அவ்றறுட் புராணங்களொன்றோடொன்று மாறுபடின், வேத வேதாந்தங்களும், ஆகமங்களும் பிரமாணமாய் நிற்கும். வேதாந்தோபநிடதங்க ளொன்றோடொன்று மாறுபடின், வேதாகமங்கள் பிரமாணமாய் நிற்கும். பிறவு மன்ன.

*திருவிராமேச்சுரத்தின் மேம்பாலான இவ்வூரின் வட பாலில், பாம்பணையிற் பள்ளிகொண்ட திருமால் கோயி லொன்றிருந்தது காரணமாக அவ்விடஞ் சார்ந்தவூர் பாம்பணை யெனும் பெயர்பெற்றது. அக்கோயிலிருந்த விடமும் இக் காலங் கடலாயிருக்கின்றது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

வேதாகமங்கள் புராணங்கட் காதாரமா யிருத்தல் பற்றிப் புராணங்கட்கு இலக்ஷியார்த்தமும் வாச்சியார்த்தமும் உரிமையாயின. இலக்ஷியார்த்தமென்பது தத்துவார்த்தமாம். வாச்சியார்த்த அடைவெப்படி யென்னின் சரிதைத்தலைவர் பாரம்பரியம், பிரபஞ்சத் தோற்றம், பிரபஞ்சநாசம், மனுக்களரசாட்சி, மனுவமிச வரலாறு எனும் ஐந்துறுப்புகளும் பொருந்த வித்துவான்கள் விரீஇக் கூறுத லென்மனார் நல்லியறபுலவர். இவ் வைந்தனையும் புராணத்திற்குரிய பஞ்சலக்ஷணமென்ப. புராணங்கண் மாறுதலடைந்தன வென்பதை யெப்படிக் காண்பதெனின், மேற்சுருதி யுக்தி அனுபவங்கட் கொவ்வா வழியி லென்றுணர்க. அவ்வழி யுணர்ந்து உண்மைப் பொருள் கோடல் அறிஞர் கடமையாம். ஈதொழித்துப் புராணங்களை வெறுங்கதையென வுள்கிப் படியாது விடுவோர் புராணசாரம் இற்றெனவறிய அறிவுத்திடன் பெற்றிலாரேயாவார். மேலும் புராணங்களைக் கை விட்டவர்கட்குப் பண்டை வரலாறு கைவிட்டொழிவ தன்றி நல்லொழுக்கமு நீங்கும், பிரபல சுருதியாகிய சாந்தோக்கியத்தில் "இதிகாசபுராணம் பஞ்சமம்" அதாவது ஐந்தாவது வேதமெனச் சொலப்படுதலினானும், ஸ்ரீஞானசம்பந்தமூர்த்தி நாயனார் திருநாவுக்கரசு நாயனார் சுந்தரமூர்த்தி நாயனார் திருநாவுக்கரசு நாயனார் சுந்தரமூர்த்திநாயனார் மாணிக்கவாசகசுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய தேவார திருவாசகங்களிலும் மதுரைக் கடைச்சங்கத்துத் தமிழ்த்தலைமைப் புலவராகிய நக்கீரதேவர் திருவாய் மலர்ந்தருளிய கோபப் பிரசாதமெனு நூற்கண்ணேயும் ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகள் திருவாக்காகிய திருப்புகழ் முதலியவைகளிலும் அந்தப் புராணங்கள் வேதம்போற் பிரமாண மாக நிலைபெறு மாண்புடையன வென்றல் துணிவே. இலக்ஷியார்த்தம் பிண்டத்திலும், வாச்சியார்த்தம் அண்டத்திலு முள்ளபடி பொருந்தும்.

(13)

சிஷி: வேதம் உலகசிருஷ்டியாரம்பத்திற் பிறந்த தென மேலே நவின்றதறகு மாறாக முகம்மது மார்க்கத்தாருள்ளுங் கிறிஸ்து

* நியாயனாா, நாயகனார், நாதனா ரென்பவ்றறென்றே நாயனார் என வாமிற் றெனலாம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

மார்க்கத்தாருள்ளுஞ் சிலர் துவாபரயுகத்திற் றோன்றினவரெனப்படுகின்ற வேதவியாசர் அதனை யுண்டு செய்தாரென்றும், அவ்வியாசர் இற்றைப் போதிற்கு 4160-வருடங்கட்கு முன்னர்த்தான் கிரியைகளை வகுத்துச் சாதி நான்கெனப் பிரித்தாரென 190-வருடங்களுக்கு முன்னிருந்த ஐரோப்பியப் பண்டிதர்கள் பகர்ந்தார்களென்றும், சிலர் வேதாகமங்கள் இற்றைக்ககு 3220-வருடங்களுக்கு முன்னெழுதப் பட்டன வென்றும், சிலர் அவை 2320- வருடங்களுக்கு முன்னரும் புராணங்களுட் சில 1000 வருடங்களுக்கு முனனரும் சில 500-400 வருடங்களுக்கு முன்னருமாக வெழுதப்பட்டன வென அனுமானிக்கப்படு மென்றும், அவை ஒன்றுக்கொன்று விபரீதமும் தகுதியின்மையுமாயுள்ளன வென்றுஞ் சொல்லுவதென்னை கோலோ?

குரு: அன்புடையாய் ! வியாசர் பிறக்கு முன்னரேயே வேதமுண்டென்பதை யவ்வேதமே யுணர்த்தும். அதனை யோதவு முணரவு மேலாத ஏனையோர் நிமித்தமாக ஸ்ரீசிவபிரான் திருமாலை நோக்குபு "போந்தவ ணிருந்தபின் புகரி லாமறை யாய்ந்திடின் வந்திடும்" எனக் காந்த புராணங் கழறுகின்றபடி நான்கு வேதமும் ஒருவருணர்த்தாமே நீ யாராயும்போது உனக் கெளிதாக வருஉ மென்றருளிய வண்ணந் திருமா லவதாரபுருட ராகிய அவ்வியாச முனிவர் வேதமுணர்ந்த பொருளையும், தாம் பிறக்குமுன் னுண்டாயிருந்த ஆகம புராணங்களையும், ஸ்மிருதிகளையும் ஆதாரமாகக் கொண்டு கூறிய பதினெண் புராணங்களையும் இதிகாசங்களையுஞ் சூதமுனிவர் மூலம் உலகர்க்களித்தனர். இவ்வாறளித்தகாலம்.- பாரதயுத்தத்திற்கு முன்னும் பின்னுமாக விருக்க வேண்டு மென்பது எமதபிப்பிராயம். அப் பாரத யுத்தத்தில் வெற்றியடைந்து பட்டாபிஷேகம் பெற்ற தருமபுத்திரரது ஜனன காலம் சுவேதவராக கல்பத்தில் வைவச்சுவத மனுவந்தரத்தில் 28-வது சதுர் யுகத்திலுள்ள துவாபர யுகாந்தத்தில் தாதுவருடம் உத்தராயணம் வைகாசி மாதம் பூருவ பக்ஷம் துவிதியை பரணி நக்ஷத்திரம் விருஷப லக்கினமாகும். பாரத யுத்தாரம்பகாலம், - சித்தார்த்தி வருடம் மார்கழி மாதம் பூருவபக்ஷம் மங்களவாரம் திரயோதசியாகும். அவ் யுத்த முடிவு அமரபக்ஷத்து அமாவாசையாகும்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஜாதி நான்கும் அவற்றின் விகற்பங்களும் வியாசர் பிறக்கு முன் னுண்டென்பதை யவருக்கு முன்னதாயுள்ள மனுஸ்மிருதி நனியுணர்த்தும். சிவாகமு முணர்த்தும். கிரியைகளும் அவ்வாறே யுண்டெனற்கு அம்மிருதியு மாகமங்களும் வேதங்களும் கரியாகும். வேதம் வெகு விரிவாயிருந்தமையால் அவ்வியாசர் அதன் நான்கு கூறுகளில் ஒவ்வொன்றையு மொவ்வோரினத்தார் முதலிற் கற்க வேணடுமென விதித்தனர். அவ்வாறு கற்றுவருகின்றமையால் சிலர் இருக்குவேதிய ரென்றும், சிலர் யஜுர் வேதிய ரென்றும், சிலர் சாமவேதிய ரென்றும், சிலர் அதர்வண வேதிய ரென்றும் அந்தணர்களிற் சொல்லப்படுகின்றார். இவ்விதியால் ஒரு வேதியர் மற்ற வேதங்களைக் கற்றல் கூடாதென்ப தன்று. ஏற்பட்டதை முன்னர்க் கற்க வேண்டுமென்பது கருத்து. அதர்வண வேதியர் உத்தரதேயத்தி லிருக்கின்றனர். (கரி=சாட்சி.)

நீ சொன்னவாறு கணக்கிடுவோர் இவ்வுலகம் படைக்கப்பட்டு ஆறாயிரவருட மாகுமென அபிப்பிராயங் கொடுக்கும் (கிறிஸ்துமதநூல்) விவிலியநூலை நம்புவோர்களே யாவர். அவர் கணிதத்தையும் அபிப்பிராயத்தையஞ் சோதிட கணித பூர்வமாகச் சூரிய சித்தாந்தத்திற் சொல்லப்பட்டபடி சிருஷ்டியாரம்பமாகி நூற்றுத்தொண்ணூற்றைந்து கோடியே ஐம்பத்தெட்டி லக்ஷத்தெண்பத்து நாலாயிரத்துத் தொளாயிரத்தெண்பத் தொன்பது வருடங்களாயின வென்பதை யறிகுநர் ஒப்புவாரோ? ஒப்பாரென்க. இங்ஙனம் பல்கோடி யோடு வந்த வருடங்கள்---இஞ்ஞான்றுள்ள பிரமாவுக்குச் சிலவயதின்மே லிரண்டாயிரஞ் சதுர்யுகங்களாகிய ஒரு பகலிரவுகடந்து மறுபக லுதித்ததின்மேல் வந்தவை யெனக் கொள்க.

உரைத்தபடி யுலகம் படைக்கப்பட்டு ஆறாயிர வருடமென்றபிப்பிராயந்தரற்காதாரமாயுள்ள (கிறிஸ்து மதநூல்) பைபிலுக்கு முழுவிரோதமாக, (பூததத்துவ வானதத்துவ சாஸ்திரங்களிற் பேர் பெற்றவரும் ஆங்கில பாடைகற்றவருமான) எம். பிலண்டிட் எனும் பெயருடைய சாஸ்திரியார் பாரீஸிற் செய்த பரசங்கத்தில், கிரகமனைத்தும் ஒரே பிரமாண்ட பிண்டமாகவிருந்தன, பின்பு நாளடைவிற் பல கிரகங்களாகப் பிரிந்தன, வெள்ளியும் புதாதிக் கிரகங்களும் விபாகமாதற்கு ஆறு

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பிரளயங்கட்கு முன்னதாக இப்பூமி பிரிந்திருக்கவேண்டும், இதிற் சரியான பிராணிகள் ஜனித்தற்கு ஐந்துகோடி வருடங்களாக யிருக்க வேண்டும். பிரிந்த பூமியானது சூரியக்கிரக பிண்டத்திலிருந்து நீங்கியகாலம் அறுநூறு கோடி வருடங்களா யிருக்க வேண்டும் மென்று ஸ்தாபித்தனர். இதனானும், மேற்சொற்ற சித்தாந்தத்தானும் அவ் வாறாயிர வருட மென்பது அவலமுற் றொழியும்.

மேலுங்கேட்டி. அன்னிய சமயத்தாருள்ளும் விவேகிகளாயுள்ளார்; சொற்ற வேத முதலிய நூல்கட்கும், அவைகளு ளெழும் பொருள்கட்கும் இழுக்குரைக்கத் துணியார். அப்படித் துணியும்விவேகிகளும் நீயு மறியும் பொருட்டு ஈண்டுச் சில கூறுதும். சித்தாந்த சிகாமணி பத்தத்தலம்,-

ஏயுமா சார நிந்தை யாண்டுள தவ்வி டத்திற்
போயுற லொழிக வென்றும் புகல்சிவ நிந்தை செய்வோன்
தீயக முறாது நிற்க சிவநிந்தை யவர்க்கு நூறாண்
டாயினும் பரிகா ரஞ்செய் தகற்றிடற் கரிது மாதோ.

கண்டன னாயின் முக்கட் கடவுளை நிந்திப் போனைத்
தண்டனை புரிந்து கொல்க வரிதெனிற் சபிக்க நின்று
மண்டனில் வலிய னன்றேல் வார் செவித் துணைகள் பொத்திக்
கொண்டவ ணகன்று செல்க குலைகுலைந் ததமல பத்தன்

சந்தான சர்வோத்தமாகமத்தின் சிவதருமோத்தரம்.

"நிறுத்திட வலானமல னூனெறியை யென்றும்
மறுத்திட வலானமல மார்க்கமய லுற்றே
நிறுத்திலன் மறுத்தில னெனிற்கரிச னேச
மறுத்தவனை மாய்க்கைகரி சல்லவற மாமே"

என்னு மிச் செய்யுள்களில் "ஆசார தூஷண மெவ்விடத் துண்டோ அவ்விடத்துச் செல்லா தொழிக, சிவ தூஷணஞ் செய்கின்றவனது தீய வீட்டின்கண் எய்தாது நிற்க, சிவ தூஷணம் புரிவார்க்கு அப்பாவ நீங்கவென்று நூறு வருடம் பிராயச்சித்தஞ் செயினும் அஃ தகற்றற்கரிதாகி நிற்கும்" என்றும், "அழுக்கிலாச் சிவபக்தியை யுடையோனாகிய அரசன் மூன்று கண்களையுடைய பரம சிவனைத் தூஷித்தோனைக் காண்பானாயின் அவனை

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

யவ்வரசன் சொல்லும்படி கட்டளையிடுக. கேட்டவன் வித்துவானாயின் தருக்கித்து அவன் வாய்ப்பிதற்றலை யடக்குக. அதற்குத் திறமில்லாதவனாயின் நேர்மையான செவியிரண்டனையுங் கைகளாற் பொத்திக் கொண்டு குலைகுலைந் தவ்விடம் விட்டுச் செல்லுக" என்றும், "பரமேசுர னருளிச் செய்த வேதசிவாக மங்களா னுணர்த்தப்படு மெய்ச்சமயத்தை ஸ்தாபிக்கவும் அன்னிய சமயங்களை நிராகரணஞ் செய்யவும் வல்லவனாயிருப்பவன் தன் முன்னர் அவ்வன்னிய சமயிகள் அம்மெய்ச் சமய நூல்களைக் கண்டித்துத் தத்தஞ் சமய நூல்களை ஸ்தாபிக்கவந்த விடத்து அவர்கட் கஞ்சுதலினாலேனும் நட்பிற் பிரீதிப்படுத்திப் பொருள்கோட னீங்குமென் பதனாலேனுஞ் சோர்வுற்றுத் தனாது சமயத்தை ஸ்தாபியா திருப்பானாகில் அவன் குற்றமுடையோனாவான். ஆகலி னவ்வாதியிடத்து வைத்த நேசமொழித்து அவனை வெறுத்தல் குற்றமன்று. அதுவே தருமம்" என்றும் பொருளாதலின், அன்னிய சமயிகள் வேதாகமவுடம் பாடான சமயத்தைத் தூஷிப்பது ஒழிக்கொணாப் பாவமென்றும், அதனை நாங்கேட்டு வாளாவிருப்பதுங் குற்றமென்றும், நீதி கூறு நூல்வழியாகவே யறிகின்றனம்.

அகலின், யாம் ஈண்டெடுத்துக் காட்டுத லென்னை யெனின், உலகசிருஷ்டியி னுண்மையை வெளியிட வலியற்ற அன்னிய சமய நூல்களைப் போன்றதன்று அனாதி கருத்தாவினா லருளிச் செய்யப்பட்ட வேதம். இவ் வனாதிநூ னெறியான அனாதிசமயத்திற்கு முன்னாய சமயங்களும், உரியநூல்களு முண்டென்று எச்சமய நூலுமிதுகாறு மியம்பவில்லை. ஈண்டுக் கிறிஸ்து மார்க்கத்தாரும் மகம்மது மார்க்கத்தாரும் யேசுவும் முகம்மது நபியும் மநுடராகப் பிறக்கு முன்னரேயே தங்கள் மதநூல்கள் இரகிசயமா யிருந்தன, அவ்வாறே யவைகளை யுறுதிப்படுத்து மவ்விருவரு மிருந்தெனரென்று சாதிப்பதுண்டு. இச்சாதிப்பு நிலை பெறாது. என்னை? பைபிலிற் சொல்லப்படுகிறபடி இசரவேலுடைய பெரிய தந்தையாகிய *இஷ்மவேலின் சந்ததியிலுண்டான முகம்மது மார்க்கிகளும்,

* இந்த இஷ்மவேலையை முகம்மதுமார்க்கர் இஷ்மாகில் என்பவர்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

இசர வேலர் சந்ததியாரான கிறிஸ்துமார்க்கிகளும் யேசுக் கிறிஸ்துகாலம்வரை யொன்றாக விருந்து அப்பான் முகம்மது நபியின் காலத்தி லிரண்டாகப் பிரிந்தனர். பிரிந்தவருள் முகம்மது மார்க்கிகள் புத்தகமானது கிறிஸ்துமார்க்கிகள் புத்தகங்கட்கெல்லாம் நேர் விரோதமாக முகம்மதுப் பெயரரே தேவனுடைய குமாரர், அவருரைக்கு முரைகளே யுண்மையென்று முறையிடுகின்றது. இது சொல்லு மெல்லாவற்றையுந் தப்பென்றுணருமாறு யேசுப் பெயரரே தேவனுடைய குமாரர், அவரையே விசுவாசிக்க வேண்டுமென்று அக் கிறிஸ்து மார்க்கிகள் புத்தகங்கள் பறைகின்றன வாகலின். அன்றி,-

பக்தவிஜயமென்னு நூல் பகருமாறு இவ்விருசமயத் தாருடைய கோத்திர பிதாவாயிருந்தவரும் (தேவ முத்திரை) விருத்த சேதனமென்கிற சுன்னத்தாகிய ஆண் குறித்தோ லறுத்தல் மீசையைப் போக்கல் தலையை மழித்தல் நகங்களை யழுந்த வறுத்தலெனும் இராஜ தண்டனையை விபசார குற்றத்திற்காக அடைந்தவருமான ஆபிரகாமாகிய இபுறாகீம் என்பவரையும் ஆதி தேவ குமாரரென்று சொல்லலாமன்றோ. அற்றேல், யாருண்மை பெறப்படுவார்? அஃ தையப்பாடே. மிழற்றிய இராஜதண்டனையைத் தானே அந்த இபுறாகீம் சம்மதப்படி முகம்மது மார்க்கர், தம்மரபினர்க்கு இன்னும் விடாது விதித்து வருகின்றனர். குறித் தோலறுத்தல் இக்காலத்தினுஞ் சில கிறிஸ்தவர் வழியுண்டு. இத்தண்டனையன்றி வேறு தண்டனையு முண்டென்பதைச் சைவபுராணத்தின் தரும சங்கிதை 61-வது அத்தியாயத்தில் அரிச்சந்திரன் குமாரனான ரோகிதாசுவனுக்குப் பௌத்திரனாகிய பாகுவென்பானுடைய பெருந் தவபுத்திரனாயுதித்த சகரச்சக்கரவர்த்தி-"அம்மிலேச்சர்களிற் சகாளென்பவர்களைக் குடுமியைக் கத்திரித்துச் சஞ்சரிக்க வென்றும், (சோனகர்) யவனரை முழுத்தலையு முண்டிதம்பண்ணிச் சஞ்சரிக்க வென்றும், காம்போஜரை மோவாயில் மயிர் வைத்திருக்கவென்றும் அக்கிரமஸ்தர் ஒவ்வொருவருக்கு மொவ்வொரு வகையாக இவை போன்ற தண்டங்கள் விதித்து அரசு செய்து வந்தான்" என்னு முரைகளா னுணரலாம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

யேசுவும் நபியும் பிறக்கு முன்னமேயே அவர்களும் அவர்களுடைய புத்தகங்களு முண்டென்றுரைக்குமுரை-தலைவனுந் தலைவியுங் கூடு முன்னே தங்கள் மகன் சகல கலாவல்லபன் என்பதற்கும், பரிதியுதயமாகு முன்னேயிப்போது பகற் பதினைந்து நாழிகையென்பதற்கும் இனமாகும். இவ்வாறு பேச நேரிடுவது அன்னோர் மார்க்கம்---ஆதியிலுளதென்றுரைத்தற் கிடனில்லா இலம்பாடேயாம். இற்றைநாளின்மேல் 5500-வருடங்களுக்குள்ளாக (மூசாநபி) மோசே எழுதிய ஆகமங்களும், அவ்வாகமங்களு ண்டாகி 3580 வருடங்களுக்குப்பின் பேதுரு முதலிய அப்போஸ்தலர்களெழுதிய சுவிசேஷங்களும், அவற்றிற் பொறித்தவற்றையே முதலாதாரமாகக் கொண்டு இற்றைப்போதிற்கு 1315-வருடங்களுக்கு முன்னிருந்த முகம்மது நபியாவார் மொழிந்த மொழிகளும், இற்றைப் போதிற்கு 2187-வருடங்களுக்கு முன்னுள்ளனவாக ஐரோப்பியப் பண்டிதர் அபிப்பிராயங் கொள்ளவுள்ள புறச்சமயமாம் கௌதமபுத்த நூல்களும், சமண நூல்களும், மற்றப் பண்டைப் புறச் சமய நூல்களும் வெளிப்படுமுன்னரேயே இவ்வுலகம் படைக்கப்பட்டு மநுடரனேகரிருந்தனர்: அவர்கள் விருத்தியில் நெடுங்காலத்தின் மேல் தீர்க்கதரிசிக ளெனப்படு நபிமார்களேனகரிருந்தனரென அப்புத்தகங்களே முறையிடுகின்றன. அதனால், அவை ஆதியாகமமல்ல வென்றும், அவை யேற்படு முன்னமேயே இலிகிதங்களும் வாக்கியங்களுமிருந்தன வென்றும், அஞ்ஞான்று யாதானுமோர் நெறிநின்றே அனேகர் முற்குறித்த தீர்க்கதரிசிகளானார்கள் அந்நெறி யின்னோர் சொல்லு நெறியன்றென்றுந் திட்டமாகத் தீர்த்திடலாம்.

யாதொரு சமயத்தைக் கற்பிக்க நிமித்தமானவர் தம்மாலேனும் தாந்தீர்மானிக்கின்ற தெய்வத்தாலேனும் நூதனபாஷையொன்றைக் கற்பித்து அதனில் இயற்று மேற்பாடுகளைத் தீட்டியிருக்கவேண்டும். அவ்வாறின்றித் தாந்தோன்று முன்னரே தோன்றியுள்ள பூர்வீக கிரியைகளையே வேறுபடுத்த வந்த முகம்மது நபியானவர் ஆண்டுள்ள அரபுபாஷையில் புர்கான் கோரானென்னும் புத்தகத்தை வெளியிட்டது போலவே வேறு அன்னிய சமயிகளும் வெளியிட்டனர். இவ்விதச் செய்கை வேதா

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

கம வுடம்பாடாய வுட்சமயத்து முண்டோ வெனின், இலக்கணந் துளக்கி வடமொழியைப் பாணினிமா முனிவருக்கும், தென்மொழியை அகஸ்திய மாமுனிவருக்குந் தெய்வமே நனி கற்பித்தபடி அவை தேவபாஷைகளாம். அவற்றில் வேதாகமாதி நூல்கள் முன்னரமைக்கப்பட்டன. அவை நல்லிலக்கண நனியமைப் பெறீஇ ஒலிச்சுவை கவிச்சுவையோடு நாளும் விளங்கிக் கொண்டிருகிகன்றன, ஆகலினன்றென்க. ஈண்டு ஆதாம் ஏவாளென்னும் ஆதம் அவ்வாள்காலத்திலேயே நிகழும் பாஷைகளைத் தேவன் விளக்கினான் அவை தேவபாஷை யென்றல் பற்றி இச்சமயக்கொள்கைகள் அவற்றிலெழுதப் பட்டனவென்று அன்னவர் சொல்லவெனினும், அஞ்ஞான்று அச்சமய நூல்க ளில்லாமையின் அது பொருந்தாது. என்னெனின், நூலில்லாவிடிற் சமய பாடையின்றென்றாம். உண்டெனினும் மிலேச்ச நாட்டது மிலேச்ச பாடையாம். மநுடருள் தாழ்ந்தவனுயர்ந்தவ னிருக்குமாறு பாடைகளினு முண்டன்றோ. மிலேச்சநாடு இஃதென்பதையும் மற்ற நாட்டின் மேம்பாட்டையும் மனுஸ்மிருதி 2-வது அத்தியாயத்து 17-முதல் 23-வரையுள்ள சுலோகங்களில், "சரஸ்வதி திருஷத்வதி யென்னுந் தேவநதிகளின் மத்தியப் பிரதேசமானது தேவர்களாலேற் படுத்தப்பட்ட பிரமாவர்த்ததேச மென்று சொல்லப்படும். அத்தேசத்திற் பெரியோர்களெஞ்ஞான்றும் வசிக்கின்றமையால் பிராமணாதி வருணத்தார்க்கும் சங்கர ஜாதி யார்க்கும் சிஷ்டாசாரமானது அவ்விடத்தினின்றும் அனாதியா யுண்டாகிறது. குருக்ஷேத்திரம் மச்சதேசம் பாஞ்சால தேசம் வடமதுரை யென்பன பிரமருஷிகள் வசிக்கின்ற தேசங்கள். இவை பிரமாவர்த்ததேசத்தின் சிறப்பிற்குச் சுவல்பங் குறைந்திருக்கின்றன. இத் தேசங்களிற் பிறந்த பிராமணனிடத்தில் யாவரும் தந்தந் தருமங்களை யறிந்து கொள்ளக் கடவர். ஹிமாசலத்திற்கும் விஞ்சை பருவதத்திற்கும் நடுவாயும் சரஸ்வதிநதி மறைந்த விசனசதேசத்திற்குக் கிழக்காயும் பிரயாகைக்கு மேற்காயு மிருக்கிறவிடம் மத்தியதேச மென்று சொல்லப்படும். கிழக்குச் சமுத்திர முதல் மேற்குச் சமுத்திரம் வரையில் முன் மொழிந்த மலைகளின் நடுப்பிரதேச மானது சாதுக்கள் வசிக்கிற ஆரியாவர்த்ததேச மென்று சொல்லப்படும். கிருஷ்ணசாரமெனும்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

மான் எவ்விடத்திற் சுபாவமாகச் சஞ்சரிக்கிறதோ அவ்விடந்தான் யாகஞ் செய்தற்குரித்து. மற்றவிடம் அசுத்தமான மிலேச்சதேச மெனப்படும் எனப் பொருளாம்வழிக் கண்டுகொள்க. இம் மிலேச்ச நாட்டார் மிலேச்சரெனப் படுவாரென்பது முற்காட்டிய சைவபுராணத்தினும் வெளியாயிற்று.

எச் சமயத்தினுஞ் சற்சமயமாகிய வுட்சமய நியாயங்களை யொதுக்குபு நிலைநாட்டப்படும் யாதானுமொரு தீர்வை மெழுகொக்கும். அது நியாயவாத மென்கிற நெருப்பி லுருகி யொழிந்து விடும். இது தெளிந்த வித்தகர் கற்ற கல்வித்திறங்காட்டி நிலைநாட்டிக் கதிபெறுவான் அவ்வுட்சமய நூல்களின் கருத்து முரண்படாமே பாண்டித்தியமுள்ள பாடையிற் சொற்சுவையும் பொருட்பொலிவு துறுமி விளங்கச் சாத்திர தோத்திரங்களாங் கவிரூபமாகவேனும், வசனரூபமாகவேனும் அரிய நூல்களை யியற்றுபு மேம்பாடுற்றனர். ஏனோர் வீண்பாடுற்றனர்.

நியாயவாதியாகிய யாவரொருவர் முன்னிலையில் யாதொரு விடயத்தை நிலைநாட்டிப் பேசுந் தகுதியுள்ள யாவரொவர் உட்சமய நூற்பொரு ளாதாரமின்றி யரற்ற முயல்வது கருக்குமட்டை கொண்டு கன்மலையை வெட்ட முயல்வதொக்கும். மேலும், நியாயவாதியின் கடாவுக்காற்றாது பெரிதுந் திகைத்து "அது தேவரகசியம் யாருமறியார்" என முகஞ்சாதித் தொடுங்கவு நேரிடும்.

சில புறப்புறச்சமய நூல்களின் சிற்சில விடங்களில் ஆட்சேபந் தோன்றுதல் அம்மத கர்த்தாக்களுக்கே தெரியவந்ததின் பின்னர் அவர் "இப் போதகங்களில் எதையேனுந் தர்க்கித்துப் பேசுகிறவர்களே பாவிகள், அவர்கள்தாங் கொடுநரகிற் கிடக்கிறவர்கள், எத்துணை நாவன்மையோடு மொருவன் பேசுவான், அனேக சித்தி களையுங் காட்டுவான், அவற்றிற்கு நீயிர் செவி கொடாமலுங் கட்பார்வையைச் செலுத்தாமலு மிருக்கவேண்டும், அவற்றின்கண் மனஞ்செலுத்தா திருக்கக்கடவீர்கள், சொன்னதை விசுவாசியுங்கள்" எனப் பொருளாகவும், "நம்முடைய அடையாளங்களில் நம்பிக்கை வையாதாரை மெய்யாக நரகத்தீயில் வறுக்கும்படி நிச்சயமாக

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

அதிற்றள்ளுவோம்" எனக் கோரான் 4-வது சூராவிலருத்தமாகவும் எழுதினார் போலும்!

ஒருவாறு, ஈசுவர னன்னணமுங் கட்டளையிட் டிருப்பான் கொல்லோ? என்பதையு மிங்ஙனம் பரியாலோசனை செய்வோமாக. அறியாதவற்றை யறிந்து கொள்ளத் தேவன் வேதந் தருவானன்றி யறந்தவற்றை யறியாது மறைக்கத் தாரானென்பது திட்டம். அங்ஙனமாயின்; யாதொன்றை வினாவும்போது அதற்கு விடையிறுக்கு மாற்றலின்றி அது தேவரகசியமென்று வாளாவிருக்க வேண்டியதென்னை? அதற்கு உட்சமய நூல் விடை கொடுத்தக்கால் அதனை யொப்புக் கொள்ளா தொதுங்க வேண்டியதென்னை? ஆகலின், வினாவுக்கு விடைகொடா மூகப்புத்தகமும், விடை கொடுக்கு நூலை யொப்புக்கொள்ளா துரைக்கும் வஞ்சப் புத்தகமுங் கடவுள் சம்மதத் துள்ளனவாகா வெனலே யமைவுடைத்து.

இனி; புறப்பரசமயிகள் தாங்கள் சாதிக்குஞ் சாத்திரங்கள் பண்டல்லாதனவாயினுங் கருத்தாவானவர் முதிலிலேற்படுத்திய நலமல்லா மார்க்கங்களையும் உரிய சாத்திரங்களையுங் கண்டனஞ் செய்து இஞ்ஞான்று நலமுள்ளமார்க்கமாக இவையிற்றை யேற்படுத்தினார். இனி யிவற்றினையே அங்கீகரிக்க வேண்டும் அல்லவெனின்; தேவ நியாயத்தில் தண்டனை சம்பவிக்குமென்று சொல்லத் துணிவரேல், அது பற்றியுஞ் சில கூறுதும்:- "பின்பு தேவனாகிய கர்த்தர் மனுஷன் தனிமையாயிருப்பது நல்லதல்ல ஏற்ற துணையை யவனுக்கு உண்டாக்குவே னென்றார்" என்றபடி தேவன் உலகஞ் சிருஷ்டிக்கும் போது நன்று தீதறியாமே முன்னர்ச் சிருஷ்டித்தானெனவும், பின்னர் நன்றன்றென வறிந்து நன்றுசிருஷ்டித்தானெனவும் பிரதமதீர்க்கதரிசி யெனப்படு மோசே ஆகிய மூசாநபியெழுதிய ஆதியாகமமென்பதை யங்கீகரித்த கிறிஸ்துமார்க்கரும் முகம்மதுமார்க்கரும் பழைய மார்க்கத்தைத் தள்ளிப் புதிய மார்க்கத்தைப் பராபரனானவர் அளித்தாரென்று அரற்றாதென் செய்வார்!

அன்னவாறு பராபரனார் பழையதைத் தள்ளிப் புதியதை யருளுவதுண்டென அவர்கணோக்கம்போல எம்மனோர் ஒத்துக் கொள்ளினுங் கிறிஸ்து மார்க்கத்தின் பழையவேற்பா டனைத்தும்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

அவர்கள் இரக்ஷகராகிய யேசுவென்பார் மூல மேற்பட்ட புதிய வேற்பாட்டா லொழிந்தவழியே அப்புதியவேற்பாடும் பின்னரேற்பட்ட முகம்மது மார்க்கத்தால் தள்ளூண்டுபோம். அம்முகம்மது மார்க்கமு மிஞ்ஞான் றேற்பட்ட இனி யேற்படு நவீன மார்க்கங்களாற் கண்டனமாமென்று தீர்ப்ப தமை வுடைத்தாமே. இவ்விதங் கண்டனங் கண்டு நவீன மார்க்கங்களைக் கடவுள் கற்பிக்கை ஜீவகோடிகண் மீது வைத்த கருணையென்று போலிக்காரணம் புகலினும் அமையாதென்பதற்கு முக்கியப் பிரமாண மெனனை யெனின்; மநுடர்கள் செய்த பாவங்கட்குத் தாமே பலியாயிருக்க வந்த யேசுவென்பார் மனதாரத் தாமே பலியானாரெனற் கிடமின்றி யூதர்களாற் குற்றஞ் சாட்டப்பட்டுக் கொலைமரத் தறையுண்டு உயிரிழந்தவராயிருக்கின்றார். அன்றி, அவர் மரணதினத்தின் முன்னாளிரவில் ஒலீவமலையிற் றனித்திருந்து ஜெபம் பண்ணியபோது, "பிதாவானவரே! உமக்குச் சித்தமானால் இப்பாத்திர மென்னைவிட்டு நீங்கும்படிச் செய்யும். இல்லாவிடின் எனது சித்தத்தின்படி யன்று. உமது சித்தத்தின்படியே யாவதாக" என்று இரத்தக்கண்ணீர்விட்டழுது யாதனைப் பட்டிருக்கின்றனர். இவ் விஷயம்:- யேசுவென்பார் மரணத்திற்குப் பயந்தவரென நனிதீர்க்கும். இவ்விருத்தாந்தத்தை லூக்கா 22-ம் அதிகாரம் 39 முதல் 45 வரை யுள்ள வசனங்களி லறியலாம். "யேசு மிக்க திகிலையும் அச்சத்தையுமடைந்து" மேற்சொற்றபடி ஜெபஞ்செய்தா ரென்பதை மாற்கு 14-ம் அதிகாரம் 34-ம் வசன முதலிய வற்றுட் காணலாம். இன்னன காரணங்களானே அவரொரு தேவ பக்தர், அவர் தேகாபிமானஞ் சீவாபிமான முள்ளவராகக் காணப்பட்டார், அவர் பாவமன்னிப்புப் பெறப் பாத்தியப்பட்டாரல்லர், அவர் கொள்கை யெதுவும் யாவரையுங் கரையேற்றும் புதியவேற்பாடா யிராதென வெளியாமா றறிக.

மேலிசைத்தவழியே பழையவேற்பாட்டைப் புதிய வேற்பாடு கண்டனஞ்செய்வ துண்டென்று முகம்மது மதத்தினரும் ஒப்புக் கொளற்கு விதியிருக்கிறதாகவே முடிவுசெய்யலாம். இதனை, ஆதம், அவ்வாள் கால முதல் மரியாள் புத்திரராகிய யேசுவானவர்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

காலம் வரையினுமுள்ளள தீர்க்கதரிசிகளின் பரம்பரையும் எழுதப்பட்ட புத்தகங்களும் அவ்விரு சமயத்தார்க்கும் ஒன்றாயிருத்தலும், "நாம் எவ் வாக்கியத்தினை நீ தள்ளவாவது உன்னை மறக்கவாவது செய்வோமோ அப்போது அதிலுநல்லதையேனும் அதற்கொப்பானதையேனுங் கொடுவருவாம்" என ஆண்டவன் முகம்மது நபியாருக்குச் சொல்லினா னென்று கோரான் 2- வது சூராவிற் பொறித்திருத்தலு முறுதிபபடுத்தும்.

கோரான் 16-வது சூரா "திராக்ஷரசந்தேவனது ந்னமைக்குந் தயவுக்குங் குறிப்பு. ஈச்சங்களிலுந் திராட்சப் பழங்களிலும் உல்லாசமாக்கும் இரசத்தையு நேர்த்தியான போஷிப்பையு மடைகிறீர்கள். அறிந்து கொள்பவர்க்கு உண்மையாக இதனில் ஓரடையாள முண்டு" எனக் கத்துகின்றது. இதற்குமேலான 14-வது சூராவின் முன்னதாய 2-வது சூரா "அவர்க ளுன்னைத் திராட்ச ரசத்தையுஞ் சீட்டுகளையுங் குறித்துக் கேட்பார்கள், இவ்விரண்டனிலும் பெரும்பாவமிருக்கிறது, இவைகளின் மனிதருக்குச் சிறிது பிரயோசன மிருப்பினும் அவற்றின் பாவமோ பிரயோசனத்திலும் பெரிது" என்றும்; 5-வது சூரா "ஓ மெய்விசுவாசிகாள்! நிச்சயமாகவே திராட்சரசமுஞ் சீட்டுகளுஞ் சுரூபங்களுங் குறிசொல்லும் அம்புகளும் (சாத்தான்) பைசாசினது கிரிபையின் அருவருப்பே" என்றுங் கதறுகின்றன. இம்மூன்று சூராக்களில், 2-5-ல் அருவருப்பென்று விட்டுவிடச் சொல்லி யவைகளே 16-ல் விடாமற் கொள்ளச் சொல்லப்பட்டன. (திராட்சரசம் = முந்திரிகைச் சாராயம்)

இவ்வாறே யொன்றுக்கொன்று பொருந்தாத மாறு சோளுந் தகுதி யின்மையுமான இலிகிதங்கள் பல கிறிஸ்து மார்க்கத்தினும் முகம்மது மார்கத்தினு முள. அவற்றிற்கெல்லாம் அன்னவர் சமாதானஞ் சொல்லும்போது உட்சமயத்தார் தஞ்சமய நூல்களில் வித்தியாசம்போற் காணப்படுபவைகட்குச் சமாதானஞ் சொல்லாதொழிவர் கொல்லோ! மாநுடஸ்திரீயினது குறிவழி வந்து மாண்டு மண்ணடக்கமாய மநுடர்கண் முன்னிலையிற் கருத்தா வருளிச் செய்து அவர்களாற் போதிக்கப் பட்டனவாச் சொல்லப்படும் அம்மதத்தவர் புத்தகங்களினின்றும் அனாதி

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

கருத்தாவினது அற்புத சிருஷ்டியிற்றோன்றிய பிரமதேவருக்கும், உருத்திரர்களுக்கும், அக்கருத்தாவினது திரு முகங்களிற் றோன்றிய இருடிகளுக்கும் அக்கருத்தாவினால் நேரேயருளப்பட்டு அவர்களால் தேவர் முனிவர்கட்குப் போதிக்கப்பட்டுள்ள வேதாகமாதி நூல்கண் மேம்பாடாகாமலிழுக்குறுதல் யாங்ஙனம்? நிற்க.

ஒரு பிரபுவுக்கு பஃறோட்டங்களிருக்கு நிரல் போலக் கடவுளுக்கும் ஆன்மமல பரிபாக நிமித்தம் மதங்களாம் பஃறோட்டங்களுள. அவற்றுள் ஜீவகாருண்யம், ஈசுவரபத்தி, பாசவைராக்கியம், பிரமஞான மென்பவற்றை விளக்காநின்ற பிரமாணங்க ளடங்கிய சரித்திராதி விருக்ஷங்களுஞ் செடிகளுங் கொடிகளு முள. அவற்றின் கண்ணவே வெளியருத்தமாகிய காய் முதலியவைகளும் உள்ளருத்தமாகிய விரை முதலியவைகளும் பயனாகவிருக்கும். அவற்றுட் கொட்டை முந்திரிகைக் கனியில் வித்து வெளிப்படையாயிருப்பது போலச் சிலவுட்பொருள்கள் வெளிப்படையாகவும், கொடிமுந்திரிகைக் கனியில் வித்து உண்மறைத் திருப்பதுபோலச் சில வுட்பொருள்கண் மறைவாகவு முள. கூர்ந்து நோக்காதார்கசு இருப்பைக்காய் மாங்காய் போன்றும் மாங்காய் இருப்பைக்காய் போன்றுந் தெரிதல்போலச் சில வெளிப் பொருள்களும், மொச்சைப்பயறு அவரைவிரை போன்றும், அவரைவிரை மொச்சைப்பயறு போன்றுந் தெரிதல் போலச் சில வுட்பொருள்களுந் தோன்றி விகற்பத்தை விளைக்கும். அங்ஙனங் கூர்ந்து நோக்கும் அறிஞரொடு கூடி யுண்மையுணர்தல் போலப் பொருளுணர்ந்து நியாயந் தெரிந்து மத தூஷணஞ் செய்வதொழிந்து ஞானத்தாற் சமாதானமுடையோராய்த் தத்தந்நிலை பிசகாது அகமும் புறமும் அசுத்த நீத்த நெறியினின்று உய்வதூஉம், தெய்வமின்றெனத்திரிதரு நாஸ்திகர்கட்கும் அஃதுண்டெனுநியாயமெடுத் தினிதுகாட்டி யவர்களை ஆஸ்திகராக்க முயல்வதூஉம் விவேகிகள் கடமையாம். ஈண்டுத் தெய்வக் கொள்கையுடைய நல்லாரெல்லார்க்கும் யாம் வந்தனங் கூறுகிற்பாம். நியாயமுணர்பவனே! நீ வினாய வினாவுக்கு யாம் போதுமான விடையறுத்தாம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

(14)

சிஷி: பழைய வேற்பாடு புதிய வேற்பாடெனும் விவகாரம் வந்தது குறித்து ஒன்று வினாவுவேனாக. இப்பூலோக அரசாட்சியிலே முன்னரேற்படுத்திய யாதொரு சட்டத்தைப் பின்னரேற்படுத்திய யாதொரு சட்டங் கண்டனஞ்செய்து ஊர்ஜிதத்திலிருப்பது கடுப்பக் கடவு ளேற்பாட்டினு முண்டெனக் கொண்டாலென்னை?

குரு:- சருவஞான சகிதரல்லா மநுடர் அவ்வா றொன்றைக் கற்பித்தபின் அதனினும் விசேடமாகத் தோன்றும் யுக்தியை யுறுதியெனக் கற்பிக்க அவ்விசேட யுக்தி காரணமாகும். சருவ ஞான சக்தரான ஈசுவரனாவ்ார் அவ்வாறு கற்பிக்கக் காரணமின்று. அன்றி ஈசுவர வாக்கியமும் ஒருகாலும் மாறுந்தன்மைத் தாகாது. முன்னைய வேற்பாடுக ளொழியாமலிருக்கப் பின்னர்ச் சிலவேற்பாடுகளையும் ஈசுரரருளிச்செய்தன ரென்ப தொன்று ஈண்டைக்கு இயையும்.

(15)

சிஷி:- அஃதேல், ஆணிமாண்டவியரென்னு முனிவரர் ஒருரிற் களவு செய்தார்களோடு சேர்க்கப்பட்டவராகி அவர்கள் அவ்வூர் அரையனால் தண்டிக்கப்படும்போது அவருங் கழுவேற்றப்பட்டாராய்க கழுவிருந்ததின் பின்பு இத்தண்டனை, - அறியாமையே செறிந்த சிறுவயதிற் சிறையுடைச் சிறுதும்பியை முண்ணுனியிற் குத்தியிருத்துபு விளையாடிய குற்றத்திற்காக வேற்பட்டதென யமதரும னுணர்த்த வுணர்ந்த அம்முனிவரர் "அறிவிலாதவர் செய்ததீ வினையநு பவமாய்-மறுவு றச்செய னன்றுகொ லியானிது வகுத்தே-னிறுவு மேழிரண் டாண்டள வியற்றிய நீர்மை-கறுவு தீவினை யாற்றவு முறாதுகா சினிக்கே" "அன்ன காலத்தி லுணர்வறச் செய்பவற் கலகி-லின்ன லாலுழ மழன்றவர் பாதக ரினிநான்-சொன்ன சொற்படிச் சோர்வற நடக்கவெந் நாளு-முன்னர் நீயெனை முனிந்தகா ரணத்தினால் முதல்வ" எனப் பாரதம் ஆதிபருவத்துச் சம்பவச்சருக்கத்துச் சாற்றுமாறு யமதருமனை நோக்கி இனி, இவ்வித தீர்மானத் செய்யற்க வென்றேற்பாடு செய்ததின்மேல் நீ செய்த தவற்றிற்காய் பூலோகத்திற் சூத்திரனாகப் பிறக்கக் கடவாயெனச் சபித்தபடி

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

அத்தருமனும் விதுரனாகப் பிறந்தனன்: அதுமுத லறிவிலா இளைஞர்செய் குற்றமெலா மவரைச் சேராம னீக்குந்தீர்வை யுண்டாயிற்றென அச்சரிதத்தின் வெளியாதல் பொய்யோ? மெய்யோ?

குரு:- இது "சலமலையாயிற்று என" வருவதற்குச் சலம் அலையாயிற்றென மரபறிந்து பொருள்கொளாமல் சலம் மலையாயிற்றெனப் பொருள்கோடலை யொக்கும். இன்னணம் பேதைமைக் கண்ணியிற் சிக்குண் டுளறுங் குழறுபடை யுனக்கு முண்டாமோ! காளாய்! நீ கூறிய சரிதம் கடவுளர் பழைய வேற்பெடொழித்துப் புதிய வேற்பாடு தாபித்தாரெனத்த திலவளவேனுங் காட்டாது. எப்படியென்னின், ஜீவர்கள்செய் பாவபுண்ணியங்களின் தாரதம்மிய மோர்ந்துசெயவேண்டியதைச் செயும்படிச் சிருஷ்டி தேவனாருக்கும் தண்டநாயகனாகிய தருமனாருக்கும் ஈசுரனதிகாரங் கொடுத்தவாறு, வடமொழிப் பாரதம் ஆதிவமிசாவதாரண பருவத் துள்ளபடி பெருந் தவமுடையவராயிருந்த ஆணிமாண்டவியருறு கொடுந்துயர் விஷயத்தில் அவ் யமனாவார் சம்மதித்திருந்தது அநியாயமென்றும், அவ்விஷயத்திற் பின்னுரைத்தவாறு செய்வது நியாயமென்றும் வேதியனார் வேதநீதியை விளக்கி வெளியிட்டது பழைய தேயன்றிப் புதுவ தன்று. தென்றிசைக் கோனாவார் அத் தவற்றினைப் புத்தி பூருவமாகச் செயா திருந்தமை பற்றி யவரிருந்த பீடம் அவரைத் தாங்கிற்று. நேரிட்ட வறிய தவற்றிற்காக முனிவரது சாபப்படி, அத்தருமனா ரமிசமொன்று விதுரனாகத் தோன்றியிருந்து முடிவிலவரோடு விராயதென வறிக.

(16)

சிஷி:- நியாய மிவ்வாறிருப்ப புறப்புறச்சமயிகளிற் கிறித்து மார்க்கர் தமது மார்க்க "ஞானஸ்நானம்" பெறா மற்றச் சமயிகளை அஞ்ஞானிகளென்றும், முகம்மது மார்க்கர் தமது மார்க்கக் "கலிமாச்" சொல்லா வெவரையுங் காபரென்றுங் குபிரென்றுங் கூறுமா றென்னை கொல்லோ?

குரு:- எச் சமயத்தாருள்ளுந் துர்ச்சிந்தையரும் நற் சிந்தையாரும், ஏழைகளும் பிரபுக்களும், மூடர்களும் வித்துவான்களும் உளரென்றும், கடவுளை யுண்மையோடு

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata

வழிபடுவார் அஞ்ஞானிகள் காபர் குபிரெனப் படுவாரோ படாரென்றும் அறியறிவற்று அவ்வா றுரைக்குந ரெவரோ அவரே யம்முத்திறத்தாரு மாவரென்றல் அமைவுடைத்து. நிற்க. முகம்மது மதத்தினரை மாறுபாட்டுக்காரரென இந்நாட்டவரிற் சிலர் தெரிப்பர். காரணம்:- கடவுள் வழிபாட்டுரையில் அக்கடவுளுண்டெனும் பொருட்குறியாக அத்திருநாமமேனும் அந் நமஸ்காரமேனுங் கோடல் பல்லோர் வழக்கிலு முடம்பாடா யிருத்தற்கு மாறாகக் கலிமாவின் றொடக்கத்தில் இல்லையெனும் பொருள்பட வுச்சரித்தலும், எழுதுதலில் ஆதி தொடர்ந்து வரைவது யாவருக்கு முடம்பாடா யிருத்தற்கு மாறாக அந்தந் தொடர்ந்து வரைதலும், சூரியோதயத்தை வாரத்தின் றொடக்கமாகக் கோடல் யாவருக்கு முடம் பாடாயிருத்தற்கு மாறாக இரா வாரம்பத்தை வாரத்தின் றொடக்கமாகக் கோடலும், தேவ வணக்கங் கிழக்கு நோக்கிச் செய்தற்கு மாறாக மேற்கு நோக்கிச் செய்தலும், ஜலத்தைப் புஜத்திலிருந் தொழுகவிட்டுக் கரங் கழுவுவதற்கு மாறாக நுனிக்கரந்தொடங்கி முழங்கைவரை யொழுகவிட்டுக் கழுவுதலும் அம் முகம்மது மதத்தினர் செய்கைகளாதல் காண்க. எவரா லெச்செய்கை யெவ்வாறு மாறுபடினும் வாயா லுண்டு அபானத்தாற் கழிக்க வேற்பட்ட ஈசுர நியதி மாறுபடுவதில்லை. பிறவும் அன்ன. (குபிர் = இருளடைந்தவர்.)

ஞானஸ்நானமென்பது பழையவேற்பாட்டின்படி . விருத்த சேதனைமாகிய ஆண்குறித்தோ லறுத்தல் ஜலத்தின் மூழ்குவித்தலாகும். புதியவேற்பாட்டின்படி ஜலத்தைத் தலையிற்றெளித்து நாக்கி லூற்றி யேசுகிறுஸ்துவை விசுவாசி யவரிட்ட கட்டளைகளை மறவாதவனாகிக் கருத்தரைச் சிந்தியெனுமாறு சொல்லுதலாகும். கலிமா வென்பது இல்லை அல்லா அவனையன்றி, முகம்மது என்பவர் அவனாலே யனுப்பப்பட்டவரென்று பொருளாம்படி அரபுபாஷையிற் சொல்லிக்கொள்ளும் ஒரு தீர்மானமே யொழிய வேறன்று. அது "லாயிலாஹா இல்லல்லாஹு முகம்மது றசூலுல்லாஹி" எனவரு வசனங்களேயாம். பூர்வபக்ஷத்தைத் தழீஇயுள்ள இவற்றினை யொருவன் செய்து கொள்ளுதலினாலுஞ் சொல்லியிடுதலினாலும் பாவம் மன்னிக்கப்படு மென்றும் அவன்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0 In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஞானியாவான் மோக்ஷஞ் சேர்வா னென்றும் நினைப்பது அறியாமையே யென்றும், எம் மதத்திருப்பினுஞ் சைவசித்தாந்த மார்க்கத்தின்படி ஆசிரிய விசுவாசமும் ஈசுரபக்தியும் சத்தியமும் நிராசையு முடையோனாகிச் சமபாவனையிற் சுத்த சாத்துவிகனாய் மனந்துளும்பாத சமாதியினின்று தன்னையுந் தலைவனையு மறிந்திருப்பவனெவனொ அவனே பாவமிலி அவனே ஞானி அவனே மோக்ஷவாழ்வுடையா னென்றும் நீ நனி யுணர்வாயாக.

(17)

சிஷி:- இவ்வாறு ஞான மோக்ஷங்கள் யாவர்க்கும் உட்சமய சித்தாந்தத்திற் பொதுவாயிருப்பச் சிலர் உண்மதம்விட்டுப் புறமதம்புகுகின்ற காரண மென்னையோ?

குரு:- உயிர்க்குறுதி யாதென் றுணராமே வரைவில் புசிப்பையும் புலால்சேர் புசிப்பையும் உடையையும் நடையையுங் குடையையும் பொன்னையும் மண்ணையும் பெண்ணையும் அவாவுறு கின்றவர்களும், சாஸ்திர விசாரம் ஒழிந்தவர்களும், (பழமையான கன்மத்திற் கீடாகத் தாவர சங்கமாதி பல ஹீனயோனி தோறும் பிறந்து சிறிது புண்ணியத்தான் மனுஷயோனியிற் புறச் சமயிகட்கும் புறப்புறச் சமயிகட்கும் புத்திரராகத் தோன்றியிருப்பவருட் சிலர் புண்ணிய பூமியாகிய பரதகண்டவாச விசேஷ சிவபுண்ணிய பலத்தாற் பரிபக்குவமடைந்து உட்சமயத்துட் புகுவதுபோலப்) பூர்வ காலத்தில் உட்சமயத்தைத் தூஷித்து அப்பாவபாசத்திற் கட்டுண்டவர்களு மப்படிப் புகுவார்கள். அவர்கள் "அருமறை சோரு மறிவிலான் செய்யும் - பெருமிறை தானே தனக்கு" என்று தெய்வப் புலவர் தெரித்தவாறு அருமையான வேதத்தைத் தள்ளிவிடுகின்ற மடவோன் தனக்குத்தானே பெருவருத்தத்தைச் செய்து கொள்கின்றா னென்பதையே பொருந்துகின்றார்கள்.

(18)

சிஷி:- புறமத புறப்புறமத நூல்களில் வரைந்துள்ள குற்றமற்ற நீதிகள் அறிவர் யாவரானு மங்கீகரிக்கப் படுவனவோ?

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata

குரு:- ஊத்தைநாறும். ஊனின் கண்ணதாய (முத்து) நித்திலத்தினை யாவருங் கோடல்போல அந் நூல்களிலுள்ள அத்தகு நீதிகளையும் யாவருங் கொள்ளலாம். திருட்டாந்தம். சமண தவத்தராய சைனமுனிவர் சொற்ற 'நாலடியார்' என்னு நூலிலுள்ள நீதிகளையுட்சமயத்தாரும் ஏனோரும் வெளியிடற்கு முந்நூலாதாரங்களும் உலகவழக்குகளு மிருத்தலின் அவை பொதுவே யாம்.

(19)

சிஷி:- உலகில் உட்சமயத்தாரை வேதக்காரரென் றழையாமல், கிறித்தவரை வேதக்காரரென் றழைக்கும் காரணம் யாது?

குரு:- வடசொல்லான வேதம் எனும் பெயர் உட்சமயத்தார் மூல சாஸ்திரத்திற்கே யுரித்து. மற்றையர் இத்தேய மடைந்ததின் பின்றே, தங்கண் மதத்திற்குச் சிறப்பா யிருக்குமென் றெண்ணித் தங்கள் புத்தகங்கட்கு அப்பெயரிட்டுக் கொண்டனர். அப் புத்தகங்களில் 'வேதம்' எனுஞ்சொல் இல்லை. அதனால், வேதியர், வைதிகர், ஆகமக்காரர் என்பனவாதிய சொல்லெல்லாம் உட்சமயத்தார்க்கே யுரியன. கிறித்தவரைச் சாஸ்திர விசாரமுடையர் வேதக்காரரென்னார். அஃதில்லாப் பேதைமையர் அவ்வாறு கூறுவர்.

(20)

சிஷி:- புராணாதி கலைகள் எவ்யுகத்தி லேற்பட்டிருக்கினும் அவ்யுகத்தின் வருடத்தை, மாதத்தை, நாளெண்ணை அவற்றினிடம் வரையாது விட்டவா றென்ன?

குரு:- அப்படியுமுண்டு. அவ்வருடாதிகளை யுள்ளடக்கமின்றி முன்னே பின்னே வசனத்தில் வரையப்பெற்ற சில நூல்களைப் பிரதி செய்துள்ளார் அவற்றனிடம் அவ்வருடாதிகளை வரையாமல் விடுத்தமை காரணமாக அவை யொழிந்தன வெனவும், நூலி னுள்ளடக்கமுற்ற கல்ப மனுவந்தரங்களும் யுக வருஷங்களும் முக்கியமான மாதம் நக்ஷத்திரம் திதிமுதலியனவு மொழியவில்லை யெனவு மறியவேண்டும். அன்றி, இக் கடையுகமாங் கலியுகம்பிறந்து ஐயாயிரவருடங்கட் கிடையிற் சுருக்கமாக வேற்பட்ட புத்தகங்கட்குரிய சில புறச்சமய புறப்புறச்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0 In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

சமயங்கள் போலாது மிக்கு விலங்கும் உட்சமயமானது அனாதிதெய்வ மாதியாய காலமான அன்று தொட்டின்றுகாறும் ஏற்பட்ட புத்தகம் பலவுடைத்தாகலின் அவற்றுள் அனேக புத்தகங்களி னுற்பத்திகாலங்க ளுரையிலடங்கா தொழிந்தவன வெனவும், அப்புத்தகங்க ளெச்சமய புத்தகங்கட்கும் முற்பட்டனவெனற்கு அவையிற்றில் வெளியாங் கேத்திரம் தீர்த்தம் மூர்த்தம் முதலியன பிரத்தியேகச் சான்றெனவுமறிதல் கல்வி மக்கள் கடமையே.

(21)

சிஷி:- உலகெங்கு மொன்றாய் விளங்குஞ் சூரியனைப்போல வேதமும் ஒன்றாயிருந்து பிரகாசிக்கும் மென்பதைவிட்டு, வேதம் நான்கென்பது நியாயமன்றெனச் சிலர் கிளத்தக் கேட்டுள்ளேன். இவ்விடயத்தில் நானுணர வேண்டிய நியாயம் வேறுண்டோ?

குரு :- அனாதியான பிரணவவேத மொன்றே. அது இவ்வியாசம் 4-வது கடாவிடையிற் பிரகாசப்படுத்தியபடி பெருகும்போது நான்கெனப்பட்டது, பகலில் உலகை மிக விளக்கிக்காட்டச் சூரியனையு மதன்கிரணங்களையு நிருமித்த நிரல்போல அத்துவித ஞானகாச விழுப்பொருளையும் ஆன்ம பெந்த முத்திகளையும் அதிகம் விளக்கிக்காட்டப் பிரணவவேதத்தையும் அதன் கிளர்ச்சியான நான்கு வேதாதிகளையும், இரவில் உலகைச் சிறுவரை விளக்கிக் காட்டச் சந்திரனையு மதன்கிரணங்களையு மற்றைக் கிரகங்களையு மெண்ணிறந்த விண்மீன்களையு நிருமித்தநிரல்போலப் பிரபஞ்சத்தையும் பிரபஞ்சநாயக னதிகாராதிகளையுஞ் சுவல்பம் விளக்கிக்காட்டப் புறச் சமய நூல்களையும், புறப்புறச்சமய நூல்களையும் பராபரனது நீதி வகுத்திருக்கின்றதெனு நியாயத்தைப் பரமாணுப் பரிமாணமேனு முணர மதுகையில்லாதார் "வேதமொன்றே வேதமொன்றெ" எனவோயாது பிதற்றுவர். அதனாலாவ தென்னை? சொற்றவொன்றான பிரணவவேதம் பரமரகசியமும், வேதாந்த வுச்சியுமாகும். அது புறப்புறச்சமயிகள் குறிக்கும் வேத மொன்றென்பதை யெவ்வாற்றானுஞ் சேராது. அகச்சமயஞானம் பகலொளியொக்கும். மற்றச் சமயஞானம் இரவொளியொக்கும். இருதிறவொளிகளிலும் பலபேதமுமுள வெனவுணர்க.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

(22)

சிஷி:- இருக்காதிவேதம் நான்கென்னாது மூன்றென்று மானவ தருமசாஸ்திரம் 1-வது அத்தியாயம் பேசுகின்றது. அவ்வுண்மையெவன்?

குரு :- இருக்கு யஜுர் சாமமெனப்படு மூன்றுமே வேதம். அம்மூன்றினுங் கலந்திருக்கு முண்மையே அதர்வணம். அதுவே நான்காவது வேதமென வாயிற்று இதனை நாலாவது சுடாவிடைக்கண் விளக்கினம். மறந்தனை போலும்! "இருக்கு முதலிய நான்கு வேதங்களும்" எனப் பொருளாமாறு அச் சாஸ்திரமே பகர்தலை அதன் 2-வது அத்தியாயம் 6-வது சுலோகத்தி லறிகுதி.

(23)

சிஷி:- நான்கு வேதங்களையும் மகேசுரரெனப்படு சிவபெருமானா ரருளிச்செய்தனரெனச் சிலநூல்களும், பிரமதேவனா ரருளிச் செய்தனரெனச் சிலநூல்களுந் தெரிக்கின்றன. உண்மையாது?

குரு :- மகேசுரரது மகாசிருஷ்டிகாலத்தில் அவ் வீசுரரால் அவருடைய நாற்றிசை முகங்களின் வழியாக அந்நான்கு வேதங்களு மருளிச்செய்யப்பட்டன. அக்காரணத்தானே யந்நான்கும் அவ்வீசுரர் முகங்களிற் றோன்றியவை யெனவாம். அந்நான்கும் அஷ்ட வித்யேசுரர்களிற் சிரேஷ்டரான அநந்ததேவ நாயனாராற் பிரமதேவர்க் குரைக்கப்பட்டன. அந்தப் பிரமதேவரது அவாந்தர சிருஷ்டி காலத்தில் அவரால் அவருடைய நாற்றிசை முகங்களின் வழியாகத் தேவர் முனிவர்களுக்கு அந்நான்கு மருளிச் செய்யப்பட்டன. அக்காரணத்தானே அவை அந்தப்பிரம தேவருடைய முகங்களிற் றோன்றியவையெனவாம். இக்கால நிகழுமறைகளிவையே. இம்மறைமறைந்து விளங்கு மொவ்வொரு சந்தர்ப்பமும் ஒவ்வொரு பெரியோர் கால மாகி அவராலது வெளிப்பட்டது போலவு நிற்கும். அவ்வாறு நிற்பினும் அது ஆன்றோராற் பழமறையாகவே கொள்ளப்படும்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

இவ்வாறு கோடலொழிந்து இந்துதேயத்தின் வடமேற்கிலுள்ள பாரசீகத்துப் பயிரிடுங் குடிகளாகிய ஆரியர்கள் இந்து தேயத்திற் குடியேறியதன் பின்பு பார்ப்பா ரெனப்பட்டார்: அவர்கள் கொடுவந்த புத்தகமே யவ்வேதம்; அதனில் அவர்களாற் பின்னுஞ் சில வெழுதப்பட்டனவென்று அந்நிய சமயத்து ஆங்கில பாடைப்பண்டித ரெழுதி வைத்ததை நம்பியுள்ள சில சைவர்கள்---நான்குவேத மென்பன சிவபிரானருளிய முதனூலல்ல, வடமொழியிற் சிவாகமமே முதனூல், திருஞானசம்பந்தர் முதலிய நால்வருமருளிச் செய்த தேவார திருவாசகங்களே தென்மொழியில் வேதமாகலின் அவை தமிழ்வேத மெனப்படுமென்ப. இனையரும் நீயுமுணருமாறு ஈண்டியாம் விளக்க லென்னெனின், "சதுரம் மறைதான் றுதி செய்துவணங்கு-மதுரம் பொழில்சூழ் மறைக்காட்டுறை மைந்தா" "வேதம் பலவோமம் வியந்தடி போற்ற-வோதம் முலவு மறைக்காட்டிலுறைவாய்" "பூவணத்துறை-யானநல்லருமறையங்க மோதிய-ஞானனை யடிதொழ" என்று அத்திருஞானசம்பந்த சுவாமிகளும், "விரித்தானை நால்வர்க்கும் வெவ்வேறு வேதங்கள் – புரித்தானைப் பதஞ்சந்திப் பொருளுருவாம் புண்ணியனை" "ஏழை தன்னொரு-கூறினர் கூறினர் வேத மங்கமும் *** கெடிலவாணரே"-சிவனுருவத்தில் "நான்மறையி னொலிதோன்று நயனந்தோன்றும்" என்று அத் திருநாவுக்கரசு சுவாமிகளும், "விண்டவர் தம்புர மூன்றெரி செய்தவெம் வேதியனே**கோளிலியெம்பெருமான்" "மறை நான்குங்கல் லானிழற்கீழ்ப்-பன்னிய வெங்கள்பிரான் பழ மண்ணிப் படிக்கரையே" "மறையார் வானவனே மறையின் பொருளானவனே****கடவூர்தனுள்" என்று அச் சுந்தரமூர்த்தி சுவாமிகளும், "வேதங்க-ளையா வெனவோங்கி யாழ்ந்தகன்ற நுண்ணியனே" "நந்தம் பாடியி னான்மறை யோனா-யந்தமி லாரிய னாயமர்ந் தருளியும்" "மூவா நான்மறை முதல்வா போற்றி**** மறையோர் கோல நெறியே போற்றி" "பரவுவாரிமையோர்கள் பாடுவன நால்வேதம்" "ஆயநான் மறைவனு நீயே யாத லறிந்தியா னியாவரினுங் கடைய னாயநாயினேன்" "மன்னுகலை துன்னுபொருண் மறைநான் கேவான்சரடாத்-தன்னையே கோவணமாச் சாத்தினன் காண் சாழலோ" "நன்றாக நால்வர்க்கு

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

நான்மறையினுட்பொருளை-யன்றாலின் கீழிருந்தங் கறமுரைத் தான் காணேடி" அன்னைப்பத்தில் "வேதமொழியர் வெண்ணீற்றர்" என்று அம்மாணிக்கவாசக சுவாமிகளுமருளிச் செய்தனர். இவ்வமுத வுரைகளுள் நான்கு வேதங்களும் பரமசிவனாரது திருவாக்கென்றும், அச்சிவனாரும் வேதியனாரென்றும், அவர் சனகாதி நால்வர்க்குங் கல்லாலின்க ணுபதேசித்தது நான்கு வேதங்களினுட் பொருளென்றும், அப்பொருள் அச்சிவனாரே யென்றும் சிவாநுக்கிரகத்தால் நான்கு வேதங்களையும் பிரமன் வெளியிட்டு நான்மறையவனெனும் பெயர் பெற்றானென்றும், சிவனாரணிந்த கோவண மவ்வேதங் களே யென்றும், அவை யவரைப் புகழ்கின்றன வென்றும், அவ்வேதமார்க்கம் அவர் மார்க்க மென்றும் வெளிப்பட்டவா றுணர்க. மொழிந்த அன்னைப்பத்தில் 'வேதமொழியர்' என்றதற்குத் தமிழ்வேத மொழிய ரெனப் பொருள்கூறி னென்னையெனின் அம்மொழியை வெளியிட்ட மாணிக்கவாசகப் பெருமானார் தமிழ்த் தேவாரமருளிச்செய்த மூவர்.தோற்றத்திற்கு மிக முற்பட்ட காலத்தே முத்திடைந்துளா ராகலின் அது பொருந்தாது. ஏனைய வெடுத்துக்காட்டுகளில் நான்மறை யென வருதலுங் கல்லாற்கீ ழுபதேசித்ததிறங் காணப்படலும் வடமொழி மறையினையே பொருந்துகின்றன. ஆண்டு மறைறென்றதூஉம், நான்மறை யென்றதூஉஞ் சரியையாதி நான்கு பாதங்களையுடைய ஆகமமென் றாகாவோ பிறவெனின், "ஆகம மாகிநின் றண்ணிப்பான் றாள்வாழ்க" என்ற திருவாசகம் அச்செய்யுளிற்றானே "மாற்ற மனங்கழிய நின்ற மறையோனே" என விளக்குதலின், ஆகமம் வேறு மறைவேறாதல் தேற்றமாம். அன்றியும், மறையெனுஞ் சொல் மறைபொருளுடைய வேதத்திற் குரித்தாகுமன்றி விரிபொருளுடைய ஆகமத்திற் குரித்தாகாது. ஆகமத்தை நான்மறையெனலும் வழக்கிலில்லை. உண்டெனின், அது பின்வரு நூலுரைகளோடு முரணும். ஈங்கு, வேதத்தை யொப்பாமே ஆகமத்தை யொப்புகின்ற அச் சைவர்க்கு அத் தேவார திருவாசங்களுந் தமிழ் வேதமாகாமல் தமிழாகம மாதலே யமைவுடைத்து. இவ்வமைவுடைமை யெவ் வழக்கினும் பொருந்துமாறின்றன்றே. பேரளியுடையாய் இன்னுஞ் சில மேற்கோள் காட்டா முடிவு கூறுவாம். இவ்விடயத்தில் நீ ஐயுற்று எட்டுணையேனு மருளற்க.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

"அருமையின் மறைநான் கோலமிட் டரற்று மப்பனே யம் பலத்தமுதே" எனத் திருமாளிகைத் தேவரும் "தெருண்ட வைதிகர்வாழ் திருவிடைக் கழி" எனச் சேந்த னாரும், "பூரணாவாரணம் பொழியும் பவளவாய் மணியே" "ஆரணத்தேன் பருகி யருந் தமிழ் மாலை கமழவருங்--காரணத்தி னிலைபெற்ற கருவூரன்" எனக் கருவூர்த் தேவருந் திருவிசைப்பாவி லருளிச் செய்தனர். "வேதத்தை விட்ட வறமில்லை வேதத்தி-னோதத் தகு மற மெல்லா முளதர்க்க-வாதத்தை விட்டு மதிஞர் வளமுற்ற - வேதத்தை யோதியே வீடுபெற்றார்களே." எனுந் தூக்கு-திருமந்திரத்தில் ஆகமச் சிறப்புக் கூறுவதன் முன் வேதச்சிறப்பு கூறிய அதிகாரத்திலுள்ளது. பின்னர் அம்மந்திரத்துழை "வேதமொ டாகம மெய்யா மிறைவனூ – லோதுஞ் சிறப்பும் பொதுவுமென் றுள்ளன-நாத னுரை யிவை நாடி லிரண்டந்தம் – பேதமதென்பர் பெரியோர்க் கபேதமே" என்பது மருளிச் செய்யப்பட்டது. இத்திரு மந்திரத்திற்றானே "வேதாந்தத்திலுள்ள தத்துவமசி வாக்கியம்" என வோரதிகாரமும், "மகாவாக்கியம்" என வோரதிகாரமுங் கூறப்பட்டுள்ளன. இவைகளுந் தெளிவுடை வைதிகர் நூலாய வேதத்தை முதனூலாக வுறுதிப்படுத்துபு மேம்பாடு புகல்கின்றன. பெரிய புராணத்துத் திருஞானசம்பந்த சுவாமிகள் புராணத்தே "ஆரணமு முலகேழு மீன்றருளி" என வருதலும், காமிகாகமத்தே ஈசுரனுடைய நாற்றிசை முகங்களிலு நான்கு வேதங்க டோன்றின. மேனோக்காயுள்ள ஈசானமுகத்தில் ஆகமங்க டோன்றின. வெனப் பொருளாதலும் வேதம் முதனூலென வெளியிடுகின்றன. "திருமறை நம்பர்தா முன்பருள் செய்த வதனைச் செப்பு-மொருமையி னின்ற தொண்டர்" எனப் பெரியபுராணங் கூறுதலினால், பரமசிவிவனார் மேனாளருளிச் செய்த வடமொழித் திருமறையினையே தென்மொழித் திருமறையாகத் திருஞான சம்பந்தப் பிள்ளையார் பாடியருளின ரெனவும், அவ்வாறு பாடப்பட்ட தமிழ்மறைப் பொருளே யாரியவேதப் பொருளெனவு மேற்படுகின்றது.

இனி, வேதத்திற் பிரதிபாதிக்கப்பட்ட அத்துவிதத்தை யொப்பி "அருமறைக ளொன்றென்னா-தத்துவித மென்றறையு மாங்கு" என மெய்கண்டதேவ ரருளிச்செய்த சிவஞானபோதந் தெரிப்பது முணரற் பாற்றே. அருணந்திசிவாசாரியார்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பாடியருளிய சிவஞான சித்தியார் பட்டாசாரியன் மதமறுதலை 1-வது செய்யுட்கண் மறைகளாய் வந்த வாய்மொழியும் வேறிந்து சேகர னதே" என வருதல் ஒரு தலைவனாற் சொல்லப்பட்டதாக நிச்சயிக்கும் வேதமும் வேறான சத்தியவசனங்களுஞ் சந்திர சேகரனிடத்ததேயென்றும், அச்சித்தியார் 8-ம் சூத்திரம் 15-வது பாட்டில் "அனாதியமலன் றருநூலிரண்டும்" என வருதல் வேதம் ஆகமமெனு மிரண்டும் அனாதியான சிவபெருமானா லருளிச்செய்யப்பட்டன வென்றும், 14-வது பாட்டில் "அருமறையா கமமுத னூல்" என வருதல் வேதமு மாகமும் முதனூலென்றும் "மிருதிபுரா ணங்கலைகண் மற்றுமெல்லா மெய்ந்நூலின் வழி" என வருதல் ஸ்மிருதி புராணம் கலைகள் உபாகமமெல்லாம் வழிநூலென்றும், "புடையாமங்கம் வேதாங்கம்'' என வருதல் காருடம் தக்கிணமுதலிய ஆகமாங்கங்களும் சிக்ஷை கற்பமுதலிய வேதாங்கங்களும் முறையே சார்புநூலென்றும் பொருளாகின்றன. ஈண்டுத் துலக்கிய சிவஞானபோதாதி சைவசித்தாந்த சாஸ்திரங்களானும் வேதம் முதனூலெனப் பெரிது மொப்புகொள்ளப் பட்டதாயிற்று.

இக் காட்டுகளானே வேதத்தை யிழித்துரைப்பார் கூற்றுத் தலைதூக்குமா றில்லையன்றோ. நமதாராய்ச்சி பெரிதெனக் கொண்ட வழியெமு மவ்விழிப்புரை வேதத்தையங்கீகரித்த அருட்பெருஞ் செல்வரையெல்லா மவமதித்த ஏதத்துக் காட்படுத்து மன்றோ! மேலைய திருமந்திரம் "இரண்டந்தமும் பெரியோர்க் கபேதமே" என்றதனால் வேதாந்தமுஞ் சித்தாந்தமுமாகிய விரண்டும் பேதமெனக் கொள்வார் யாவரும் பெரியோரல்லரெனப் படுவாரன்றோ. ஆழ்வார்கள் தென்மொழியிற் பாடியுள்ள நாலாயிரப்பிரபந்தத்தினையே வேதமெனக் கொளீஇ வடமொழி வேதத்தை யொதுக்கி யுழிதருசில அவைதிக வைணவரொத்த இந்த அவைதிகசைவ ரனைவரும் "அருமறைக டிருக்காப்புச் செய்துவைத்த வக்கதவந் திறந்திடவம் மறைக ளோதும்" எனத் திருஞானசம்பந்தசுவாமிகள் புராணங் கூறுமாறு திருமறைக்காட்டில் வேதஞ் சிவபூஜை புரிந்து கதவடைத்துத் திருக்காப்புச் செய்திட்டதையும், அக்கதவினைத் திருநாவுக்கரசுகளார் திருப்பதிகம்பாடித் திறந்ததையும், அங்கண் திருஞானசம்பந்தப் பிள்ளையார் அதனை யடைக்கவுந்

Center for Shaiva Studies, Pondicherry Collection

In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

திறக்கவுமாக வருள்புரிந்ததையும், அப்பிள்ளையாரே "வேதமும் பொருள்களு மருளி-யங்கயற் கண்ணி தன்னொடு மமர்ந்த வாலவா யாவது மிதுவே" என்றருளிச் செய்வதற் கேதுவான மதுரை மூதூரில் வேதத்திற்குப் பொரு ளருளிச்செய்த திருவிளையாடலையும், சோமுகாசுரன் வேதங்களைக் களவாடிச் சமுத்திரத்தி லொளித் திருந்தபோது ஸ்ரீமந் நாராயணர் மச்சாவதாரஞ்செய்து அவனைச் சவட்டி அவற்றை மீட்டுவந்தன ரென்பதையும், பின்ன ரகங்கரித்த அம்மச்சத்தைச் சிவபிரானார் நசித்து அதன் கண்களைப் பெயர்த்தெடுத்து அணியோடணிந்தது காரணமாக அவர்க்கு "மச்சாரி" எனுந் திருப்பெயருண் டாயிற் றென்பதையும், மற்றும் வேத சம்பந்தமாக வருஉஞ் சரித்திர முள்ளிட்ட புராணேதிகாசாதி யனைத்தையு மொப்பாதவர்க ளாவார்கள். இவ்வாறாமிவர்கள் வேதபாகியராகிய புறச்சமயிகளைப்போல உட்சமயநூல் களிலேதுமற்றவர்களே யாவார்கள். இவ்வித அவைதிக சைவமொன் றுண்டெனற்கும், அது நன்றெனற்கும் யாம் நல்லாசிரியர் வாக்கியமொன்றுங் கண்டிலம். இவர்க ளொப்பியுள்ள நூல்களைக் கொண்டே யிவர்கண் முடிவு தவறென இங்கே நிறுவினாமென்பது குன்றின்மேலிட்ட விளக்கென வாதலிற் காட்டிய காட்டன்ன மேற்கோள் பலவற்றையுங் காட்டாது விடுத்தாம். ஆகலி னிவர்களது கோட்பாட்டைப் புறந்தள்ளி நாங் காண்பதாவது-

"முதலாகும் வேத முழுதா கமமாகப்-பதியான வீசன் பகர்ந்த திரண்டும்" எனத் திருமந்திரங் கூறுவதுபோல முதனூலாய வேதப்பொருண் முழுதுமே யாகமமாக வருளிச்செய்யப் பட்டிருக்கின்றன வெனத் துணிபு கோடலாம். இத்துணிபே சிவஞானபோதப் புடைநூலாகிய சிவப்பிரகாசத்துழி, "பலகலையா கமவேதம் யாவையினுங் கருத்துப் பதிபசுபா சந்தெரித்தல்" எனவும், மேற்காட்டப்பட்ட சிவஞானசித்தியார் 8-ம் சூத்திரம் 15-வதுபாட்டுழி "வேதாந்தத்-தீதில் பொருள் கொண்டுரைக்கு நூல் சைவம்" எனவும் வருகின்றனவென் றுணர்வதோடு வேதாகம வுடம்பாடாம் வைதிகசைவ மார்க்கமே சன்மார்க்க மெனவு முணரவேண்டும். இதனையே திருஞானசம்பந்தப்பிள்ளையார் முதலிய பெரியர் விளக்குந ராயின ரெனற்குப்பெரிய புராணத்தில் "வேதநெறி தழைத்தோங்க

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

மிகுசைவத் துறைவிளங்கப்-பூதபரம்பரை பொலியப் புனிதவாய் மலர்ந்தழுத**** திருஞான சம்பந்தர்" எனவும், "சைவ முதல் வைதிகமுந் தழைத்தோங்க" எனவும், தாயுமான சுவாமிகள் பாடலில் "வைதிகசைவ மழகு" எனவும் வருவன நீ காண்க. நிற்க.

மேன்மிழற்றப்பட்ட ஆங்கில பாடைப் பண்டிதர் கூறுமாறு பாரசீகக்குடிகள் இந்துதேயத்திற் புக்க துண்மையாயின், அக்குடிகளிற் பண்டிதராயுள்ளார் வடதிசைக்கண்ணே ஆகமத்தோடு வழங்கப்பட்டு வந்த வேதத்தினைக் கைப்பற்றத் தடையில்லை. இஃதொன்று பொருந்தும். வேறுகூறல் பொருந்தாது. ஆவதேல், ஆகமத்திற் சொல்லப்பட்டது போல வேதத்தில் ஒரே தெய்வஞ் சொல்லப்படாமற் பல தெய்வஞ் சொல்லப்பட்டமை யென்னெனின், சிவனடியார்களைச் சிவனாகவே வழிபடவேண்டுமென ஆகமும் விதித்தாங்கும் பரமேசுரனது விபூதியிலுள்ள சருவமூர்த்திகளையும் பரமேசுரனாக வழிபட வேண்டுமென அவ்வேதமும் விதித்ததெனக் கொள்க. அன்னணம் விதித்த வேதந்தானே தேவர்களில் இந்திரன் பெரியவன்; அவனினும் பிரமவிஷ்ணு உருத்திரர்களாகிய மூவர் முறையே பெரியவர்; இம்மூவரினும் மகேஸ்வரன் சதாசிவனெனுஞ் சொற்களுக்குரிய (நான்காவதான) சிவம் பெரிது; இதுவே காரணப்பொருள்; (காரணப் பொருளாகப் பிரம விஷ்ணு உருத்தி ரேந்திராதி தேவர்களால் தியானிக்கப்படுந்) தியேயப் பொருளாகிய சர்வைச்சுவரிய சம்பன்ன சம்பு; அத்துவிதப்பிரமம்; பரமாத்துமாவென முடிபுகூறுவதை வேதமுணர்ந்த யாவருமறிவர். இதனை, "ப்ரத்யயஸாரம் ப்ரபஞ்சோப சமம் சாந்தம் சிவமத்வைதம் சதுர்த்தம் மந்யந்தே" எனத் தசோபநிஷத்து என்பவற்றுள் ஒன்றாகிய மாண்டூக்கியோபநிஷத்தும், "ஏகாத்மப் ப்ரத்யயஸாரம் ப்ரபஞ்சோப சமம் சிவம் சாந்த மத்வைதம் சதுர்த்தம் மந்யந்தே" என நாரத பரிவிராஜகோபநிஷத்தின் எட்டாவது உபதேசமும், "சாந்தம் சிவமத்வைதம் சதுர்த்தம் மந்யந்தே" என இராம தபநோபநிஷத்தின் உத்தரதாபிநியும், "அத்வைதம் சதுர்த்தம் சிவம் ப்ரஹ்ம விஷ்ணுருத்ராதீதமேக மாசாஸ்யம் பகவந்தம் சிவம்" எனப் பஸ்ம ஜாபாலோபநிஷத்தும் "ப்ரஹ்ம விஷ்ணு

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ருத்ரேந்த்ராஸ்தே ஸம்ப்ரஸூயந்தே ஸர்வாணிசேந்த்ரயாணி ஸஹபூதைர்நகாரணம் காரணாநாம் தியாதா காரணந்துத்தியேயஸ் ஸர்வைச்வர்ய ஸம்பந்நஸ் ஸர்வேச்வர சம்பு ராகாச மத்யே" என அதர்வசிகோபநிஷத்தும் அறையு மாற்றானும் அறிக. பூமிக்குப் பூமிதேவியும், அக்கினிக்கு அக்கினிதேவனுந் தெய்வமாக வுள்ளமை போல வேதங்கட்கும் வேததெய்வமுண்டு. இனி, வினவ வேண்டியதை வினவுக.

(24)

சிஷி: ஆயின் "அன்ன நான்மறை யனாதியாம்" என்றபடி நான்கு வேதங்களும் ஒருவராற் சொல்லப் படாமல் அனாதியாயிருக்கின்றனவெனா நூல்க ளுவலு மாறென்னை?

குரு: ஈசுரனது திருவுள்ளப் பாட்டின்படி பிரணவ வேதத்தின் விரிந்த நான்கு வேதத்தையும் முடிவுபடுத்தின்; அனாதிப் பொருட்டன்மை வெளியாம். அப்பொருட்டன்மையைச் சொல்ல வந்த அவை அனாதியெனவாம். அனாதி சிவனுடைய அனாதி மஹா மாயையாங் குடிலையே அந்தப் பிரணவமெனும் உண்மையால் அவ்வேதம் அனாதி யெனவாம். அனாதியெனும் பெயரிய கருத்தாவினாலருளிச் செய்யப்பட்டது வேதமாகலின்; அஃதனாதியெனும் பெயர் பெறும். இது கருத்தாவாகு பெயராம். இவ்வாறு கூறாக்கால், அவ்வனாதியெனப்படு மறையே கருத்தாவெனவாகும். ஒலியெழுத்து வாக்கிய ரூபமாகவுள்ள அது அறிவற்ற ஜடமாகலிற் கருத்தாவாதல் கூடாது. கருமத்திற் சுதந்திரமுடையோன் கருத்தா.

(25)

சிஷி: வடமொழியிற் கடின சந்திகளாகவும். (பொருண் மறைவு) கருகலாகவுஞ் சொல்லப்பட்ட அவ்வேதங்களை வேத மோது மந்தணர் ஆயிரவருளொருவரேனும் வாசித்துப் பொருள் பகரமாட்டார்: அவ்வண மமைந்துள்ள அவற்றினை யான்மாக்களறிந்தொழுகுமாறு கடவுளரும் அவரநுக்கிரக முடையாரு மருளிச் செய்தன ரென்பது யாவர்க்குஞ் சம்மதமாமா? தருமமாமா? என்று சிலர் கடாவ யான் கேட்டதுண்டு. அக் கடாவிக்கு விடையென்னை?

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

குரு: பொருள் வெளிப்படையாகத் தோன்றச் சூத்திரித்தல் நூற் குற்றத்து ஒன்றென்றும், வீணேவிரியாது சுருங்கிநிற்கச் சொல்லுதலும் ஆழ்ந்த கருத்தையுடைத்தாதலும் நூலழகி லிரண்டென்றும், சில சூத்திரவிதிகளைக்கொண் டாய்ந்துணர ஒரு பொருளை வைத்தலும் ஒரு மொழியில் இருபொருள்பட வியம்பலும் முப்பத்திரண்டு உத்திகளி லிரண்டென்றும், இவையுயிர் இவைமெய்யென அறியவரு குறிச்சூத்திரமும் புணர்ச்சி விதியறிந்து புணர்தலையும் முடிபுவிதியறிந்து முடித்தலையுஞ் செய்யுஞ் செய்கைச் சூத்திரமும் உண்டென்றும், இவை யிலக்கணவிதியாமென்று முணர்ந்தோர் வேதங் கடினசந்தி கருகலென்றும், அவ்வண மமைந்தவற்றைக் கடவுளாதியர் அருளிச்செய்தன ரென்பது யாவர்க்குஞ் சம்மதமாமா? தருமமாமா? என்றுஞ் சொல்லத் துணிவரோ! துணியார். அவ் விதியறியா * முசலக்கிசலர் (* முசலக்கிசலம் = உலக்கைக்கொழுந்து. அது போன்றார் முசலக்கிசலர்.) அப்படிச் சொல்லத் துணிவர். கலாநாயகமான அவ்வேதத்தினுக்கு அவ் விலக்கணங்களமையாமல் வேறெதனுக்கு அமையவேண்டு மென்றல் அவர் கருத்தோ அறிகிலேம்; ஒராறு, ஏழைக்கிளவிக ணிரம்பிச் சொன்னயங் குன்றினவைகளும் அவர்கள் வாசித்து வருகின்றவைகளுமான கதைகளையே வேதமென்றும், அதன் கண்ணே யவ்விலக்கணங்கள் உளவென்றுஞ் சொல்வார் போலும்! அன்பின் மிக்கோய்! வேதபாராயணஞ் செய்பவன் வித்தையிற் சிறந்தோனா யிருக்க வேண்டுமென்பதை விவேகிகளே யறிவர். (கிளவி = சொல்.)

(26)

சிஷி: சூத்திரரும் பெண்களுஞ் சமமாவார்கள். அவர்கள் வேதமோதவுங் கேட்கவும் அருகரல்லரெனச் சின்னூல்கள் கூறுமா றென்கொல்லோ?

குரு: சூத்திரருட் பெரும்பாலார்க்கு ஊன்முதலிய ஆகாராதிகளாலும், இழி தொழில்களாலும், பெண்களுக்கு மாதப் பூப்புக் கர்ப்பாதி சூதகங்களாலும் அசுத்த முண்மையால் அந்நூல்க ளவ்வாறு கூறும். பார்ப்பார் குலத்திற் பிறந்து கள்ளு னருந்தி ஆசாரங் கெட்டவனும் இழிதொழில்க ளிழைப்போனும் அவ் வேதமோதக் கேட்க அருகரல்லாதவாறே ஆசாரமில்லா

Center for Shaiva Studies, Pondicherry Collection

... In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

மற்றையருமாவரென்றல் நீதியாம். வேதத்தின் கருமகாண்டம் - விசேட கிரியைகளாதலின் அது யாவர்க்கும் பொதுவாகாது. ஞானகாண்டம் வருணாச்சிரமங்கள் கடந்த ஞானத்தையினிது கூறுதலின், அது யாவர்க்கும் பொதுவாகும். இதனையும் சமஸ்கிருதத்தில் ஓதவுங் கேட்கவும் முதன் மூன்று வருணத்துப் பெண்களுக்குஞ் சூத்திர குலத்து இருபாலார்க்கும் அதிகாரமில்லை. திராவிடாதி வேறு பாஷைகளில் அவ்வதிகார முண்டென்பதே சில பார்ப்பார் தீர்மானம். இது நியாயமாக மாட்டாது. ஏனெனின்; ஆசாரமுடைய நான்கு வருணத்தாரும் ஓதவுங் கேட்கவுமாகவுள்ள சிவாகமங்கள் அச்சமஸ்கிருத பாஷையிலேயேயிருக்கின்றன: அவ்வா றமைக்கப்பட்ட புராணேதிகாசங்களும் அப்பாஷையிலிருக்கின்றனவாகலின். இதுவேவேயுமன்றி, இருக்குவேதத்தைச் சேர்ந்த ஐதரேயப்பிராஹ்மணம் 2-வது பஞ்சகத்திலுள்ளபடி தாசபுத்திரனாகிய கவசஐலுசனெனும் பெயருடையான் இருக்குவேத சங்கிதையினை யுண்டு பண்ணிய கிரந்தகர்த்தனாக் காணப்படுதலினாலும், அங்கதேசத்தரசனுடைய அடிமைப் பெண்ணின் மகனாய கச்சீவது என்பான் ஆரிய வேதமுண்டு செய்த கர்த்தர்களாகிய இருடிகளிலொருவனாக விருத்தலினாலும், புலோமனைபுத்திரி சசி-காமைபுத்திரி சிரத்தை - அகஸ்தியர்பத்தினி உலோபாமுத்திரை - சத்திபுத்திரிகோரவி - அப்பிரீனாபுத்திரி வாக்கு எனு மிப்பெண்கள் இருக்குவேதத்திற் சில பாகங்களுக்குக் கிரந்தகர்த்தர்களாக விளங்குதலினாலுஞ் சூத்திரரும் பெண்களும் வேதமோதலாமெனவு மேற்படுகின்றது. அவ்வாறு உத்திரதேயத்துள்ள சதுர் வருணத்தாரும் அவ்வேத மோதுதலை யிக்காலத்துங் காணலாம். (ஆரியம் = வடமொழி)

இனி, யஜுர்வேத சதபதப்பிராஹ்மணம் 1-வது அத்தியாயத்தில் யாககர்த்தா விப்பிரனாயின் ஏகி = வருக, யாககர்த்தா க்ஷத்திரியனாயின் வைசியனாயின் அகஹி = இவ்விடம்வருக, யாககர்த்தா சூத்திரனாயின் அதாவாது = இவ்விடம் ஓடி வருக என்றழைக்கும்படி விதித்தவாறு சூத்திரன் வேதகர்ம யாககர்த்தாவாகவு மிருக்கலாமென்பது முணரற்பாற்றே. அற்றாகலினன்றே மேற்றெரித்த கவச ஐலுசன் பின்னர் யாககாரியத்திற் சேர்க்கப்பட்டனன் என மேலைய ஐதரேயப்பிராஹ்மணம் 2வது பஞ்ச முகங் கூறிற்றரோ என்க.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

முதன் மூவருணத்தார்க்கு முள்ளவாறு சூத்திரருக்கு உபநயனமெனப்படு துவிஜத்துவ மில்லைகொலாமென்று ஸ்மிருதிகள் மிழற்றும். அப்படி வேதம் மிழற்றாது. மநுஸ்மிருதி 3-வது அத்தியாயம் 197-வது சுலோகத்தின்படி பார்ப்பார் பிருகு வமிசத்தினரும், க்ஷத்திரியர் ஆங்கிரசு வமிசத்தினரும், வைசியர் புலஸ்தியர் வமிசத்தினரு மானவாறு சூத்திரர் வசிஷ்டர் வமிசத்தாராயுள்ளா ராகலின் அந்தச் சூத்திரர் இருடிகோத்திரத்தாரே யாவர். ஈண்டு அனைவருந்தோன்ற முதல் மூலபரனா யெழுந்தருளிய சிவபரஞ்சோதியைக் கூறுவது சிறப்புடைமையின் யாவருஞ் சிவ கோத்திரத்தாருமாவர். சொற்ற இருடிகோத்திரத்துச் சூத்திரரும், இழியுண விழி தொழிலில்லா அவர் போன்றுளாருஞ் சற்சூத்திர ராவர். ஏனைய சூத்திரர் அசற்சூத்திர ராவர். ஸூத்-எனுந் தாதுவினின்று சூத்திர னெனுஞ் சொல் உண்டாயிற்று. ஸூத்= சுத்திகரித்தலெனப் பொருளாகும் ஆகவே கழனிகளைச் சுத்திசெய்து பயிரிடுந் தொழிலாளர் சூத்திரராவ ரென்க. இத்தொழில் பயறு, உழுந்து, கடுகு, கடலை, எள்ளு, கொள்ளு, அவரை, துவரை யெனும் எண்வகைப் பண்டமும் விளைத்து உண்ணலும் வைசியர் கடனெனப் பொருளாம்படி "மெய்தெரி வகையி னெண்வகை யுணவின் செய்தியும் வரையா ரப்பா லான" எனுந் தொல்காப்பிய விதிவழியேயும் வைசியர்க் குரித்தானதுபோலச் சற்சூத்திரருக்கு முரித்தாயிற்று. அந்தச் சுத்திகரித்தல் முதன் மூவருணத்தா ருடையவுஞ் சற்சூத்திர ருடையவும் வீடுகழனிகளைச் சுத்திசெய்த லெனப் பொருளாம்வழி அத்தொழில் மேற்சொற்ற அசற்சூத்திரர்க் குரித்தாம். இச்சூத்திரரே ஊழியக்கார ரெனப்படுவார். இவ் வசற்சூத்திர சப்தமானது அம்பட்டர் சண்டாள ரென்பார்க்கு முபயோகிக்கப்படும். மநுஸ்மிருதி 8-வது அத்தியாயம் 245-வது சுலோகத்தின்படி யுத்தத்தில் வெற்றியடைந்து கொண்டுவரப்பட்டவன், பக்தியினால் வேலைசெய்கின்றவன், தன் தேவடியாள் குமாரன், விலைக்கு வாங்கப்பட்டவன், ஒருவனாற் கொடுக்கப்பட்டவன், குலவழியாகத் தொன்றுதொட்டு வேலை செய்கின்றவன், குற்றத்தின் பொருட்டு வேலை செய்கின்றவனெனும் இன்னோர் சூத்திர ராகின்றார். சுமந்து என்பார் செய்த ஸ்மிருதியில் "ஸூத்ர

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

யாஜகஸ்ஸர்வத் திரவ்ய பரித்யாகாத் பூதோபவதி! அபிசப்த: பதித: பௌநர்ப்பவ: புரூண: பும்ச்சல்ய: அசுசி: சஸ்திரகார: தைலிக: சக்ரீ த்துவஜீ சுவர்ணகார: லெகக: ஷண்டக: வர்த்தகி கணக: கணிகா ஸௌநிக: வியாத நிஷாத ரஜக புராட சர்மகாரா: ஏதாந நுஸ்ருத்ய ஸம்பாதித த்ரவ்யாத்நிஷ்பந்ந மந்ந மபோஜ்யம்| ஏதேஷாம் த்ரவ்ய மப்பிரதிக் கிராஹ்யம்| ஏதேஷாம் யாகார்ஹதா நபவதி11 என வருதற்குச் - சூத்திரனுக்கு வேள்வி செய்தவன் பொருளனைத்தையும் விட்டு நீங்குதலினாற் பரிசுத்தனாகின்றான். அபவாதமுற்றவன், சமய வொழுக்கங் கெட்டவன், மறுமணஞ் செய்தவள் மகன், கருவழித்தவன் அல்லது சிசுவதை செய்தவன், ஆண் அவாவுற்ற பெண், சுத்தமிலான், ஆயுதங்களுண்டு செய்வோன், எண்ணெய்விற் போன், குயவன், கொடிபிடிப்போன், தட்டான், அரிப்புக்காரன் அல்லது பொன்னெடுப்போன், சித்திரக்காரன், பேடி, வர்த்தகன், கணக்கன், கணிகை, ஊன் விற்பவன் அல்லது பரதவன் செம்படவன், வேடன், நிஷாதன், வண்ணான், குறிசொல்பவன், சகுனஞ் சொல்பவன், தோல் வினைஞன் அல்லது செம்மான் எனு மிவர்களுடைய கைப்பொருள்களைப் புசித்தலாகாது தானமாகக் கோடலாகாது இவர்கள் வேள்வி செய்வித்தல் கூடாதெனப் பொருளாகின்றபடி அபவாத முற்றவன் முதல் அனைவருஞ் சூத்திரராகின்றார்.

ஈண்டு ஊழியக்கார ரெனப்பட்டார் முதல் விளக்கப்பட்ட பல்லோருட் பெரும்பாலார் இழிதொழில் பற்றியே சூத்திரரெனப் பட்டமையான் அவ்விழி தொழிலை மேலான வருணத்தார் செயினுஞ் செய்தமட்டில் அந்தச் சூத்திரரேயாவர். அங்ஙனம் அத்தொழில் விட்டு உரிய மேன்றொழில் பற்றுவாராயின் அவர் மேலான வருணத்தாரேயாவர். இவ்வுண்மை பற்றியே 'பெருமைக்கு மேனைச் சிறுமைக்குந் தத்தந் - கருமமே கட்டளைக் கல்." "பிறப்பொக்குமெல்லா வுயிர்க்குஞ் சிறப்பொவ்வா - செய்தொழில் வேற்றுமை யால்" என்றார் செந்நாப்போதாரும். கோமாமிச முண்பவன் பஞ்சமனாவானெனு முடிபொன்று பிற்கால முண்டாயிற்று.

உயர்குலத் தந்தைக்கு மிழிகுலத் தாய்க்கும் பிறந்த பிள்ளைகள் அநுலோமர், உயர்குலத் தாய்க்கு மிழிகுலத் தந்தைக்கும் பிறந்த

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பிள்ளைகள் பிரதிலோமர், அநுலோமத் தந்தைக்கும் பிரதிலோமத் தாய்க்கும் பிறந்த பிள்ளைகள் அந்தராளர், அநுலோமத் தாய்க்கும் பிரதிலோமத் தந்தைக்கும் பிறந்த பிள்ளைகள் விராத்தியர் எனப் பனுவல்கள் பகர்கின்றன. இத் தாய்தந்தையர் விவாகத்தாலேனுங் களவாலேனுங் கூடிப் பெற்ற பிள்ளைகள் பலஜாதியாராவ ரெனவும் ஈண்டைப் பகுத்துணர வேண்டுமன்றோ. அங்ஙனமாயின், ஒன்றற்கேனு முடன்பட்டுநிற்பா ருலகி லுளராதல் வேண்டுமே. இலரே யாகின்றார்.

இன்னணம் உற்பத்தியானவரையும் ஆகுநரையும் பற்றிப் பரியாலோசனைசெயப்புகின், எத்தந்தைக் கெவர் பிள்ளையாப் பிறந்தனர் எவர்பிறப்பரெனத் தீர்மானிக்க ஒல்லாதென்னு முடிவே பிறக்கும். இதுநிற்க; விவேகமில்லாதவனைச் சூத்திரனென்பதே வேதத்தின் கருத்தாகும். யாங்ஙனமெனின், (ஞானகுருவுக்குப் பணிவிடை புரிந்து ஞானம் பெறவேண்டுமெனும் விவேகமின்றி அன்னதானத்தையே மிகவு நடாத்திவந்த) பௌத்திராயண ஜானசுருதியெனும் பெயரிய ஓரரையன் சாகவரெனும் பெயரிய ஒரு பிரமஞானியாரைத் தரிசித்து அவர்முன்பு அறுநூறு பசுக்களையும் அரும்பெரும் பரிகள் பூட்டிய தேரினையுங் காணிக்கையாக நிறீஇ வந்தித்துப் பிரமஞானோபதேசத்தை விரும்பியகாலை அந்த ஞானியார் க்ஷத்திரியனாகிய அவ்வரையனை "ஏடா சூத்திரா!" என்று விளித்தனர் கண்டாய். இதனை,-

"தமுஹபர: ப்பிரத்யுவாசாஹ ஹாரேத்வா சூத்ரதவை வஸஹ கோபிரஸ்த்துவிதி ததுஹபுநரேவ ஜாநசுருதி: பௌத் ராயணஸ் ஸஹஸ்ரங்கவாம் நிஷ்கமச்வதரீ ரதம் துஹிதரந் ததாதாயப் பிரதிசக்ரமே॥"

என வரூஉஞ் சாந்தோக்கியோபநிஷத்து 4-வது பிரபா டகம் 2வது கண்டம் 3-வது அநுவாகத்தினறிக. இவ் வாறாயின் முநியெனு மொரு விசேடணமொழி, பார்ப்பார்குலமல்லா ஏனைய குலத் துதித்தவர்க்கு மாங்கொல் பிறவெனின்; அறியாது கடாயினாய்: பாணிநீயம் 4-வது அத்தியாயம் 23-வது சூத்திரத்துள்ளவாறு மநே: + உச்ச = மநேருச்ச என்று சேரும். மந்-தாது "மநேருச்ச" என்னும் விதியால் அந்த மகரத்தின்மீது உகரம் ஆதேசமாக வந்து கூடலும்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

முந்-என்றாகும். ஆகவே இகரப் பிரத்யயஞ் சேர்ந்து முநி என வாம். மந-ஞானமாதலின், முநி என்பது ஞானமுடையான் எனப் பொருளாம். மௌநமுற் ஞானத்திருப்பவன் றிருப்போனும். முநியாவன், இஞ்ஞானமும் மௌநமும் நல்லூழுள்ள பல்வருணத்தார்க்கும் பொருந்துதலின் அவர்க்கெல்லாம் அம் முநிமொழி யாகுமென்க. அதனாலன்றோ தில்லைவாழந்தணரு ளொருவராய கொற்றவன்குடி உமாபதி சிவாச்சாரியார் தாமருளிச் செய்த சேக்கிழார் புராணத்துழை வேளாள குலத்தினராய சேக்கிழார் சுவாமிகளைத் "தேனிப்பார் குன்றைமுநி சேக்கிழார்" எனக் கூறியருளினர். இத்திற மேற்கோள் பலவுள. இம் முநித் தன்மை பார்ப்பார் குலத்தவர்க் கிலாவிடின் அவரும் அத்தன்மையுளார்க்குக் கீழோராவர். இக்கருத்தே பற்றியன்றோ 'சிவ' எனுஞ் சொல்லைச் சொல்லுகின்றவன் சாதியிற் சண்டாளனாயிருப்பினும் அவனைக் காணின், அவனோடு கலந்து பேசுக அவனோ டுறைக அவனோ டுண்ணுக வென்று பொருளாம்படி, *"அபிவா யச் சண்டாள: சிவ இதிவாசம் வதேத்தேநஸஹ ஸம்வதேத் தேநஸஹஸம்வஸேத்தேந ஸஹ புஞ்சீத" (*இது நீலகண்டபாஷியத்து 4-ம் அத்தியாயத்து 1-ம் பாதத்துப் 15-ம் சூத்திரபாஷியத்தின் கீழே காணப்படுகின்றது. இஃதிக்காலம் அச்சிட்டுள்ள முண்ட கோபநிஷத்துப் பிரதிகளில் இல்லை.)

என முண்டகோப நிடதம் மொழிகின்றது. இனித் தமிழ் வழக்கின் முனிவனெனப் படுமொழி உலகை முனிந்து கொண்டவனெனப் பொருளாம்வழி உலகை வெறுத்துக் கடவுளைப் பற்றிய பல்வருணத்தாரும் முனிவர் முனைவ ரெனவாமாறு முணரத்தக்கதே. முனிதல் முனைதலெனுஞ் சொற்கள் வெறுத்தலெனும் பொருள. ஆகலின், திருவள்ளுவதேவர் "எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினு மப்பொருண்-மெய்ப்பொருள் காண்ப தறிவு" என்றபடி இவ்வுறுதி யுய்த்துணர்ந்து நன்னெறிபிடித் தொழுகுந்தன்மை நல்லவர்மாட்டே யாம்.

வேதமோதவுங் கேட்கவு மதிகாரமில்லார் வேத மூலமான பிரணவத்தையு முச்சரிக்கொணா தென்பதுஞ் சிலவேதியர் தீர்மானம். இதுவும் மேல்விளக்கிய அசுத்த முடையார் பக்ஷமாமே

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

யன்றிச் சுத்தமுடையார் பக்ஷமாகாது. இம்முடிவை ஞானகாண்ட அநுஷ்டிப்புக்குரிய பிரணவத்தினால் விருத்தியாகத்தக்க யோக ஞானங்களை ஆசாரமுள்ள பலவருணத்தாரு மடைந்து அந்தமிலின்பம் பெற்றனரெனக் கூறு பன்னூல்களு முறுதிப்படுத்தும். "உயர்ந்தோர்க் குரிய வோத்தினான" என்று தொல்காப்பியனார் கூறியதூஉம் அது. இங்ஙனம் சூத்திரருக்கு ஓங்காரநீக்கி ஆகமத்திற் சொல்லப்பட்ட பஞ்சாக்ஷரமே யுரியனவெனின், அப்பஞ்சாக்ஷரமும் அக்கடவுளும் வேதஹிருதயமாக விருத்தலின் அவை வேதியருக்கு முரியனவாயின. அன்றி, பஞ்சாக்ஷர ஜெபத்தில் நம: முன்னேவர ஜெபிப்பது பிராமணர்க்காம். அந் நம: பின்னே வர ஜெபிப்பது மற்ற வருணத்தார்க்காம்" எனச் சைவபுராணத்து வித்யேசுரசங்கிதை 9-வது அத்தியாயமுங் கூறுகின்றது. ஆகலிற் பஞ்சாக்ஷரம் பொதுவென்க. துணிவு--எவ்வருணத்து உதித்திருப்பினும் பூர்வபுண்ணிய பலப்பிராப்தி யுள்ளார்க்கே மிக்கோரான் அந்தப் பிரணவாதிக ளுபதேசிக்கப்படும் அரியநூலுங்கிட்டும் எனக் கோடற் பாலது. ஒழுக்கம் நிரம்ப வேற்படுத்திய ஜாதி வேறுபாடு அவ்வொழுக்கத்தினின்றும் நித்திரை செய்வோன் கைப் பொருள்போலத் தானே நீங்கப் பெறுதல் தக்கார் பக்க மேயாம். பிரமாணத்தன்மைக் குரியது ஜீவனன்று, உடம்பன்று, ஜாதியன்று, கல்வியறிவன்று, கருமமன்று, தருமமன்றெனத் திருஷ்டாந்த வாயிலாக விளக்கி அங்கட்சுவாநுபவப் பிரமஞானமுடையவனே பிராமணனென்று வஜ்ரசூசியுபநிடதம் முடிவு கூறுதல் போலப் பலவுபநிடத சம்மத முண்டென்பது முணர்க. இதுவே யநுபவத்திற்கு மொத்தது, இப் பெற்றியறியா துரைப்பா ருரைகளையெல்லாம் அந்த வுரையெனக் களைக. வேதஹிருதயமாதல் எவ்வாறெனின்; மூன்று வேதங்களின் நடுவிலுள்ளது யஜுர்வேதம், அதன் ஏழுகாண்டங் களினடுவிலுள்ளது நான்காவது காண்டம், அக்காண்டத்தினடு விலுள்ளது ஐந்தாவது பிரச்னமாகிய ஸ்ரீருத்திரம். அதனடுவிலுள்ளது "நமச்சோமாயசா" எனும் அநுவாகம். அதனடுவிலுளடளது "நமச்சிவாயசா" எனும் வாக்கியம். அதனடுவிலுள்ளது "சிவ" எனும்பதியினது திருநாமம் என வறிக. (ஒத்து=வேதம்)

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

(27)

சிஷி: கடவுள ரருளிச் செய்த வேதாகமாதிகளுக்கு மாறு கோளாக யாதானுமொரு புத்தகத்தை யாவ னொருவ னெழுதி அதைக் கடவுளர் சொல்லினார் யாமெழுதினாமென்று சொல்லின், உண்மை யுணர்வ தெவ்வாறு?

குரு:- ஜக ஜீவ பரலக்ஷணங்களையும், அறம் பொரு ளின்பம் வீடெனு நான்கு புருஷார்த்தங்களையும், வழுவிலாவின்ப வழிபாட்டிற் குரிய சரியை கிரியை யோகம் ஞானமெனு நான்கு சோபானங்களையும் பிரகாசப்படுத்திப் பேசா எந்நூலும் ஈசுவரனருளிய வுண்மைப்பா டுணர்த்துஞ் சுருதியாக மாட்டாதென்றும். அதை விவேகிகள் விசாரிக்கப்புகின் யுக்திக்கும் அனுபவத்திற்கும் பொருந்தா வெற்றுரையும் வேறுங்கீறலுமே யாகுமென்றுந் தீர்மானிக்கும்வழி அது கண்டிக்கப் படுவதே.

இன்னணங் கண்டிக்கப்படும் யாதானுமொரு புத்தகத்தைக் கடவுளர் சொல்ல வெழுதப்பட்டதெனக் கொளின், அக்கடவுளர் காரண காரியங்கள் தெரிந்துரையா அபூரணராவரெனுந் தீர்வை யுண்டாம். ஆனாவின்ப அருட்கடலாங் கடவுளருளிய சுருதிக்கு யுக்தி அனுபவமென்னும் இரண்டும், ஏனையோ ரருளிய நூலுக்குச் சுருதி யுக்தி அனுபமென்னு மூன்றும் பொருந்த வேண்டும். மூன்றும் பொருந்தா துளதாயின் அது மயில் இராவணன் கதை சதகண்டராவணன்கதை முதலியன போலத் தள்ளப்படுவதே. அன்றி, இற்றைநாள் காறும் எத்தனையோ மதநூல்க டோன்றி யழிந்த வழியே யழிந்தும் போகும். ஆக்கியோனுக்கு பாவமும் மீக்கொள்ளும். இதனை,—

"யாவ ரொருவரான் வேதத்திற்கு வேறான சாஸ்திரங்க ளுண்டாக்கப்படுனின்றனவோ அவையொல்லையி லொழிந்துபோம். பின்னும் அவை யொருவரா னேற் படுத்தப்பட்டமையால் அவற்றை யநுசரிக்கின்றவர்களுக்குப் பலனுமில்லை. ஏனெனின், அவை வேதமூல மான பிரமாண மில்லாத முழுப் பொய்யாக வமைந்திருத்தலினால்."

என்று மானவதருமசாஸ்திரம் 12-வது அத்தியாயங்கூறுமாற்றானு முணர்க. ஈசலட்சணமாகிய பரிசுத்தம் வல்லமை காருண்ய

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

முதலிய பெற்றிகளை வெளியிட வேண்டியநூல் சுருதியாதி கலைகளாதலால் அவை யெத்திறத்த வாதங்களானும் பேதங்கொளாதிருக்கவேண்டுமென்றும், பேதங்கொளின் நூலென்னு மொழுங்கில தாவதுமன்றிப் பொய்யுமாமென்று முணர்தல் கற்றுவல்லார்க்கு நனியெளிதே. இதனைப் 12வது வினாவுத்தரத்தினுஞ் சுருங்கச் சொல்லினேம்.

(28)

சிஷி:- ஆகம மென்ப தென்ன?

குரு:- ஆகமம் என்னும் வடமொழி தென்மொழியில் 'வந்தது' எனப் பொருளாம். எங்கிருந்து வந்ததெனின், பரமாப்தரது திருநாவி லிருந்தென்றாம். அதனால் "ஆப்தவாக்கிய மாகமம்" என்ப ஆன்றோர். அவ்வாப்தர் சர்வபுவன கர்த்தாவாகிய பரமசிவனாவார். ஆகமமென்பது மற்றொரு வழியில் ஆ=பாசம், க=பசு, ம=பதியெனவும் அருத்தமாம். பதிபசுபாச இலக்கணங்களைச் சால விளக்குதலின் இப்பொருள் கொள்ளுமென்ப. அன்றி, ஆ=ஞானம், க=மோக்ஷம், ம=மலநாசமெனவும் அர்த்தமாகுமென்ப. இவ்விரண்டருத்தமும் ஒன்றற்கொன்று மாறுகோளோ வென்னின், அன்றென்க. எவ்வாறென்னின், முற்பொருளில் ம-என்ற பதியே பிற்பொருளில் மலநாச மாதலின் மலத்தை நசிக்கும் பரவஸ்து பதியெனவாம். முற்பொருளின் ஆ-என்ற பாசம் பிற்பொருளின் ஞானமாயிற்று. அப்பாசம்:– ஆன்மாவின தறிவை மறைத்துள்ள ஆணவமலத்தை நீக்கி யறிவு பிரகாசிக்கும்படி யாற்றவென்று பதியினா லான்மாவுக் குண்டாக்கப்பட்ட தனு கரணங்களாகும். இங்ஙனம் இப்பாசமும் இதனால் விளங்கு மறிவாகிய ஞானமுமொன்று பட்டவா றறிக. முற்பொருளில் க-என்ற பசு பிற்பொருளின் மோக்ஷமாகலின் அதனை யடையும் பொருள் பதியன்று பாசமன்று பசுவாகிய ஆன்மாவே யெனவாம். மோக்ஷமென்பது பந்த விடுதலை. இவ் விடுதலையாகிய மலநாசஞ்செய் தருள்பவனே முற்சொற்ற பதி. இவ்வாகமம் பதிநூல், முன்னூல், முதல்வன்வாக்கு, சைவசாஸ்திரம், தந்திரம், மாந்திரம், சித்தாந்தமெனும் பெயர் கொண்டு விளங்கும். அறிக. (ஆப்தர்=உள்ளது கூறுவோர்.)

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata

(29)

சிஷி:- அவ்வாகமம் ஒன்றோ? பலவோ?

குரு:- காமிகமுதல் வாதுளம் ஈறாக இருபத்தெட்டாம். அவற்றுள் இக்காலத்து இல்லாதன பல. உள்ளன சில. இச் சிலவுள்ளும் முழுதுமின்றிக் குறைபட்டுள்ளன சில.

(30)

சிஷி:- இவ்வாகமங்களைப் பரமசிவனார் யாருக்குபதேசித்தனர்? விவரமெப்படி?

குரு:- விஞ்ஞானகலர் பிரளயாகலர் சகலரெனும் மூவகையான் மாக்களி லுயர்வுடைய விஞ்ஞானகலரிற் பரமசிவாநுக்கிரகம் பெற்ற பிரணவர் முதலிய பத்துச் சிவன்களுக்கும் அந்தபரமசிவனார் தமது சத்தியோஜாதமுகத்தாற் காமிகம், யோகஜம், சிந்தியம், காரணம், அசிதமெனு மைந்தனையும்; வாமதேவமுகத்தால் தீப்தம், சூக்குமம், சகச்சிரம், அஞ்சுமான், சுப்பிரபேதமெனு மைந்தனையு முபதேசித்தருளினர். பரமேசுரரிட முபதேசம்பெற்ற அனாதிருத்திரர் முதலிய பதினெண்மருக்கும் அந்தப்பரமசிவனார் தமது அகோரமுகத்தால் விஜயம், நிச்சுவாசம், சுவாயம்புவம், ஆக்கினேயமாகிய அனலம், வீரமெனு மைந்தனையும்; தற்புருஷமுகத்தால் இரௌரவம், மகுடம், விமலம், சந்திரஞானம், முகவிம்பமெனு மைந்தனையும்; ஈசானமுகத்தாற் புரோற்கீதம், இலளிதம், சித்தம், சந்தானம், சர்வோத்தம், பாரமேச்சுரம், கிரணம், வாதுளமெனு மெட்டனையு முபதேசித் தருளினர். இவ்வாறுபதேசிக்கப்பட்ட இருபத்தெட்டு ஆகமங்களுள் முன்னைய பத்துஞ் சிவபேத மெனப்படும். பின்னைய பதினெட்டும் உருத்திரபேத மெனப்படும். வேதநான்கும், நாற்றிசைமுகங்களிற் றோன்றினமையின், ஆகமங்கண் மேனோக்காயுள்ள ஈசானமுகத்திற் றோன்றினவென்று காமிகாகமங் கழறும். இவ் வையத்தினை ஒவ்வொருமுகமும் ஐவைந்து முகங்களாக விளங்கலின், அவற்றிலுள்ள ஐந்து ஈசானமுகங்களினுந் தோன்றின வென் றொழித்துக்கொள்க.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பின்னிரிந்தச் சிவாகமங்களைப் பரமசிவனார் விஞ்ஞான கலரில் அஷ்டவித்தியேசுரர்களிற் சிரேஷ்டரான அநந்ததேவநாயனாருக்கு உபதேசித்தருளினர். அந் நாயனார் நூற்றுப்பதினெட்டு உருத்திரர்களிற் சிரேஷ்டரான ஸ்ரீகண்ட பரமசிவனார்க்கு உபதேசித்தருளினர். அவர் சிவகணங்களுக்கும், தேவர்களுக்கும், முனிவர்களுக்கு மனுக்கிரகஞ் செய்பாக்குத் திருநந்திதேவர்க்கு உபதேசித்தருளினர்.

சிவபேதம் பத்தையுங் கேட்டவர் ஒருவரிடத்தொருவராக ஒவ்வோ ராகமத்திற்கு மும்மூன்று பேராய் அணுசதாசிவருட் டலைவராய பிரணவர்முதன் முப்பதின்மராவர். அவர் பெயர் வருமாறு:- காமிகங் கேட்டவர் பிரணவர், திரிகலர், ஹரர். யோகஜங்கேட்டவர் சுதாக்கியர், பஸ்மர். விபு. சிந்தியங்கேட்டவர் சுதீப்தர், கோபதி, அம்பிகை. காரணங்கேட்டவர் காரணர், சர்வருத்திரர், பிரசேசர். அசிதங்கேட்டவர் சுசிவர், சிவர், அச்சுதர். தீப்தங்கேட்டவர் ஈசர், திரிமூர்த்தி, உதாசனர். சூக்குமங்கேட்டவர் சூக்குமர், வைச்சிரவணர், பிரபஞ்சனர். சகக்கிரங்கேட்டவர் காலர், வீமர், தருமர். அஞ்சுமான் கேட்டவர் அஞ்சு, உக்கிரர், ஆதித்தியர். சுப்பிரபேதங்கேட்டவர் தேசேசர், விக்கினேசர், சசி.

உருத்திரபேதம் பதினெட்டையுங் கேட்டவர் ஒருவரிடத் தொருவராக ஒவ்வோ ராகமத்திற்கு இவ்விரண்டு பேராய் அனாதிருத்திரர்முதன் முப்பத்தறுவராவர். அவர் பெயர் வருமாறு:- விஜயங்கேட்டவர் அனாதிருத்திரர், பரமேசவர். நிச்சுவாசங்கேட்டவர் தசார்ணர், பார்ப்பதி, சுவாயம்புவங், கேட்டவர் நிதனேசர், பத்மபூ. அனலங் கேட்டவர் வியோமர், உதாசனர். வீரங் கேட்டவர் தேசர், பிரசாபதி. இரௌரவங்கேட்டவர், பிரமேசர், நந்திகேசர். மகுடங்கேட்டவர் சிவர், மகாதேவர். விமலங்கேட்டவர். சர்வாத்துமர், வீரபத்திரர். சந்திரஞானங்கேட்டவர் அநந்தர், பிரகற்பதி. முகவிம்பங் கேட்டவர் பிரசாந்தர், ததீசி. புரோற்கீதங்கேட்டவர் சூலி, கவசர். இலளிதங் கேட்டவர் இலளிதர், ஆலயேசர். சித்தங் கேட்டவர் விந்து, சண்டேசர். சந்தானங்கேட்டவர் சிவநிஷ்டர், அசம்பாதர். சர்வோத்தங்கேட்டவர் சோமதேவர், நரசிங்கர். பாரமேச்சுரங்கேட்டவர் சீதேவி, உசனர். கிரணங்கேட்டவர் தேவவிபு, சம்வர்த்தர். வாதுளங்கேட்டவர் சிவர், மகாகாளர்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata

சிவபெருமாற்குக் காமிகந் திருவடிகள், யோகஜங் கணைக் கால்கள், சிந்தியந் திருத்தாள்விரல்கள், காரணங் கெண்டைக்கால்கள், அசிதம் முழந்தாள்கள், தீப்தந் தொடைகள், சூக்குமங்குய்யத்ததானம், சகச்சிரங் கடித்தானம், அஞ்சுமான் முதுகு, சுப்பிரபேதம் உந்தி, விஜயம் உதரம், நிச்சுவாசம் நாசி, சுவாயம்புவம் முலைகள், அனலங் கண்கள், வீரங் கழுத்து, இரௌரவங் காதுகள், மகுடம் முடி, விமலங் கைகள், சந்திரஞானம் மார்பு, முகவிம்பம் முகம், புரோற்கீதம் நா, இலளிதங் கபோலங்கள், சித்தம் நெற்றி, சந்தானங் குண்டலம், சர்வோத்தம் பூணூல், பாரமேச்சுரம் ஆரம், கிரணம் இரத்தினாபரணம், வாதுளம் பரிவட்டம், மற்றை யுபாக மமெல்லாம் பரிமளத்திரவியங்கள் புட்பங்கள், சைவசித்தாந்தம் நைவேத்திய மெனவாம்.

ஆகமம் ஒவ்வொன்றும் சரியை கிரியை யோகம் ஞானமென்னு நான்குபாதங்களை யுடையனவாகிப் பதி பசு பாச இலக்கணங்களையும், பாசஇலக்கணத்துளாய சிவதத்துவமுதற் பிருதிவிதத்துவங்காறு முள்ள 36 தத்துவோற்பத்தி லயங்களையும், புவனேசுரர் காக்கின்ற புவனங்களின் யோசனைப் பிரமாணங்களையும், பிரமாண்டப்பிரளயம் பிராகிருதப் பிரளயம் மத்திமப்பிரளயம், மஹாப்பிரளயம் பிரதமமஹாப் பிரளயமெனும் ஐவகைப் பிரளயங்களையும், பாசுபதம் மஹா விரதம் காபாலிகமுதலிய மதசொரூபங்களையும், சிவாலய முண்டுசெய்து நடாத்த வேண்டிய வொழுங்குகளையும், ஆன்மபெந்த முத்திலக்ஷணங்களையும் விளக்குவனவா யுள.

காமிகங் கழறுமாறு ஆகமமானது இலௌகிகம், வைதிகம், அத்தியான்மிகம், அதிமார்க்கம், மாந்திரமெனும் ஐங்கூற்றினையு முடைத்து. அவற்றுள் இலௌகிகமாவது இம்மையிற் பயன்றரல், வைதிகமாவது மறுமையிற் பயன்றரல், அத்தியான்மிகமாவது ஆன்மப் பொருள் விசாரணை, அதிமார்க்கமாவது யோகம், மாந்திரமாவது ஞானமெனவாம். இவை யொன்றனுக்கொன்று யர்வாகும். வீராகமத்தை வீரசைவர் தமது மதாதாரசாஸ்திரமாக் கொண்டனர். அவர் மகுடாக மத்திலும் வாதுளாகமத்திலும் அவ்வாறு சில கொள்வர். அறிக

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

(31)

சிஷி:- வேதப்பொருளுக்கு ஆகமப்பொருள் வேறன்றென்பதை யென்போல்வார்க் கறிவித்திட லெவ்விதம்?

குரு:- கேண்மோ. வேதப்பொருளின் விரிவிளக்கமே யாகமம். வேதத்தின் கருமகண்டம் ஆகமத்தின் சரியையிலுங் கிரியையிலு மடங்கும். வேதத்தின் ஞானகாண்டம் ஆகமத்தின் யோகமும் ஞானமுமாக விரிந்திருக்கின்றது. வேதத்தின் மிகுத்து வருகின்றதும், வேதஹிர்தயமாய் நிற்பதும், இவ்வியாசம் 23-வது கடாவிடைக் கடைசியில் எடுத்துக்காட்டியுள்ள மாண்டூக்கியம் நாரதபரிவிராஜம் இராமதாபிநி பஸ்மஜா பாலமெனும் உபநிடதவாக்கியங்களில் வெளிப்படுகின்றபடி பிரம விஷ்ணு உருத்திரராகிய மூவருக்கு மேலாய (சதுர்த்தம்) நான்காவது தெய்வம் சிவமென வறியத்தக்கதுமான 'சிவ' சப்தத்திற்குரிய சிவபெருமானையே யாவரும் வணங்கத்தக்க பதிப்பொருளாக அந்த ஆகமந் துணிவு கூறுகின்றது. நாரத பரிவிராஜகோப நிடத்தில் "நாத: பிந்து களா களாதீதா சாந்தி: சாந்தியதீதா உந்மநீ மநோந்மநீ" எனவருமிடத்தில் தொகுத்துக் கூறப்பட்டவைகளே, ஆகமத்தில் நிவிர்த்தி, பிரதிஷ்டை, வித்தை, சாந்தி, சாந்தியதீதை, நிரோதை, நாதை, நாதாந்தை, சக்தி, வியாபினி, சமனை, உன்மனை, வியோமரூபை, அனந்தை, அனாகதை, அனாசிருதையெனுஞ் சோடசகலைகளாகவும் இன்னும் பலவாகவும் விரித்துக் கூறப்பட்டுள்ளன. ஆகமத்திற் சரியை யாதி நான்கின் பயனாகச் சொலப்படு சாலோகம், சாமீபம், சாரூபம், சாயுஜ்ய மென்பவையே முக்திகோப நிஷத்திற் சாலோக்கியம், சாரூப்பியம், சாமீப்பியம், முக்தியெனுஞ் சாயுஜ்யமென முறைபிறழ்ந்து வருகின்றன. பிறவுமன்ன. வேதமும் ஆகமமும் அந்தச் சிவபெருமானாகிய பரமாப்தருடைய திருவாக்காதலின் இரண்டும் ஆகமமெனவும், இரண்டும் ஞானத்தை விளக்குதலின் இரண்டும் வேதமெனவும் பெயர் பெறும். இக்காரணங்களானே அவ்விரண்டு முதனூல்களு மொன்றேயெனவும், அவற்றிற் றுணியப்பட்ட பொருளு மொன்றே யெனவுந் தெளிந்திடுவர் தெருளுள்ளோர். இம்முடிவுகொண்டே இவ் வேதத்தைக் குறித்த வியாசத்திற்கு வேறாக ஆகமத்தைக் குறித்த வியாசமொன்று கூறிற்றிலம். ஈண்டொன்று கேட்டி !

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

வைதிகவிருத்தி யில்லாதவர்க்கும் வேதநெறி வழிஇயவர்க்குமே சிவன் ஆகமத்தை யருளிச் செய்தனனென்பதாகக் கூர்மபுராணம் பாத்மபுராணம் சூதசங்கிதை வாசிஷ்டலைங்காதி நூல்கள் கூறுகின்றனவாகலின் ஆகமம் வேதம்போற் பிரமாணமாக மாட்டா தென்றும், பிரமாணமான வித்தை பதினான்களிலும் அது சேரவில்லையென்றுஞ் சிலர் கூறுப. கூறுதல் செவிக்கொண்ட சில சைவரும் அங்ஙனம் மயங்குப. இவ்வாறு நேரிடுவதற்குக் காரணம் உண்மை தெளியப் பெறாமையே யென்பது எமது கருத்து. என்னை? அவ்விரு பாலார்க்கு மியைபுடைய பாஷண்ட வாம சோமலாகுள பைரவாதி யாகமங்கள் சொல்லப்பட்டன வென்பது அந்தக் கூர்மபுராணாதி நூல்களுரைக்கு முரையின் கருத்தன்றி மேலாய காமிகாதியாகமங்கள் அருளிச் செய்யப்பட்டன வென்பது அவ்வுரைக் கருத்தன்றாம். இவ்விதமே அந்தக் கூர்மபுராணத்தின் திருக்கலியாண அத்தியாயம் "சாறு வாகங் காபாலஞ் சாற்றும் பாஞ்ச ராத்திர நூன்-மாறு செய்யும் வாமமுள்ள மயங்கச் செய்த நூலாகுந்-தேறி யிந்நூற் படிநின்றோ ரிவற்றை யுலகிற் செப்பிடுவோர்-பாறு தொடரு நரகத்தினளப்பில் காலம் படிந்திடுவார்'' எனக் கழறுகின்றது. பாத்ம புராணமென்றது பாத்மோத்தரம்" ஆகலின் அது வைணவர் கற்பனைச் சுவடியெனப்படுமென்பது 6-வது கடாவிடைக்கண் விளக்கினாம். சைவாகமங்கட்கு இழிவேற்றுவார் கூற்றனைத்தும் பிரமவித்யாவிலாசநிரசன மெனும் பழநூ லொன்றில் தாமசத்துவ நிராகரண மெனும் அதிகாரத்துழை மேற்கோட் சுருதிவாயிலாக நன்கு கண்டிக்கப்பட்டன. அன்றியும், பதினான்கு வித்தையி லொன்றாய புராணம் பல்லிடங்களிலும் ஆகமத்தைப் புகழ்கின்றது. சைவபுராணத்து வாயு சங்கிதையானது தேவர்களுக்கு ஆகம மளிக்கப்பட்டதெனச் சாலப்புகன்று ஆகமநெறிநில்லா ஞானம் ஞானமாக மாட்டாதென முற்றுஞ் சாதிக்கின்றது. இந்த ஏதுக்களால் வேதநெறி வழாத யாவர்க்கும் ஆகமமுடம்பாடும் பிரமாணமு மாமென்றல் பெறப்பட்டமை காண்க. இங்ஙனம் வேதமுதலிய பதினான்கு வித்தையைப்போல

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஆகமம் பொதுவாகாத விசேடமாய்ச் சைவசமய நூலா யிருத்தலின் வித்தையினு ளொன்றாக அந்த ஆகமம் வைக்கப் படவில்லை யென்பதுமாம். சிவாநுக்கிரக மெய்திய ஆன்மாக்களாற் சொல்லப்பட்ட நியாயம் ஸ்மிருதி முதலியற்றை யொப்புக்கொளீஇ அச்சிவபரஞ்சுடரால் அரு ளிச் செய்யப்பட்ட ஆகமத்தையொப்புக் கொளாமதியும் ஒருமதியாமோ! ஆகாதென்க. வேதத்திற்கும் ஆகமத்திற்கும் பேதங்கண்டிலேனென நீலகண்டபாஷியமும், வேதாந்தமும் ஆகமாந்தமும் பெரியவர்க்கு அபேதமெனத் திருமூலநாயனார் திருமந்திரத்து "வேதமொடாகமம்" எனுந் தொடக்கத்துச் செய்யுளுங் கூறுகின்றன. அன்றியும், திருஞானசம்பந்தப்பிள்ளையார் தேவாரம் திருவிற்கோலத்துப் பதிகம் 6-வது திருச்செய்யுளும், திருவொற்றியூர்ப்பதிகம் 10-வது திருச்செய்யுளும், திரு நாவுக்கரசுசுளார் தேவாரம் திருவிடைமருதூர்ப் பதிகம் 4-வது திருச்செய்யுளும், சுந்தரமூர்த்தியடிகளார் தேவாரம் திருக்கானப்பேர்ப்பதிகம் 8-வது திருசெய்யுளும், திருவாரூர்ப் பரவையுண்மண்டளிப்பதிகம் 6-வது திருச்செய்யுளும், திருக்கயிலாயத்துப்பதிகம் 8-வது திருச்செய்யுளும், ஸ்ரீ மணி வாசகப் பெருமானார் திருவாசகத்துச் சிவபுராணத் திருச்செய்யுளும், கீர்த்தித் திருவகவலும் ஆகமத்தை மேனூலாக விளக்கி வழுத்துகின்றன. இத்திற நூலாசிரியர்களுணர்ச்சியினும் ஏனோ ருணர்ச்சி மீக்கொள்ளாதென்றல் மேலோர் கொள்கையாதலும், எம்பிரானாகி இளம்பெருமானாகி உம்பர்கோனாகி யாண்டும் பரிபூரணஞானவியாபகப் பொருளாயிராநின்ற பகவானாகிய ஸ்ரீ சுப்பிரமணிய பரமாத்துமாவினது பேருருவத்தை அனேக பிரமாண்டாதி பதியாகிய சூரபன்மன் தரிசித்த ஞான்று அவன் அப்பேருருவத் திருநாவிற் சிவாகமங்கள் நிலை பெற்றிருக்கக் கண்டனனெனக் காந்தங் கூறதலின் அவ்வாகமம் புதுவதல்லாப் பண்டைநூ லாதலும், வேதமும் ஆகமமும் பிரமாணமெனக் கொள்ளு மார்க்கமே வைதிகசைவ மெனப்படும் இதுவே தாயுமானார் சம்மதமுமெனற்கு அவரது திருப்பாடலில் "வைதிகசைவ மழகு" எனவருதலு முணர்க.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation

(32)

சிஷி: ஆகமத்தின் வழிநூல் சார்புநூல்களெவை? ஆகமத்திற்கு வேறாய தந்திரங்களெவை?

குரு: மிருகேந்திரமாகிய நாரசிங்கமுதல் விசுவான்மகம் ஈறாகவுள்ள இருநூற்றேழும் உபாகமமாம். இவைகளே வழிநூல்கள். உக்கிரச்சோதி சத்தியச்சோதி பிரகற்பதி முதலியோர் சொற்ற போககாரிகை, மோக்ஷகாரிகை, பரமோக்ஷ நிராசகாரிகை, நாதகாரிகை, தத்துவப்பிரகாசிகை, தத்துவசங்கிரகம், தத்துவத்திரய நிர்ணயம், இரத்தினத்திரயமெனு மோரெட்டும் அஷ்டப் பிரகரணமாம். இவைகளே சார்புநூல்கள்.

பரமசிவனுடைய தற்புருஷம் அகோரம் வாமம் சத்தியோஜாத மெனு நான்குமுகங்களா னுபதேசிக்கப் பட்டவைகளைக் கேட்ட காருடர் தக்கிணர் வாமர் பூதரெனும் பெயரிய நால்வராற் செய்யப்பட்டவை காருடம், தக்கிணம், வாமம், பூதமெனு நான்குதந்திரங்கள். அவற்றுட் காருட தந்திரத்தில் எத்தகைய பிணியையுந் தீர்க்கத்தக்க மருந்துகளும் மந்திரங்களும், தக்கிண தந்திரத்திற் பகைஞரை வெல்லத்தக்க மந்திரங்களும், வாமதந்திரத்தில் இரசவாத முதலியவைகளும், பூததந்திரத்திற் பூதப்பிரரேத பிசாசுகளை யோட்டத்தக்க மந்திரங்களும் மருந்துகளும் ஆங்காங்குச் கூறப்பட்டுள்ளன. இவைகளுஞ் சார்புநூல்களாம். (தக்கிணம் = பைரவ சம்பந்தம். தந்திரம் = கிரியை)

பாசுபதம், மகாவிரதம், காபாலிகமெனு நூன்மூன்றும் அதிமார்க்கநூ லெனப்படும். இவை முறையே அசுத்தமாயையையிலும் வித்யா தத்துவத்திலும் கால தத்துவத்திலுமுள்ள மூன்று உருத்திரராற் செய்யப்பட்டனவாம். இவற்றை யநுசர்த்து நடப்பார்க்கு மொழிந்த மூன்று தத்துவங்களி லுரியதொன்று கதியாயெய்தும்.

மஹாவிஷ்ணுவினாற் சொல்லப்பட்ட பாஞ்சராத்திரம், வைகாநசமெனு மிரண்டும் வைணவசமயத்தை யுணர்த்தும். வைணவத்திற்குரிய ஆகமம் இவ்விரண்டேயாம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

(33)

சிஷி:- ஆகமாந்த மாவதியாது?

குரு:- சிவாகமத்தின் ஞானபாதமே ஆகமாந்தம். அதுவே மேற்சொற்ற மாந்திரம் சித்தாந்த மெனப்படும். சித்தாந்தமென்பது முடிந்த முடிவெனும் பொருளது. இம்முடிவைச் சுருக்கி விளக்கவந்தது சிவஞானபோதம். இஃதியாதெனின், இரௌரவாகமத்தில் 72-வது பாசவிமோசனப் படலத்தில் 12-வது அத்தியாயத்திலுள்ள பன்னிரண்டு வடமொழிச்சூத்திரமென்றாற் ஸ்ரீமாணிக்கவாசக சுவாமிகளாய திருவாதவூரடிகளுக்கு ஸ்ரீகண்டபரமசிவனா ரநுக்கிரகஞ் செய்பாக்கு எழுந்தருளியகாலை அச் சிவனாருடைய திருக்கரத் திருந்தது இச் சிவஞான போதமேயெனத் திருவாதவூரர் புராணத்துத் திருப்பெருந்துறைச்சருக்கந் தெரிக்கின்றது. இந்தப் போதமானது திருக்கயிலாயகிரியி லெழுந்தருளிய ஸ்ரீகண்ட பரமசிவனாரால் திருநந்திதேவருக்கும், அவராற் சனற் குமாரமுனிவருக்கும், அம் முனிவராற் சத்தியஞான தரிசனிகளுக்கும், அத் தரிசனிகளாற் பரஞ்சோதிமுனிவருக்கும், அம்முனிவரால் திருவெண்ணெய் நல்லூர் - மெய்கண்ட தேவருக்குமாக வுபதேசிக்கப் பட்டது. அம் மெய்கண்ட தேவர் அதியிளமையிலேயே அதன்பொருளைத் திருவெண்ணெய் நல்லூர்ப் பொல்லாப் பிள்ளையாராகிய விநாயகமூர்த்தி இனிதுபதேசித்தருள வுணர்ந்தனர்: பின்னர் அப்பிள்ளையாரது கட்டளைப்படி அப்போதப் பொருளை (இத்தமிழ்நாட்டிற் குபயோகமாமாறு) தமிழிலமைத்துச் சிவஞான போதமெனப் பெயரிட்டுத் தஞ்சீடர்கட் களித்தனர். அவர் பல்லோருள்ளுஞ் சகலாகம பண்டிதராகிய திருத்துறையூர் - அருணந்திசிவாசாரியர் அப்போதத்திற்கு வழி நூலாகச் சிவஞான சித்தியாரெனு நூலைச் செய்தருளினர். அது பரபக்கம் சுபக்கமெனும் இருகூற்றது. இந்நூற்கு உரையும் பலவுள. கொற்றவன்குடி- உமாபதி சிவாசாரியர் சார்பு நூலாகச் சிவப்பிரகாசமெனு நூலைச் செய்தருளினர். இவ்வாசிரியரருளிய திருவருட்பயனும், வினாவெண்பாவும், போற்றிப்ப. ஃறொடையும் கொடிக்கவியும், நெஞ்சுவிடுதூதும், உண்மை நெறி விளக்கமும் சங்கற்பநிராகரணமும், திருவியலூர் - உய்யவந்ததேவரருளிய திருவுந்தியாரும், திருக்கடவூர் - உய்யவந்ததேவரருளிய

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

திருக்களிற்றுப்படியாரும், மேற்சொற்ற அருணந்திசிவாசாரிய ரருளிய இருபாவிருபஃதும், திருவதிகை - மனவாசகங்கடந்தா ரருளிய உண்மைவிளக்கமுஞ் சிவாகம ஞானபாதப் பொருளைச் சுருக்கி யினிதுவிளக்கு நூல்களாம். இப்பதினொரு நூல்களோடு மேலைச் சிவஞானபோதாதி மூன்றனையுஞ் சேர்க்கிற் பதினான்காம். இவற்றையே சித்தாந்தநூல் பதினான் கென்ப. இவற்றுள் கொடிக்கவி தில்லை நடராஜரது உற்சவத் தொடக்கமொன்றனில் ஏறாது நின்றிருந்த கொடியை யேறும்படி யருளிச் செய்யப்பட்ட காரணத்தான் "கொடிக்கவி" எனும் பெயர் பெற்றது. திருக்களிற்றுப்படியார் நடேசர் சன்னிதியின் வைக்கப்பட்ட போழ்து அதனை அச்சன்னிதிப்படிக் கற்களிறு கையானெடுத்துத் தில்லை நடேசரிடமளித்த காரணத்தான் அது "திரக்களிற்றுப்படியார்" எனும் பெயர் பெற்றது. வடமொழிச் சிவஞான போதத்தை முதல்வன் வாக்கென மதித்து அச்சூத்திரங்கட்கு ஆதி சங்கராசாரியருடைய சீட பரம்பரையிலொருவராகி நூற்றெட்டுபநிடதத்திற்கும் பாஷியஞ் செய்த வித்தியாரண்யர் தமது ஏகான்மவாத பரமாக வடமொழியில் ஒருரையெழுதி வைத்தனர். அது எவருமெடுத் தாளப்படாமே வாளா கிடக்கின்றது.

திரிலோசனசிவாசாரியர் சம்ஸ்கிருதத்தி லருளிச் செய்த சித்தாந்த சாராவளியும், தத்துவப்பிரகாச சுவாமிகள் தமிழிலருளிச்செய் தத்துவப்பிரகாசமும், சிதம்பரம். மறை ஞானசம்பந்த ரருளிச் செய்த சைவசமயநெறியுஞ் சிவாகம நெறியுணர்த்து நூல்களாம். அரதத்த சிவாசாரியர் வடமொழியி லருளிச்செய்த சதுர்வேததாற்பரியசங்கிரகமும் அப்பைய தீக்ஷிதர் வடமொழியிலருளிச் செய்த சிவதத்துவவிவேகமும் வேதாகமசம்மத நூல்களாம்.

மெய்கண்டதேவருடைய பிரதானசீடர் மேல் விளக்கப்பட்ட அருணந்தி தேவரெனவும், அவருடைய சீடர் திருக்கடந்தை-மறைஞானசம்பந்தரெனவும், அவருடைய சீடர் மேல் விளக்கப்பட்ட கொற்றவன்குடி-உமாபதியாரெனவு மறிக. இந்நால்வருங் கைலாச பரம்பரைச் சந்தானாசாரிய ரெனப்படுவர். இப்பரம்பரை ஆசிரியர்களைத் தாயுமானார் எந்நாட்கண்ணியில் குருமரபின்வணக்கத்தில் நன்கு துதித்துள்ளார். அங்ஙனந்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

தங்கருத்திற் கியையாத மற்றை மதகுருக்களுள் எவரையுந் துதித்தாரல்லர். அடுத்த அடியார்வணக்கத்திலும் ஸ்ரீஞான சம்பந்தப் பிள்ளையார் முதலிய பெரியாரைத் துதித் துள்ளாரேயன்றி மற்றையரைத் துதித்தாரல்லர். ஆகவே இத்தாயுமான சுவாமிகணின்ற நிலை அவர் வெளியிட்ட பெரியார் நிலையென்றல் ஒருதலையான தீர்வையென்க இது நிற்க.

கல்லாலின்கீ ழெழுந்தருளியிருந்த ஸ்ரீபரமசிவனார் சனகாதி முனிவர் நால்வர்க் குபதேசித்த திரிபதார்த்தவுண்மை இந்த ஆகம ஞானந்தானெனக் காந்தபுராணமும், அந்தச்சிவனார் சனகாதிமுனிவர்க் குபதேசிக்கும் வழியில் திருநந்திதேவர்க்குக் குருமரபு விளங்க வெனா அந்நந்திதேவர்க் குபதேசித்தருளிய நெறி வேதாகம நெறியேயெனத் த்ருமசங்கிதையுஞ் சாற்றுதலை யாயுங்கால் வேதாகமமுடி பொன்றேயெனவும், அவ்வேதாக மங்களே அத்துவித ஞானவாழ்வைப் பயப்பன வெனவும் மேன்மிழற்றியவாறு கைலாசபரம்பரைக் குருமரபு ஏற்பட்டதுண்டெனவு மறிவ தறிவுடையர்க்கு நனியெளிதாம்.

(34)

சீட - இன்னும் வைதிகசைவ சதாசாரத்தைத் துலக்குகின்ற தமிழ் நூல்களெவை?

குரு:திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் தேவாரத் திருமுறை மூன்றும், திருநாவுக்கரசு நாயனார் தேவாரத் திருமுறை மூன்றும் சுந்தரமூர்த்தி நாயனார் தேவாரத் திருமுறை யொன்றும் மணிவாசகப் பெருமானார் திருவாசகத் திருமுறை யொன்றும் தமிழ்வேதங்களெனப் படும். திருமுறைக் கணக்கில் எட்டாம் இவையற்றை யருளிச்செய்த நால்வருஞ் சைவசமயாசாரிய ரெனப்படுவர். ஒன்பதுநாயன்மார் அருளிச்செய்த திருவிசைப்பா ஒன்பதாந்திருமுறையாம். திருமூலநாயனா ரருளிச்செய்த திருமந்திரச் செய்யுண் மூவாயிரமும் பத்தாந் திருமுறையாம். ஸ்ரீசோமசுந்தரக்கடவுள், காரைக்காலம்மை, ஐயடிகள்காடவர் கோன், சேரமான் பெருமாள், நக்கீரர், கல்லாடர், கபிலர், பரணர், இளம்பெருமானடிகள், அதிராவடிகள், திருவெண்காட்டடி களாகிய பட்டினத்துப் பிள்ளையார், நம்பியாண்டார் நம்பி இவர்கள் பாடியருளிய சைவப் பிரபந்தங்கள்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Ko

பதினோராந்திருமுறையாம். இப்படி வகுத்தார் யாவரென்னின், முன்னை முதுவராய அபயகுலசேகர சோழனாரும், நம்பியாண்டார்நம்பியு மென்க. பெரியபுராணமாகிய திருத்தொண்டர் புராணத்தைப் பன்னிரண்டாந் திருமுறையாகக் கொள்க. இப்படிக் கொண்டவர் அநபாயசோமுன் முதலினோரென்னுஞ் சேக்கிழார் புராணம்.

இப் பன்னிரண்டுதிருமுறைகளும் வேதத்தின் ஞானகாண்டப் பொருளை ஆகமத்திற்கு மாறுபடாவண்ணம் அறிவித்தலின் வேதாந்தசித்தாந்தசமரச நூல்களாம். அருணகிரிநாத சுவாமிகளின் திருவாக்காகிய திருப்புகழ்-திருவகுப்பு-கந்தரந்தாதி-கந்தரநுபூதி முதலிய நூல்களும், சிவவாக்கிய சுவாமிகளருளிச்செய்த சிவவாக்கியமும், கண்ணுடைய வள்ளலாரருளிச்செய்த ஒழிவிலொடுக்கமும், தாயுமானசுவாமிகள் பாடலும், குமரகுருபர சுவாமிகள் திருவாக்காகிய திருச்செந்தூர்க் கந்தர்கலிவெண்பா-சிதம்பரச் செய்யுட்கோவை முதலிய நூல்களும், பாம்பன்-குமரகுருதாச சுவாமிகளருளிச் செய்த செய்யுள் வடிவான பெருநூல் சிறுநூல்களும், வசனவடிவான வியாச முதலியனவும் அவ்வேதாந்தசித்தாந்த சமரச நூல்களேயாம். இச் சமரசஞானமே நல்லாரடையு நன்னிலையாகும். "வேதாந்த சித்தாந்த சமரச நன்னிலை" என்று தாயுமான சுவாமிகள் சாற்றியது மிதுவன்றோ.

சித்தர்நூல்க ளெனப்படுந் தமிழ்ப்புத்தகங்களிற் சிவசப்த அங்கீகாரம் ஆங்காங்குக் காணப்படினும் அவையெல்லாம் எழுத்து - சொல் - பொருள் - யாப்பு - அணியெனும் ஐந்திலக்கணத்திற்கும் பொருத்தமில்லா வழுச்செய்யுள்களையும், மிக விளர்த்த செய்யுள்களையுமே யுட்கொண்டிருக்கின்றன. அன்றி, இன்றுகாறுமுண்டான சிறந்த நூலாசிரியராவது உரையாசிரியராவது பிரமாணமாக எடுத்தாளாமே வாளா கிடக்கின்றன. அன்றி, வேதாகம புராணேதிகாசங்களிலுள்ள சில சரித்திரங்கட்கு மாறுகோள் கூறுகின்றன. அன்றி, ஒரு புத்தகத்தை யொருபுத்தகம் இழித்துரைத்துப் பொய்யேற்றுகின்றது. சில புத்தகங்களில் வேதமுதலிய சுருதி நிந்தை காணப்படுகின்றது. இன்னன காரணங்களானே அவற்றையாமும் பிரமாணமாக வெடுத்து ஆண்டிலம். அவற்றிற் சொல்லப்படும் வைத்தியம் யாதாயினு மாக. நிற்க.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

வடமொழி நூல்களிலுந் தென்மொழி நூல்களிலும் பதியாகிய சிவபரஞ்சுடரையே பெரியபொருளெனு நூலெல்லாம் பதிநூலெனவும், பசுவாகிய ஆன்மாவையே பெரியபொருளெனு நூலெல்லாம் பசுநூலெனவும், பாசமாகிய ஜடப்பொருளையே பெரியபொருளெனு நூலெல்லாம் பாசநூலெனவுமாம். வேதாகமங்களை யொப்புக்கொண்டு இந்த ஆன்மாவே சிவனெனக்கூறு நூலும் பசுநூலிலடங்கும். இவற்றுட் பதிநூலொன்றுமே பெரியோரா னங்கீகரிக்கப் படுதல் பழுதறு பண்டையார் வழக்கா யிருக்கின்றது. என்னை? "பசுநூல் கற்கும் பிச்சரைக் கண்ணா கண்வாய் பேசாதப் பேய்களோடே" என்றார் திருவிசைப்பாவில் திருமாளிகைத்தேவர். இவ்வண்ணம் பசுநூல் தள்ளப்படுதலின், பாசநூல் தடையின்றித் தள்ளப்படுவதேயாம். புமான் பிரகிருதி யெனுமிரண்டிற் பிரகிருதியே பெரிதெனுங் கபிலரது கபிலமெனும் (நிரீச்சுர) சாங்கியசாஸ்திரம் போன்ற நூல்களே பாச நூலாம்.

(35)

சீட.- சைவசாஸ்திரங்களின் றொடக்கத்திற் பிள்ளையார்சுழி யென "உ" இவ்வித அடையாள மொன்றிட்டிருக்கிறது. அஃதெற்று?

குரு.- அகார உகார மகாரங்களாகிய முப்பிரணவத்தினை யடக்கியுள்ள நாதப்பிரமமாகிய ஓம் என்பதன் ஆரம்ப வடிவே அது. அதிலுள்ள விருத்த சொரூபம் சிவசத்திபீடமெனும் ஆவிடையென்றும், நீண்டுநிற்பது மூலஸ்தம்பமெனுஞ் சிவலிங்கமென்றும், முறையே பிந்துவென்றும், நாதமென்றுஞ் சொலப்படும். மேலும் அவ்வட்டவடிவு மூலாதார பீடமெனவும், நீளவடிவு அதிலெழு பிரமநாடியெனவும், அது மூலக்கணபதி நிலயமெனவும், அக்கணபதி சொரூபமாகிய பிரணவாதார மெனவும், அக்ஷரங்களின் வித்தெனவும், வேதாந்த சிரசாய்நிற்கும் மௌனக்குறி யெனவும், ஊமையெழுத்தெனவும், பிள்ளையார்சுழி யெனவும் பேசப்படும். இச்சொற்களை விரிக்கின் வரம்பின்றி நடக்கும். அச்சுழியினை யாதானு மோரெழுத்தைத் தீட்டத் தொடங்கு முன் தீட்டிக் கொள்வதானது யாதானுமொரு கிரியை விக்கினமின்றி நிறைவேற்றிக் கொள்வான் அக்கிரியைக்கு முன்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva He...

பிள்ளையார் உருப்பிடித்து வைத்திடுவதைச் சிவனும். பெரியோனாற் சிருஷ்டிக்கப்பட்ட பிண்டத்தில் தாரக ஓகாரம் எவ்வித மமைக்கப்பட்டுள்ளதோ அவ்விதமே தமிழிலுங் கிரந்தத்திலும் அமைக்கப்பட்டுள்ளது. ஏனைப்பாடை யெழுத்துக்களில் அவ்வித மமைக்கப்படவில்லை.

(36)

சிஷி:- வேதாந்தத்திலுள்ள மஹாவாக்கியங்களெவை? அவைகளின் பொருளென்னை?

குரு - இருக்குவேதத்து ஐதரேயாரண்யகோபநிஷத்து மஹா வாக்கியம் பிரஜ்ஞானம்பிரஹ்மம். இதன்பொருள், பிரஜ்ஞானம் = பெரியஞானமே சொரூபமாகவுள்ளது, பிரஹ்மம் = பராபர வஸ்துவாம் பரமான்மா, என்றவாறு.

பெரியஞானமென்றதனால், அஞ்ஞானமாவது, வேறெந்த விகாரமாவது பிரமத்தினுடைய சொரூபமாக மாட்டாதெனல் ஒரு தலையான தீர்வையாகும். ஆகவே பிரமம் நிர்விகாரப்பொருளாம். இப்பொருளுக்கு அதன் சொரூபமாகிய பெரியஞானங் குணமாம். அப்பொருள் குணியாம். குணத்தைச் சத்தியெனவும், குணியைச் சத்திமானாஞ் சத்தனெனவுங் கூறுப. இவ்வுண்மை யெதுபோலு மென்னின், சூரியகிரணமுஞ் சூரியனும் போலுமென்க. இங்குப் பிரமத்திற்குக் குணங் கூறுதலின் வேதத்திற் சொல்லப்பட்ட நிர்க்குணப்பிரம மல்லாத சகுணப்பிரமமோ வென்னின், அன்று, எவ்வாறென்னின், பிரகிருதியின் இராஜத தாமத சாத்துவிகங்களாகிய முக்குணங்களுள் ஒன்றாவது இரண்டுமாவது மூன்றுமாவது விரவியாவ துள்ளது சகுணப்பிரமம். அக்குணத் தொன்றுமில்லாதது நிர்க்குணப்பிரமம். இப் பிரமத்தினது தாதான்மிய சத்தி அதாவது மேல் விளக்கிய சத்தி நிர்க்குணை நிட்களை யெனவாம். இது ஆகமங்கூறு வண்ணம் கிருபை சருவஞ்ஞதை, திருப்தி, அனாதிபோதம், சுவதந்திரத்துவம், விசுத்ததேகம், அநந்தசக்தி, நிராமயம் எனும் எட்டுக் கல்யாணகுணங்களாய் விளங்கும். விளங்கவே அந்த நிர்க்குணப்பிரமம் எண் குணத்தது எனவாம். யாதொரு குணமில்லாதது யாதொரு பொருளாகாது. குணமுந் தனியே யிராது. அதனால் ஆன்மகுணமாகிய கேவல அறிவைத்தானே

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பிரமமெனும் ஆன்மவாதி கூற்றை யவலக்கூற்றென மறுக்க. "சிவன் சர்வைச்வரிய சம்பந்நன்" என்று அதர்வசிகோபநிடதம் அகற்றுகின்றதூஉம் எண்குணவுண்மை பற்றியேயாம். "கோளில் பொறியிற் குணமிலவே யெண்குணத்தான் - றாளை வணங்காத் தலை," என்று திருவள்ளுவனார், தெரித்ததூஉம், "தாணுவெண்குணன் சங்கரன்" என்று பிங்கலநிகண்டார் கூறியதூஉம் அது. (அனாதிபோதம் - அனாதிமுத்தத்தன்மை.)

இம் மஹாவாக்கியத்திற் பெரிய ஞானத்தையுடையது பரமான்மாவென அறியப் பட்டதனாற் சிறிய ஞானத்தையுடைய ஜீவான்மா வுண்டென்பதும் பெறப்படும். படவே அவ்வான்ம சத்தியாகிய ஞானத்தைச் சுருக்குகின்ற ஆணவமலமும், அந்தஞானத்தைக் கன்மமலவழியே சிறியஞானஞ்செய்து நிற்கின்ற மாயாமலமு முண்டென்பதும் பெறப்படும். மலம்மூன்றும் பாசமெனுஞ் சொல்லிலடங்கும். பிரஜ்ஞான மென்பதிலுள்ள "பிர" எனும் உபசருக்கம் ஈண்டு அதிகத்தை அதியுத்தமத்தை விளக்கி நின்றது. எதுபோலு மென்னின், "பிரகுணம்" என்பதும் "பிராசாரியன்" என்பதும் அதிகுணம், அதியுத்தமாசாரியனெனப் பொருள்விளக்கற்குப் பிரவெனு முபசருக்கம் அவ்விருமொழிக்கண்ணும் நிரலே நின்றமை போலுமென்க. அதனா லதிக ஞானம் பெரியஞானமெனப் பட்டது. பிரஜ்ஞானமெனும் பெரியஞானம் --- பிறி தினியைபுநீக்கிய விசேடண மொழியாம். "ஜ்ஞானம்" என்னாது "பிரஜ்ஞானம்" என்றதனால் இதுவே துணி பொருளென்க.

இதிற் பதி பசு பாசமெனு மூன்றும் வந்தமை காண்க.

யஜுர்வேதத்துப் பிரகதாரண்யகோபநிஷத்து மஹாவாக்கியம் அஹம்பிரஹ்மாஸ்மி. இதன் பொருள் அஹம்=(தேகத்தோடு கூடிய) நான், பிரஹ்மாஸ்மி = (பிரமத்தன்மை யடைந்து) பிரமமாகின்றேன். எ-று.

இது ஜீவன்முக்தனெனும் ஞானி நிற்குநிலையாம். இதயமாகிய உள்ளிடத்திருக்கின்ற அதாவது ஆன்மாவுக்கான்மாவா யிருக்கின்ற அந்தரியாமியே அவ்வஹசப்த சுதந்திரவஸ்து. அவ்வஸ்துவை நீங்காமல் அத்துவிதமாய் நிற்கின்ற ஆன்மாவுக்கும் அச்சப்த முரிமையாயிற்று. அந்த அந்தரியாமி

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0 In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata

ஆன்மாவினதுள்ளக் குகையிலிருப்பவனாதலிற் குஹன் எனப்படுவான். அவனைத் தகரோபாசனைத் திருவருண்ஞானத்தா னறிந்து ஜீவசுதந்திர மின்றி நிற்குநிலையே பரிபூரண ஞானநிலை. அது சிவசமான கதியாம்.

இம் மஹாவாக்கியத்தில் நானெனுமான்மா அறியப்பட்ட வழியே அதன் பாசமுமறியக்கிடக்கின்றது. இதினும் பதி பசு பாச மெனு மூன்றும் வந்தமை காண்க.

சாமவேதத்துச் சாந்தோக்கியோபநிஷத்து மஹாவாக்கியம் தத்துவமசி. இதன் பொருள் தத் = (பரமான்மா வெனப்படும்) அது, துவம்=(ஜீவான்மா வெனப்படும்) நீ, அசி=ஆயினை. எ-று.

அந்தச் சிவபரஞ்சுடரும் நீயும் அனாதியத்துவித சம்பந்திகளா யிருக்கின்றனிர். சூரியன தொளியினாற் கண்ணிற்குப் பார்க்குஞ் சக்தி யுண்டாவது போல அந்தப் பரஞ்சுடரின் ஞானத்தாலே உன்னறிவு பிரகாசிக்கின்றதென்று குரு சீடனுக்குபதேசிப்பதே அவ்வாக்கியப் பொருள்.

இம் மஹாவாக்கியத்தினும் ஜீவான்மா அறியப்பட்ட வழியே அதன் பாசமு மறியக்கிடக்கின்றது. இதினும் பதி பசு பாசமெனு மூன்றும் வந்தமை காண்க.

அதர்வணவேதத்து மாண்டூக்கியோபநிஷத்து மஹாவாக்கியம் அயமாத்மாப்பிரஹ்மம். இதன் பொருள், அயம் = அந்த, ஆத்மா = பரமாத்துமாவே, பிரஹ்மம் = முற்சொற்ற பிரமம். எ-று.

அயமென்பது சமீபத்தையே குறிக்கும்; அதனால் அஃதந்தராத்துமாவாகிய கடவுளுக்கே யுரிய சப்தமென்பர் வடநூலார். அயமாகிய அந்தவெனுஞ் சுட்டு இந்த வாக்கியத்திற்கு அண்மையாய் மேற்போந்த தத்துவமஸி வாக்கியத்தில் 'தத்' எனும் பதப் பொருளாநிற்கும் பரமாத்துமாவைக் குறிப்பதாகும். ஆகவே முதல்வாக்கியத்திற் சொல்லப்பட்ட பெரியஞானப்பிரமம் இந்தப் பரமாத்துமாவே யல்லாமற் சீவாத்துமா அன்றென்று முடிவு கூறிற்று இந்நான்காவது மஹாவாக்கியமென்க. ஆத்மாவென்பது வியாபகமெனப் பொருளாம். அயமாத்மா வென்பதற்குச் சீவான்மாவென்று பொருள்கொள்ளத்தக்க ஆன்மாவாகிய தான்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

எனச் சின்னூல்க ளருத்தமுரைப்பின், அது பரமான்மாவின் அனாதிக் கலப்பாகிய அத்துவிதத்தால் உபசரித்துரைப்ப தென்றாம். இப் பொருள் "அரக்கொடுசேர்த்தி" என்றற் றொடக்கத்துச் சிவஞானபோதச் செய்யுளானும் வலியுறுத்தப்படும்.

இம் மஹாவாக்கியத்தினும் ஜீவான்மா அறியப்பட்டவழியே அதன்பாசமு மறியக்கிடக்கின்றது. இதினும் பதி பசு பாசம் மூன்றும் வந்தமை காண்க.

ஈங்கு, அது நீயானாய் ஆகின்றாயெனப் பொருள்படு தத்துவமஸி வாக்கியத்தைக் கேட்ட சீடன் பெரிய ஞானமே சொரூபமாகவுள்ளது பிரமமெனப் பொருள்படு பிரஜ்ஞானம்பிரஹ்மமெனும் வாக்கியத்தினால் அது என்பது இத்தன்மைத்தெனச் சிந்திப்பவனாவான். அந்த ஆத்துமாவே பிரமமெனப் பொருள்படும் அயமாத்மாப்பிரஹ்மமெனும் வாக்கியத்தினால் பெரியஞானமே சொரூபமாகவுள்ள அது ஆத்துமாவே, அந்த ஆத்துமாச் சிறியஞானமுள்ள ஜீவாத்துமா அன்றெனத் தெளிபவனாவான். நான் பிரமமாகின்றேனெனப் பொருள்படும் அஹம்பிரஹ்மாஸ்மியெனும் வாக்கியத்தினால் நான் ஜீவத்தன்மை நீங்கி அந்தப் பெரியஞான சொரூப பரமான்மா வாகிய பிரமத்தன்மையை யடைந்து பிரமமாகின்றேன் சிவசமானகதி யடைகின்றேனென நிட்டை கூடுபவனாவான். கேட்டலைச் சிரவணமென்றும். சிந்தித்தலை மனனமென்றும், தெளிதலை நிதித்தியாசன மென்றும், நிட்டையைச் சமாதியென்றும் வடநூலார் மொழிப. கேட்டல் ஞானத்திற் சரியை, சிந்தித்தல் ஞானத்திற் கிரியை, தெளிதல் ஞானத்தில் யோகம், நிட்டை ஞானத்தின் ஞானமாம். இவற்றுண் முன்னையவிரண்டும் அபரஞானமும், பின்னையவிரண்டும் பரஞானமுமாம்.

மஹாவாக்கியங்கள் ஆன்மாவினது பந்தமுத்திகளையே விளக்குகின்றனவாகலிற் பந்தமுமில்லை முத்தியுமில்லை யென்பார் கூற்று எவ்வாற்றானும் பொருந்தாமை காண்க. அவ்வாறு கூறுங்கூற்றுச் சுவாநுபவத்திற்கும் விரோதமாம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata

அவ்வநுபவம் *நாவுஞ் சருக்கரையும் போறலின் அநுபவிக்கும் பொருளான்மாவும் அநுபவப் பொருள் பரமான்மாவுமாம்.

ஆகவே இங்ஙனம் அபேதவாதமான ஏகப்பொருள்வாத மெட்டுணையேனு மியையாது. திருவிசைப்பாவில் திருமாளிகைத்தேவர் "பேத வாதப்-பிசுக்கரைக் காணா கண்வாய் பேசாதப் பேய்களோடே" என்றபடி பேதவாதமான துவிதப்பொருள்வாதமு மியையாது. (ஏகம் துவிதம்) ஒன்று இரண்டு அல்லாத அத்துவிதமொன்றேயியையும். இதனை ஒழிவிலொடுக்க நூலார் "என்னாணை யென்னாணை யேகமிரண் - டென்னாமற் சும்மா விருவென்று-சொன்னான்-திருஞான சம்பந்தன் சீகாழி நாட-னருளாளன் ஞானவினோ தன்," என்றும், அருணகிரிநாதசுவாமிகள் திருப்புகழில் "ஏகபோகமாய் நீயுநானுமாய்" என்றும், சுந்தரநுபூதியில் "சும்மா விருசொல் லறவென் றலுமே-யம்மா பொருளொன் றுமறிந் திலனே," என்றும், தாயுமான சுவாமிகள் மௌனகுரு வணக்கம் 5-வது செய்யுளில் "இரண்டொன் றென்னுமோர்-மானத விகற்பமற வென்றுநிற் பதுநமது மரபென்ற பரமகுருவே" என்றும், தேஜோமயாநந்தம் 1-வது செய்யுளில் "ஒன்றோ டிரண்டெனாச் சமரச சொரூபசுக முற்றிட" என்றும், மண்டலத்தின் 2-வது செய்யுளில் "ஒன்றிரண்டாய் விவகரிக்கும் விவகாரங் கடந்து" என்றும், பராபரக்கண்ணியில் "ஒன்றிரண்டென் றுன்னா உணர்வுகொடுத் துள்ளபடி-யென்று மென்னை வையா யிறையே பராபரமே" என்றும், பைங்கிளிக் கண்ணியில் "உன்னாம லொன்றிரண்டென் றோராமல் வீட்டுநெறி-சொன்னான் வரவும் வகை சொல்லாய்நீ பைங்கிளியே." என்றும் சுவாநுபவத்திற் சொல்லியருளியவற்றானு முணர்க. சைவசித்தாந்த நூலுமிவ்வாறே சாற்றும். வந்துழி வந்துழிக் காண்க. ஒன்றென்னின் முத்திபெறுவா ரில்லையாம். அலது முத்திப் பொருளில்லையாம். இரண்டென்னிற் பரங் கண்டப்பொருளாகும் : முன்னிலையற்ற சிவசாயுஜ்ய சுவாநுபவமு மில்லையாம். ஒன்றோடொன்று சேருமென்னிற் சேருமுன்னர்ப் பரமிருந்தவிடத்தி லுயிரும் உயிரிருந்தவிடத்திற் பரமு மில்லையென்றாகி யிரண்டுங் கண்டப்பொருளாம்.

* "கருப்புவட்டை வாய்மடுத்துக் கண்டார்நாப் போல-விருப்புவட்டா வின்புருவை மேவுநா ளெந்நாளோ" எனத்தாயுமானாருஞ் சொல்லியருளினார்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஆகலின் ஐக்கியவாதமுங் கூடாது. இதனைப் "பதியிற் கலவாமன் - மாசில் சமத்துமுத்தி வாய்க்குநா ளெந்நாளோ" எனத் தாயுமானசுவாமிகள் நிற்குநிலையி லுரைத்த வுரையானும், "சென்றிவன்றா னொன்றிற் சிவபூர ணஞ்சிதையு-மன்றவன்றா னொன்று மெனி லந்நியமாம்'' எனத் திருவதிகை-மனவாசகங்கடந்தா ருரைத்த வுரையானும், "வந்து புகுதலுஞ் சென்று நீங்கலு-மின்றி யொன்றாய் நின்றவந் நிலையி - லொன்றா காம விரண்டா காம - லொன்று மிரண்டு மின்றாகாமல்" எனத் திருத்துறையூர் - அருணந்திசிவா சாரியா ரறைந்த அறையானு முணர்க. "சித்துஞ் சடமுஞ் சிவத்தை விடவில்லை" என்று அத்தாயுமானார் உடல் பொய்யுறவுக் கடைப்பாட்டிலருளிச் செய்தவாறு சித்தெனப்படுமான்மாச் சிவமெனப்படு பரமான்மாவை விடாமல் அனாதி சம்பந்தப்பட்டுள்ளது, அதுவே அத்துவிதவுண்மை, அந்நிலைதேர்ந்து பாசந் தனக்குப் பயன்படாது அவ் வத்துவிதவுண்மைநிலை நிற்றல் வழுவற்ற முத்தியெனத்தெளிக. சித்தாந்தமல்லாத பூர்வபக்ஷமான ஒன்றென்பதிலும், இரண்டென்பதிலும், ஒன்றோடொன்று சேருமென்பதிலும் அனேக சமயங்க ளடங்கிவிடும். அவ்விவரம் இதனடுத்த வியாசத்தில் விளக்குவாம். ஈண்டுப் பரமான்மாவுக்குப் பந்தமுமின்று முத்தியுமின்றென்பது இனிது பொருந்தும்.

"ஏகமிரண் டென்னாமற் சும்மா விரு" என்றது பற்றி-ஒன்றென்று மிரண்டென்றுஞ் செயப்படுவாதமிழைத்துக் கொண் டிருப்பையாயின் வாக்கு மனமில்லா நிட்டை பொருந்தாது ஆகலிற் சும்மாவிரு வென்று சொன்னதே அது, அதனால் அஃதொன்றென்பதை மறுத்த தாகாதென்று சிலர் பேசுப. அப்பேச்சு அறியாமையின் வீக்கத்தினின்றெழு வெற்றரற்றலென்றே விவேகிகளுணர்வர். அது விளக்குதும்:— அவ்வாக்கியத்தை வெளியிட்ட கண்ணுடைய வள்ளலார்க் குண்டாயிருந்த ஒன்றோ? இரண்டோ? எனுமையம் நீக்குதற்பொருட்டெழுந்தருளிய ஸ்ரீ ஞானசம்பந்தமூர்த்தி நாயனார் ஒன்றாயிருப்பி னொன்றேயெனவும், இரண்டாயிருப்பி னிரண்டேயெனவும் ஆயிடை அருளிச் செய்வரென்றன் மரபாம். அவ்வாறின்றி அவ்விருதிறமல்லா வொருதிற முண்டென

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

வுணராதிருந்த அவ்வள்ளலார்க்கு அதனை யுணர்த்துவான் "அதுவென்னு மொன்றன் றதுவன்றி வேறே-யதுவென் றறியறிவு முண்டே -- யதுவென் -- றறிய விரண்டல்ல னாங்கறிவு ணிற்ற-லறியுமறி வேசிவமு மாம்" என ஆசிரியர்-மெய்கண்ட தேவரது சிவஞான போதந் தெரித்தாங்கு "ஏகமிரண் டென்னாமல்" என்றருளியதனாலே ஒன்றெனற்கு மிரண்டெனற்கு மியையாத அத்துவிதத்தையே யுணர்த்தியருளினரென்றல் இனிதியைந்த துணிபாகும். ஆகவே 'அஃதொன் றென்பதை மறுத்ததாகாது' என்பார் மாற்றம் மரபின்மையுற்று மாய்ந்திடுவதறிக. இதுவேயுமன்றி, "ஒன்றோ டிரண்டெனாச் சமரச சொரூப சுகம்" எனத் தாயுமானா ருரைத்தவுரையிற் சிவசமத்துவ அத்துவிதத்தையே யுணர்த்துகின்ற "சமரசசொரூபசுகம்" என்றதூஉம், பிறிதொருபாட்டிற் "சித்துஞ் சடமுஞ் சிவத்தை விடவில்லை" என்றதூஉம், பொய்யத்துவிதங்கண்டா ரறியொண்ணாத சுத்தாத்துவித வுண்மைகண்ட மெய்கண்ட தேவரது திருவருளை யான் பொருந்து நாளென்றோவெனப் பொருள்படு "பொய்கண்டார் காணாப் புனிதமெனு மத்துவித - மெய்கண்ட நாதனருண் மேவுநாளெந்நாளோ" என்றதூஉம், மற்றொரு பாட்டில் "யாங்களே கடவுளென்றிடும் பாதகத்தவரும்" என்றதூஉம், வேறொரு பாட்டில் "மாயைமுதலென்பர் சிலர் **** நாமென்பர் சிலர்" என்றதூஉம், இவை போன்ற பிற செய்யுள்களும் அவ்வேகவாதத்தினர் புகறற்குப் பொருந்தாமே நிற்றலுணர்க. அன்றியும், அன்னோர் கருத்துப் போல ஒன்றெனும் வாதமும் இரண்டெனும் வாதமும் பேசாதிருப்பது நிற்குநிலை யாமாயின், அவ் வேகவாத நூல்களை யோதுதலினாலும் ஒதுவித்தலினாலு முறுபய னொன்றுமின்றென்றாம். அவ்வாறோதுதலு மோதுவித்தலு மொருவித சம்பிரதாய வழக்கென்னில், அங்ஙனம் ஏகவாத நூல்களை நீக்கித் துவிதவாதநூல்களைக் கோடல் அவர்க்கு நற்சம்பிரதாய வழக்காமன்றோ. யாதுபற்றி யென்றால், அவையிற்றாற் பல்புண்ணியம் பயன்படுதல் பற்றி. இவ்வாறாயிற் "சும்மாவிரு" என்றதற்குப் பொருளென்னை கொலோவெனின், ஒன்றேபொருள் அதுநானேயெனக் கேவலாவஸ்தையிற் கிடந்துறங்குதலும்,

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

"நானவனென் றெண்ணினர்க்கும் நாடுமுள முண்டு" எனச் சிவஞானபோதங் கூறுமாறு நானுந் தெய்வமுமாகிய விரண்டு பொருளுண்டெனச் சிந்திக்குஞ் சீவபோதமுள்ள சகலாவஸ்தையுநீஇ விழித்திருத்தலுமின்றிச் சுத்தத்தினி லமர்வாயாக என்பது அதன் பொருளென்க.

இனி, அந்த *அத்துவிதத்தைச் சில உவமானங்களான் விளக்குதும், (இவ்வத்துவிதம் இந்நூலாசிரியர் 21-திருவெண்பாக்களி னருளிச் செய்த அத்துவிதப்பொருளில் இனிது விளக்கப்பட்டடிருக்கிறது.) அலியென்னு மொருமொழி ஆணுமன்று பெண்ணுமன்றெனவும், வாயிலென்னு மொரு மாற்றம் உள்ளுமன்று வெளியுமன்றெனவும், நடுவென்னு மொருகிளவி அடியுமன்று முடியுமன்றெனவும், (பதம்) சோறென்னுமொருசொல் அரிசியுமன்று குழைந்தது மன்றெனவும், மாலையென்று மொருகூற்று இரவுமன்று பகலு மன்றெனவுந் தீர்மானிக்கும் வலியுற்று நிற்றல் போல அத்துவிதமெனு மொருசொல்லும் ஏகமுமன்று துவிதமுமன்றெனத் தீர்மானிக்கும் வலியுற்று நிற்பதாகும். அது பதியும் பசுவும் பிரிவற்றுள்ள அனாதிக்கலப்பினையே யுணர்த்தும். இது-பாம்பினது கட்டொளையிற் கண்ணுஞ்செவியும், யானையினது துதிக்கையில் நாசியுங்கையும், மாநுடவுருவில் உடம்புமுயிரும், பேய்பிடித்தா னுருவிற் பேயும் பிடிபட்டவுயிரும், வௌவா லுருவிற் பறவைவடிவும் விலங்குவடிவு முள்ளமையையும் : ஈதெமக்கு நறிது நறிதெனத் தேவரோடு கலாய்த்த கலாமுடைய சூரபதுமனிற் சூரனும் பதுமனு மிருந்தமையையும் ஒக்குமென வுணரவேண்டும். கல்லாற் கடவுள் கைகாட்டு மிதுவே.

பதி பசு பாசம் மூன்றனையும் வெளியிடுகின்ற வேதமகாவாக்கியங்களைப் போன்ற ஆகம மகாவாக்கியமுமுண்டு. அது சிவாய நம : இதனிற் சிவ என்பது பதி, ய என்பது பசு, நம என்பது பாசம். சி=சிவன், வ = அருளாகிய சிவசத்தியெனவும், ந=திரோதை, ம=ஆணவமல மெனவும் விவரமறிக. இருளோடு கூடி யிருளாகவும்; ஒளியோடு கூடி யொளியாகவு மிராநின்ற கண்ணைப்போல மலத்தோடுகூடி மலமாகவும், சிவத்தோடுகூடிச் சிவமாகவு மிருக்கு நீர்மையுடைய ஆன்மாவெனும் பசு :- இம்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

மகாவாக்கிய மத்தியிலிருத்தலினால் அது மலமடங்கியவழிச் சிவத்தோடு கூடிச் சிவசமான முற்றிருக்குமென்றறிக. கூடுதலென்பது கேவல சகலங்கணீங்கிச் சீவபோதம் அற அருளிலழுந்தி யொன்றிரண்டென வியையா அத்துவித யதார்த்தத்தி னிற்பதாகும். சிவாயநம : என்பது சிவனுக்கு நமஸ்காரமெனும் பொருள் கொண்டவழிக் குருவினாலுபதேசிக்கப்பட்டதின்பின் சீடனநுட்டிக்கு மோக்ஷமந்திரமாக நிற்கும். சிவசமானமுறன் முத்தியென்பதைத் "ததாவித்வான் புண்யபாபே விதூய நிரம்ஜந: பரமம் ஸாம்ய முபைதி||" எனுமுண்டகோபநிடதத்து 3-வது முண்டகம் 1-வது கண்டத்துத் திவ்ய வாக்கியத்தானும், "விரிபுண் ணியப்பா வாதிகளை மேவுறாது நிவிர்த்தி செய்து-பிரிய மிகுந்த பரசிவ வபேத சொரூப மேயான-அரிய சாமி யத்தையினி தடைவா னவிருங்பகப்கற்பூந்-தெரியல் வனைந்து வீங்கியெழீஇச் சிலையை வாட்டுந் திணிதோளீர்," எனுஞ் சூதசங்கிதைச் செய்யுளானும், பிறவற்றானுமுணர்க. மேலை யுபநிடதவாக்கியத்தி னருத்தம் "இத்திறமுத்தன் புண்ணியபாவங்க டீர்ந்தவனாய்க் களங்கமற்றவனாய்ச் சிவசாமியத்தை யெய்துகின்றனன்" எனவாம். சாமியமென்பது சமம். இச்சமம்---சிவனதுவடிவை நானைடைந்து சிவனைப் போலப் பஞ்ச கிருத்தியஞ் செய்து கொண்டிருப்பல் எனுஞ் சிவசமவாதி முடிவு கொல்லோவெனின் அற்றன்று. பஞ்சகிருத்தியமின்றிப் பரிபூரண சிதாகாச சிவத்தன்மையுற்றுச் சிவாநந்தாநுபவப்பொருளா யிருத்தல் இம்முடிவென்க.

(37)

சிஷி:- அளவிலா நூல்களிருத்தலினால், ஒருவன் அவையனைத்தையு மோதியுணர வேண்டுமென்பதுண்டோ!

குரு:- "நூல்பலகல்" என்றபடிப் பன்னூலுங்கற்றுணர்தலே யுத்தமம். என்னை? உலகிற் பன்மதங்களேற்பட்டு அவை தத்தம் மதத்தினை யுயர்த்திக் கூறுகின்றன வாகலின். அன்னணங் கற்றுணராக்கால் தெளிவு குன்றுவது மன்றி இரண்டுவரி செவ்வனெழுத வேலாவிளைஞரும் எளிதிற் பிறன்கோண் மறுத்துத் தங்கோணாட்டற் கிடனுண்டாமன்றோ.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

யாதொரு நூலினை வாசிக்குஞான்று ஒன்றிற்குக் குறையாமல் நன்றாயினுந் தீதாயினு மறியப்படுமாகலின் அங்ஙனம் வாசிக்கும் விவேகியானவன் தீதகற்றி நன்று கொளக்கடவன். அவ்வாறு கொளற்கு வலியில்லான் பதிநூல்களையேபடித் துணரக்கடவன். சிறிது வலியுள்ளான் அவற்றி லியன்றவளவேனு மோதி யுணரக் கடவன். மக்கள் ஆயுள் நீர்மேற் குமிழிபோறலின் அனைவரும் ஒல்லையிலோதி யுணர்ந்து திருவருணெறி நிற்றலே நறிய மதியாகும்.

(38)

சிஷி:- நூலினை யோதியுணராவிடினும் ஒதியமட்டினே பயனுண்டாங் கொல்லோ?

குரு:- உண்டு கொலாம். இதனை, மநுஸ்மிருதி 6-ம் அத்தியாயம் 84-வது சுலோகத்துழை "இவ் வேதாந்தமானது அதன் பொருள் தெரியா தோதுகின்றவனையுங் காக்கின்றது. அதன் பொருளறிந்தாரை நனிகாக்கின்றது. கைவல்லியத்தை = தனித்திருத்தலை, விரும்பினார்க்கும் வீடுபேறாம் மோக்கத்தை விரும்பினார்க்கும் இதுதான் கதியாவிருக்கின்றது" எனப் பொருளாம்வழிப் பரக்கக் காண்க. அன்றியும் பிரமவேள்வி, தெய்வவேள்வி, பிதிர் வேள்வி, மாநுடவேள்வி, பூதவேள்வியென வேதத்திற் சொல்லப்படும் ஐம்பெருவேள்விகளுள் தலைநின்ற பிரமவேள்வி தெய்வநூ லோதுத லென்றுணர்க. மற்றை நான்கும் முறையே அக்கினிமுலஞ்செயுந் தேவபூஜை, பிதிர்பூஜை, அதிதிகட் குணவளிக்கை, காகத்திற்குப் பலியிடுகையாம். நறுநூற்பூஜையும் நறும்பயன் தரும்.

(39)

சிஷி:- எல்லா வருணத்தார்க்கும் வேதாந்த சித்தாந்தங்களிற் சொல்லப்படுகின்ற யோகஞான மோக்ஷங்க ளுண்டாகுமோ?

குரு:- நான்காம் வருணத்தாராகிய விதுரனார் பரமஞான முடையவராய் மிளிர்ந்தனரெனப் பாரதாதி நூல்களிற் பகரப்படுகையானும், திருத்துறையூரில் ஆதிசைவ வேதியகுலத்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

துதித்த அருணந்தி சிவாசாரியர் திருவெண்ணெய்நல்லூர்க் கணிருந்தருளிய வேளாளகுலத்தினராய மெய்கண்ட தேவரிடம் ஞானோபதேசம் பெற்றமையானும், "மேலானவித்தை சூத்திரனிடத் திருப்பினும், மோக்ஷகருமஞ் சண்டாளனிடத் திருப்பினும் அவற்றை யன்புள்ளவன் கிரகிக்கக் கடவன்" என்னும் பொருளினை யுட்கொண்ட திவ்யசுலோகம் - "சிரத்ததாநச்சுபாம் வித்யா மாததீ தாவராதபி| அந்த்யா தபிபரம் தர்மம் ஸ்ரீ ரத்நந் துஷ்குலாதபி||" என மநுஸ்மிருதி 2-வது அத்தியாயத்திலிருக் கின்றமையானும், "கல்லானது சிவசம்ஸ்காரத்தினாலே யன்றோ போக மோக்ஷங்களைத் தருந்தன்மைத்தாகும். (அவ்வாறு) கல்லானது சிவத்தன்மையுறுமாகிற் சூத்திரன் அங்ஙனம் ஆகானென்றல் எங்ஙனம்?" என்று பொருளாம்படி "பாஷாணச் சிவசம்ஸ்காராத் புக்திமுக்தி ப்ரதோபவேத்| பாஷாணச் சிவதாம்யாதி சூத்ரஸ்து நகதம்பவேத்||" எனக் கந்தகாலோத்தரங் கழறுகின்றமையானும், எல்லா வருணத்தார்க்கும் யோகஞான மோக்ஷங்க ளுண்டாமென்றல் சரதம். இந்தியாயத்திற்கே இவ்வியாசம் 26-வது வினா விடைக் கண்ணும் வேண்டிய பிரமாணங்கள் விளக்கினாம். அவற்றினையு முய்த்துணர்க. முத்திபெற்றவராகத் திருத் தொண்டர் புராணத்திடை வெளியாம் அறுபத்துமூவரும் பல்குலத்தாரெனவுமுணர்க.

நான்காம் வருணத்திற் சந்நியாசியில்லையெனச் சிலர் விளம்புப. சிந்திய விசுவசாதாக்கியத்திற் பிராமணர் முதற் பத்துச்சாதியார்க்கும் பிரமசரியம், கிருகத்தம், வானப்பிரத்தம், சந்நியாசமெனு நான்காச்சிரமமு ண்டென்று விதித்தல் பெறப்படுதலானும்; பிரமாண்ட புராணத்திற் கிருதயுகத்திற் பிராமணசந்நியாசி முக்கியன், திரேதாயுகத்தில் க்ஷத்திரியசந்நியாசி முக்கியன், துவாபரயுகத்தில் வைசியசந்நியாசி முக்கியன், கலியுகத்திற் சூத்திரசந்நியாசி முக்கியனெனு நியதி பெறப்படுதலானும் அவர் விளம்பல் அணுத்துணையும் பொருந்தாதென மறுக்க. இராமாயணத்திற் கிருதயுகமுத னான்கு யுகத்திலும் முறையே பிராமணர் முதலிய நான்கு வருணத்தார்க்குந் தபோமுக்கியங் கூறப்படுதலும், சுப்பிரபேதத்திற்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பிராமணரும் க்ஷத்திரியரும் வைசியரும் சுத்த குலத் துதித்த சூத்திரருமாகிய நால்வருமே ஆசாரியராவரெனத் துலக்குதலும் மேலைய நியாயத்தினையே விளக்குகின்றன. இவற்றை யினிதுணர்கின்ற நீ சிவாநந்தாநுபவ சுவாநுபூதியில்லாக் குலாபிமானமுடையவரெவரோ அவரே தங்குலத்தினை யெவ்வாற்றானு முயர்த்தி யுயர்த்திக் கொண்டிருப்பர். அவர் பிராந்தரிற் பிராந்தரெனவுமுணரக்கடவை.

(40)

சிஷி:- பெருமான்! நூலனைத்திற்குந்தாயுந் தந்தையுமாகவுள்ள வேதாகமங்களின் முடிவான வேதாந்த சித்தாந்த சமரசமே மெய், இதனை யுய்த்துரையாச் சொற் பொய் யெனாவுணரலுற்றேன். நின்றிருவடித் தாமரைகளைப் பன்முறை பணியலுற்றேன். ஏற்றருள்க. மற்றையது மற்றைநாள் வினாதற்கு இற்றைநாளின்னருள் புரிந்திடுக.

குரு:- ஒ மெய்யினிலைஇய தலையன்புடையாய்! நன்று நன்று! அன்னண மவனருளே யொன்றிநின்றருள் புரிக.

வேதத்தைக் குறித்த

6-வது வியாச முற்றிற்று.

குமரகுருபரன் றிருவடிவாழ்க.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0 In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

உ

சிவமயம்

ஓம் குமார குருப்யோ நம:

பாம்பன் - ஸ்ரீமத் : குமரகுருதாச சுவாமிகள்

அருளிய

7-வது

சமயங்களைக் குறித்த வியாசம்

(1)

சீடன்: ஈசுவரனைக் கணித்து அல்லது விரோதித்துள்ள சமயங்களையும் அவற்றினிச்சயங்களையும் விளக்க வேண்டும்.

குரு: - கேள். சமயம், மதம், மார்க்கம் என்பன ஒரு பொருட்கிளவி. தாற்பரியம்; கடவுளைப் பேதித்து விடுத்து அல்லது கணித்து நாடுகின்ற வழியென்றாம். அவ்வழியே வேதாகமாதிகட்குப் புறம்பான புறச்சமய மென்றும் வேதாகமாதிகட்குச் சம்பந்தமான உட்சமயமென்றுந் துவந்துவ வகையுள. அவற்றுள் புறச்சமயமானது உலகாயதம், புத்தம், சமணம், பாட்டம், மீமாஞ்சகம், பாஞ்சராத்திரம் என ஆறுவகையாகும். இவ் வாறு வகையில் உலகாயதமானது: உலகாயதம் சாருவாகம் என இரண்டு பேதமும்; புத்தமானது: சவுத்திராந்திகம், (மகாயானிகம்) யோகாசாரம், மாத்துமிகம், வைபாடிகம் என நான்கு பேதமும், சமணமானது: நிகண்டவாதம், ஆசீவகம் என இரண்டு பேதமும்; பாட்டமானது: பாட்டாசாரியம், பிரபாகரம், நையாயிகம், சப்தப் பிரம்மவாதமென நான்கு பேதமும், மீமாஞ்சகமானது: மீமாஞ்சகம், பாற்கரியம், நீரீசுர. சாங்கியம், வைசேஷிகம் என நான்கு பேதமும், பாஞ்சராத்திரமானது: பாஞ்சராத்திரம், வைணவம், வைகாநம், சோதிடம், மாயாவாதம், வேதாந்தம், துவிதவாதம், அத்துவிதவாதம் என எட்டு பேதமுமாகும்.

இங்ஙனம் புறச்சமயம் அறுவகையும் அவற்றின் பேதமுமான 24 பகுதிகளின் தீர்மானத்தையும் ஈண்டு விவரிக்கக் கடவேம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

(1) உலகாயதம்

இந்த உலகாயதபேதம் இரண்டுள் :

1. உலகாயதமென்பது:- காம சாஸ்திரமாகிய இன்ப சாகரமடல் முதலிய நூல்களிற் சொல்லப்படுகிற படி இகசுகங்கள் பலவுள் சிரேஷ்டமான ஸ்திரீகளின்பத்திற் கேதுவாகிய காமமும் ஸ்தூலதேகமுமே தெய்வம். அதுவே பிரத்தியக்ஷம். மற்றப்படி சில தவத்தோர் செய்து மாய்கின்ற தரும நெறிகளும் ஒன்று கோடியாகப் புசிப்பிக்கு மென்னுந் துறவற நெறியும் அந்நெறியாற் பின்பு பேறா மென்று பேசுமொழுங்கும் அப்பிரத்தியக்ஷம். அதனால் அவைகள் பொய் மார்க்கமேயாகும். அப்பொய்மார்க்க மொழித்து மெய்மார்க்கமாகிய காமநூலிற் கூறப்படும் நல்ல பெண்ணின்பமே ஆண் பெண் கூடிய ஐக்கிய முக்தி. இதை அனுசரிக்கிறவரே(ஞானி) அறிஞரென்றாம்.

இம்மார்க்கத்தை அனுசரிக்கிறவர்களையே பாமரர்களென்று நல்லோர் பகர்வர்.

2. சாருவாக மென்பது:- காட்சி யொன்றே பிரமாணம். காட்சிக்கக்கூடிய பிருதிவி, அப்பு, தேயு, வாயுவென்ற நான்குமே உண்மைப்பொருள், ஆகாசமென்பது பொருளன்று. நான்கு பூதச் சேர்க்கையான தூலவுடம்பே ஆன்மா. உடம்பு வளர அறிவு வளரும். உடம்பு தேய அறிவு தேயும். அது சகஜம். அதனால் ஈசுவரனென்றொருவனில்லை. இருக்கிறதெல்லாம் நான்கு பூதங்களே, அப்பூதங்களே தெய்வமும் அவைகட்கு நாயகனாகிய இந்திரனே தலைவனுமாகும். தூலவுடம்பினால் இகத்திலனுபவிக்குஞ் சுகதுக்கங்களே சுவர்க்க நரகங்கள். இகசுகங்கள் பலவுள் பெண்ணின்பமே சிரேஷ்டம். அது நிமித்தம் முயற்சித்துப் பொருள் தேடி உண்டுடுத்துப் பூசி முடித்து அதைப் பொருந்தி வாழ்வதே ஆனந்த முத்தியென்றாம். சில சாருவாகர் இந்திரியத்தையும் சில சாருவாகர் பிராணனையும் ஆன்மா வென்பர்.

இம்மதமே சகஜமத மென்றும் சூனியான்மவாத மென்றுந் தேகான்மவாத மென்றுஞ் சொல்லப்படும். இங்ஙனம் உலகாயதம் சாருவாகமென இருவகையாய்க் கூறப்பட்டடுள்ள இந்நூற்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0 In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

செய்தவர் பிரஹஸ்பதி பகவானாவார். காரணம், தன்மகளை மணாளன் துறவறத்தால் நீத்தது காரணமாய் உண்டாக்கப்பட்டதென் றுரைக்கப்படும். அன்றித் தேவேந்திர போகத்தில் வெறுப்புற்றுத் துறவு மார்க்கத்தையடைந்து அதீத மோக்ஷத்தைப் பெறவாரம்பித்த இந்திரனுடைய கருத்தைத் திருப்புமாறு சுரகுருவாகிய பிருஹஸ்பதி அவ்விந்திரனுக்குப் போதிக்க வந்ததென்று ஸ்ரீ கந்தபுராணம் தேவகாண்டம் இந்திரபுரிப் படலத்திற் சொல்லப்பட்டிருக்கிறது.

(2) புத்தம்

பௌத்த மென்றாம். இப்பௌத்த பேதம் நாலுள்:

3. சவுந்திராந்திகமென்பது:- ஆதிபுத்தன் முதலாக 21 வகைப் புத்தருளர். அவரில் ஆதிபுத்தன் எலலா யோனியும் புகுந்து நரக சுவர்க்கங்களுங் கண்டுவந்துலும்பலி வனத்துள்ளே பத்தாவைத் துறந்து தவஞ் செய்யுங் கௌந்தி யுதரத்துள்ளே நுழைந்து விலாவைப் பீறிக்கொண்டு வெளிவந்து ஏழுநாளளவும் அத்தாய் மரியாமற் பாதுகாத்தெழுந்து முழுதுமுணர்ந்து கொலை முதலிய கடிந்து பரதுக்க துக்கனாய் நற்காட்சி, நல்வாய்மை, நன்முயற்சி, நல்லூற்றம், நற்கடைப்பிடி, நன்னெறி, நற்செய்கை, நல்லுளத்தோர் தலைப்பாடுடைமை என்ற எண்குணமும் பொருந்தி அவ்வகையான தீக்குணம் எவையும் பொருந்தானா யிருப்பான். அவன் காட்சியளவையுங் கருத்தளவையுமன்றித் தன்ம ராஜபுரத்திலே மாயா புத்திரனாய் வீற்றிருப்பான். வடதிசையிலுள்ள அரச மரத்திலும் வீற்றிருப்பான். அவனாற் சொல்லப்பட்ட நூல் பிடகாகமம். அவ்வாகமம் வினைப்பிடகம், சிக்ஷாபிடகம், கந்திரபிடகம், ஆதிபிடகம் என நால்வகையாகு மென்றாம். அந்நூற்கருத்து: உரு, அரு, வீடு, வழக்கு என நால்வகையில் - உரு: பூதவுரு, உபாதாயவுரு என இரு வகையாகவும், அவற்றுள் பூதவுரு பிருதிவி அப்பு தேயு வாயு வென நாலாகவும்; உபாதாயவுரு: வலி, கந்தம், இரதம், வன்னமென நாலாகவும், அரு: சித்த அரு, கன்ம அரு என இருவகையாகவும், வழக்கு உள்வழக்கு, இல்வழக்கு என இருவகையாகவும், பிறவும் உள்ளது சார்ந்த இல்வழக்கு, இல்லது சார்ந்த உள்வழக்கு, இல்லது

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

சார்ந்த இல்வழக்கு, உள்ளது சார்ந்த உள்வழக்கு என நால்வகையாகவும் சொல்லப்படும். அன்றி, உருவம், வேதனை: குறிப்பு, பாவனை, விஞ்ஞானம் என்ற 5-ம் பஞ்சகந்தமென்றும்; அவற்றுள் உருவம், முன்சொன்ன பூதவுருவும்; உபாதாய வுருவுமென்றும்; வேதனை; குசலா வேதனை, அகுசலா வேதனை, குசலாகுசல வேதனையென மூவகையென்றும்; குறிப்பு: சுரோத்திராதி 5-ம் சித்தம் 1-மாகிய ஆறு கருவிகளென்றும்; பாவனை: மனம் வாக்குக் காயங்களால் வரும் நல்வினை 10, தீவினை 10, என்பனவற்றுள் நல்வினையாவது மனத்திற் சந்தத் திருப்பணியே வணங்கல், மந்திரஞ் சொல்லல், துதித்தல், வாழ்த்தல், வாய்மை, சீர்கொளல், தொழல், சூழ்தல், பரச்சேவை, பூவைத்தல் என்றும்; தீவினையாவது: தீயன சிந்தித்தல், ஆசை, கோபம், கடுஞ்சொல், பொய், பயனில்சொல், கோட் சொல்லல், களவு, கொலை, வீண் செய்கை யென்றும்; விஞ்ஞானம் மேல்விளக்கிய கருவிகளாறாலும் அறிகின்ற ஆறறி வென்றும்; இக்கந்தமைந்துமே கருவியும் ஆன்மாவுமாக உள்ளது, இந்தக் கந்த நீங்குவதே முக்தியென்றும்; சாருவாகத்தில் சொல்லுகிறபடி, பூதம் நான்கென்பதும் திசைநான்கென்பதில்லை, அது இல்வழக்கென்றும், பொறிகளின் திரிபல்லது காலமென்ப-தில்லையென்றும்; மேற்சொன்ன கந்தங் கூடாமனிற்கிற பதியென்பதும்; ஆன்மாவென்பதும், பிரத்தியேகமா யில்லையென்றும்; புசிப்புக்காக மரஞ்செடிகளை வகுத்தான், அவைகள் ஜீவனுள்ளவைகளல்ல, அதனாலவைகளைத் தின்னலாம், ஜீவனுள்ளவைகளைத் தின்னக்கூடாது, ஆனால், தானேசெத்த மாமிசத்தையும் பிறர் கொன்று கொடுத்த மாமிசத்தையுந் தின்னலாமென்றும்; சிவந்த நீலவண்ணப் புடவையை உடுத்தி வாசனைகளை அணிந்து கொள்ளலாமென்றுஞ் சொல்லப்படும்.

இம்மத்தில் அனேக விபரீதங் காணப்படுவதோடு அசுத்த மாயையின் தோற்றமாகிய குணதத்துவத்தின் கீழுள்ள புத்திதத்வத்தைத் தானே பொருளெனவுங் கொண்டதாயிற்று.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0 In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

4. யோகாசாரமென்பது:- சவுத்திராந்திகத்திற் கூறியபடியே யாவுமாயினும் பிருதிவிமுதற் புத்திதத்துவம் வரை 23, அவற்றுள் புத்திதத்துவமே பிரதானம். அத்தத்துவம் பூதபௌதிகமான சரீரத்திலேயே உள. அத் தத்துவமுதல் யாவத் பொருள்களும் க்ஷணபங்கம். க்ஷணபங்கமான அறிவு தானே உடம்பு முதலியவாக வாதனையாலே அருவமும் உருவமுமாதலாலே அறிவு பரிணாமித்தபடி பிரபஞ்சங் கனவிற் றோன்றும். அங்ஙனம் விழித்தால் பொய்யாம். அதுபோல எங்கும் ஞானசந்ததியே உள்ளதென்றாம்.

இதில் அருவமாயுள்ளிருக்கிற அறிவைத்தானே உருவமா யுரம்பொருந்திப் புறம்பாயிருக்கிற உலகமாக விகற்பித்துச் சொல்லலாயிற்று.

5. மாத்துமிகமென்பது:- செவி, மெய், கண், வாய், மூக்கு முதலான அவயவங்களிலே ஞான சந்ததியாகிய போதமெழக் கண்டபடி அவ் அவயவங்கள் தானே போதமும், அவ்வவ் அவயங்களில்லாக் கல் மரமிவைகட்கறிவில்லை யாகவே அவைகளெல்லாங் கெடும். அதனால் இதுவே நிலையென்றாம்.

இதில் அன்னியமாயுள்ள ஆன்மாவின் அறிவுக்கிடமா-யிருக்கிற அவயங்களைத்தானே அறிவென்று அறியாமையாய்த் தீர்மானித்துக் கொள்ளலாயிற்று.

6. வைபாடிகமென்பது:- மஞ்சளுஞ் சுண்ணாம்புங் கூட்ட அங்ஙனஞ் சிவப்பென்பதொன்று பேதித்தாற் போலப் பிரபஞ்சமாகிய உருக்களின் அவயவமும் உட்போதமாகிய ஞானமுங் கூடுமவதரம் அறிவு பொருந்தித் தோன்றும். அப்படிக் காண்பதே பொருளென்றாம்.

இதில் அருவமாகிய ஆன்மபோதமும் உருவமாகிய உலகமுங் கலந்து பொருளாயிருப்பதாகப் பிறழ்ந்து சொல்லலாயிற்று.

இங்ஙனம் நால் வகையாகக் கூறப்பட்டுள்ள புத்த மதமானது துவக்கத்தில் முன்னொருகாலந் தமிழ்நாடுகளிலும் ஈழநாட்டிலும் விருத்திப்பட்டிருந்து பின்னர் சைவசமயகுரவராகிய ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகளாற் கண்டிக்கப்பட்டதின்மேல் இப்பிராந்தியத்தில் இல்லா தொழிந்து அன்னிய பூமிகளி லிருந்து கொண்டிருக்கிறது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஆருகதமென்றாம். இவ்வாருகதபேதம் இரண்டுள்.

7. நிகண்டவாதமென்பது:- அருகபரமேட்டி யென்றொரு கடவுள் அனாதியே யுள்ளவன். அவனிருக்குமிடம் பொன்னெயில் வட்டம். அவன் வடிவு பொன்மலையிற் பொன்னாலெழுதினாற் போல ஆயிரத்தெட்டு மனுவுடைத்தாய், அனந்தஞானம், அனந்ததரிசனம், அனந்தானந்தம், அனந்த வீரியம், நாமமின்மை, கோத்திரமின்மை, ஆயுவின்மை, அழியாவியல்பு என்னும் எண்குணமும் மதிக்கலைச்சீதம் போல விளங்க;

ஞானாவர்ணீயம், சுருதி ஞானாவர்ணீயம், அவதி ஞானாவர்ணீயம், கேவல ஞானாவர்ணீயம், கட்டரிச னாவர்ணீயம், சொற்றரிசனாவர்ணீயம், அவதிதரிசனாவர்ணீயம், கேவலதரிசனாவர்ணீயம் என்னுந் தீக்குணம் எட்டுங் கடிந்து; பசி, தாகம், சோம்பு, பயம், செற்றம், மோகம், சிந்தனை, பழித்தல், நோய், சாதல், வேர்வு, கேதம், மதம், அதிசயித்தல், புசிப்பு, நித்திரை, சனித்தல், உவகை என்ற மாயை யாக்கையாகிய பதினெண்குற்றமுந் தீர்ந்து வீற்றிருப்பன். அவனருகில் சித்த பரமேட்டி தன்மபரமேட்டி முதலானோரிருப்பர். அவர்களிற் சித்தபரமேட்டி:- "தன்மம் பகவ" என்று கடவுளை வினாவ, அவன் "பஞ்சாஸ்தமயம்" என்றுத்தரஞ் சொன்னான். அப்படிச் சொன்ன எழுத்தைந்தையும் சித்தபரமேட்டி பத்தாக்கினான். விவரம்: காலம், ஆன்மா, தன்மாத்தியகாயம், அதன்மாத்தியகாயம், புண்ணியம், பாவம், நிலைபெற்றவெளி, புற்கலம், பற்று, வீடு என்பன. இவற்றுட் காலமாவது மூவினை. ஆன்மாவாவது : உடம்பில் நிறைந்து நிற்பது. தன்மாத்தியகாயமாவது: புண்ணியம் புரிந்தால் யாதனா சரீரமானது மாயாகாரியத்தினின்றுந் தோன்றி ஆன்மாவைத் தன்னிடத்தேயாக்கித் திவ்யதேகமாய் மேலே கொண்டுபோய் புண்ணியங்களைப் புசிப்பிப்பது. அதன்மாத்தியகாயமாவது: பாவவுடலாகிய யாதனா சரீரமாய்த்தோன்றி ஆன்மாவைத் தன்னிடத்தேயாக்கிக் கீழ்க்கொண்டுபோய்ப் பாவங்களைப் புசிப்பித்து நரகங்களில் அழுத்துவது. புண்ணிமாவது அருகக் கடவுளுக்கும், ஆருகதருக்கும் கொடுக்குந்தானமும், ஒருவரை ஒன்றை

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

யிச்சியாததும், கொலை, களவு, கள், காமம், குரோதம், லோபம், மதம், மாச்சரியம் இவை நீங்கியிருப்பதுமான சீலமும்; அரைஞாணும் உடைய... பாயுடுத்துத் தலைபறித்து நின்று அஸ்தமனத்திற்கு முன் தந்தது வாங்கி நின்றுண்டு, நீரை வடிகட்டியருந்தி, மெய் கழுவாது, விளக்கிடாது, உறங்காது கையிற் கமண்டலமும் மயிற்பீலியுமுடைத்தா யிருப்பதும், சுடுபாறையிற்கிடத்தல், கொல்லா விரதம் முதலியவுமான தவமும், அருகக் கடவுளைப் பூசிக்கும் பூசையும் என்ற நான்கு விதமாகும். பாவமாவது: மேற்படி புண்ணியத்தை விடுவது. நிலைபெற்ற வெளியாவது ஆகாய முண்டெனல். புற்கலமாவது கடினமான இரும்பு கல் மரம் முதலியனவும், உயர்நிலைபெற்ற பொருள்களுமாம். பற்றாவது இல்வாழ்க்கை விடாமை, உழவுத்தொழில், வரைவு, வாணிபம், வித்தை, சிற்பம் என்ற அறுவகையாகும். வீடாவது மேல்விளம்பிய வெல்லாம் விட்டுப் பாவம் புசித்துத் தொலைந்தாற் புண்ணியங்கதிகொடுக்கு மென்றாம். இந்நூற் பெயர் சீவக சிந்தாமணி யென்றும், அதில் இந்நூலும் இப்பதார்த்தமும் உண்டோ இல்லையோவென்று வினாவினால் உண்டாம் இல்லையாம் உண்டு இல்லையுமாம் என்று முவ்வகையாற் சொல்லப்படுமென்றும், ஜீவனென்றொரு பதார்த்தம் அனாதியே குற்றமுடைத்தா யிருக்கும்-அஃது தூலந் தேயத்தேயும் வளர வளரும் - ஏனை இந்திரியங்களுமுள குணமே ஆன்மாவென்றும், அருகனுக்கிருப்பிடம் அசோகின் கீழென்றும் கூறப்படும். பெரும்பாலும் கருஞ்சரீரிகளாயுள்ள இவ்வமண தவச் சன்னியாசிகள் அரைஞாணும் உடையுந்துறந்து பாயுடுத்தன் முதலிய ஏனை செய்தனரென்னில் வஸ்திரமுடுத்தாற் சீலைப்பேன்பற்றி நசிக்குமென்று சிலர் அமணராயினர். சிலர் பாயுடுத்தினர்; சிலர் கடுக்காய் தோய்த்த வஸ்திரமுடுத்தினர். தலைமயிரை வளர்த்தாலும் சிரைத்தாலும் பேன்களுண்டாய்ச் சாமென்று மயிர் சிறிதா யிருக்கும்போதே சில கருவிகளைக் கொண்டு பறித்துப் புண்பட்ட சீத்தலையராயினர். தீபமேற்றிப் புசித்தால் அத்தீபத்தில் விட்டின் முதலிய பூச்சிகள் விழுந்து சாகுமென்று அஸ்தமனத்திற்குமுன் புசிப்பதாயினர். நீரிலிருக்கும்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பிராணிகள் இறவாதிருக்கவேண்டிப் பலதரம் வடிகட்டி யருந்து வாராயினர். கீழேபடுத்தாற் சிறு ஜெந்துக்களிறந்து போமென்று உறங்காதிருப்பதாயினர். வழி நடக்கும் போது எறும்பு முதலியன மாளாதிருக்க வென்று மெத்தென விளக்கிக்கொள்வதற்காகக் கையில் மயிற் பீலியை யுடைத்தாயினர்.

இம்மதத்தில் அசுத்த மாயையின் தோற்றமாகிய குணதத்துவத்தைத் தானே ஆன்மாவாகவும், கடல் வற்றியபின் மீனுண்ணக் காத்திருக்கும பூனையின் மார்க்கம்போலப் பாவம் புசித்துத் தொலைந்தபின் அசேதனமான கன்ம புண்ணியங் கதி கொடுக்குமெனக் காத்திருப்பதாகவும் எண்ணற்பாலது.

8. ஆசீவகமென்பது: ஐந்துபொருளென்ற அணுவை ஐந்தான்மாவாக்கினான். அதிற் பிருதிவி அப்பு தேயு வாயு வென்னும் நாலும் பூதவணுக்கள். இவற்றோடு கூடி அருவாய் நிற்பது உயிரணு. இவ்வுயிரணுவே அறிவுள்ளது. ஏனை நான்கும் அறிவற்றவை. அறிவுள்ள அவ்வுயிரணு நாற் பூதங்களோடுங் கூடி நுண்ணிதாய் ஒட்டியுந் தீண்டியுங் கலந்து மறிந்து செல்லாநிற்கும். அணுவுக்குப் புண்ணிய பாவங்கள் கூட அதற்குத் தகுதியான அறிவு உடற்கூட்டத் தாலுண்டாம். அம்முறைமையிற் புண்ணியத்தால் முத்திநெறியோர்ந்து அம்முக்தியைச் சேருமென்று அந்தத் தன்மபரமேட்டி யறிந்து மண்ணிடை வந்து உரைத்த மார்க்கமே முத்தி நெறி யென்றாம்.

இதில் உயிரணுவானது: ஒட்டியுந் தீண்டியுங் கலந்து மறிவதில் துயிலுங்கால், கரணங்கள் நீங்குகையால் அறியாதென்றும் அப்படி நீங்குகையில் உயிரின் சிரேட்டங் கெடப் பூதங்களும் பிரிய உயிர்தொட்டுத் தீண்டியவுடம்பு பிரிவானே னென்னில், அதை நிலைபெற்ற வாயு கூட்டுமென்றும், அங்ஙனங் கூட்டற்கு அவ்வாயுக்கறிவில்லையே யென்னில் கன்மங் கூட்டு மென்றுங் கூறப்படும். அதனால் கன்மமாகிய மலம் அதை யறியமாட்டாதென்றும், அதை யறிவிக்குந் தலைவனொருவனுண்டென்றும் இங்ஙனந் தெரியற்பாற்று.

இச்சமண மதம் முற்காலத்தில் தமிழ்நாடுகளில் பரவியிருந்து பின்னர் சைவசமய குரவராகிய ஸ்ரீ ஞான சம்பந்த சுவாமிகளாற் கண்டிக்கப்பட்டொழிந்தது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஆறு சாஸ்திரத்திலொன்றாகும். இந்தப் பாட்டபேதம் நாலுள்:

9. பாட்டாசாரியமென்பது : வேதமென்பது அனாதி. அஃது அருபமாயும் கர்த்தாவாயும் நிற்றலால் அதுவே தெய்வம். அதிற் சொல்லப்படுகிற சோமயாக முதல் அசுவமேதம் ஈறாகச் செய்யப்படும் யாக கனமங்களும் மனாதி கரணங்களாகிய ஞானமும் இரண்டு காலாகிச் சுவர்க்கத்திற்கேறும். பிரபஞ்சம் நித்தியமாகும். பிரபஞ்சத்தில் எல்லாவுடற்கும் ஆன்மா ஒன்றாய் நிறைந்து நிற்கும். அவ்வான்மா சுழுத்தியிற் சடமாயும் ஜாக்கிரத்தில் அறிவாயுங் காண்பதால் ஜடமாயுஞ் சித்தாயும் இருவகையா யிருக்குமென்றாம்.

இதில் பிரபஞ்சத்தாருக்குச் செய்காரியந் தவிர்காரிய முணர்த்துமாணாய் ஈஸ்வரனாலருளிய வேதத்தைத் தானே தெய்வமென்றும் அறிவில்லாத கிருத்தியங்களும் பசுஞானமாகிய சிற்றறிவும் முத்தியைத் தருமென்றும் மொழியலாயிற்று.

10. பிரபாகரமென்பது: ஆறு சாஸ்திரத்திலொன்றாகும். அதில் மேற்பணித்த சோமயாக முதலிய கிருத்திய முடிவில் அதன்பயனாகிய பூருவம் வந்து தோன்றும். அந்தப் பூருவமே சுவர்க்கத்தைக் கொடுக்கும். அதற்குக் கர்த்தாவென்றொருவர் வேண்டுமென்பதில்லை. பரிபூரணமான ஜடமே ஆன்மா; கூறிய பூருவத்தாற் கிடைக்குஞ் சுவர்க்கமும் ஜனன மரணத்தால்மாறுந் தரமுடைத்து. அதனால் யாக கிருத்தியங்களையும் பூருவத்தையும் விடுவதோடு அறிவிசைந்து தொழிற் படுகின்ற அந்தக் கரணங்களையும் நினைவறச் செய்து கல் மண் இவைகளைப்போல ஒன்றுமறியாமற் கிடக்கிறதே முக்தி-யென்றாம்.

இதில் கடவுள் வேண்டாமலே எங்கும் விரிந்த காமிய கன்மம் பிறவிக் கேதுவாகிய நினைப்புக் கெடுகிற அறிவழிந்த நித்திரையே முக்தியென்பதாயிற்று. இந்நித்திரையில் அந்தக்கரணங்கள் கெடுவதாலும் அக்கரணங்கள் மாயா தத்துவமாதலாலும் இதைத் தண்ணிய மாயா நிஷ்டையென்றே ஆன்றோரதிர்ப்பர்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

11. நையாயிகமென்பது: நியாய மென்கிற வைதிக நூலொன்றிற்குரிய தாகும். அதில் பிரத்தியக்ஷம் அனுமான மென்பவைகளை உலகத்திலறிவதே அறிவு. அதனாற் புத்தியே ஆன்மா. வாதம், செற்பம், விதண்டை, ஏதுவென்னு நால்வகைத் தருக்கத்தால் எதிரியை ஜயிக்கும் நிலையாகிய நிக்கிரகத்தானம் பதினொன்றையும் இந்நூலுடைத்து. கிரியாஞானச் சமவாயம் முத்திநிலை யென்று கண்டுவிடுவதே பெரிய தவமென்றாம். நிகழ்த்திய நிக்கிரகத்தானம் பதினொன்றிற்கும் கடவுள் உண்டெனத் தான் சொல்லும்போது அது காணப்படாததால் இல்லையென எதிரி மறுத்தற் குடன்படல், உடன்பட்டும் உத்தரஞ் சொல்லாதிருத்தல், தாழ்ந்தசொற் சொல்லல், சொன்னசொற் றவறுபட்டு முடிதல், சொன்னசொற் சாதியாதது கொண்டு நான் சொன்னது அப்படியன்றெனல், கல்வி மிகுதியால் அழிதல், ஒரு சொல்லை நான்கு சொல்லாக எதிரி பிரித்தபோது அதற்குச் சோர்வுபடல், சொல்லுதவாதழிதல், சொன்ன சொல் உவமைக் கொவ்வாதழிதல், சொன்ன பதின்மொழி இழிசொல்லால் அழிதல், தருக்கத்தை மாற்றி மானத்தால் அழிதல் என்ற தோல்வித்தானமும் பதினொன்றாம். ஆக இருவகைக்குந் தானம் 22- என்றாம்.

இம்மதத்தில் நூலுக்குக் காரணனாகிய கடவுளைக் கருதிக்கொள்ளாமல் நூலையும் கருதுவானையும் நூற்பொருளையும் கருதி நிற்பதோடு அசுத்தமாயையின் தோற்றமாகிய புத்திதத்துவத்தைத் தானே ஆத்மாவென்றுங் கொள்வதால் அறியாமையே காரணமாய் முடியும்.

12. சப்தப் பிரம்மவாத மென்பது:- வேதாந்த நூலிலொன்றாகும். அதில் பிரபஞ்சமாகச் சொல்லப்படும் பொருள் சப்தத்தாலொழிய வேறில்லை. அச்சப்தப் பொருள் வேறுண்டென்னில் அப்பொருளுஞ் சப்தமாகச் சொல்லவேண்டுதலால் அஃது பொய். பூ என்ற சப்தமானது: பூமி புஷ்பம் பொலிவு அழகு பிறப்பு என்பனவாகவும், மா என்ற சப்தமானது: சொல் பெருமை மிருகம் மாமரம் கிருமி என்பனவாகவும் ஆவதால் அவ்விதம் பேதித்த பொருட் பேரெல்லாம் சப்தமே. அச்சப்தமன்றி வேறுபட்டபொருள் உளவென்னில் நெல்லில் வேறுபட்ட பொருள் பொரியென்னுஞ் சொற்பெற்றாற் போலச் சப்தந் தானே

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta.

பொருளும் அப்படி வளர்ந்தசொல்லுமாம். அதனால் ஜட சித்துக்களாய்த்தோன்றி யழியும் எல்லாப் பொருள்களும் சப்தத்தினுடைய விகாரம். அச்சப்தமே பிரம்மம்; அஃது பிரளய காலத்திலுஞ் சப்த வடிவாகவேயிருக்கும். அதுதானே நாதமாகவும் எல்லா வாக்கு மயமான வேதமாகவு மிருக்கும். அதையே யாவுமென்றறிவது முக்தியென்றாம்.

இதில் சொல்லழிந்து பொருளாமென்றும் பொருளழிந்து சொல்லாமென்றுங் காண்பதில், பாலழிந்து தயிர் மோராகிப் பின்னர் அவை யழிந்து பாலாகாதென்று முணர்வதோடு பொருளைக் கண்டு அப்பொருளுக்கமைத்த பேராகிய சப்தத்தைத் தானே பொருளாய்க் கீழ்மேலாய்க் கொள்ளலாயிற்றென உணர வேண்டும்.

(5) மீமாஞ்சகம்

வைதிக நூலொன்றிற்குரியதாகும். இம்மீமாஞ்சகபேதம் நாலுள்:

13. மீமாஞ்சகமென்பது :- வேதமும் உபாங்க நூல்களும் சொல்கின்ற மார்க்கங்களை விசாரிக்கின் அவை அனேக பேதமாகத் தோன்றும். அப்பொருள்களை நோக்கில் ஒன்றுக் கொன்று ஒப்புநில்லா. அதனாலவை நானாவிதமாமென்று திடஞானங் கொண்டு திரிமூர்த்திகளும் ஜீவர்களேயாவார்கள். தானுமவரில் ஒருவனாதல்தான் முத்தி. அப்படியாதற்குக் கன்மமே எல்லா மியற்றவல்லது. வேதத்தினுடைய கிரியா காண்டத்தை மேற்கொண்டு யாக முதலிய கன்மங்களைச் செய்யவேண்டும். தேகேந்திரியாதிகட்குப் புறம்பாய் ஆன்மாவுண்டு. அவ்வித ஆன்மாக்கள் பலர். ஈஸ்வரனென்பதில்லை. வேதமும் பிரபஞ்சமும் ஒருவராற் செய்யப்பட்டன வன்று. அவை நித்தியமாயுள்ளன வென்றாம். இச்சமயத்தைத் தானே சஞ்சயவாதமென்றுஞ் சொல்லத்தகும்.

இதில் முத்திநெறி அவ்வகைத்தோ இவ்வகைத்தோ வென்கின்ற சந்தேகந் தோன்றக் காண்பதோடு அதீத மோக்ஷத்திற்குப் பக்குவமற்ற ஆன்மாக்கட்கு ஊர்த்தலோக போகம் பிரயோஜனமாம்படி கருணைகொண்டு பூர்வ பக்ஷமாய் விதித்த யாகாதி கர்ம புண்ணியங்களைத் தானே பெரிதாகவுங் கொண்டதாய்க் காண்கலாம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

இம்மதம் : சிவன் பிக்ஷாடன வடிவும் விஷ்ணு மோஹினி வடிவுங்கொண்டெழுந்து தாருகாவனத்திற்கேகிய காலை மக்கின மடைந்துவிட்டது.

14. பாற்கரியமென்பது:- வேதாந்த நூலிலொன்றாகும். அதில், வேதமும் வேதப் பொருளும் உலகமும் ஆன்மாக்களும் சித்தாகிய ஞானமல்லது அஞ்ஞானமன்று. அஞ்ஞானமென்றொரு வஸ்து இல்லவேயில்லை யென்றாம். ஜட சித்துக்களெல்லாம் பிரமத்தினுடைய பரிணாம மென்றும் அந்தப் பிரம்மமாகிய ஆன்ம ரூபத்தோடு இலயித்தலே முக்தி யென்றும் மொழியப்படும்.

இதில் ஞானத்தோடு அஞ்ஞானத்தைத் கூட்டிக் கூறலாயிற்று.

15. நிரீசுர சாங்கிய மென்பது: அத்தியான்மிக நூலிலொன்றாகும். அதில் புத்தி தத்துவமுதற் பிரகிருதி தத்துவம் ஈறாக 33-யும் காரியமாகவுள்ள பிரகிருதி மாயையானது, நித்தியமாய் வியாபகமாய் ஜடமாய் எல்லாப் பொருட்குங் காரணமாய் முக்குணங்களுஞ் சமமாய் நின்றவவதரம் 34.-ம் தத்துவமாயிருக்கும். இப்பிரகிருதி மாயைக்கு வேறாய் நித்தியமாய் வியாபகமாய் அருவாய் நானா பேதமாய் முற்றுணர்வுந் தொழிலுமில்லாததாய் அறிவு மாத்திரமாய் ஆன்மாக்களிருக்கும். அவைகட்கு முத்தியிலும் பெத்தத்திலும் வேற்றுமையின்று. சொரூபத்தினும் அஃதின்று (?) அனாதியிலேயே புத்தியைச் சார்ந்த (அஞ்ஞானம்) அவித்தை வசத்தாற் சுக துக்க ஞானந் தோன்றும். அதனாற் பெத்தான்மாக்களாயின. பிரகிருதி மாயையை (ஜீவான்மா) புருடனையும் பகுத்தறியும் விவேக ஞானத்தால் அவ்வவித்தை நீங்கப் புருடன் முக்தியடைவன். அதனால் ஆன்மாக்கட்கு வேறாய் ஈஸ்வரனொருவனில்லை யென்றாம்.

இதில் வழுத்திய பிரகிருதி பேதத்தறிவில்லை யென்றும் அதனாலது பகுத்தறியுந் தன்மையைச் செய்யாதென்றும், அங்ஙனம் புருடன் கூடிச் செய்விக்குமே யென்னில் அது அசுத்த மாயையின் தோற்றமாகிய காலம் நியதி கலை வித்தை அராகமென்னும் ஐந்து தத்துவங்களோடு ஆன்மாவானது கூடி

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

சப்தாதி விஷயங்களை நுகருமவதரத்துப் பஞ்சகஞ்சுகனாகிப் புரமென்னுஞ் சரீரத்திலிருத்தல் காரணமாய்ப் புருடனென்னும் பெயர் பெற்றிருத்தலினால் அவன் அறிவிப்பனென்பது குருடன் முதுகின் முடவனிருந்து கொண்டு இருவர் காலுங் கண்ணுமாக நடப்பதுபோலத் துற்பல மார்க்கமாகுமென்றும் வெளியாகும். அதனால் இவைகட்கு மேற் பொருளுண்டென்று உணரலா மன்றோ?

16. வைசேஷிக மென்பது:- ஆறு சாஸ்திரத்திலொன்றாகிய வைதிக நூலாகும். அதில் நிரீசுர சாங்கியத்தில் நிகழ்த்துகிற புருடனையும் பிரகிருதி மாயையுஞ் சேர்க்குந் தன்மையுள்ள நியதியென்பதொன்று நடுவே நின்று நடாத்தும். அந்நியதிப்பிரிவே உலகமும் உயிருமாகும். இன்னணஞ் செய்யு நியதியே பிரமத்தினியல் பென்றறிதல் முக்தியென்றாம்.

இதில் பிரமமோ அதனியல்பென்கிற நியதியோ பொருளென்று ஐயமுற ஹேதுப்படுவது மன்றி அகங்காரமே ஆன்மாவென்பதாயிற்று.

(6) பாஞ்சராத்திரம்

வேதாந்தமாகிய வர்க்கியபேத சமயம் எட்டுள்:

17. பாஞ்சராத்திரமென்பது: விஷ்ணுவினால் அவருடைய உந்திக்கமலத்திற் பிறந்த பிரமாவுக்கு ஐந்திராத்திரியளவும் போதித்ததினின் றேற்பட்ட ஒருநூலென்றாம். அதில் 24-ம் தத்துவமாகிய குணதத்ததுவத்திற்குமேல் 25-ஆம் தத்துவமாய் வாசுதேவனென்றொரு பரம்பொருள் ஆதியிலேயே அருவாய் மாயாசக்தி வடிவாய் அஞ்ஞானமில்லாத ஞானப் பிரகாசத்தை யுடைத்தாயிருக்குமென்றும், அப்பொருளினின்றும் கிருஷ்ணனும் (மன்மதன்) மகரத்துவஜனும் அநிருத்தனும் ரௌக்கிணேயனும் என நான்கு வியூகங்கள் ஜகத்தைப் படைத்தற் பொருட்டுத் தோன்றுமென்றும், அந்நான்கு வகுப்பினால் ஜடமும் சித்துமாகிய எல்லாவுலகங்களும் படைக்கப்பட்டனவென்றும், வேதந் தெரிந்த வாசுதேவனாகிய விஷ்ணு தனதிச்சையாலே பிரபஞ்சம்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

இரக்ஷிப்பது காரணமாகத் திருவுருக்கொண்டு விளங்குகையில் பிரபஞ்சம் ஆதாரங்குலைந்து அதைச் சுமந்திருந்த அனந்தனாகிய பாம்புக்கும் ஆதாரமற்ற தருணம் அப்பாம்பைத் தானே நீர்மேலாசனமாக்கி அந்நீருக்குள் ஆன்மாக்கட்கு உறக்கம் வேண்டித் தான் விழித்துறங்கிக் கிடப்பனென்றும் அந்நாள் பிரசண்ட மாருதத்தால் அடிபட்டொதுங்குண்ட ஆன்மாவாகிய அணுக்கள் விஷ்ணுவி னுந்திச்சுழியை ஆதாரமாக வந்து பொருந்துமென்றும், பின்னர் கர்ப்பமாகி "ஆகாசாத் வாயு : வாயோராக்கினி : அக்கினோ ஆப : ஆப பிருத்வி: பிருத்வி நாம் ஔஷதயா" என்னும் வேதப் பிரமாணப்படி தாமரை தோன்றி நீருள்ளமட்டும் வளர்ந்து மேலே மலருமென்றும், அதிற் பிரமா தோன்றி வாசுதேவனருளிய வேத விதிப்படி உருத்திரனைப் படைப்பனென்றும் அதனால் வாசுதேவனுக்குக் கேசவனென்கிற நாமமொன்றுண்டாயிற் றென்றும், விவரம்: கே என்கிற பிரமாவும், ச என்கிற சிவனும், வ என்கிற விஷ்ணுவில் ஐக்கியமும் தோற்றமுமா யிருக்குந் தன்மையை அந்நாமம் அறிவிக்கிறதென்றும் லோகானுக்கிரகபாலன நிமித்தம் வாசுதேவனே தசாவதாரங்களைச் செய்வனென்றும் மாயாகாரியமாகிய தேகேந்திரியாதிக ளெல்லாம் வாசுதேவன் வடிவென்றும் வேதங்களில் உறுதிப்பயனில்லை இந்தப் பாஞ்சராத்திரத்திற்றான் உறுதிப்பயனுண்டென்றும், ஆதலினால் இந்நூன்முறையே தீக்ஷைபெற்று வாசுதேவனை வழிபட்டு அவன்வடிவில் லயமாதலேமுக்தி. அது வைகுண்ட மென்றுஞ் சொல்லப்படும். அன்றி, வாசுதேவன், பிரத்தியும்நன், அநிருத்தன், சங்கர்ஷணன் என்ற நான்குமே அந்த வியூகங்களென்றும், அவற்றுள் வாசுதேவனே குணாதீதன், சத்துவ குணத்தையுள்ள பிரத்தியும்நனே அவதாரங்க ளெடுத்து இரக்ஷிக்கிறவன், இரஜோ குணமுள்ள அநிருத்தனே பிரமாவாயிருந்து சிருஷ்டிக்கிறவன், தமோ குணத்தையுள்ள சங்கர்ஷணனே உருத்திரனாயிருந்து உலகத்தை அழிக்கிறவனென்றும் அதனால் பிரத்தியும்நன் முதல் மூவரும் குணவடிவரென்றுஞ் சொல்லப்படும் இக்கருத்தாகவே வியாசருடைய பிரமசூத்திரத்திலும் விளம்பப்படும். அன்றி,

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0 In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

வைஷ்ணவாகமத்துள் குணாதீதமான (பிரம்மம்) வாசுதேவ வியூகத்தினால் தாமத குணமுள்ள (உருத்திரன்) சங்கர்ஷண வியூகமும், அதினின்றும் சாத்துவிக குணமுள்ள (விஷ்ணு) பிரத்தியும்ந வியூகமும், அதினின்றும் இராஜத குணமுள்ள (பிரமன்) அநிருத்த வியூகமும் பிறந்ததெனச் சொல்லப்படும்.

மார்க்கண்டேயம் தருமபக்ஷி ஜைமினி சம்வாதம் 4-வது அத்தியாயத்தில் அந்த நான்கு வியூகங்களையுங் கூறிய விடத்தில் சத்தாகவுள்ளதே விஷ்ணுவினுடைய மூலவடிவம், தாமத குணத்தைப் பொருந்திப் பூமியைத் தாங்கும் ஆதிசேடனாக விருப்பதே இரண்டாவது வடிவம், சத்துவ குணத்தைப் பொருந்தி உயிர்களை இரக்ஷிப்பதே மூன்றாவதுவடிவம், இராஜதகுணத்தைப் பொருந்தி கடல் மத்தியிற் பாம்பின் படுக்கைமேற் படுத்துப் படைப்புத் தொழிலுள்ளதே நாலாவது வடிவமென்று சொல்லப்படும்.

இந்த பாஞ்சராத்திர மதத்தில் வாசுதேவனை ஆதியென்பதால் அந்தமுண்டென்றும், கொண்டவடிவு மாயாசத்தி வடிவென் பதால் நிறையறிவு இன்றென்றும், மாயை அல்லவெனில் தன திச்சையாலே பிரபஞ்சமிரக்ஷிப்பது காரணமாகவெனல் பொருந்தாதென்றும், வேதந் தெரிந்தவனென்பதால் அவ்வேதம் அவருக்கு முன்னுளதாமென்றும், 3-வது வியாசத்திற் றுலக்கியபடி அவதாரங்கள் அழிந்திருப்பது மன்றி பிருகு ததீசி இவர்களாற் சாப மனுபவித்து உயிர் மாண்டும், பரசுராமன் ராமன் பலராமன் இவர்களானபோது பரமசிவனை வழிபட்டும், கிருஷ்ணனான போது சக்கரத்துக்குத் தவஞ்செய்தும், மேகவாகன கல்பத்தில் தனது இரக்ஷகத்தொழில் பலிக்கவென்று விஷ்ணுவாகிய தானே மேகமாகிச் சிவனைச் சுமந்து திரிந்தும், சிவன் அக்கினி மலையானபோது விஷ்ணு அடிதேடிக் காணாதலுத்தும் நின்றதால் வாசுதேவன் மாயா மலத்தோடு கூடிய ஜீவனென்றும், கேசவனென்பதற்குப் பொருள் சவத்தைத் தலையிலுடையவன் அதாவது: பைப்பலாதம், ஸ்காந்தம் இவைகளிற் சொல்லப்படுமாறு தக்ஷயக்கிய நாசத்தில் வீரபத்திரரானவர்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

தேவப்பிணங்களை ஹரி தலையிலேற்றி யக்கிய குண்டத்தைச் சுற்றிவரும்படி செய்த அஞ்ஞான்றேற்பட்ட பெயரென்றும், விஷ்ணு வாக்கியம்: "சர்வலோகம் அகங்கர்த்தா மமகர்த்தா மகேசுரா", "அருத்தம்: எல்லா உலகத்திற்கும் நான் கர்த்தா என் கர்த்தா மகேசுரா", "விஷ்ணுபக்தே சகஸ்ரெஷு சிவபக்தேக விசேஷதா" அருத்தம்: ஆயிரந் தாதர்க்கு ஒரு சிவனடியார் சமம் என நூலாதாரமிருப்பதால் வாசுதேவன் முழுமுதற் கடவுளன்றென்றுங் கணிக்கற்பாற்று.

விஷ்ணு மாயாமலத்தோடு கூடிய ஜீவனென்பதற்குப் பிரமாணம்: தத்துவப் பிரகாச சுவாமிகள் சைவாகமப்படியருளிய தத்துவப் பிரகாசம் பசுவிலக்கணம் 23-வது "குறித்த கீழோர்" என்ற செய்யுளில் "நிறுத்த சகலத்தோர்க ளயன்மாலே முதலாநிகழ் நரகரீறாகு நிலைவித்துப் பைவேர்" என்று வருவது காண்க. இதனால் ஆத்மாக்களை அணுத்தன்மை செய்தல்பற்றி ஆணவமென்று பேர்படைத்த அவ்வாணவமலம் ஒன்றுமட்டுமுள்ள விஞ்ஞானகலராகிய அனந்தாதி அஷ்ட வித்தியேசுரர்கட்கும், அனுசதா சிவராதி கன்மமென்னும் மலம் இரண்டுமட்டுமுள்ள பிரளயாகலராகிய 224-புவன நாயகர்கட்கும், வீரேசர் ஸ்ரீ கண்டர் முதலிய 118-உருத்திரர்கட்கும் கீழ்ப்பட்டு ஆணவம் கன்மம் மாயை யென்னு மும்மலங்களோடு கூடிய சகலராகிய நரகவுலகத்தாரோடும் ஏனைய பிராணிகளோடுஞ் சேர்ந்துள்ளவரே பிரம்மாவும் விஷ்ணுவுமென்றறியலாம். இவ்விஷ்ணுவைத்தானே முழுமுதற் கடவுளென்கிற மதமானது தக்ஷப்பிரஜாபதி யக்கிய காலத்தில் வேத விரோதமாய் ஏற்பட்டதாகும். அக்காலத்து அதை யங்கீகரித்திருந்த தக்ஷன் மரபாராகிய பிராமணரைத் ததீசிமுனிவர் கண்ணுற்று "நீவிர் எந்நாளும் உலகில் இவ்விதப் பிராமணராகவே பிறந்து வேத மார்க்கத்தைக் கைவிட்டுச் சிவனையுஞ் சிவசின்னத்தையுஞ் சிவனடியாரையுந் தூஷித்துச் செத்துச் சிவகதி சேராதுழலக்கடவீர்" என்றிட்ட சாபத்திற்குட்பட்டவரே வைணவரென்றாம். பிரமாணம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

கந்தபுராணம் - ததீசி யுத்தரப்படலம்

"பேசரிய மறைகளெல்லாம் பராபரனீ
யெனவணங்கிப் பெரிது போற்றும்
ஈசனையு மன்பரையு நீற்றொடுகண்
டிகையினையு மிகழ்ந்து நீவிர்
காசினியின் மறையவரா யெந்நாளும்
பிறந்திறந்து கதியு றாது
பாசமத னிடைப்பட்டு மறையுரையா
நெறியதனிற் படுதி ரென்றான்."

இவ்வித சாபத்திற் குட்படாதவர் யாதொரு காரணத்தால் வைணவராய்ப் பிறந்திருப்பினும் சிவ தூஷணஞ் செய்யாது சிவனை வழிபட்டுச் சிவகதி சேர்பவராவர்.

8. வைணவமென்பது:- ஆன்மாவானது புருடன். விஷ்ணுவானவர் பரமபுருடன். இப்பரமபுருடனாகிய புருஷோத்தமனுக்குப் புருடன் அடிமை. அதனாற் புருடனானவன் பரமபுருடனைக் கர்த்தாவாகக் கொண்டு தாசமார்க்கமான விசேஷண விசேஷபாவத்தால் வழிபட்டு நிற்க மரித்தபின் வைகுண்டத்தினும் அந்நெறியிலே நிற்பன். ஆதறொட்டு அந்தக் காயம் அழியாத காயமாம். அதுவே முக்தியென்றாம்.

இதில் பாஞ்சராத்திரத்திற் பகர்ந்த நியாயம் பொருந்துவதோடு காயத்திற்கு உபாதானமான கன்மத்தையும் மாயையையும் முத்தியென்று உணராதுரைத்ததாயுங் கணிக்கற்பாற்று.

வைகானசமென்பது:- உள்ளே தோற்றும் உயிராகிய சித்திரத்தைக் களங்கமாகிய மலம் மறைக்கும். அஷ்டாக்ஷரமாகிய 'ஓம் நமோ நாராயணாய' நம: என்றும், கேசவாய நம: தாமோதராய நம: பத்மநாபாய நம: ஹரியே நம: விஷ்ணுவே நம: கிருஷ்ணாய நம: மாதவாய நம: கோவிந்தாய நம: அச்சுதாய நம: பரமபுருஷாய நம: லட்சுமிகாந்தாய நம: ராமச்சந்திராய நம: என்றும் பிறவும் ஜெபித்து நாராயணனையே முக்காலமாதல் ஒரு காலமாதல் பூஜிக்க களங்க நீங்கும். அப்போது மாயா தேகத்தைமாற்றித் திவ்ய

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

தேகமாக்கி வைகுண்டஞ் சேரும்படி நாராயணனே செய்து இரக்ஷிப்பனென்றாம். நரனென்கிற பரமாத்மனால் உண்டாக்கப்பட்ட ஜலத்திற்கு நாரமென்று பெயர். அது அவனுக்கு முதலில் அயனம் என்வே யிடமாகவிருக்கிறது. அதனால் நாராயணன் என்று பெயரென்றும் பொருளாம். இவ்விதமே மனுஸ்மிருதி 1-வது அத்தியாயத்தினும், மார்க்கண்டேயம் 4-வது அத்தியாயத்தினுஞ் சொல்லப்பட்டிருக்கிறது.

இம்மதத்தில் செய்த ஜெபமும் பூஜையுங் கண்டுணர வைகுண்டத்தினும் உருவேண்டுமென்பதால், இதினுங்கன்மமும் மாயையும் முத்தியென்ற முடிவேயாயிற்று. பாஞ்சராத்திர நியாயத்தையும் பொருந்தும்.

20. ஜோதிடமென்பது:- வேதாங்கம் ஆறிலொன்றாகும். அதில் கர்ப்பாதான முதலாக உடலுண்டாவதற்கும் அவ்வுடல் நீங்குகைக்கும் ஈதாகும் ஈதாகாதெனும் முகூர்த்தத்தையும் சர்வ பூதபௌஷிய வர்த்தமானங்களையும் கரதலாமலகம்போல அறிவிக்கும் இந்நூலைப்போல ஒருநூலுமறிவியாது. இந்நூலனாதியாகும். இதையொருவர் கற்பித்தாரென்னில் அவரைக் கற்பித்தற்கும் அது முகூர்த்த விசேஷமாயிருக்கும். ஆதலால் இந்நூல் வழிக்கொண்டு நடக்கத் தீவினையின்றி நல்வினையே கூடும். இருவினைக்கீடாய் சுக துக்கங்களைக் கொடுக்கின்ற நவக்கிரகங்களைப் பூஜை செய்ய முத்தியுஞ் சித்திக்குமென்றாம். இம்மதத்தவரை நவக்கிரக வாதிகளென்றுங் காலவாதிக ளென்றுஞ் சொல்லலாம்.

இதில் பசிப்பிணியைத் தணிக்கும் ஔஷதமாகிய அன்னத்தைத் தலைமையாய்க் கொண்டு அதைப் பாகபக்குவஞ் செய்து கொடுத்த நிமித்தகாரணனை விட்டுவிடுவதென்னும் அவிவேகமே பிறக்கின்றது.

21. மாயாவாதமென்பது:- வேதாந்த நூலிலொன்றாகும். அதில் பாற்கரிய வாதத்திற்சொன்ன பிரம்மமே பாரமார்த்திகத்தில் மெய்ப்பொருள். அஃதொழிந்து காணப்பட்ட பொருளெல்லாம் (சிப்பி) இப்பியில் வெள்ளிபோலப் பொய்ப்பொருள். ஜெகத்திற்கு

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

(முதற் காரணம்) உபாதானம் மாயை. அம்மாயை பிரமம் போல மெய்ப்பொருளுமன்று; முயற்கொம்புபோலப் பொய்ப் பொருளுமன்று. மாயைக்கு வேறான பிரம்ம சொரூபம் நான். அதை வேதாந்த விவேகஞானத்தால் அறிய அர்ச்சனை தர்ப்பணம் அக்கினி காரியமாதி கிரியையெல்லாம் அக்கினியிலிட்ட காஷ்டம் அக்கினியாமாறுபோல ஏய்ந்து அசிபத ஐக்கிய முக்தியாகுமென்றாம்.

இதில் நிரீசுர சாங்கியத்தில் விளக்கிய புருட தத்துவத்தையே பூரணப் பொருளாகக் கொண்டு மேலையனுபவங்கள் குன்றி நிற்பதென்பதாயிற்று.

22. வேதாந்தமென்பது:- ஆன்மாத்தானே முதலில் ஆன்மாவாய்ப் பின்பு பரமாய் அப்பாற் பரமாநந்த சொரூபமாயாகும். அதனை ஆன்மா கூடியறியுங் கருவிகள்: பிருதிவியாதிபூதம் 5, சுரோத்திராதி பொறி 5, சப்தாதிபுலன் 5, வாக்காதிகன்மேந்திரியம் 5, மனாதிகரணம் 4, ஆக 24-ம் அவஸ்தையாகிய ஜாக்கிரம் சொப்பனம் சுழுத்தியென 3-ம் அச்சுழுத்திமேல் துரியமும், அதில் துரிய விலாசமும், காலபரதுரியமும், அதன் மேற் பரவிலாசமும் அதன்மேற் பரதுரியமும் அதன் மேற் சுகவிலாசமும் அதன்மேல் துரியாதீதத்தில் புலனற்ற பாழும், அவ்விலாசமாகிய ஆத்ம தரிசனமும், போதமற்ற பாழும், அவ்விலாசமாகிய பர தரிசனமும், சொல்லற்ற பாழும் அவ்விலாசமாகிய சொரூப தரிசனமுமான மூன்று சூனியமுங் கடந்த விடத்தே அகார, உகார, மகாரமாகும். அதற்கு மேலாக விளங்கப்பட்ட சத்தியம், ஞானம், அனந்தம், ஆநந்தமென்ற தரிசனங்களாகும், அங்ஙனமே மௌன முத்திரை. அம்மௌன முத்திரையென்று கண்ட கருத்தையும் அறவேவிட்டுச் சும்மா விருந்தபடியே யிருப்பது முக்தி. இவை யெல்லாமாய் நின்ற பொருளானது: குருவினால் மும்முத்திரை மூலம் அறிவிக்கப்பட்ட சுகாதீதமாகவுள்ள அறிவினது நிலைமையே யென்றாம்.

இதில், மூன்றாம் பாழிற் கருத்துக் கெட்டுவிட்ட தென்பதால் முக்திப் பயனென்பதுமின்றி முக்திபெற்றது எவரென்பதுமின்றி

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

யொழிவதொடு பிரபாகரத்திற் சொன்ன மிகுநித்திரையைத்தானே முக்தியென்றும், நிரீசுரசாங்கியத்தில் விளக்கிய புருட தத்துவத்தைத் தானே கர்த்தாவென்றும் கொள்ளலாயிற்று.

23- துவிதவாதமென்பது: மத்துவாசாரியராற் செய்யப்பட்ட மத்துவ பாஷிய மென்னும் நூலிற் குரியதாகும். அதில் ஆன்மாவானது சரீரத்திலே ஓரணுவாயிருக்கும். அஃது சமாராதனை வழிபாடான புண்ணியங்களாலே பாவந் தொலைத்து உடல் விட்டவுடனே விஷ்ணு கணங்களாற் கொண்டு போகப்பட்டு மலநீக்கிச் சுத்தி செய்வதற்காக வைகுண்டத்தயலிலுள்ள விரஜா நதியின் முழுகுவித்துப் பின்னர் வைகுண்டத்திற் சேர்க்கப்படும். அப்போது சங்கு சக்கர மேந்தி விஷ்ணுவினெதிரே அவ்வான்மாவு மிருப்பன். அதுவே முக்தியென்றாம்.

இதில் சாயுஜ்ய மற்ற யோகச் சரியை முக்தியையே சிரேஷ்டமென்றும், பாஞ்சராத்திரத்திற் பேசும் விஷ்ணுவையே பரம்பொருளென்றுங் கொள்ளலாயிற்று.

24. அத்துவிதவாத மென்பது: பிரம்மமென்ற ஒரு பொருளே ஆன்மாக்களாய் அனாதியான வுடலைப்பற்றி நிற்கும். அப்படிப்பட்ட ஆன்மாவானது: தான் பிரம்மமான தன்மை கண்டகாலை கேசவாய கேசவாயவென்று வணங்க நான் பிரம்மமென்னும் 'அஹம்பிரம', மாகும் என்றாம். இக்கருத்து நீலகண்டாசாரியர் செய்த நீல கண்ட பாஷியத்திற் கூறும் முடிவுக்கிணங்கி இராமாநுசாசாரியர் செய்த இராமாநுச பாஷியத்திற் சொல்லப் படுகிற விசிட்டாத்துவிதத்தையும் பொருந்தும். விசிட்ட மென்பது சேர்க்கை. விசிட்டாத்துவித மென்பது சேர்ந்த தன்மையினால் ஒன்றெனுங் கொள்கை யென்றாம்.

இந்த அத்துவித வாதத்தினும் பாஞ்சராத்திரத்திற் சொல்லும் விஷ்ணுவையே முதற் கடவுளென்பதாயும், பிறவும் பிரம்மமென்பதாயுங் கொள்ளலாயிற்று.

ஈண்டு விளக்கிய புறச்சமய பேதம் 24-ல்; 1-முதல் 8-வரையுள்ள மதஸ்தர் வேதநிந்தகரும்; (நிரீசுரவாதி) நாஸ்திகரும்; ஆசாரம்,

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

தர்மம், முக்தி நியமம் என்பவைகளில்லாதவரும்; 9 முதல் 16 வரையுள்ள மதஸ்தர் வேதவுடன் பாட்டால் வேதமும் கர்மமுமே தெய்வமென்கிற நாஸ்திகரும்: முடிவான முக்தி நியமமில்லாத வரும்; 17-முதல் 24-வரையுள்ள மதஸ்தர் வேதாந்த வாக்காகிய பேதகரும், முடிவான முக்தி நியமமில்லாதவருமாவர். 20-21-22 இந்த மதஸ்தரையும் நிரீசுரவாதியராகவே கொள்ளற் கிடமுண்டாகிறது.

இனி உட்சமயத்தைத் துலக்கக் கடவேம். அஃது சைவம், பாசுபதம், வாமம், பைரவம், காளாமுகம், மஹாவிரதம் என ஆறு வகையாகும். இவ்வாறு வகையில், சைவமானது : சுத்த சைவம், அசுத்த சைவம், மிச்சிர சைவம், சித்தாந்த சைவம், அனாதி சைவம், அவாந்தர சைவம், வேத சைவம், அனுசைவம், ஆதி சைவம் என ஒன்பது பேதமும்; பாசுபதமானது : பாசுபதம், சூரியவாதம், சந்திரவாதம் என மூன்று பேதமும்; வாமமானது: வாமதந்திரம், மந்திரவாதம், இயந்திரவாதம், ஔஷதவாதம், கர்மவாதம், அத்து விதவாமம், துவிதவாமம், மிச்சிரவாமம், வாம சித்தாந்தம் என ஒன்பது பேதமும் ஓரொன்றான பைரவமும், காளாமுகமும் மஹாவிரதமுமாகும்.

இங்ஙனம் உட்சமயம் அறுவகையும் அவற்றின் பேதமுமான இந்த 24. பகுதிகளின் தீர்மானத்தையும் ஈண்டு விவரித்து விளக்கி நிற்பாம்.

(1) சைவம்

சிவசம்பந்த மென்றாம். அதாவது :- சிவத்தொடு ஆன்மா சேருவதெனப் பொருளாம். இச்சைவ பேதம் ஒன்பதுள்,

1. சுத்த சைவ மென்பது :- ஞானம் இரண்டு வகைப்படும். அவற்றுள் ஒன்று காமிகாதி 28. ஆகமமாகிய தந்திரத்தின் உண்மை ஞானமாகும். ஒன்று அதனையறிவிக்கும் மிருகேந்திராதி 207- உபாகமமாகிய தந்திரபேதமாகும். அதனின் கருத்து யதார்த்தமாகிய பதி பசு பாச மென்கிற திரிபதார்த்தங்களில், பச்=பந்தித்தல், உ=செயப்படுபொருள் விகுதி. அதனால் தன்னை அனாதியே பந்திக்கக்கூடிய பாச சம்பந்தம் பெற்றுப் பசுவென்னும் பெயருடைய அனாத ஆன்மாக்களானவை அனந்தமாகும். பச்=பந்தித்தல், அ=கருவிப்பொருள் விகுதி.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

அதனால் ஆன்மாவைப் பந்திக்கக்கூடிய தன்மையுடைத்தாய்ப் பாசமென்னும் பெயருடைய அனாதபாசமானது பூத முதல் நாத பரியந்தம் 36 தத்துவமாகும். பா=காத்தல். தி=வினை முதற் பொருள் விகுதி. அதனால் ஆன்மாக்களைக் காக்கிறவ னென்னும் பெயரிய அனாதபதியானது இலயம் போகம் அதிகாரமென்னு முறையில் உருத்திரன் மஹேசுவரன் சதாசிவனென்றாகும். அந்தச் சதாசிவனே பதி. அப்பதி தானே தத்துவபேதமாம். அதற்குப் பஞ்ச சாதாக்கியமென்று பெயர். விவரம்: பரமான பொருளாகிய சிவ சாதாக்கியமும், தழற்பிழம்பான வடிவாகிய அமூர்த்தி சாதாக்கியமும், ஒரு முகமும் மூன்று கண்ணும் இரண்டு கையும் இரண்டு காலும் படிக நிறமுமாகிய மூர்த்தி சாதாக்கியமும், நான்கு முகமும் எட்டுக் கையுமுள்ள விக்கிரகமான மஹேசுர ரூபமாகிய கர்த்திரு சாதாக்கியமும், இலிங்கமும், பீடமுமாய் பிரபஞ்சமெல்லாம் பிண்டீகரிப்பதாகிய கன்ம சாதாக்கியமு மாகும். சிவ சாதாக்கியம் அமூர்த்தி சாதாக்கியத்திலும், அமூர்த்தி சாதாக்கியம் மூர்த்தி சாதாக்கியத்திலும், மூர்த்தி சாதாக்கியங் கர்த்திரு சாதாக்கியத்திலுமாகக்கூட ஐந்து முகமும் பத்துக் கையுமாகும். அஃது கன்மத்திலே யிருக்கும் பரமாகிய ஜடாத்துவாவை அவ்வடிவாகக் கொண்டிருக்கும் சதாசிவமே கீழ் உருவமும் மேல் அருவமுமாய் விரவிய ரூபாரூபமாகும். அந்தச் சதாசிவப் பொருளைத் தெய்வமென்றெண்ணி உயிர்க்கொலை, ஊன் புசிப்பு, களவு, பொய், கள், விபசாராதி மஹாபாதகங்கட்கு விலகி விதிப்படி விபூதி உருத்திராக்ஷ முதலிய உருத்திர சின்னந் தரித்து உள்ளும் புறம்பும் பூஜை புரியில் அதுவே முக்தி யென்றாம்.

(சாதாக்கியம் = சதாவாகச் சிவபாதத்தை யுடையது).

இதில் சதாசிவமே பொருளாயினும், சாயுஜ்ய நெறியைத் தருவதற் கேதுவாகியதும் தானே சாயுஜ்ய மல்லாததுமான குற்றமற்ற அர்ச்சனையாதி கிரியா மார்க்கத்தில், சரியை முற்றிற் சாலோகமும், கிரியை முற்றிற் சாமீபமும், யோகமுற்றிற் சாரூபமுமாகிய பத முத்தியைத் தானே முத்தியாக் கொண்டதன்றிக் கிரியைகளால் எட்டிப் பிடிக்கப்படாமற் சிவஞானமுற்றி அதனால் வாய்க்கின்ற அவாங் மனோகோசரமாகிய சாயுஜ்ய மென்னும் பரமுத்தியைக் கொண்டதில்லை யென்பதாயிற்று.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

2. அசுத்த சைவமாவது: யாவுஞ் சுத்த நெறிபோலும் ஆனால் பதி நிலைமைமட்டும் பிரம விஷ்ணு ருத்திர என்ற மூன்றுமொக்கு மெனக் கொண்டு நீக்கமறப் பூஜிக்க முக்தியென்றாம்.

இதில் மூன்று முதலும் ஒன்றென்பதால் அம்மூவர் பதிகளில் முத்தித்தானம் பிரம்மலோகமா? வைகுண்டமா? கைலைமலையா? அல்லது மூன்று தானமுமாவென்று யோசிக்க இடமுண்டாவதில் அதை நன்கு விசாரிக்க ஒன்றும் நிலைபெறாததாகும். அதனாற் பதமுத்தியும் இல்லை யென்றே வெளியாம்.

3. மிச்சிர சைவமென்பது :- வேதம், அனாதி, ஆகமம் ஆதியென்றெண்ணிப் பொது நூலாகிய அவ்வேத நெறி நிலைமையாக ஆசாரம் விவகாரம் பிராயச்சித்த மென்பவைகளையும் மந்திரம் ஜெபித்தலையும் ஆகமநெறி நிலைமையாகத் தந்திர கயிங்கரியங்களையும் ஒக்கக் கொண்டு நிற்பதுவே முக்தியென்றாம். (மிச்சிரம் = கலப்பு)

இதிலுங் கிரியா மார்க்கமே முடிவென்று காணப்படுதலால், பதமுத்தி பெறுவதென்பதேன்பதேயன்றிப் பரமுத்திபெறுவதில்லை யென்பதாகும்.

4. சித்தாந்த சைவமென்பது:- சுத்தமாயையிற்றோன்றிய சுத்தவித்தை ஈசுரம் சாதாக்கியம் சத்தி சிவமென்னும் சிவதத்துவங்களைந்தில் சத்திதத்துவமொன்றுஞ் சத்திரூபம். ஏனைய நான்குஞ் சிவரூபம். சுத்தா சுத்தமாயையிற் புருடதத்துவமே ஆன்மாவென்றாம்.

இதில் சித்தாகிய ஞானத்தைச் சொரூபமாகவுள்ள சிவனைப் பாசங்களாகிய தத்துவங்களைச் சொரூபமாகவுள்ளவனென்றும், ஞானமும் அஞ்ஞானமுமல்லாச் சதசத்தான குணத்தைச் சொரூபமாகவுள்ள ஆன்மாவைப் பஞ்சகஞ்சுகனான புருடதத்துவமென்றும் பொருளறியாது கூறியதாற் பாசஞானமும் பதமுத்தி யரிதென்பதுமாம்.

5. அனாதி சைவமென்பது: சூக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரியென்னும் நாலுவாக்குமே பிரம்மபேதம். இதன் முடிவான அறிவும், அதன் முதலாகிய ஓங்காரமுமே உண்மைப் பொருளென்றாம்.

Center for Shaiva Studies, Pondicherry

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

இதில் சுத்தமாயையிற் றோன்றிச் சர்வான்மாக்களுக்கு முண்டாகிய தொழிலை யெழுப்புவித்து நிற்கிற விந்து தத்துவத்தினின்று முண்டாகிற வாக்குகளாகிய பாசக் கூட்டங்களைத் தானே பொருளென மதித்ததால், இதுவுஞ் சித்தாந்த சைவப்படி பாசஞான மென்பதேயாகும். அன்றிப் புறச் சமயமாகிய சப்தப்பிரம்மவாத முடிவையும் பொருந்தும்.

6. அவாந்தர சைவ மென்பது: மூலாதாரந் தொட்டு நாபிவரை பொன்மயமான பிரமவொளியாகவும், அது தொட்டுக் கண்டம்வரை கார்மயமான விஷ்ணுவொளியாகவும், அது தொட்டுப் புருவம்வரை அக்கினிமயமான ருத்திரவொளியாகவும், அதுதொட்டு உச்சிவரை தூமமயமான மஹேசவொளியாகவும், அது தொட்டுத் துவாதசாந்தம்வரை படிகமயமான சதாசிவ வொளியாகவுங் கண்டு பூஜிக்க முக்தியென்றாம்.

இதில் பர முக்தியில் ஆத்மாவுஞ் சிவனும் ஒன்றென்னும் ஐக்கியச் சொல்லை அல்லவாக்கி யோக முக்தியாகிய பதமுக்தியைத்தானே முக்தியென் றொவ்வாதுரைக்கலாயிற்று.

7. பேத சைவமென்பது: சூரிய மண்டலம் சந்திர மண்டலம் அக்கினிமண்டலம் சக்திமண்டலம் வித்தியா மண்டல மென்னப்பட்ட கீழ் மண்டலங்களிற் பிரம விஷ்ணு ருத்திர மஹேஸ்வர மென்னப்பட்ட உருவடிவுகளும், விந்து நாதபராபர பரமென்னப்பட்ட அருவடிவுகளும் இவ்வெட்டுக்கு நடுப்பட்டுள்ள சதாசிவமும் அந்தச் சதாசிவப்பொருளே யென்றுணர்ந்து அவருடைய ஈசானாதி ஐம்முகங்களில் நான்குமுகங்களில் ஐந்தைந்தும் பஞ்சம முகத்தில் எட்டுமாகத் தோன்றிய காமிகாதி 28-ஆகமங்களின் தந்திர ஞான விதிப்படி மந்திர முதலிய ஆறத்துவாக்களிலுங் கட்டுப்பட்டிருக்கிற சஞ்சிதமாகிய புண்ணிய பாவங்களைப் போக்கத் தக்க தீக்ஷையாலே பவித்திரனாகி அக்கினியிலே பூசை செய்ய ஆன்மாவுஞ் சுத்தனாவன். அதனான் முக்தியென்றாம்.

இதில் முக்திமார்க்கத்திற்கான ஆத்ம சுத்தியைத்தானே அரிய முக்தியென் றதிர்க்கலாயிற்று.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

8. அநுசைவ மென்பது:- உருவ மெல்லாம் அழியும். அதனால் சிவன் கொண்ட வடிவெல்லாம் அவன் வடிவென்று. வடிவங்களை யர்ச்சிக்கு முறைமை விட்டுச் சைவசித்தாந்த முறையாய் உளத்தே யர்ச்சிப்பதே முத்தி யென்றாம்.

இதில் ஆன்மாக்களை யிரக்ஷிக்கும் பொருட்டுச் சிவன் கொண்டவடிவங்களை யெல்லாம் உதாசனம் பண்ணி அவ்வடிவிற்கு முதலான சுத்தசூனிய அறிவுயிரைத்தானே முதற்பொருளாகக் கருதி உட்பூஜை செய்வதை மோக்ஷமென்று கொள்வதால், அறிவுக்கு மரணமின்றென அவ்வறிவிருக்கும் உருவை வெட்டினது போலவும் அருண்மூர்த்தியாயிருந்து தனக்குபதேசித்த தேசிகரது திருவடிக்கமலங்களை வணங்காது அவரதுவுயிரை வணங்குவேனென்றது போலவுமுள்ள ஒவ்வாநடையை உறுதியென்பதாயிற்று. இம்மதத் துணிவு பிற் பேசப்படும் புறப்புறச் சமயமாகிய துலுக்கர் மதத் துணிபை யொக்கும்.

9. ஆதிசைவ மென்பது:- பூதமுதல் நாதபரியந்தமான 36-தத்துவங்களும் தனு கரண புவன போகங்களாய்ப் பல வுலகங்களாய்த் திரண்டுள்ள குண்டைகையாகிய பீடமாகவும் அது பிந்துவடிவாகவும் அதனிடை அருவானவுயிர்கள் கோளகையாகிய லிங்கமாகவும், அது நாதவடிவாகவு மிருக்கும்; அதைத் தியானஞ் செய்வதே முக்தியென்றாம்.

இதில் சக யோகத்தைத் தானே சிவஞான சாயுஜ்யமென்று பிறழ்ந்து கொள்ளலாயிற்று.

(2) பாசுபதம்

அதிமார்க்க நூலிலொன்றாகும். இந்தப் பாசுபதபேதம் மூன்றனுள்;

10. பாசுபத மென்பது: பசுவாகிய வுயிர்தானே எங்குநிறைந்த பொருளாம். அப்பொருள் எல்லாவிடத்து முள்ள தென்றுணர்ந்து சிவனுடைய திருப்பணிகளாகிய சரியை கிரியைகளைத் தள்ளிச் சிகை உபவீதங்களைந்து, ஜடை புனைந்து, முத்தண்டுங் கரகபாலமுங்கொண்டு கௌபீனதாரியாய்த் தவம் புரிவதே முத்தியென்றாம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

இதில் பசுவானது பாசநீங்கிப் பதியோடு கூடத்தக்க சாயுஜ்ய முக்தியை விடுத்துப் புறச்சமயமாகிய மாயாவாத மார்க்கம் போல ஆன்மவாதத்தைக் கைக்கொள்வதென்பதாகும்.

11. சூரியவாத மென்பது:- மூன்றுலகையும் விளக்குவிக்கும் மண்டலத்தையுடையனாய் மும்மூர்த்திகட்குங் கண்ணும் இடமுமாய் எல்லாவுயிர்கட்கும் விழிப்பும் ஒடுக்கமுஞ்செய்து அந்தரத்துலாவுபவனாயுள்ள சூரியனை விழிக்குள்ளும் புறம்பும் தரிசிக்க முத்தியென்றாம்.

இதில் தக்ஷப்பிரஜாபதி யக்கியத்தில் சிவனையொழிந்து அவியுண்ணச் சென்ற ஞான்று வீரபத்திரதேவர் அறைந்த அறையாற் பல்லும் விழியும் உகுப்புண்ட ஜீவனாகியும் அத்திரிக்குப் புத்திரனாகியுமுள்ள சூரியனைத் தானே பரம்பொருளாய்க் கொள்வதென்பதாயிற்று.

12. சந்திர வாத மென்பது: எவ்வுயிர்க்குங் குளிர்ச்சியைத் தந்து தேவர்கட்கு மருந்தினுமரிய அமுதத்தை நல்கி வந்திப்பார்க்குத் தோன்றினவளவிற் சுகத்தை யுதவி இந்திராதியர்க்கு மேலானவனாய்ச் சிவனுக்குக் கண்ணானவனாயுள்ளான் சந்திரனே யென்றறிந்து அவனைத் தொழுது அவனமுதுண்பார்க்கு முக்தியென்றாம்.

இதில் அத்திரியின் நேத்திரத்திற் றோன்றிய புத்திரனாய்த் தக்ஷப் பிரஜாபதி மகத்தில் வீரபத்திரதேவர் திருவடியாற் றுவையுண்டவனாய், நாடோறுந் தேய்ந்து வளர் கலையுள்ளவனாயுள்ள சந்திரனென்னும் ஓர் ஆத்மாவையே பெரிய பொருளாய்க் கொள்வதென்ப தாயிற்று.

(3) வாமம்

இவ்வாம பேதம் ஒன்பதில்;

13. வாம தந்திரமென்பது:- ஒன்பதுவகை யாமளத்தினும் பிரதானமாகிய யாமளமென்னும் நூனெறிப்படி யாவத்வடிவுஞ் சத்திவடிவே. அச்சத்தி பராசத்தி முதற் கிரியாசத்தியீறாக ஆயிர பேதமாம். அகரமுதல் ஐம்பத்தொன்றும், அவற்றின் பேதமான எழுத்துக்களும், அறிவும், அறிவிப்பதும், ஐங்கிருத்தியங்களும்,

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata

அருளென்பதும், ஹரனுக்கு உடம்பு உயிர் அறிவாவதும் அச்சக்தியேயன்றி மற்றொன்றில்லை. அதைத் தரிசிக்க முக்தியென்றாம். இந்த மார்க்கத்தைத்தானே சாக்தமத மென்றும் அதற்குரிய நூல் சாக்தேய மென்றும் அந்நூற் சக்தி தத்துவத்தில் வசிக்கும் ஓர் ஆத்மாவினாற் றுலக்கிச் செய்யப்பட்ட தென்றுஞ் சொல்லப்படும். அல்லாமல் பஞ்ச தத்துவம் என்னும் சாங்கம் ஐந்து. அதாவது, கொலைசெய்த இறைச்சி, மீன், சாராயம், ஸ்திரீ சம்பாஷணை, புணர்ச்சியபிநயம் இவைகளைச் சாதிக்கு முண்மையால் பிசாசபதத்தைத் தரத்தக்க வழியைப் போதிக்கும் கௌளம் யாமளம் முதலிய நூல்களென்று பெயர் விளங்க மச்சேந்திர நாதராதி மானுட சித்தராற் செய்யபட்டனவு முண்டு. சாற்றிய சாங்கம் ஐந்தும் சிவ சக்தி யாராதனையில் விலக்கப்பட்டன.

விளக்கிய வாமதந்திரத்தில் அக்கினியிற் சூடுபோற் சிவத்தொடு பிரிவற்றுள்ள திருவருட் சிவசக்தியைப் பிரித்தும், சிவத்தையன்றிச் சக்திக்கு யாதொரு செயலு மில்லையென்றுணரா அறியாமையைக் கைக் கொண்டும் நிற்பதென்பதாயிற்று. இவ்விரகசியம் விளங்கற் பாலதாய் 1வது வியாசம் 12, 14, 15, 3-வது வியாசம் 32-இந்த வினாவுத்தரங்களிற்றுலக்கி யிருக்கிறது.

14. மந்திரவாத மென்பது:- நம:, சுவாஹா, வௌஷடு, வஷடு, ஸ்வதா, பட், உம், என்று முடியும் எழுவகை மந்திரங்களும் ஒன்று கோடியாய் அவைகளே மூர்த்தியாய்ப் பிரபஞ்சத்தைப் பிரேரித்து நிற்கும். இவைதானே அறிவான பொருளென்று அதனை யறிந்து ஜெபிப்பதே முக்தியென்றாம்.

இதில் யாதொரு கர்த்தாவினது நாமமாகிய மந்திரத்திற்குக் கர்த்தாவாயுள்ள கடவுளைக் கருதி முக்தி பெறுவதொழிந்து அந்நாமத்தை மட்டும் ஜெபித்து முக்தி பெறுவதென்னுந் தண்ணிய முடிவு பிறக்கின்றது.

15. இயந்திர வாதமென்பது: - எண்ணிறந்த மந்திரங்களும், எண்ணிறந்த தந்திரங்களும், எல்லாவுயிர்களும், வசிய முதலிய அஷ்ட கர்மங்களும், அணிமா முதலிய அஷ்ட சித்திகளும் இயந்திரத்தாலுண்டாகும். ஆதலால் அஃதல்லது வேறு பொருள் இல்லையென்றாம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

இதில் காம நெறிக்குரிய அஷ்ட கர்மங்களையும் அவைகட்குரிய அஷ்ட சித்திகளையுமே நிரபேட்சா பிரகாசமான சிவஞான மோக்ஷமென மருண்டு கூறுமுடிவு தோன்றுகின்றது.

16. ஔஷத வாதமென்பது:- வீழிச மூலம், நூறாண்டு வேம்பு, செங்கற்றாழை, செம்முள்ளியாதி ஓடதிகளையும், அதற்கான மற்றப் பதார்த்தங்களையும் இடித்துத் துகளாக்கி நாற்பது நாட் கொள்ளக் ககனத்திற் கமனிக்கலாம். மீட்டும் நாற்பதுநாட் கொள்ளச் சித்தியாகும். அதுவே நித்தியத்துவம். அதுவே முக்தியென்றாம்.

இதில், தின்ற ஔஷதம் முக்தி தருவதோ? தின்று சாரமுற்ற உடல் முத்தி தருவதோ? அல்லது இரண்டுஞ் சேர்ந்து முத்தி தருவதோ? என்னும் ஆசங்கைக் கிடனாவதுமன்றி ஆகமத்திற் கூறும் காய கற்பமென்னும் ஔஷதங்களின் மகிமையாற் சின்னாள் அதிகமாய் உயிரோடிருக்ககூடிய தன்மையைத் தானே நித்திய தத்துவமென்று ஓராதுரைத்ததைக் காண்கலாம்.

17. கர்மவாதமென்பது:- நல்வினை தீவினை யென்ற இரண்டின் உடன்பாடாகிய பேறு, இளமை, இன்பம், பிணி, மூப்பு, சாக்காடு என்னும் ஆறும் அனாதியே கருவிலே யுள்ளதாய் வரும், அப்படி வரற்கு அனாதியிலே செய்யப்பட்ட கர்மங்களே காரணம். அதனால் ஊழை நீக்கற்கு ஒரு கர்த்தாவாலுமாகா. அஃதனேக கோடி கற்பங் கூடினும் அனுபவித்தாலன்றித் தீரா. இதுவே விதியென்று தானாய் முயற்சி செய்தலும் தானாய்ச் சோம்புற்றிருத்தலுமின்றிச் சிந்தை நினைத்ததைச் செய்துவருதன் முக்தி யென்றாம்.

இதில், சுத்தியாற் செம்பிற் (களிம்பு) காளித மொழிதல் போலச் சிவஞானத்தால் நீங்கும் கர்ம மலத்தை நீங்கா தென்றும் அறிவற்ற ஜடமாகிய பண்டைக் கர்மமானது ஊட்டுவிக்குங் கர்த்தாவின்றித்தானே செய்தவனை யுணர்ந்து முக்தி கொடுக்கு மென்றுஞ் சொல்லும் மூட முடிவு பிறக்கின்றது.

18. அத்துவித வாம மென்பது :- பதியும் பசுவும் பாசமாகிய பிரபஞ்சமும் ஞானமாகிய சக்தியேயன்றி வேறொன்றில்லை யெனுந் தெளிவான விவேகம் வந்துளார்கள்;

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

கள்ளருந்தினாற்றானென்ன, மாமிச முண்டாற்றானென்ன, பிராமணர் நீசர் இவரில் எவரோடு கூடி கலந்தாற்றானென்ன, ஒன்றுந் தோஷமின்று; யாவும் சக்தி மயமேயாம் என்றாம்.

இதில், வைதிகத்திலுஞ் சைவத்திலுந் தள்ளுண்ட அகிர்த்திய ஆபாசங்களைத் திருவருட் சிவசக்திக்கு முறை பிறழ்ந்து சுவாதீனப் படுத்துவதோடு வாம தந்திர மதக் கருத்தையே பொருந்துவதாகும்.

19. துவித வாம மென்பது:- ஆத்மாவும் ஞானசத்தி போலச் சுத்த சத்தியேயாம். ஆனால் ஆத்மாவை மலம் பந்திக்கும். அதற்குச் சத்திபேதங்களை வழிபட்டு அம்மலத்தை நிஷேதிக்கவேண்டும். அன்னணம் நிஷேதிக்கில் தானுமந்தச் சக்தியனைய எல்லாஞ் செய்ய வல்லதாம். அதுதானே முக்தி யென்றாம்.

இதில், தத்துவப் பிரகாசம். 2-ஆம் சூத்திரம 3-வது தூக்கு

"ஆன்மாவுஞ் சத்திபோற் சிவன்சத் தியாகு
மதனுக்கு மலமுளவங் கதுதான் நீர்ந்தாற்
றானந்தத் தொழிலெல்லாம் வல்ல தாகித்
தலமேலிற் சேருமெனுந் துவிதவா மிக்கு
வான்வாழும் பதம்வாரா விடாகினிகள் பூத
வகையிலொன்றா கிப்பலிகொண் டிறந்து போகு
மேன்ஞான மறியாது பாதா ளத்தில்
விழுஞானந் தேடுமோ விதியலக்கா ணிதுவே."

என்றுணர்த்துகிற பிரகாரம் புண்ணிய பாவங்களால் இலபிக்கின்ற (சுவர்க்கம்) ஊர்த்தலோக போக வாழ்வு மின்றி பூதப் பிரேத பைசாசு, குய்யர், சித்தர், வித்தியாதரர் என்னும் இவர்கள் பதங்களிற் சின்னாட் பலிதேடியுழன்று, பின்னர் பாதாளத்தில் விழற்கேதுவாகிய ஹீன ஞானத்தைப் போதிக்கப்பட்டதேயன்றி மேலான ஞானத்தைப் போதிக்கப்பட வில்லையென் றுணரலாம். இவ்விதி வேதாகம விதியுமன்று.

20. மிச்சிரவாம மென்பது:- சக்தியென்பது: அரிய சிவனுக்கும் அறிவு உடம்பு கருவிகளாயிருக்கும். அவ்வாறே விஷ்ணு பிரம்மாக்கட்கும் தேவர் மனிதர் முதலிய யாவர்க்குமிருக்கும். அத்தகைய சக்தியைத் தானே நியாசம், அனுஷ்டானம், பூஜை, ஹோமம், ஜெபம், பால்,

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பூமணம், மது, நறவு இவைகளாற் றர்ப்பண முதலிய சக்தியாகவே சிவலிங்கத்தையுந் தியானித்துச் செய்ய முக்தியென்றாம்.

இதில் குறிகுணமற்று மனவாக்கிறந்த பொருளாயுள்ள அதீதச் சிவனைக் காணினுங் கருதினும் அங்குத் தோற்றமும் ஒடுக்கமுமாகவுள்ள சக்திபேதங்கள் வேண்டுமென்னுங் கருத்துக் கொண்ட தென்பதாகும்.

21. வாமசித்தாந்த மென்பது:- ஆதார சக்திமுதற் பராசக்தி யீறாகவுள்ள சக்திகளெல்லாம் அனுக்கிரக சக்திகளேயாம். அவைகளெல்லாம் பராசக்தியின் றோற்றம். செவ்வரத்தமலர், ஆதித்தன் செம்மணி யென்றொளிரும் அப்பராசக்தியினுடைய செவ்விய பிரகாசத்தைத் தரிசித்து ஒன்றுபடன் முக்தியென்றாம்.

இதில், நிறைவாய் நிற்குஞ் சோதிப் பொருளை ஒரு வடிவிலேயாக்குந் தன்மை காணப்படுவதால் அதற்கு இறுதியுண்டாமென்றும், நாயகமற்றதாய் ஆகுமென்றும் உணரற்பாற்று.

(4) பைரவம்

22. பைரவ மென்பது: அஷ்ட பைரவர்கட்கும் அதிஷ்டான தலைவனான ஆதிபைரவ மூர்த்தியே எவ்வுருவுக்கும் முதல்வர். அவர் ஐமுகச்சிவனா லுண்டானது தொட்டு ஆதிசிவனே அன்னணமுண்டாயினர். அவர் பிரம்மாவின் நடுத்தலையை நகத்தாற்கொய்து கரத்தேந்திய கபாலத்தைச் சுத்த பாத்திரமென்றுள்கி அதிற்றானே (பிக்ஷை) ஐயமேற்குங்கால் அஃது நிறையாமை கண்ட விஷ்ணுவானவர் யான் நிறைப்பலென்று நெற்றி வியர்வையை அதில்விடக் குனிந்தவளவில் சூலத்தால் நெற்றியிற் குத்தி உதிரத்தைக் கபால நிறையவேற்றார். அதனாலுயிர்சோர்ந்துவிழும் அவ்விஷ்ணுவைச் சூலத்தாற் குத்திக் (பிணம்) களேபரமாக வேந்தினார். அத்தகைய பைரவரே அஷ்டமூர்த்தியாயும் அனந்தகோடி பைரவராயும் விளங்கித் தமதாணையை எவ்விடத்துஞ் செலுத்தி எவ்வுயிர்க்கும் உயிராயிருப்பர். அவரைப்போல இரத்த பானஞ்செய்து வீரதத்துவங் குன்றாது அவன் தானாயிருத்தல் முக்தியென்றாம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

இம்மதம் அதிமார்க்க நூலிலொன்றாகிய காபாலிகத்திற் சொன்னபடி தீக்ஷைபெற்றுத் தினந்தினம் பச்சைக் கொடியொன்று பிடித்துக் கொண்டு காபாலியாகிய பைரவரைப் போல மனிதர் தலையோட்டிற் பிக்ஷை யேற்றுண்டு திரியுங் காபாலிக மதத்தையும் பொருந்தும்.

சாற்றிய பைரவமதத்தில் சுத்த மாயையின் றோற்றமாகிய சிவதத்துவம் ஐந்தில் (மறைப்பு) திரோபவத்திற்கிடமாகிய ஈசுர தத்துவத்தைப் பொருந்தாநின்ற மஹேசுரனளவத்தனையாய் நிறுத்தத் தக்க தாழ்ந்த பதவியைத்தானே மேலானதென்று கொள்வதென்ப தாயிற்று. இதிற் குற்றமற்ற பதமுத்தியும் வாய்க்கா.

(5) காளாமுகம்

23. காளாமுக மென்பது:- அஷ்டமி, சோமவாரம், சிவராத்தரி, தக்ஷணாமூர்த்தி விரதம் முதலிய அனுஷ்டிக்க அஞ்ஞானம் நீங்கும். அன்னவாறு நீங்கவே நக்ஷத்திர வொளி பானுவொளியோடு கலந்ததுபோல் ஆத்மப் பிரகாசம் சிவப்பிரகாசத்தோடு கூடும்; அதுவே முக்தி யென்றாம்.

இதில், ஆத்மாவோடு கூடிய அஞ்ஞானத்தை நீக்கக் கூடாததும் கன்மத்தை நீக்கக்கூடியதுமான விரததவங்களைத்தானே அரிய முக்திக்கறுதியென்று கொண்டதாகவும் நக்ஷத்திர வொளியானது பானுவொளியில் மறைந்த தல்லது அவ்விருபொருளும் ஒன்றுபட்டதில்லையென்றும் எண்ணறற்பாற்று.

(6) மஹா விரதம்

அதிமார்க்க நூலொன்றிற்குரியது.

4. மஹாவிரத மென்பது:- இலிங்கமே உயிராகக் கொள்ளப்படும். அது கைவிட்டால் முக்தியில்லை. அதனால், அவ்விலிங்கத்தைச் ரம் கண்டம் பூணூல் கரம் அரை இவைகளிற்றரித்து குருலிங்க ங்கம பக்தியிற் சிறந்து உரிய கயிங்கரியஞ் செய்யவேண்டு மன்றாம். இம்மதத்தவரை இலிங்கதாரிகளென்று சொல்லுவர். ங்கமம் = முத்தீக்ஷையுமுள்ள முத்திறத்துச் சிவபத்தர்களாகிய வவேடர்.)

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

இவ்விலிங்கதாரிகளுக்கான விதிகளைத் துலக்கும் வீரமென்னும் ஆகமவழியே வழுவாநிலையுள்ள வீரசைவமென்று பெயர் விளங்கும்படி 3-வது வியாசம் 52-ம் வினாவுத்தரத்திற்றுலக்கிய நந்திதேவரானவர் உலகில் வசவதேவராய் அவதரித்து நிலைநாட்டிய மதமும் ஆதிசைவ மதமும் மேற்றுலக்கிய மஹாவிரதத்தைப் பொருந்தும். களங்கமற்ற அத்துவித வீரசைவ சித்தாந்தமானது: வீரம், அசிந்தியம், வாதுளம், மகுடம் என்னுஞ் சிவாகமங்களால் விளங்கும்.

சொற்ற மஹாவிரதத்தில் மேலான சித்தாந்த முடிவாகிய சமானமற்ற சாயுஜ்ய முக்தியைக் கைவிட்டுப் பூர்வமான பதமுக்தியையே பெறுவதென்ற முடிவு பிறக்கின்றது.

ஈண்டு விளக்கிய உட்சமயபேதம் 24-ல் 5, 10, 11, 12, 14, 15, 16, 17-ல் உள்ள மதஸ்தர் நிரீசுர வாதியைப் போலாவர். 18, 19, 20, 22-ல் உள்ள மதஸ்தர் ஆசாரங்குன்றியவராவர்.

இந்தச் சமயம்: அனாதி சைவராகிய சதாசிவமூர்த்தியாலருளப்பட்ட அனாதிசிவாகமப்படி, நிகழுவதால் அனாதிசைவ சமயமென்றாம். இதை யனுசரித்துள்ள சைவர் ஆறு வகையாவர். விவரம்: அனாதி சைவருடைய ஐமுகங்களிலுந் தோன்றி ஐமுகங்களாலுந் தீக்ஷிக்கப்பெற்ற கௌசிகர் காசிபர் பரத்துவாசர் கௌதமர் அத்திரியெனுங் காமிகம். அகஸ்தியர் என்ற (சிவத்துவிஜர்) பஞ்சரிஷி கோத்திரங்களிற் பிறந்த சிவப்பிராமணரை ஆதி சைவரென்றும், பிரம்மாவின் முகங்களிற் பிறந்த வைதிகப் பிராமணருள்ளே சிவதீக்ஷை பெற்றவரை மஹா சைவரென்றும், சிவதீக்ஷைபெற்ற க்ஷத்திரியரையும் வைசியரையும் அநுசைவ ரென்றும், சிவதீக்ஷை பெற்ற சூத்திரரை அவாந்தர சைவரென்றும், சிவதீக்ஷை பெற்ற *அநுலோமரைப் பிரவர சைவரென்றும், சிவதீக்ஷைபெற்ற பிரதிலோமர் முதலிய மற்றச் சாதியாரை அந்நிய சைவரென்றுஞ் சொல்லப்படும்.

*அநுலோமர் பிரதி லோமர் விவரம் 28-வது வியாசம் 6-ஆம் வினாவிடையிலுண்டு.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

இன்னுஞ் சில சமய வியூகங்களையும் இம்பர் விளக்கியருள்வேம்.

1. பஞ்சபூதாத்ம வாதம்: அதாவது பிருதிவியாதி பஞ்சபூதங்கட்கு மேலாக ஒரு ஈஸ்வரனில்லை, அப்பஞ்ச பூதங்களின் கூட்டங்களாலேயே தேகாதி பிரபஞ்சங்கள் உண்டாகின்றன வென்றாம்.

இம்மதம், ஆகாய நீங்கலாக நான்கு பூதங்களை மட்டும் ஒப்புக்கொண்டு 'கண்டதே காட்சி கொண்டதே கொள்கை' யென்னுஞ் சாருவாகமதக் கருத்தையும் பொருந்தும்.

2. இந்திரியாத்மவாதம்: அதாவது:-ஜீவன் போன மட்டில் ஸ்தூலமழிந்து போகிறதனாலும், நித்திரை செய்யுங்கால் ஸ்தூலஞ் சவம்போற் கிடக்க உள்ளிந்திரியமாகிய மெய் வாய் விழி மூக்கு செவி யென்பவைகளோடு தானனுபவஞ்செய்யக் கனவுகாண்பதனாலும் ஸ்தூலம் ஆத்மாவல்ல அவ்விந்திரியமே ஆத்மா. இதற்குமேல் ஆத்மா வென்பதும் ஈஸ்வரனென்பதும் இல்லை யென்றாம்.

இம்முடிவு சாருவாகத்தில் ஒரு பிரிவை யொக்கும்.

3. பிராணாத்மவாதம். அதாவது:- பிராணன் போனால் மேற் சொன்ன இந்திரியங்கள் இராததனால் பிராணனே ஆத்மா. இதற்குமேல் ஆத்மா வென்பதும் ஈஸ்வரனென்பதும் இல்லையென்றாம்.

இம்முடிவுஞ் சாருவாகத்தில் ஒரு பிரிவையொக்கும். சில பிராணபந்தன யோகிகளும் இம்முடிவையே யுடையார்.

4. அந்தக்கரணாத்மவாதம். அதாவது:- மேற்சொற்ற பிராணனும் மனமில்லாதபோது தெரியாதபடியால் மனமே ஆத்மாவென்றும், அம்மனமும் அகங்காரத்தைத் தோற்றுவிக்கும் புத்தியில்லாவிடில் வாதிக்கிறபடியால் அப்புத்தியே ஆத்மாவென்றும், அப்புத்தியைத் தோற்றுவித்து அதற்காதாரமாயிருப்பது சித்தமானபடியால் அச்சித்தமே ஆத்மாவென்றும், இவைகட்குமேல் ஆத்மா வென்பதும் ஈஸ்வரனென்பதும் இல்லையென்றுஞ் சொல்லப்படும்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

இம்முடிவு, பௌத்தம் நையாயிகம் வைசேஷிகமென்ற மதங்களின் முடிவை யொக்கும். மனமே ஆத்மா வென்பவர்களை உபாசகரென்றுஞ் சொல்லப்படும்.

5. சாத்துவிக குணாத்மவாதம். அதாவது:- மேற் சொற்ற அந்தக்கரணங்களும் குண தத்துவத்தின் தோற்றமாம். அக்குணம் மூவகையில் *தாமதம் அதமமாகும். இராஜதம் மத்திமமாகும். சாத்துவிகம் உத்தமமாகும். இந்த உத்தம சாத்விகமே ஞானம், அருள், தவம், பொறுமை, வாய்மை, மேன்மை, மோனம், ஐம்பொறியடக்கம் என்ற எட்டுத் தன்மைகளாய் விளங்கும்.

இவைகளை யன்றி யாதொருதவமும் பயனுமின்று. சாத்துவிகமே சுத்த ஞானசொரூபம். அதனால் இதுவே ஆத்ம சைதன்யம். இதற்குமேல் ஆத்மாவென்பதும் ஈஸ்வரனென்பதும் இல்லையென்றாம்.

இதில், ஞானமார்க்கத்திற்கான ஒழுக்கஞ் சிறந்ததேயன்றி வேறொன்றுமின்று.

6. அக்கினிமதம். அதாவது:- அக்கினி யில்லாவிடில் யாதொரு ஜீவனுக்கும் நிலைப்பில்லை. சகல ஆபாசங்களையும் அந்தகாரத்தையும் ஒழிப்பததுவே. உயர்ந்த யாகாதி கிருத்தியங்களும் அதனாலேயே செய்யப்படுகின்றன. அதனால் இந்தப் பொருளாக விளங்கும் அக்கினியே தெய்வமென்றாம். இம்மதத்தைத்தானே காருக மென்றுஞ் சொல்லப்படும்.

இம்மதம்:- உட்சமய வியூகத்திற் பணித்த சூரியவாதம் சந்திரவாதமென்ற மதங்களின் தீர்மானத்தைப் போன்றதேயன்றி வேறன்று. அதிர்த்த அக்கினிக்கு அதிதேவதையாகிய தீத்தேவனும் தக்ஷயக்ய நாசகாலத்தில் வீரபத்திர தேவரால் ஏழு கைகளும் அறுபட்டு உயிரிழந்தவனாயிருக்கிறான். ஆனால்,

*தாமத இராஜத குண விவரத்தை 25-வது வியாசம், 73-ல் தத்துவ விளக்கத்திலறிக.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

திருநாவுக்கரசு நாயனார் தேவாரம்

"இருநிலனாய்த் தீயாகி நீரு மாகி
இயமான னாயெறியுங் காற்று மாகி
அருநிலைய திங்களாய் ஞாயி றாகி
ஆகாச மாயட்ட மூர்த்தி யாகிப்

பெருநலமுங் குற்றமும் பெண்ணு மாணும்
பிறருருவுந் தம்முருவுந் தாமே யாகி
நெருநலையா யின்றாகி நாளை யாகி
நிமிர்புன் சடையடிகள் நின்ற வாறே."

என்ற பாட்டில் சிவனுக்குரிய அஷ்டமூர்த்தத்தில் தீயும் ஒன்றாயிருக்கிறதென்று சிரேஷ்டஞ் சொல்லிக்கொள்ள லாமேயென்றால், ஏழையும் அன்னணஞ் சொல்ல நேரிடும். அதனால், அவ்வஷ்டமூர்த்தங்கட்கும் நாயகமாகிய சிவனே சிரேஷ்டப் பொருளென்றும், சைவ சித்தாந்தப் படி அப்பொருள்களிற் சிவன் கலந்து நின்றாரேயன்றி அப்பொருள்களே சிவனாயிருந்திருப்பதில்லை யென்றுந் தெரியற்பாற்று.

இங்ஙனம் பஞ்சபூதாத்ம வாதமுதல் அக்கினிமதம் வரைகூறிய 6 மதங்களும் அனீசுரவாதமே யாகும். இந்த அனீசுர நிச்சயத்தையெல்லாம் 1-வது வியாசத்தில் சிவஞான தீபம் நிரீச்சுரவாத கண்டனமென்ற இடத்திலும் நிராகரணஞ் செய்தனம். அதை ஆண்டு தெளிக.

7. கிரீடாப்பிரம்ம வாதம்: அதாவது:- வேதாந்த நூலிலொன்றாகும். அதில் பிரம்மமே நான். நான் ஒரு படித்தாயிராமல் பலவகையாய் நானாவித விகாரப்பொருள்களோடு கூடி விளையாடுகிறே னென்றறிகிறதே முக்தியென்றாம். (கிரீடை = விளையாட்டு)

இதில், நிரீசுரசாங்கியத்தில் விளக்கிய புருடதத்துவத்தையே பூரணப்பொருளாகக் கொண்டு மேலையனுபவங்கள் குன்றி நிற்பதென்னுந் துணிவே பிறக்கின்றது.

8. பாதஞ்சலமதம்: அதாவது:- பதஞ்சலி முனிவராற்செய்த நூலொன்றிற்குரியது. அதில் பிரகிருதியும் பிராகிருதங்களும் ஆன்மாக்களும் பெத்த முக்திகளும் கபிலர் சாங்கிய நூலிற்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

கூறியவாறே யென்றும், விவேக ஞானம்போல யோகாப்பியாசமே முக்திக்குக் காரணமென்றும், 26-ம் தத்துவம் ஈஸ்வரனொருவனுண்டென்றும் அவன் ஆன்மாக்களுக்கு வேறென்றும், அந்தர்யாமி யாயிருப்பானென்றுஞ் சொல்லப்படும்.

இதிலும் அனுஷ்டிப்பிற் புருடதத்துவமே பொருளெனக் கொள்ளுந்துணிவு பிறக்கின்றது.

9. அனேகேசுரவாதம். அதாவது:- இரத முதலியன செய்யும்போது ஒருவனாற் செய்யற்கியலாமல் அனேகர் வேண்டியிருத்தலற்று, சிருஷ்டியாதி தொழிற் செய்வதற்கும் அனேக ஈஸ்வரர் வேண்டியிருக்கிறது. அவர்களும் அனேகவுபாதான காரணங்களைக் கொண்டு ஐங்கிருத்தியங்களைச் செய்வார்கள். அதனால் ஆன்மாக்கள் ஜனன மரணப்படுவார்கள். ஒரு கிருத்தியஞ் செய்யும் அனேகர் உபகரணமில்லாதவிடத்து கிருத்தியத்தை நிறுத்திவிடுகிறதற்று, ஈஸ்வரர்களும் கர்மமாகிய உபகரணங்களில்லாவிடத்து ஆத்மாக்கள்பால் ஐங்கிருத்தியங்களுஞ் செய்யார்கள். அவ்விதங் கிருத்தியப்படா திருப்பதே ஆத்மாக்கட்கு முக்தியென்றாம்.

இதில், நிகழ் காலத்தும் வருங் காலத்துஞ் செய்யத் தக்க கர்மங்களை ஒருவன் நிறுத்திக்கொள்ளினும் சென்ற காலத்தேற்பட்ட கர்மங்க ளெவ்வகைத்தா யொழியுமென்பதையும், அடையுமுக்தி எத்தகையது, அது யாண்டுளதென்பதையும் துலக்காதிருப்பதோடு, கருவிகரணாதிகட்கு ஆத்துமா தலையாயிருத்தல் போலக் கர்மங்களியற்றுங் கர்த்தாக்கட்கு அதிஷ்டான நாயகமாயுள்ள அத்துவித விழுப்பொருளை விட்டுவிட்ட அறியாமையாயு முடியும். ஆனால் ஏற்பட்ட கர்மம் புசித்துத்தான் தீர வேண்டு மென்னிலோ? அது முன்மொழிந்த நிகண்டவாதக் கருத்தையுங் கர்மவாதக் கருத்தையுமொக்கும்.

10. அச்சுமாறாவாதம். அதாவது: ஆத்மாக்கள் பிறக்குமவதரம் முன் ஆணாயிருந்தது ஆணாகவும், முன் பெண்ணாயிருந்தது பெண்ணாகவும் பிறக்கும். அவைகள் சிவ பூஜையின் மேன்பாட்டாற் பிறப்பின்றிச் சிவ சன்னிதியிற்றானே அச்சுமாறாதிருக்கு மென்றாம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

இதில், ஆத்மா ஆண் பெண்ணெனப்ப தின்றென்னு முடிவைப் பேதித்தும் அரிய சிவசாயுஜ்ய முக்தியைக் கைவிட்டுப் பதமுக்தியைக் கொள்வதென்றுந் தீர்க்கலாயிற்று.

11. விஸ்வரூபமதம். அதாவது:- கிருஷ்ணன் விஸ்வ வடிவங்காட்டு ஞான்று எங்குங்கால் எங்குங் கையாகக் காணப்பட்டதால் விராட்புருஷனே ஈஸ்வர னென்றாம்.

12. பிரஜாபத்ய மதம். அதாவது:- மேல் வழுத்தியவாறு எங்குங் கால் கைகளா யுள்ளது ஈஸ்வரனாயின் மரமட்டை முதலியனவும் ஈஸ்வர னாகலாம். ஆயின் அவைகளைச் சிருஷ்டிப்பித்த பிரம்மாவே சர்வேஸ்வரனென்றாம்.

13. காணாபத்ய மதம். அதாவது:- மேற் சொன்ன பிரம்மாவும் சிவனாற் சிரங்கிள்ளுண்டும் அன்னப் பக்ஷியாகி அச்சிவனது முடிதேடிக் காணாதும் வாடினன். அத்தகைய சிவனும் திரிபுர சம்ஹாரத்திற் கணபதியைப் பூஜிக்க நேரிட்டதால் அக் கணபதியே ஈஸ்வர னென்றாம். இந்த முடிவை 3-வது வியாசம் 21-வது வினாவுத்தரத்திற் றுலக்கியதனால் ஈண்டு துலக்கவில்லை. ஆண்டு தெளிக.

14. பௌராணிக மதம். அதாவது:- விசேஷ நூலாகிய புராணசம்பந்த மார்க்க . மென்றாம். அப்புராணங்களில் உத்கிருஷ்டமான தெய்வமெல்லாம் புண்ணிய ஸ்தலங்களிலே விளங்குகையால் அத்தலங்களைத் தரிசிக்க மிதிக்க வசிக்க அங்குள்ள தீர்த்தங்களின் முழுக அதை யருந்த பரிசிக்க முக்தியென்று சொல்லப்படும்.

இதில் சொல்லப்படும் புண்ணியங்கள் பாவப் பிராயச் சித்தத்தையும் பதமுக்திக் கேதுவான மார்க்கத்தையும் பரமுக்தி நிலையினுண்மையை ஒரு சொல்லா லுரைக்குஞ் சற்குரு தரிசனத்தையுங் கொடுக்குமேயன்றி நேரே ஜன்ம ரகிதமாகிய அதீத முக்தியைக் கொடாவென்றும், இக்கருத்துற்றே தாயுமானவர் பராபரக்கண்ணியில் "மூர்த்தி தலந் தீர்த்த முறையாய்த் தொடங்கினர்க் கோர்-வார்த்தை சொல்ல சற்குருவும் வாய்க்கும் பராபரமே" எனச் சொன்னாரென்று முணர்வதோடு 6-வது வியாசம் 11-வது வினாவிடையையுங் கவனிக்குக.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

15. விருக்ஷார்ச்சனை மதம். அதாவது:- மேல் விளம்பிய புண்ணிய ஸ்தலங்களும் மரங்களாலே விளங்குகையாலும், அரசு மூங்கில் எருக்கு முதலானவைகளை அவரவர் குலதேவதையாகப் பூஜை புரிகையினாலும் விருக்ஷங்களை ஈஸ்வர னென்றாம்.

இதுவும் அனீசுர வாதத்தைப் பொருந்தி அங்ஙனம் முதன் மூலந் தெரியாது மருண்டு மொழியாநின்ற வழுவைத் தழுவும்.

அன்பனே! இதுகாறு மிசைத்த சமயங்களெல்லாம் பூர்வ காலங்களிலும் அவைகட்கடுத்த பிற்காலங்களிலும் உண்டாயினவென்று பழமையான நூற்கள் பகர்கின்றன. இனி நூதனமாக வுண்டான காரணத்தாலும் அன்னிய பூமியாகிய மிலேச்ச பூமிக்கண் ணுற்பனமான காரணத்தாலும் புறப்புறச் சமயமென்று பேர்கொண்ட மதங்களையுந் துலக்குகின்றேம்.

16. கிறிஸ்துமதம்:- ரோமன் காத்தலிக், வெசிலியன், லுதரின், பிராட்டஸ்டண்ட், மெதடிஸ்ட், பாப்டிஸ்ட், யூனிட்டேரியன் முதலிய பிரிவுகளையுடைய இந்தக் கிறிஸ்து மதமானது; கர்த்தர் ஆவியா யிருக்கிறார். அதனால் அவர் அரூபி. பிதா குமாரன் பரிசுத்த ஆவியென்று முறையே ஒன்றிற்கொன்று குறைவாயெண்ணப்படும். மூன்று மொன்றாயுள்ள திரித்துவமும் அவரே. அவராற் சமஸ்த ஜீவாத்மாக்களும் ஆதாமுக்குப்பின் உதரத்தின்கண் புதிதுபுதிதா யுண்டாக்கப்பட்டு வருகின்றன. மரம் செடி முதலியதும் மனிதரல்லாத ஜந்துக்களும் ஜீவாத்மாக்களல்ல. ஒருவகை யுயிராகும் அவைகண் மரித்தவுடன் நசித்துப்போம். ஜீவாத்மாக்கள் முன்னிருந்து இப்பொழுதுண்டானதுமில்லை. இறந்தபின் இனிப்பிறப்பதுமில்லை. நியாயத்தீர்ப்பு நாளாகிய உலக முடிவில் இஞ்ஞான்று செய்துள்ள பாவபுண்ணியங்கட்குத் தேவனுடைய இடது பக்கத்திலும் வலது பக்கத்திலுமுள்ள ஒழியா நரகமுஞ் சுவர்க்கமுமே மனிதர்கட்கு லபிக்கும். அதனால் இரக்கம் வைத்து மனிதர்கள் செய்த பாவங்களனைத்திற்கும், செய்யும் பாவங்களனைத்திற்கும் மனுவாய்ப் பிறந்து தாமே பலியிருக்கிறார், அவரே மரியாள் புத்திரனாகிய நாசரேத்தூர் யேசுக(இரட்சகர்) கிறிஸ்தும் தேவனுடைய குமாரனும். அவருடைய புதிய ஏற்பாட்டின்படி ஞான ஸ்நானம் பெற்று பழைய ஏற்பாட்டில்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஏகோவாவாகிய தேவனால் அருளப்பட்ட பத்துக் கற்பனை: "(1) இசரவேலரை எகிப்தருடைய அடிமைத் தனத்திலிருந்து மீட்டுக்கொண்டு வந்த கடவுளாகிய நம்மைத் தவிர வேறொரு தெய்வமில்லையென் றறிவாயாக. (2) வானத்திலும் பூமியிலுமுள்ள யாதொரு வஸ்துவின் ரூபத்தைப்போற் செய்து வணங்காதிருப்பாயாக. (3) என்னுடைய நாமத்தை வீணில் வழங்காதிருப்பாயாக. (4) ஏழா நாளில் ஓய்ந்திருப்பாயாக. (5) தன்னுடைய மாதா பிதாவை கனம் பண்ணுவாயாக. (6) கொலை செய்யாதிருப்பாயாக. (7) விபசாரம் பண்ணாதிருப்பாயாக. (8) களவு செய்யாதிருப்பாயாக. (9) பிறனுக்கு விரோதமாகப் பொய்ச் சாக்ஷி சொல்லாதிருப்பாயாக. (10) பிறனுடைய சொத்தை யிச்சியாதிருப்பாயாக" என்ற கட்டளைகட் குடன்பட்டுப் புதிய ஏற்பாட்டின்படி யேசுகிறிஸ்துவின்மூலம் தேவனை வழிபட்டுச் செத்துவிட்டால் நியாயத்தீர்ப்பு நாளில் தங்களைப் புதைக்குழியிலிருந் தெழுப்பப்பட்டு இரக்ஷகரோடு சுவர்க்கத்திலிருக்க லபிக்குமென்று சில கிறிஸ்தவர்களும், யேசு தேவனுடைய குமாரனல்ல; தேவனுடைய குமாரன் இனிமேல் பிறப்பாரென்று சில கிறிஸ்துவர்களுஞ் சொல்லும் முடிவாயிருக்கும்.

நிகழ்த்தியவாறு பல பிரிவினையாய் இம்மத்தவர் பேசுவதனாலும் இவர் வேதமென்கிற பைபிலிலுள்ள மேற்சொன்ன பத்துக் கற்பனைகளில் ஆகுசமாகிய மாமிசத்தையும் சாராயம் முதலிய லாகிரிகளையும் பகிஷ்காரமாய் விலக்காத படிற்றொழுக்கம் பூண்டதனாலும் யேசுவினுடைய குணானுபவங்கள் மனுஷீகத்தையே காட்டுவதனாலும் சர்வஜீவாத்மாக்களுடைய பாவங்களையும் அவர் பொறுத்துக் கொள்ளச் சர்வாத்மகமாய் விளங்கத் தகாதென்றும், கடவுளுக்கு அன்பர்களெல்லாங் கடவுளைப் பிதாவென்றுந் தங்களைக் குமாரர்களென்றுஞ் சொல்லிக் கொள்ளுங் கிரமமிருப்பதை யனுசரித்துத் தன்னைக் குமாரனென்று சொல்லிக்கொண்ட இவர் நேரே தேவனுடைய குமாரனாகாரென்றும் யேசுவை யறியலாம். ஆனால் அவர் தகுதியான சாந்தம் பொறுமை துலங்கத் தேவோபாசனையிற் சிறப்புற்றிருந்த ஒரு பக்தரென்றும் அவர் சரித்திரத்திற் சொல்லுகிறபடி அவர் செய்த சித்திகள்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

உண்மையாயின் அவைகளைத் கடவுள் தயவுடையார்கள் செய்யத் தகுமென்றும் செய்யுஞ் சித்திகள் அனந்தமுடையார்கள் இந்து மதத்தில் அதிகமுண்டென்று முணரலாம்.

ஆனால் அந்த யேசுவானவர் தேவகுமாரனுமல்ல யாவத் பாவத்துக்கும் பலியானவருமல்லவெனினும் பைபிலென்னும் நூலிலுள்ள பழைய ஏற்பாட்டின்படி தேவனைப் பூசித்து ஆராதித்தா லென்னை யெனிலோ? அதுவும் ஒவ்வாத காரியமே. எப்படியேல் மோசே யெழுதிய மூன்றாம் ஆகமத்தில் "காளங் கன்றுகளையும் ஆடுகளையும் பறவைகளையும் ஆரோன் குமாரர்களாகிய பூசாரிகள் மூலமாய்த் தேவாலயத்திற் கொடுவந்து குரல்வளைகளையறுத்துப் பலிகொடுத்து அந்த இரத்தத்தைப் பலிபீடத்தின்மேற் றெளித்தும் அறுத்த மாமிசங்களைத் தனக்குத் திருப்தி பண்ணிச் சருவாங்க தகனபலி முதலானவைகளைச் செலுத்தும்படிக்கும் அவைகள் கர்த்தராகிய தமக்கு ஆற்றுகிற வாசனையாயிருக்குமென்றும், குண்டிக் காய்களைப் பிளந்து படைக்க வேண்டுமென்றும், சாரமுள்ள கொழுப்புகளையும் இரத்தத்தையும் நீங்களுண்ணக்கூடாது நமக்கே திருப்திபண்ண வேண்டுமென்றும், மாக்களாற் செய்யும் பலகாரங்கள் புளிப்பில்லாமல் எண்ணெயில் வெந்ததாயுள்ளதையும் வாட்டிய பசுங் கதிர்களையும் தேவாலயத்திற் றமது முன்பு படைக்க வேண்டுமென்றும், காணிக்கைகளைச் செலுத்தலா மென்றும் யேகோவாகிய தேவன் சொன்னதாக எழுதப்பட்டிருப்பது போல்வன பலவே. இந்த நியாயத்தைக் கொண்டே நியாயமுணராமல் கிறிஸ்தவர்களும் முகம்மதியர்களும் எவ்வளவும் ஜீவகாருண்ய மற்று ஆடு மாடு முதலிய பல ஜெந்துக்களை வதைத்து இரத்தம் விலக்கி ஊனுண்கிற பெருந்தீனியர்களா யிருக்கிறது சித்தம்.

மேலே சொன்ன பலி மாமிசப்படைப்பு முதலான பல விஷயங்கள் பேய் ஆராதனைக்குரியதே யொழியப் பரிசுத்த ஈஸ்வரோபாசனைக்கு எவ்வளவேனும் பொருந்தத் தக்கதாவென்றும், இதைப் பரிசுத்த தேவன் எப்படித்தான் திருவாய்திறந்து மோசேய்க்கு மொழிந்தாரென்றும் மனிதருடைய பாவத்தைத் தீர்க்கவென்று மிகவும் ஏழைகள்போற் றிரிகின்ற விலங்குகளையும் பறவைகளையும் எவ்வளவும் ஜீவகாருண்ய

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

மற்றுப் பலியிடச் சொல்வது கடவுளுக்கு நீதியாமாவென்றும் விவேகிகள் கவனித்தால் உண்மையுதிக்குமன்றோ.

இவைகளெல்லாம் பழைய ஏற்பாடு. ஏசுவானவர் செய்த புதிய ஏற்பாட்டில் இல்லையென்று சொல்லவெனிலோ? அதிலும் பழைய ஏற்பாடுக ளுண்டென்ப தாய் மாற்கு 9-ம் அதிகாரம், 29-ம் வசனம்: "யேசு அவர்களை நோக்கி வேண்டுதலினாலும் உபவாசத்தினாலுமேயன்றி மற்றொரு வகையாலும் அந்த (பசாசு) இனத்தைக் துரத்தக்கூடா" தென்றார். லூக்கா 5-ம் அதிகாரம், 14-ம் வசனம் "உன்னை ஆசாரியனுக்குக் காண்பித்து ஜனங்களுக்குச் சாக்ஷியாய் மோசே நியமித்தபடியே நீ சுத்தமானதைக் குறித்து பலிசெலுத்து என்று யேசு கட்டளையிட்டார்." மத்தேயு - 9 -ம் அதிகாரம், 13-ம் வசனம்: "பலியிலும் இரக்கத்தை விரும்புகிறேனென்பதின் அருத்தத்தை நீங்கள் போய்க் கற்றுக் கொள்ளுங்கள்." மத்தேயு 23-ம் அதிகாரம் 23-ம் வசனம், "நீங்கள் துளசியிலும் வெந்தையத்திலும் சீரகத்திலும் பத்திலொரு பாகத்தைக் கொடுத்தும் வேதத்திலுள்ள பரமானவைகளாகிய நீதியையும் இரக்கத்தையும் விசுவாசத்தையும் விட்டு விட்டீர்கள். இவைகளைக் காத்து நடப்பதும் இவைகளை மீறாமல் நிற்பதுமே உங்கள் கடமை." யாக்கோபு 2-ம் அதிகாரம்-29-ம் வசனம்: "நம்முடைய பிதாவாகிய ஆபிரகாம் வேதிகையின்மேல் தன் புத்திரனாகிய ஈசாக்கை பலியிட்ட பொழுது கிரியைகளினாலல்லவா நீதிமானாக்கப் பட்டான்." அப்போஸ்தலர், 16-ம் அதிகாரம், 3-ம் வசனம்: "அவனைப் பவுல் தன்னுடனே கூடப் புறப்படவேண்டுமென்று விரும்பி அவனுடைய தகப்பன் கிரேக்கனென்று அவ்விடங்களிலிருக்கிற யூதர்களெல்லாரும் அறிந்தபடியால் அவனுக்கு விருத்தசேதனம் பண்ணினான்." உரோமர் 15-ம் அதிகாரம், 8-ம் வசனம்: "பிதாக்களுக்குப் பண்ணப்பட்ட வாக்குத்தத்தங்களை உறுதியாக்கும்படி பராபரனுடைய சத்தியத்தினிமித்தம் யேசுக்கிறிஸ்து . விருத்தசேதனமுள்ளவர்களுக்கு ஊழியக் காரரானார். (என்று நான் சொல்லுகிறேன்)" எனவும் வெளியாகின்றன. இந்த வாக்கியங்கண் மூலம் பலி உபவாசம்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

காணிக்கை சுன்னத்தாகிய விருத்தசேதனம் என்பவைகள் பழைய ஏற்பாட்டின்படியே ஏசுவானவரும் அவருடைய சிஷியர்களும் நடத்தி வந்த துண்டென்றும் பகிஷ்காரமாகவே யறியலாம். இப்படியே நைவேத்தியம் அபிஷேகம் அலங்காரம் தீர்த்தம் தேவாலய தரிசன முதலியவும் நடந்து வந்ததாய் அப்புத்தகங்களிற் காணலாம்.

ஆனால் யோவானெழுதிய சுவிசேஷம் முதலாம் அதிகாரம் 19-ம் வசனம்: "நியாயப்பிரமாணம் மோசேயினாற் கொடுக்கப்பட்டது. கிருபையும் சத்தியமும் யேசு கிறிஸ்து மூலமாயுண்டாயின" என்று துலக்கியபடி நியாயப்பிரமாணத்தை விடுக்க வென்னிலோ, அந்த நியாயப் பிரமாணம் யாத்திராகமம், 29-ம் அதிகாரம் 12-ம் வசனம்: உங்களுடனே பேசும்படி நானுங்களைச் சந்திக்குமிடமாகிய சபையின் ஆசார வாசலில் யோகோவாவின் சன்னிதியில் உங்கள் "தலைமுறை தலைமுறையாக எப்பொழுதும் நீங்கள் செலுத்தவேண்டிய தகனபலிகளிவைகளே" என்றிருப்பதற்கிணங்க புதிய ஏற்பாட்டிலுள்ள மத்தேயு 5-ம் அதிகாரம், 18-ம் வசனம்: வேதப்பிரமாணம் முழுதும் நிறைவேறுவதேயன்றி "வானமும் பூமியும் ஒழியும் வரைக்கும் அதில் ஒரு சிறு எழுத்தாயினும் ஒரு எழுத்தின் உறுப்பாயினும் ஒழிந்துபோவதில்லையென்று மெய்யாயுங்களுக்குச் சொல்லுகிறேன்" என்றுந் தெளிவாயெழுதப் பட்டிருத்தலினால் ஒவ்வாது. பழைய ஏற்பாட்டின் கர்த்தராகிய மோசேயின் கட்டளைகளைப் புதிய ஏற்பாட்டின் கர்த்தராகிய யேசுவானவரும் அவர் பிதாவாகிய (கடவுள்) யேகோவாவும் மாற்றுவதென்றால் மேற்சொன்ன சத்திய வாக்குகளுக்குப் பங்கம் வருவதுமன்றி மோசேய்க்குச் சொன்ன பராபரன் இவரல்லவென்றும் அவர் அசப்பியனும் சிற்றுணர்வினனு மென்றாம். மேலும் முந்திய விஷயங்கள் பிறகு இன்ன காலத்திலே நீக்கப்படுமென்று முன்னுணர்ந்து குறித்திருப்ப துண்டென்பதற்கு ஆதாரமாய்க் கிறிஸ்து மார்க்கத்திற்கேற்பட்ட ஆதியாகம முதல் யோவான் ஆகமம் ஈறாகவுள்ள 43 ஆகமங்களில் ஒன்றினும் எழுதப்பட்டதாகவுமில்லை.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

யாத்திராகமம் 3-ம் அதிகாரம், 15-ம் வசனம்: "மேலுந் தேவன் மோசேயை நோக்கி ஆபிரகாமின் தேவனும் ஈசாக்கின் தேவனும் யாக்கோப்பின் தேவனுமாயிருக்கிற உங்கள் பிதாக்களின் தேவனாகிய யோகோவா என்னை உங்களிடத்திற் கனுப்பினாரென்று நீ இசரவேல் சந்ததியாருக்குச் சொல்லு. சதாகாலமும் இதுவே என் நாமம்" என்றும் யாத்திராகமம் 6-ம் அதிகாரம் 3-ம் வசனம் "ஆபிரகாமுக்கும் ஈசாவுக்கும் யாக்கோபுக்கும் சர்வ வல்லமையுள்ள தேவன் என்னு நாமத்தினால் தரிசனமானதேயன்றி யோகோவாவென்னும் என்னாமத்தினால் நான் அவர்களுக்கு அறியப்படவில்லை" என்றும் வித்தியாசமாய் வெளியாகிறதில் அவ்வசனங்கள் பிசகென்றாவது அதைச் சொன்ன கடவுள் மறதியுள்ளவ ரென்றாவது வெளிவரும்.

உரோமர் 5-ம் அதிகாரம், 14-ம் வசனம்: "மரணமானது ஆதாம் முதல் மோசே வரைக்கும் ஆதாமின் மீறுதலுக்கு ஒப்பாய்ப் பாவஞ் செய்யாதவர்களையும் ஆண்டுகொண்டது. அந்த ஆதாம் பின்பு வந்தவருக்கு அடையாளமானவன்" மேற்படி 18-ம் வசனம் "ஒரே மனிதனுடைய தப்பிதத்தினாலே எல்லா மனிதருக்கும் ஆக்கினைக்கு ஹேதுவான தீர்ப்பு உண்டானது "என்றும் எரேமியர், 31-ம் அதிகாரம் 29-30-ம்-வசனங்கள் "பிதாக்கள் புளிப்புள்ள திராக்ஷக் காய்களைத் தின்றார்கள். பிள்ளைகளின் பற்கள் கூசுகின்றனவென்று அக்காலத்தில் ஒருபொழுதுஞ் சொல்லார்கள். அவனவன் தன் தன் பாவத்தினிமித்தம் சாவான். புளிப்புள்ள திராக்ஷக் காயைத் தின்கிறவனெவனோ அவனுடைய பல்லு கூசுமென்று யோகோவா சொல்லுகிறார்" என்றும் எழுதியிருப்பதில் ஒரு மனிதனாலே எல்லா மனிதருக்கும் பாவமும் அதன் சம்பளமாகிய மரணமும் வந்ததென்றும், அதற்கு நேர்விரோதமாய் அவனவன் செய்தபாவம் அவனவனுக்கே யுண்டென்றும் வெளியாகிறது. இந்த இடத்தில் மேற்சொன்ன இரண்டு காரணத்தில் எதினாலேயாவது யேசுவானவருக்கு நேரிட்ட மரணமும் பாவத்தின் சம்பளமென்று அருத்தம் பண்ண இடமுண்டமாகும்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

லூக்கா-22-ம் அதிகாரம், 57-58-ம் வசனங்களில் "யேசுவை நானறியேன்; அவனுடனிருந்தவன் நானல்ல" வென்றும், தனக்குத் துன்பமில்லாதிருக்கும் பொருட்டு பேதுரு பொய் சொன்னதாகவும் வெளியாகிறது. யேசுவானவருக்குப் பிரதான சீடனாகிய அந்தப் பேதுரு தேகாபிமானத்தாலும் ஜீவாபிமானத்தாலும் இப்படிப் பொய் சொல்லுவதென்றால் அவர் முதலாயினோர் எழுதி வைத்தவைகளை எப்படி மெய்யென்னலா மெனவும் இங்கே சங்கிக்க இடமுண்டாகிறது.

அப்போஸ்தலர் 7-ம் அதிகாரம் 49-55-ம் வசனங்கள்: "இவையெல்லாவற்றையும் என்னுடைய கையுண்டாக்க வில்லையா? என்று பராபரன் திருவுளம் பற்றினார். பராபரனுடைய மகிமையையும் வலதுபாரிசத்திலே நிற்கிற யேசுவையும் கண்டு வெளிப்படுத்தப்பட்ட வாக்கியம்-4-ம் அதிகாரம் 2-ம் வாக்கியம் "வானத்திலொரு சிங்காசனம் ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. அந்தச் சிங்காசனத்தின்மேல் ஒருவர் வீற்றிருந்தார். வீற்றிருந்தவர் கண்ணுக்கு ரவைக்கல்லும் பத்மராக ரத்தினமும் போலத் தோன்றினார்." (யேகோவா) என்ற வசனங்களாற் பராபரனுக்கு உருவமுண்டெனவே வெளியாகிறது.

அப்போஸ்தலர் 16-ம் அதிகாரம், 6-ம் வசனம்: "ஆசியா தேசத்திலே அவர்கள் சுவிசேஷ வசனத்தைச் சொல்லாதபடிக்கு பரிசுத்த ஆவியினாலே தடைபண்ணப்பட்டு" என்ற வசனத்தால் ஆசாரம் புனிதம் தருமம் முதலியன சிறந்த ஹிந்துக்களுள்ள தேசத்தில் மேற்கண்ட நூலும் பிரசங்கமுஞ் செல்லாதென்றும் அவை அனாசாரம் அதருமம் முதலியன சிறந்த அந்நாட்டிற்கே செல்லுமென்றும் ஏற்பாடாயிருக்கிறதாக வெளியாகிறது.

ஹிந்துக்களுள்ள தேசமென்றால் ஹிந்துநதிப்பாய்ச்சலுள்ள பூமிக்கு ஹிந்துதேச மென்று பெயர். அத்தேசம் ஹிமோர் பர்வதத்திற்குத் தெற்காயும் 3-வது வியாசம் 53-ம் வினாவுத்தரத்தில் விளக்கியதாயுமுள்ள குமரித்தீவாகுமென்றும் அங்குவசித்து அங்குள்ள வேதாகமநெறி நின்றவர்கள் ஹிந்துக்களென்றும் அறிக.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

கிறிஸ்துமார்க்க ஆதியாகமம் 1-ம் அதிகாரம் 20-வது வசனம்: "ஜலத்தில் நீந்திவாழும் ஜந்துக்களுக்கும் ஜீவாத்மாவிருக்கிறது" என்றும், அதேயாகமம் 30-ம் வாக்கியம்: பூமியிலிக்கிற ஒவ்வொரு மிருகத்திற்கும் ஆகாயத்திற் பறக்கும் ஒவ்வொரு பக்ஷிக்கும் நிலத்திலூரும் ஒவ்வொரு புழுவுக்கும் ஜீவாத்மா விருக்கிறது" என்று எபிரேயுப் பாஷையிலுஞ் சொல்லப்பட்டிருக்கிறது. இவைகளால் எல்லாவுயிரும் ஜீவாத்மாக்களென்றறி விக்கப்பட்டிருக்கிறபடி அவைகளைக் கொன்றுண்ணற்கு நியாயம் பிறக்காதென்றறியலாம். மேற்சொன்ன திருஷ்டாந்தத்திற்கிணங்க ஆரிஸ்டாட்டில் என்றும் இங்கிலீஷ் தத்துவ சாஸ்திரியாரும் "ஒவ்வொரு மனுஷருக்கும் ஜீவாத்மா விருப்பதைப்போலவே ஒவ்வொரு பிராணிக்கும் பிராணாத்மாவும், ஒவ்வொரு புல்பூண்டு கந்தமூலத்திற்கும் முளைப்பிக்குஞ் சக்தியாகிய ஆத்மாவுமிருக்கிறது" என்பதாக எழுதி யிருக்கிறார்.

17. பிரம்மசமாஜம்: இந்தமதம் பொது நூலாகிய வேதத்திற் சொல்லப்படுகிற பிரம்மமென்பதே ஈசுவரன். அவனுக்கு உருவம் நாமம் வருணமுதலிய குறிப்புகளொன்றுமில்லை. அதனால் அவனை எந்த வகையினாலும் உருவப்படுத்தி அர்ச்சனை ஆராதனை முதலிய செய்வது நியாயமின்று. ஆனால் அவனுக்கு மனவாக்குக் காயங்களால் வணக்கஞ் செய்யுநிமித்தம் இந்த ஜகத்தையும் இந்த ஜீவனையும் எவனுன்டாக்கினானோ அவனுக்கு என்று பொதுவாய்ச் சொல்லிக்கொள்ளலாம். இவ்வித நல்லொழுக்கத்துடன் வணங்கிக்கொண்டுவர மரணாந்தத்தில் அந்த ஈஸ்வரன் கதிகொடுப்பானென்ற முடிவாயிருக்கும். இது பங்காளி ஜாதியில் கிஷப்ச் சந்தர்ஸன் என்கிற ஒருவரால் 24-வருஷகளுக்குள் உண்டுபண்ணப்பட்டது.

இந்த அதிநூதன மதமும் மேல் விளக்கியபடி ஒவ்வா நடையையே பொருந்தும்.

இனிச் சிவாகம நெறியாகிய சைவ சித்தாந்த பேதத்தையும் இவண் விளக்கக்கடவேம். அஃது:- சிவாத்துவிதம், சிவாத்துவிதபேதம், மிச்சிரவாதம், வாமசித்தாந்த பேதம் என நான்கு வகையாகும். இந்நான்கு வகையில் சிவாத்துவிதமானது ஈசுவர ஐக்கியவாதம், பாஷாண மோக்ஷவாதம் எனவும்; சிவாத்து

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

வித பேதமானது பேதவாதம் சிவசமவாதம் எனவும்; மிச்சிரவாதமானது: சங்கிராந்தவாதம், ஈசுர அவிகாரவாதம் எனவும்; வாமசித்தாந்த பேதமானது நிமித்த காரண பரிணாமவாதம், சைவவாதம் எனவும் ஒவ்வொன்று இரண்டிரண்டு பிரிவாய் எட்டுப்பேதமாகும். கேள்!

(1) சிவாத்துவித வாதம்

இந்தச் சிவாத்துவித பேதம் இரண்டுள் :

(1) ஈசுர ஐக்கியவாதமென்பது:- பதிபசு பாசமென்னு மூன்றனுள் பதியாவது ஒருவன், பசுவாவது அனேகம், பாசமாவது புண்ணியம், பாவம், மாயையென மூவகை. இதனுட் பதியாலே பசுக்களுக்குக் கன்மத்திற் கீடாக மாயா சரீரமுண்டாம். அச்சரீரத்தால் மீட்டுங் கன்மமுண்டாம். இவ்விதமே மாறிமாறிப் பிறந்து வருங்காலத்து மேகங்களால் ஆவரணிக்கப்பட்ட ஆதித்தனைப் போல இருவினைகளால் பசுக்கள் பிறந்திறந்து திரியும். அவ்விருவினையும் ஒரு முகூர்த்தத்திற் புசிப்பிக்குங் காலத்தாதல் கன்மந் தொலைந்த காலத்தாதல் சிவபெருமான் ஆசாரிய மூர்த்தமாய் வந்து இரட்சித்து மாயாகாரியத்தை வற்ஜிக்கப் பசுவாகிய ஆன்மா சுத்தனாய் ஜலமும் ஜலமும் ஒன்றுபடுவதுபோலத் தன்னறிவும் சிவனறிவும் ஐக்கியமாகும். அதுவே முக்தியென்றாம்.

இதில், அனாதிமலத்தோடேகூடி மறப்பும் நினைப்புமாகிய மருட்சியைப் பொருந்தியுள்ள பசுவை ஆதியிற்சுத்தனென்றும், அறிவிக்கவறியுஞ் சிற்றுணர்வுள்ள பசுவும் அறிவித்து நிற்கும் முற்றுணர்வுள்ள பதியும் ஐக்கியங்கூடற்கு யோக்கியமில்லாதிருக்க ஐக்கியங்கூடுமென்றும் பிறழ்ந்து கூறலாயிற்று. இஃது சிவரூப தரிசனவவதரத்தில், உப்பிரசத்தையடக்கிக்கொண்ட ஏனைய ரசம்போல் ஆன்மபோதம் சிவபோதத்திற் கலந்துநின்ற நிலைமையாம்.

2. பாஷாண மோக்ஷவாதமென்பது:- ஆணவ மலம் அனாதியாக மாயையைப் பொருந்தும். அம்மாயையின் கன்ம வழியிலே குருடன் கைக்கோல் போலக் கருவிகரணங்கள் திரியா நிற்கும்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

இவ்வாறு நெடுந்துயரத்தைச் செய்யும் அக்கருவிகரணங்கள் சிறிதுந் தோன்றாமல் அசைவற்று (பாஷாணம்) பாறைக்கற்போற் கிடப்பதே முக்தியென்றாம்.

இந்தத் தீர்மானத்தின்படி முட்டையில், பையில், விருக்ஷத்தில் மூர்ச்சையுண்டான தருணத்தில், உடல் நீங்குந் தருணத்தில், கருவிகள் சுருங்குந் தருணத்தில் ஆன்மாக்கள் ஒன்றுமறியாது கிடப்பதால் அவைகளும் முத்தியாகலாம். ஆதலினால் பொருந்தாது. பின்னை யாது பொருந்து மென்னிலோ? சிவரூபதரிசன வ்வதரத்திற்குச் சற்று முன்னேவந்து மூடா நின்ற மலவிருளிலிருந்து அவ்விருளின் மேலீட்டால் வரும் நித்திரையிலகப்பட்டு நிலைவிட்டுறங்கு நிலைமையைப் பொருந்தும்.

(2) சிவாத்துவித பேதம்

இந்தச் சிவாத்துவித பேதா பேதம் இரண்டுள் ;

3. **பேதவாதமென்பது:-** சிவனருளாற் பாசங்களெல்லாம் செம்பிற் காளிதம்போற் சகஜமாய்ச் சிதாபாசனாகிய ஆன்மாவைப் பொருந்தி நிற்கும். அச்செம்பை விளக்கும் இரசகுளிகையைப் போலச் சிவன் அஞ்ஞானமாகிய பாசங்களை நீக்குவன். அஞ்ஞான்று ஆன்மா நித்த சுத்தனாய்ச் சிவனைப்போலாகி மேற்பதத்திருப்பனென்றாம்.

இதில், சிவனாகிய இரசகுளிகையினால் ஜீவான்மாவாகிய செம்பு சுத்தமாகிப் பொன்னாகுமேயன்றி, அக்குளிகையைப்போல ஆகாதென் றறியலாம். ஆதலால் இது பதமுக்தி. இது சிவரூபதரிசன வவதரத்தில் ஆன்மபோதம் சிவபோதத்திற் குள்ளடங்கி நின்ற நிலைமையாம்.

4. **சிவசமவாதமென்பது:-** பதி பசு பாசம் மூன்றிற்கும் அறிவுண்டு. அவற்றுட் பாசவறிவானது ஒன்றைப் பற்றி யெழுந்திருந்து சிந்தித்துற்ற பொறி வழியிலோடும். பசுவறிவானது அறிவிக்குங் கருவிகளைக் கொண்டணைந்து பயன்கருதி யனுபவிக்கும். பதியறிவானது இன்னவாறு திரியுமாத்மாக்களைப் பக்குவத்திற் புழுவைக் குளவிகொண்டு போய்ப் போதத்தை யடக்கிவைக்க அப்புழு குளவியாதல் போலச் சிவவடிவமாக்கு விக்கும். அதுவே முக்தியென்றாம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

இதில், அங்கத்திற்குச் சட்டைபோல அறியும் ஆன்மாக்களுக்குத் தானமாய் ஜடமாயிருக்கிற அறிவற்ற பாசத்திற்கு அறிவுண்டென்றதும், தாழ்ந்த தன்மையிலிருக்கிற இப்புழுவைத் தன்னைப்போலுயர்ந்த தன்மையாக்க வேண்டுமென்னுங் கருணையின்றி யோனியும் உதரமுமில்லாத் தன்மையால் கண்ட புழுவைத் தனது கருப்பமாய்க் குறித்தெடுத்து (எறும்பு) பிபீலிகாதி பிராணிகள் தீண்டாமல் மண்ணாற் கூடுவனைந்து அதன்கண்வைக்கும் ஒரு யோனிபேத வியற்கையுள்ள குளவியின் செயலைத்தானே, ஆன்மாக்களை யிரக்ஷிக்க வேண்டுமென்னுந் திரவுள்ளப்பாடுடைய சிவன் செயலுக் கொப்பிடப்பட்டது மொவ்வாதென்றும், மண் கூட்டின்கண் ணிருந்த புழுவானது சின்னாளிற்றன் னுடம்புலர்ந்துபோகக் குளவி வடிவாகித் தன்னிச்சைப்பிரகாரம் போதலினால் வழுத்திய முக்தி பதமுக்தியில் யோகமுக்தி யாகலாமே யன்றிப் பரமுக்தியாகிய ஞானமுக்தியா யாகாவென்றும் அறியலாம்.

3. மிச்சிரவாதம்

இந்த மிச்சிரவாத பேதம் இரண்டுள்:-

5. சங்கிராந்த வாதமென்பது:- ஜீவான்மா விளக்குப் போல நிற்கும். அவ்வான்மாவின் சன்னிதியில் அந்தக்கரணங்களானவை இந்திரியாதிகளை யறிந்து புசிக்கும். அதில் அச்சுநிற்க (பூட்டை) நீரிறைக்குங் கருவி காரியப்படுவதுபோலச் சிவன் சலனமற்றிருப்பன். அங்ஙனம் இவற்றைப் பிரேரிக்கும் ஆன்மாவின் ஆதிமல நீங்குங் காலத்து ஆன்மா சுத்தமாகும். அவ்வவதரம் கண்ணாடியினொளிக்குள் உருவந் தோன்று வதனையச் சிவனுருவம் வெளிப்படும். அன்னவாறு வெளிப்படவே உப்பளத்திற் பட்ட துரும்பு முதலியன உப்பாமாறுபோலப் பசு கரணங்கெட்டுச் சிவகரணமாய்விடும். அதுவே முக்தியென்றாம். (சங்கிராந்தம்=ஒன்றிலிருந்து வேறொன்றுக்குப் போதல்).

இதில், கண்ணாடியிற்றோன்று நிழல்போற் சுத்தான்மா விடத்திலே சிவனுருவந் தோன்றுமென்பதால் அவ்வுருவத்தைக்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

காட்ட வொருவர் துண்டாயிருந்திருக்க வேண்டுமென்றும், பசுகரணங்கெட்டுச் சிவகரணமாய் விடுமென்பதால் கரணமாகிய பாசஞ் சிவனாகவேண்டுமென்றும் வெளியாகின்றன. இம்முடிவு மேலான பரமாநந்த மேலீடாகிய சாயுஜ்ய முக்திக் கருத்திற்கு விரோதமாகும். ஆனால், ஞானமும் ஆன்மாவுங் கெட்டதென்றும், காணப்படுவ தொன்றுமில்லாமல் ஞேயமாகிய சிவத்தின் செயலில் அழுந்தி நிற்கின்ற சிவஞான நிஷ்டையாஞ் சுகாதீதத்தில் அழுந்துமவதரம் ஒளிக்குளொளியாயிருந்த சிவரூபம் பிரகாசித்து ஆன்மபோதத்தைக் கெடுத்துத் தன் போதமாக்கிக்கொண்ட நிலைமையாகும்.

6. ஈசுர அவிகாரவாதமென்பது: பல துவாரங்களையுடைய ஒருகுடத்திலேற்றிய தீபம்போல அவிகாரமாகிய ஆன்மா எங்கும் அறிவாய் நிற்கும். அன்னண நிற்குமாயினும் அவ்வப் பொறிகளளவாய் அவ்வவற்றைச் சேர்ந்தறிந்து செல்லும். இத்தகைய வான்மாவுக்கு மலபரிபாக முண்டான காலத்து அந்தகார கிரகப் பொருளைத் தீபமேற்றிக் காண்பார்போல அவ்வான்மா ஞானதீபத்தைச் சிவனருளாற்பெற்று வெயில் வெப்பமுற்ற வொருவன் மரநிழல் கண்டாறுவதொப்பத் திருவடி நிழலைச் சேரத்தகும். அதுவே முக்தியென்றாம்.

இதில், அந்தகார கிரகப்பொருளைத் தீபமேற்றிக் காண்பார்போல அவ்வான்மா ஞானதீபத்தைச் சிவனருளாற் பெற்றுச் சிவனையறிவனென்பதால் அங்ஙனம் அவ்வருளுக்கும் ஆன்மா எஜமானன்போலும்! வெயில் வெப்பமுற்ற வொருவன் மரநிழல் கண்டாறுவதொப்பத் திருவடிநிழலைச் சேரத்தகு மென்பதால், உண்டாக்கினவனை யணைக்கவும் வெட்டுபவனை விலக்கவும் செயலற்ற அஃறிணை மரம் சிவன் போலும் அதைச் சென்றடைந்த உயர்திணை யுயிர் ஆன்மாப்போலுமாகின்றன. இம்முடிவும் மேலான முக்திக் கொவ்வாது. எதற்கொவ்வு மென்னில் பரமாநந்த யோகத்தின்மேற் பரமாநந்த போகத்திற் கொவ்வும்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

(4) வாமசித்தாந்த பேதம்

இவ் வாமசித்தாந்த பேதம் இரண்டுள்:-

7. நிமித்தகாரண பரிணாமவாதமென்பது:- அறிவுள்ளவுயிர் சிவமும், உடம்பு சத்தியுமாகும். இதுவன்றி ஆன்மாவும் ஆன்மாவைப்பற்றிய பாசமும் உண்டெனல் பொய். நீக்கமின்றி ஒன்றுபட்டுள்ள சத்திசிவ நடிப்பே இப்பிரபஞ்சம். ஆதலால், எவ்வுடலும் எவ்வுயிரும் சத்திசிவமே என்றறிவது முக்தி யென்றாம். (பரிணாமம் = ஒன்று திரிந்து வேறொன்றாதல்.)

இதில், அறிவற்ற பாசத்தைத்தானே ஞானமென்றும் ஆன்மாவென்று ஒன்றில்லையென்றும் விகற்பித்துச் சொல்வதுமன்றிச் சிவனது கலப்பைக்கொண்டே பசு பாசங்களைச் சிவன் சக்தியாகவுஞ் சொல்லலாயிற்று. அதனால் காலத்திரயத்தும் பாசம் நீங்குவதுமில்லை. ஆநந்தமடைவாரு மில்லையென்ற முடிவாகும். அன்றி, இறப்பவனும் பிறப்பவனுஞ் சிவனென்றாவதுடன் மேலான மோக்ஷமும் கீழான நரகமும் மத்திய சுகதுக்கங்களுஞ் சிவநெறி யென்றேயாம். ஆயின் இது புறச்சசமயத்தில் மாயாவாத முடிவையே பொருந்தும்.

8. சைவவாத மென்பது:- அறிவாய் நின்றறியும் ஆன்மாவானது ஆத்ம தத்துவங்க ளொன்றையுங் கூடாதுள்ள ஆணவமல காரியமாகிய கேவலாவஸ்தையைப் பொருந்தினபோது அறிவற்றிருக்கும். அவண் அறிவற்றிருந்த ஆன்மாவுக்கு அசுத்த மாயையின் தோற்றமாகிய (கலாதிகள்) காலை நியதி கலை வித்தை அராகம் புருடன் மாயையென்னுந் தத்துவங்கள் வந்துகூட அஃது அவற்றோடுங்கூடி வினைப்பயன் துய்த்துத் திரியாநிற்கும். அப்படித் திரிகையில் துலையொப்பாய் பாவபுண்ணிய சமரசமான மலபரிபாகமுண்டான தருணம் சிவன் ஆசாரியமூர்த்தமாய் வந்து தன்னையறிவிக்க வறிந்த ஆன்மாவுஞ் சிவனும் பிரிவற்று எல்லாவற்றோடும் பேதமற்றிருப்பதே முக்தி யென்றாம். புகன்ற புருடன் பிரகிருதி யென்றுஞ் சொல்லுவர். (துலை = நிறுக்குங் கருவி).

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

இதில், அறிவாகிய சத்தும் ஜடமாகிய அசத்தும் இவையிரண்டுங்கூடிய சதசத்துமல்லாமல் அக்கினியின் ஜுவாலைபோலக் கூடியதுதானாயத் தற்போதம் மேலிட்டு நிற்கத்தக்க ஆன்மாவைக் கேவலாவஸ்தையில் அறிவற்றிருக்கு மென்றும் கலாதிகளோடு கூடியறியு மென்றுஞ் சொன்னது பொருந்தா தென்றும், ஆன்மாவுக்கறிவே குணமாகில் அறிவற்றிராதென்றும் அறியாமையே குணமாகில் அறியமாட்டாதென்றுங் காண்பதுடன் ஆன்மாவினறிவும் சிவனறிவுங்கூடிப் பிரிவற்றிருத்தன் முக்தியென்றதனால் இதுவும் மாயாவாதியின் துணிவையே சாருமென்றுங் காண்கலாம். ஆனால் அனுபவ மாத்திர மதிர்த்த ஈசுர ஐக்கியவாதத்திற்றுலக்கிய பிரகாரம் ஆன்மபோதங் கலந்து நின்ற நிலைமையாகும். முக்காலத்தும் அழிவற்ற பொருட்குச் சத்தென்னும் பெயர் சொல்லப்படுதலினால் அன்னவாறு அழியாத்தன்மை வாய்த்த ஆன்மாவுக்குஞ் சத்தென்னும் பெயர் பொருந்துவது ஒரு பக்ஷம் கூடுமென்றும் ஒரலாம்.

பூரணமின்றிச் சிலது பொருந்தியுஞ் சிலது பொருந்தாமலும் மட்டுப்பட்டுள்ளதாய் இதுகாறுந் துலக்கப்பட்ட சமயங்கள் 74-ல் உலகாயிதமுதல் அத்துவிதவாதம் வரையுள்ள புறச்சமயங்கள் 24, பஞ்சபூதாத்ம வாதமுதல் கிரீடாப் பிரம்மவாதம் வரையுள்ளவைகள் 7 விருக்ஷார்ச்சனை மதமுதல் முகம்மது மதம் வரையுள்ளவைகள் 3 பிரம்ம சமாஜம், 1 ஆகக்கூடிய முப்பத்தைந்து சமயங்களினின்றும் பாதஞ்சல மதமுதற் பௌராணிக மதம்வரை யுள்ளவைகள் 7-ம், சுத்தசைவ முதல் மஹா விரதம் வரையுள்ள உட்சமயங்கள். 24-ம் சிலாக்கியமாகும். இவற்றுளுந் தரிசன வவதரத்திலுள்ளனவாகிய ஈசுர ஐக்கியவாதமுதற் சைவ வாதம் வரையுள்ள சைவ சித்தாந்த பேதங்கள் 8-ம் சிலாக்கியமாகும். இவற்றுளும் அதீதப்பட்டுள்ள சத்தியமாகிய சைவசித்தாந்த மொன்றே அதிசிலாக்கியமாகும்.

எச்சமயத்துஞ் சற்சமயமாகிய சைவசமயம் சிலாக்கிய மெனற்கு மேற்கொள்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

அருணாசலப்புராணம் திருக்கண்புதைத்த சருக்கம் 26-வது செய்யுள் ஸ்ரீ பார்வதியாருக்குப் பரமசிவனருளியது :

"அவ்வுரை மறுத்தெற் கோமா னருளுவா னமக்கொப் பான
தெய்வமைந் தெழுத்து மான திருந்துமந் திரமு மில்லை
சைவமே யனைய தான சமயமு மருணை போல
வெவ்வினை தவிர்க்கு மூரு மிலையென விளம்பிப் போனான்."

தாயுமான சுவாமிகள் பாடல்

"சைவ சமயமே சமயஞ் சமயாதீதப் பழம்பொருளைக்
கைவந்திடவே மன்றுள்வெளி காட்டுமிந்தக் கருத்தைவிட்டுப்
பொய்வந் துழலுஞ் சமயநெறி புகுதவேண்டா முத்திதருந்
தெய்வ சபையைக் காண்பதற்குச் சேரவாருஞ் செகத்தீரே."

அன்னிய சமயத்தவர் கொண்ட வஸ்து நிச்சயத்திற்குமேலேயே சைவசித்தாந்தக் கடவுளது திருவடிகளெனற்கு மேற்கோள், தத்துவப் பிரகாசம் பதியிலக்கணம். 2-வது செய்யுள் :

"பூதங்க ளிறையென்பார் புத்த னென்பார்
புகழ்பிரம மேயென்பார் புருட னென்பார்
வேதங்க ளிறையென்பார் சத்தி யென்பார்
மிகுமருக னேயென்பார் *விண்டு வென்பார்
**போதந்தா னரனென்பார் வடிவு ரைப்பார்
புகழுமரு வென்பார்போ யருவுருவ மென்பார்
நாதங்க ளென்பார்கட் கப்பா லாகு
நாதன்றன் திருப்பாத நாமறிந்த புகல்வாம்"

சைவசித்தாந்தக் கடவுளாகிய பரமசிவம்: எந்த வகையினாலும் அளவுபடுத்த முடியாத வாக்கு மனாதீத வஸ்துவெனற்கு மேற்கொள்:

---

*விண்டு வென்பா ரென்றது: விஷ்ணுவைத் தெய்வமெனவர்களை
**போதந்தா னரனென்பா ரென்றது; ஆன்மாவைத் தெய்வமென்கிற ஏகான்ம வாதிகளை.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

திருவாக்காகிய தேவாரம்

"மைப்படிந்த கண்ணாளுந் தானுங் கச்சி
மயானத்தான் வார்சடையா்ன் மாசொன் றில்லான்
ஒப்புடைய னல்ல னொருவ னல்ல
னோரூரனல்ல னுவமை யில்லி
அப்படிய னவ்வுருவ னவ்வண் ணத்தன்
அவனருளே கண்ணாகக் காண்பதல்லால்
இப்படியனிவ் வுருவு னிவ்வண்ணத்த
னிவனிறைவ னென்றெழுதிக் காட்டொ ணாதே"

சைவாகமப்படி சிவஞானதேசிகரருளிய பஞ்சாக்ஷரப் பதிபசுபாச விளக்கம். 11-வது கவி:

"நிராமயமாய் நிஷ்களமாய் நித்தியமாய் நின்மலமாய்ப்
புராதனமா யசஞ்சலமாய்ப் பூரணமாய்ப் புனிதமாய்ச்
சராசரமாய்ச் சாட்சியாய்ச் சத்தியமாய்ச் சித்துருவாய்ப்
பராபரமாய் வெறுவெளியா யிருக்குமந்தப் பரமசிவம்"

சிவபோகசாரம். 24-வது செய்யுள்:

"உருவை யருவை யொளியை வெளியை
யிருளைச் சிவமென் றிராதே-மருளைப்
பிறிந்தறிவிற் கண்டதனைப் பின்னமற வெங்குஞ்
செறிந்தபொரு டானே சிவம்"

சிவனுக்கு உருவம், சொரூபம், சுபாவம், விசேஷம், வியாப்தி, வியாபகம், குணம், நிறம் இவைகள் சொல்லத் துணிந்தால்; ஆநந்தமே உருவம், இச்சை, ஞானம், கிரியை யென்ற சக்திகளே சொரூபம், அசைவற நிற்பதே சுபாவம், தோற்றமும் ஒடுக்கமுமற்றிருக்கையே விசேஷம், எவ்விடமு நிறைந்து நிற்கையே வியாப்தி, கமர்கல் வாள்முனை சானை இவைகளினிடமாய் வியாபித்துப் பிரகாசந்தோன்றுவதுபோற் றோன்றலே வியாபகம், காருண்யமே குணம், எவரெவர் எந்தெந்த விதமாய்க் குறிக்கிறாரோ அவரவர்க்கு அந்தந்த விதமா யிருக்கையே நிறம் என்பதற்கு மேற்கொள்:

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

தத்துவப்பிரகாசம் பதியிலக்கணம் 15-வது செய்யுள்.

"சிவானுபவ மாநந்தஞ் சொரூப மிச்சா ஞானந்
திகழ்கிரியை சுபாவமசை வற்று நிற்றல்
நவவிசேட மாதியந்த மறுகையே வியாத்தி
நாடுமிட மெங்குநிறை வாகும்வியா பகந்தான்
புவியிற்கல் லிற்காண்டல் குணங்கருணை நிறந்தான்
பொருந்தினார் பொருந்தியதே யாகுங் காட்சி
யவமில்சுகா தீதத்தப் புறத்த தாகு
மருஞ்சுத்தி பதையாதங் கழுந்தல்தானே"

உருவமென்றது: வடிவு, சொரூபமென்றது: நிலைவடிவு, வியாப்தி யென்றது: நிறைவு, வியாபகமென்றது: நிறைவின் மேலிடுதலொன்றாம்.

சிவன் சர்வான்மாக்களிலும் வியாபித்து எங்கணுமிருப்பவ னென்பதற்குப் பிரமாணம், மஹாபாரதம் ஆரண்ய பர்வம் அருச்சுனன் தவநிலைச்சருக்கம்:

"விண்ணிலுறை வானவரி லாரடி
படாதவர் விரிஞ்சனரி யேமுதலினோர்
மண்ணிலுறை மானவரி லாரடி படாதவர்
மனுக்கண்முத லோர்க ளதலக்
கண்ணிலுறை நாகர்களி லாரடி படாதவர்
கட்செவி மகீபன் முதலோர்
எண்ணில்பல யோனியிலு மாரடி படாதவர்
விருந்துழி யிருந்து ழியரோ"

"வேதமடி யுண்டன விரிந்தபல வாகம
விதங்களடி யுண்டன வொரைம்
பூதமடி யுண்டன விநாழிகை முதற்புகல்செய்
பொழுதொரு சலிப்பில் பொருளின்
பேதமடி யுண்டன பிறப்பிலி யிறப்பிலி
பிறங்கலர சன்றன் மகளார்
நாதனம லன்சமர வேடவடி வங்கொடு
நரன்கையடி யுண்ட பொழுதே"

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

என்ற செய்யுள்களின்படி நரனாகிய அருச்சுனனானவன் வேடனாக நின்ற சிவனது சென்னியில் வில்லாடிலடித்த காலை யாவத் ஜீவர்களிலும் யாவத் பொருள்களிலும் அவ்வடிபட்டதையும், இன்னணமே 61-வது திருவிளையாடலில் அரிமர்த்தன பாண்டியனுடைய மாணிக்கப்பிரம்படி பட்டதையுமுணர்க. இத்தகைய பண்பைச் சிவனன்றி ஒரு மூர்த்தியுங் காட்டினாரல்லர்.

சிவாத்துவித சித்தாந்த நெறிவிட்ட நிஷ்டைகளெல்லாந் தண்ணிய மாயைக்குட்படலால், அவைகள் மாயா நிஷ்டையெனற்கு மேற்கொள் :

தத்துவப்பிரகாசம் 300 - வது செய்யுள்.

"பொறிகெட விருத்த நிட்டை போகநூ றெரித்த நிட்டை
யருடெரி பாச ஞான மப்பசு ஞான நிட்டை
தெருடெரி யோக நிட்டை திகழ்கர ணங்கள் கெட்டால்
வருமெனு நிட்டை யெல்லா மாயையி னிட்டை யாமே"

சிவாத்துவித சித்தாந்த முக்தியல்லாத முக்கியெல்லாந் தண்ணிய பழிசேர் முக்தி யெனற்குப் பிரமாணம். கொற்றவன்குடி உமாபதி சிவாசர்ரியா ரருளிய சிவப்பிரகாசம் :

"அரிவையரின் புறுமுத்தி கந்த மைந்து
மறுமுத்தி திரிகுணமு மடங்கு முத்தி
விரியும்வினை கெடுமுத்தி மலம்போ முத்தி
விக்கிரக நித்தமுத்தி விவேக முத்தி
பரவுமுயிர் கெடுமுத்தி சித்தி முத்தி
பாடாண முத்தியிவை பழிசேர் முத்தி
திரிமலமு மகலவுயி ரருள்சேர் முத்தி
திகழ்முத்தி யிதுமுத்தி திறத்த தாமே"

பொருள் : உலகாயிதம், புத்தம், சமணம், பிரபாகரம், பேதவாதம், சிவசமவாதம், மாயாவாதம், பாற்கரியம், சங்கிராந்தவாதம், பாஷாணமோக்ஷவாதம் என்ற பத்து சமயங்கட்கும் முறையே அரிவைய ரின்புறு முத்தியாதியாகப் பாஷாண முத்திவரையுள்ள பத்துவகையும் பழிசேர்முத்தியென்றாம். இவற்றுள் அந்தந்த

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

மதங்களின் பிரிவுகளும், அக்கருத்துள்ள சமஸ்த சமயங்களின் முடிவுகளும் அடங்கும்.

இனி மேற்சொற்ற *சைவ சித்தாந்தத்தை முந்நூலாகிய ஆகமத்திலுள்ளவாறே இங்ஙனஞ் சுருக்கி விளக்கக்கடவேம்.

சைவ சித்தாந்தம்

கேள், பிருதிவி மேருத்தாரகமாய் அண்டமளவாகவும், அப்பு பிரகிருதியளவாகவும், தேயு மாயையளவாகவும், வாயு சதாசிவ தத்துவமளவாகவும், ஆகாயம் சத்தி தத்துவமளவாகவும் காரணவடிவாய்க் கலந்து நிற்குந் தன்மையையுடைய இப்பூதியங்கள் தானே காட்சிக்கக் கூடிய இப்பிரபஞ்சமும் காயமுமெனக்கண்டு இவை ஜடம் இவற்றை நடத்துவது சுத்தமாயா காரியமாய்ப் பிரமாதி பஞ்சகர்த்தாக்களென வோர்ந்து அப்பூதியங்கள் ஆன்மாவன்றென நீங்கியிருப்பதான முதலிற் பஞ்ச பூதப் பழிப்பையுடைத்தாகி அதன்மேல் சப்தாதி புலனைந்தையும் விஷயமாகவுள்ள சுரோத்திராதி பொறிகளாகிய ஞானேந்திரியங்கள் ஒன்றை யொன்றறியச் செயலற்றதனாலும் வாக்காதி கன்மேந்திரியமைந்தும் வசனாதியைந்தும் விந்துவாகிய மூலாதாரத்திற் பிறக்கின்ற சூக்குமையாதி வாக்கு நாலும் அறிவற்ற கருவிகளாதலாலும் இவை ஜடம் இவற்றை யறியுங் கருவியாய்க் கொண்டறிந்தும் நடத்துங் கருவியாய்க் கொண்டு நடத்தியுமுள்ள ஆன்மா வேறென வோர்ந்து அக்கருவிகளை நீங்கியிருப்பதான பொறியற வுணர்தலை யுடைத்தாகி; அதன் மேல் அறுவகை ருசியும் அறிவானையன்றி அது தன்னையறியாதது போன்ற பண்புடைய மனாதிகரணங்களாலும் ஒன்றின் குணமொன்றுக் கில்லாதிருத்தலால் இவை ஜடம் இவற்றைக் கருவியாகவுடைய ஆன்மா வேறெனவோர்ந்து அவைகளை நீங்கியிருப்பதான அந்தக்கரணசுத்தியையுடைத்தாகி; அதன்மேல் தாமத முலிய முக்குணங்களும் அவைகட்கு மூலமாகிய கலாதிகளேழும் ஜடம்

*சைவசித்தாந்தம் = சைவாகமத்தின் அறுதியான முடிவு

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

இவற்றைச் சுத்த தத்துவமாகிய சிவதத்துவமைந்தில் சத்தி தத்துவமானது கலை காலம் நியதி யென்பவைகளையும், சுத்த வித்தியா தத்துவமானது வித்தையையும், ஈசுர தத்துவமானது அராகத்தையும், சிவதத்துவமானது அசுத்த மாயையையும், சதாக்கிய தத்துவமானது புருடனையும், கூறிய சுத்ததத்துவமாகிய ஐந்தையும் அதீத சிவ சத்தியுமாக நடத்தும் அதனால் அத்தத்துவங்கள் ஜடமென வோர்ந்து நிற்பதான கலாதிஞான நிராகரணத்தையும் சுத்த தத்துவ தூஷணத்தையு முடைத்தாகி; அதன்மேல் ஆணவ மலத்தின் காரியமாகிய கேவலாவஸ்தையில் துரியாதீதப்பட்டு மூலாதாரத்தில் மாயா மலம் வியாத்தமாக மற்றுள விகற்ப நீங்கி இருளில் விழித்த விழி யிருளாகவே நிறைந்துளது போலத் தன்னிலையுங் கருவிகளினிலையுந் தெரியாமல் அவைகளைத் தன்போற் காட்டுகின்ற ஆணவமலத்தை யோர்தலான கேவல தரிசனத்தை யுடைத்தாகி; அதன்மேல் அக்கேவலத்தை நீங்கியுணர்தலான கேவலா தீதத்தை யுடைத்தாகி; அதன்மேல் மேல்விளக்கிய ஆணவமல விருட்டன்மையாகிய தன்னிலைமையைக் கண்ட அறிவுதானே தனதாத்மரூபமென வோர்ந்து அவை தத்துவங்களிடமாய் ஜீவிக்குமுறை காண்பதான ஆன்ம தரிசனத்தை யுடைத்தாகி; அதன்மேல் தனக்கறிவாய் நின்றறிவிக்கும் அருளாகிய சிற்சத்தியின் ஞானத்தை யுணர்தலான ஞானதரிசனத்தை யுடைத்தாகி; அதன்மேல் அந்த ஞானத்துள்ளே யடங்கித் தனக்கொரு செய்லுமின்றித் தான் அதன் வசத்திருத்தலான ஞானாதீதத்தை யுடைத்தாகி; அதன்மேல் பிரகாசிக்கின்ற அந்த ஞானவொளியி னிடத்து உறைதலு நெகிழ்தலுமின்றித் தான் அருளின் செயலாய்ப் பொதுவான நிலைமையினிற்கு மவதரம் அவ்வொளி மத்தியான சூரியப்பிரகாசம் போல எவ்விடத்தும் பிரகாசிக்கக் காண்பதான பரைதரிசனத்தை யுடைத்தாகி; அதன்மேல் நீக்கமும் கேடுமற்ற பிரகாசமாயுள்ள அந்தப் பரைதானே சிவனினைந்த குணமாய் நிற்கு நிலைமையைத் தான் காணுமவதரமான பரை வியாப்தத்தில் தான் உறைதலு நெகிழ்தலுமின்றி அதன் வசமாய் மறைய நிற்பதான பரையோகத்தை யுடைத்தாகி; அதன்மேல் அந்த யோகத்திற்குப் பயனாகிய சுகவோசை யென்னுங் கிங்கிணி சிலம்பு கண்டாமணி,

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

சங்கம் யாழ் தாளம் புல்லாங்குழல் பேரி மத்தளம் முகில் முதலிய நாதங்களை முன்னே கொண்டு தோன்றா நிற்கும் பரைபோகத்தை யுடைத்தாகி; அதன்மேல் அந்நாத மெல்லாம் விளங்க அதனிலுருகி நீங்கி யிருப்பதான பரையாதீதத்தை யுடைத்தாகி; அதன்மேல் (மேற்றுலக்கிய பரையினொளிக்கு ளொளியால் அதாவது: வெய்யிலுக்குள் அவ்வெய்யிலைத் தரற்காதாரமான சூரியனைப் போலுள்ள) சிவமாகிய வஸ்து இப்பறைக்குப் புறம்போ, உள்ளடகமோ, கூடி நிற்பதோ, விகாரப்பட்டு நிற்பதோ, உப்பும் நீரும்போல விரவி நிற்பதோ, அல்லது தான் முதலாய் அது குணமாய் நிற்பதோ வெனத் திகைத்து நிற்பதான ஜாக்கீராதீதத்தை யுடைத்தாகி; அவ்வவதரம் நின்மல ஜாக்கிரம், நின்மல சொப்பனம், நின்மல சுழுத்தி, நின்மல துரியம், நின்மல துரியாதீதமென்னும் ஐவகையான சுத்தாவஸ்தையை யுடைத்தாகி; அதன்மேல் ஆகாசத்தில் வாயு வடங்கினாற் போலப் பரையாதீதத்திற் போதக் கிளைப்பற்றிருக்கு மவதரம் (ஒளி) துணிவளர் படிகத் தூணின்கண் மாசற்ற மத்தியான வேளையிற் பொருந்தும் உள்ளொளியனைய மேலோங்கும் சுகரூப தரிசனத்தை யுடைத்தாகி; அதன் மேல் அத்தரிசன முறைமையாய் நிற்காமலும், பாவகம் விட்டிராமலும், அந்த நேர்தானே நேரென்று தரிசியாமலும், அந்நிலையிலுறையாமலும், உறையாதிராமலும், அங்ஙனம் அப்பொருளில் விழித்துத் தன்னை யுயிரென்று கொள்ளில் இரண்டுபடும். அதனால் அப்படிக் கொள்ளாமலும், அது நாமென்று தியானிக்கில் அஞ்ஞானமாம். அதனால் அப்படித் தியானிக்காமலும், எல்லா நாமென வெண்ணில் ஏகான்ம வாதமான குற்றமாம். அதனால் அப்படி யெண்ணாமலும், தான் நின்ற நிலையிற் பதைப்பற்றுத் தன் செயலறச் சும்மா விருப்பதான சுகாதீதத்தை யுடைத்தாகி; அதன்மேல் அந்தச்சுகாதீத நிலையிலே தியானித்திராமலும், தியானிக்க வெண்ணுமளவில் இருள் வந்து மூட அவ்விருள் தானாயிராமலும், அவ்விருளின் மேலீட்டால் வருந்தி நித்திரையிலகப்பட்டு நிலை விட்டுறங்காமலும், காண்பவன்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

கெடாமற் கெட்டால் அதாவது : பாசத்திலும் பாசஞானத்திலுஞ் செல்லாதுள்ள பசுவாகிய ஞாதுரு தனது பசுஞானத்தை யடக்கிக்கொண்டு ஞேயமாகிய பதியில் அழுந்தினாலென்னுஞ் சுகாதீதத்தில் அழுந்து மவதரம் உள்ளொளியா யிருப்பதான சிவரூபத்தை யுடைத்தாகி; அஞ்ஞான்று இரும்பை யடக்கிக் காந்தங் கைக்கொள்ளுவதனைய ஆன்மாவை யுள்ளடக்கிக் கொள்ளுஞ் சிவமானது தன்னோடு கூடிய பொன்னைத் தனக்குள்ளடக்கித் தானாய்த் தோற்றும் இரசகுளிசம்போலத் தற்சேர்ந்த ஆன்மபோதத்தைத் தன் போதத்திற்குள்ளடக்கியும், விகற்பிக்கும் உப்பிரசத்தை யடக்கிக்கொண்ட ஏனைய ரசம்போலத் தன் போதமாகக் கலந்தும், அவ்வுப்பினது உருவத்தையடக்கித் தன்னிற் கலந்து காண்பார்க்கு நீராயே தோற்றுவது போலப் போதவடிவை மாற்றியும் அவ்வுப்பு அளத்திற் பட்ட துரும்பைக் கெடுத்து அவ்வுப்பாக்குவது போல ஆன்மபோதத்தைக் கெடுத்துத் தன் போதமாக்கியும், அக்கினியி னொளியை மேலிடாமல் அடக்கும் ஆதித்த கிரணம்போல ஆன்மபோதத்தை மேலிடாமல் மறைத்தும், கண்ணின் பார்வையை யடக்கித் தன்னொளி வசமாக்குங் கதிரவ கிரணம்போல ஆன்மபோதத்தைத் தன்வசமாக்கியுமுள்ள முறைமையில் மனவாக்குகளால் எழுந்திருக்கினுந் தன் வடிவாகவே யெழுந்துற்றாலல்லது காணவொண்ணாதது தொட்டு அனுபவிப்பானும் அனுபோகமும் ஒன்றுபோல நின்று தோன்றிக் காற்றாடி ஆடி யடங்கியது போலத் தற்போத மடங்க நின்ற தருணம் துளி செறிந்த நீரிலும் வெளி செறிந்த கண்ணாடியிலும் வேற்றோர் உருவொளி தோன்றுவதுபோல அறிவின் செருக்குயர் ஆநந்தத்திலே வெளிப்படுகின்ற பரமாநந்த தரிசனத்தை யுடைத்தாகி; அதன் மேல் 'நந்தல்,' என்ற ஒரு சொல்லானது, கேட்டுக்கும் ஆக்கத்துக்கும் பெயராயிருப்பதில் அச்சொற் பயனைக் கொள்வார் வேற்றுமையுறக் காண்பதல்லது அச்சொல் வேற்றுமையுறாது நிற்பதன்ன அந்தப் பரமாநந்த தரிசனத்தில் ஆத்மாவாகிய தனக்குத்தானே தற்போதக் கேடுஞ் சுகமுமேயன்றி தன்னை வசங்கொண்ட வஸ்துவுக்கின்றென்னு

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

முறைமையில் தாள்-தலை, தாடலையென்னுஞ் சொற்புணர்க்கையும் கால்-தலை, காறலை யென்னுஞ் சொற்புணர்க்கையும் போல ஒன்றென்னலுமாகாமல் இரண்டென்னலுமாகாமல் இரண்டொன்றென்னலுமாகாமல் உவமான ரகிதமாய் வஸ்துவாகிய சிவமும் ஆன்மாவாகிய தானுங்கூடி நிற்பதான பரமாநந்த யோகத்தை யுடைத்தாகி; அதன்மேல் அதியின்ப ரசத்தை யருந்துவார் சுகம் போலும் நிழலிற் சேர்ந்தார் சுகானுபவம் போலும் அந்தப் பரமாநந்த சுகத்தின் வசமா யழுந்துவதான பரமானந்த போகத்தை யுடைத்தாகி; அதன்மேல் சக்கரை தேன்பால் கண்டு இவற்றை விரவியருந்தும் நல்ல நாவின்றன்மை போல அதாவது; அந்த மதுரம் நாவாகாமலும், நாவந்த மதுரமாகாமலும் அருந்துந் தன்மையால் அங்ஙனே நாவானது மதுரவடிவாய் அம்மதுரத்தில் அழுந்தி அது தானாவது போலனுபவிப்பதான ஆன்மலாபத்தை யுடைத்தாகி; அதன்மேல் தனக்கும் போதுமானப் பூமதுவுண்ட வண்டு புட்பத்தைச் சலனஞ் செய்யாமலும் அதன்கண் ணுறைகின்றே மென்னும் பெற்றி யுணராமலும் அதன்பாற் சொக்கிக் கிடக்குந் தன்மைபோலும் தாக்குண்ட விஷ முதிர்ந்து மேலிட்ட காலை அவ்விஷத்தின் வசத்தாய் அதுவென்றும் தானென்றும் தெரியாமல் மூர்ச்சையாந் தன்மை போலும் கரண விகாரமும் போதவிகார்மும் அறுதியாகக் கெட்டுத் தன்வசத் தடங்கி வஸ்துவை யகலாத அசிபத அத்துவித சிவசாயுஜ்யமாகிய பரமுக்தியை யுறுவதான சொல்லரும் பரமாநந்த மேலீட்டை யுடைத்தாகி விளங்குவதென்றாம்.

இப்பரமாநந்த மேலீடு இன்னண மென்பதற்கு மேற்கோள் தத்துவப்பிரகாசம் 298-வது செய்யுள்:

"மதுவுண்ட வண்டு போலும் வல்விட முதிர்தல் போலுந்
திதமுற விகாரங் கெட்டுத் தெளிந்தடங் குவையே யாயின்
அதுவிரிந் தகல வொட்டா வதுசாயுச் சியத்த தாகுங்
கதியது வந்த வர்க்காங் கணக்கையார் கணிப்பார் தாமே"

இன்னமும், இந்த ஐக்கியமே அதீத பரமுக்தி யெனற்குப் பிரமாணம்-

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஸ்ரீ மாணிக்கவாசகர் திருவாசகம் திருப்படையாட்சி 8-வது பாட்டு :

"சங்குதிரண்டு முரன்றெழு மோசை தழைப்பன வாகாதே
சாதி விடாத குணங்க ணம்மோடு சலித்திடு மாகாதே
அங்கிது நன்றிது நன்றெனு மாயை யடங்கிடு மாகாதே
ஆசையெ லாமடி யாரடி யோமெனு மத்தனை யாகாதே
செங்கயலொண்கண் மடந்தையர்சிந்தை திளைப்பன வாகாதே
சீரடி யார்கள் சிவானு பவங்க டெரிந்திடு மாகாதே
எங்கு நிறைந்தமு தூறு பரஞ்சுட ரெய்துவ தாகாதே
ஈறறி யாமறை யோனெனை யாள வெழுந்தருளப் பெறிலே"

திருவதிகை மனவாசகங் கடந்தார் உண்மை விளக்கம் 16-வது தூக்கு:

"முத்தி தனையடைந்தேன் முந்து *பழம் போதங்கி
வித்தகமாம் வீணை யிவையிற்றி - னொத்த
இரதமணம் வெம்மை யெழினாதம் போல
விரவுவரென் றோதும் விதி"

ஸ்ரீ அருணகிரிநாதர் கந்தரனுபூதி 28-வது கவி:

"ஆனா வமுதே யயில்வே லரசே
ஞானா கரனே நவிலத் தகுமோ
யானா கியவென் னைவிழுங் கிவெறுந்
தானாய் நிலைநின் றதுதற் பரமே"

ஒழிவிலொடுக்கம்

"என்னாணை யென்னாணை யென்னாணை யேகமிரண்
டென்னாமற் சும்மா விருவென்று - சொன்னான்
திருஞான சம்பந்தன் சீகாழி நாடன்
அருளாளன் ஞானவினோ தன்"

*பழம் = பழமும் ரசமும் போலவும், போது = பூவும் மணமும் போலவும், அங்கி = அக்கினியும் வெப்பமும் போலவும், வீணை = பண்ணும் ஓசையும் போலவும், இரண்டறப் பொருந்தி நிற்கும் நிலைமையாம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

சசிவர்ண போதம்

"செறிந்த காரண காரி யங்கள் சிதைந்து மேலுறு சித்ததாய்
அறிந்த வாதனை தானு மற்றது அசிப தப்பொரு ளாவதே"

இந்த அசிபத ஐக்கிய முக்தியில் சுவாசம் அடங்கு முறைமையும் வாய்க்கின்ற சித்திமுறைமையும் சாதனையிலெப்படி யென்னில்;

மனிதனுக்குத் தூங்குங் காலத்தில் அங்குலம் - 75, ஸ்திரீ சம்போகத்தில் - 48 ¾ ஓடும்போது - 25 ½, நடக்கும்போது - 18, போஜனஞ் செய்யும்போதும் பேசும் போதும் 13½, சாதாரண வேளையில் - 9, என்ற விதமாய் வெளியே போகும். இந்த ஒன்பதில் விஷயங்களை அடக்கினால் - 8½- ஆகும். 7½-ல் சமாதி கூடும். 6 ¾ ல் கடாக்ஷ வாக்குண்டாம். 6-ல் திரிகால வர்த்தமானந் தெரியும். 5¼ - ல் ஞான திருஷ்டியாம். 4½-ல் ஆகாசகமன முண்டாம், 3¾-ல் நிமை கொட்டுமளவில் பதினான்குலகுஞ் சுற்றி வரலாம். 3-ல் அஷ்டமாசித்தியாம். 2¼-ல் நவநிதியுண்டு பண்ணலாம். 1½-ல் ஆத்மாவைப் பார்க்கலாம். ¾ ல் ஈசுராங்கிசமாகி நிழல் காணாது. உள்ளடங்கினால் அசிபத ஐக்கிய நிருவாணமாம். இது தானே மோக்ஷம். இந்த ஸ்திதியாகிய ஞான சிவராஜ யோகத்தில் களைப்பு பசி தாகம் சிரமம் வியாதி மரணம் முதலான யாதொன்று மில்லை. சாக்ஷாத் சிவமயமாய்ப் பிருதிவி முதலிய பஞ்ச பூதங்களாலும் யாதொரு அபாயமின்றி யிருக்கிறதுந் தவிர, வெகு தூரத்திற்கு மலய மாருதம் போலத் தேகத்திலிருந்து திவ்ய வாசனையும் மஹாதேஜசு முண்டாம். காற்று ஆகாரம் ஜலம் இம்மூன்றும் அவசியமில்லை. இந்தப் பிரகாரமே பரமேஸ்வரன் பார்வதிக்கு உபதேசித்ததைச் சுரோதயமென்னு நூல் சொல்லா நிற்கும்.

சுவாசத்தை யடக்குவதென்பது: அடையோகிகளைப் போல மூச்சைப் பிடித்திழுப்பதல்ல, இராஜ யோகமாய் விஷயத்திற் செல்லு மனதை யடக்க அடங்கு மென்பதாம். பிரமாணம்:

பரமேஸ்வரன் பார்வதிக்குபதேசித்த நிஷ்டானுபூதி 11-வது தொடர்பு:

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

"விண்ணை மூடக் கவுசனையை விரிக்கு மொருவன் விரகதெனப்
பண்ணும் யோகத் துறைநினைவோர் பவனத் தடங்கு மதுவிடுத்து
எண்ணுங் கருத்தை முன்னடக்க வியங்கும் வழியும் பின்னடங்குங்
கண்ணை மறைக்க வான்மறையுங் கணக்காம் படிநீ கண்டுகொள்ளே"

ஸ்ரீ அருணகிரிநாதர் கந்தரலங்காரம் 71-வது செய்யுள்:

"துருத்தி யெனும்படி கும்பித்து வாயுவைச் சுற்றிமுறித்
தருத்தி யுடம்பை யொருக்கிலென் னாஞ்சிவ யோகமெனுங்
குருத்தை யறிந்து முகமா றுடைக்குரு நாதன்சொன்ன
கருத்தை மனத்தி லிருத்துங்கண் டீர்முத்தி கைகண்டதே"

என்றாம்.

வேதாந்த சித்தாந்த சமரசம்

மேற்சொன்ன சித்தாந்த முடிவே வேதாந்த முடிவும். எப்படியேல், ஜீவனானது முத்தியடையுமிடத்தில் பதி பசுபாச மென்னும் மூவகையு முண்டென்கிற 28 -ஆகம சித்தாந்தமும், கூடஸ்த பிரம்ம ஐக்கிய முத்தியைப் பிரதிபாதிக்கின்ற 4-வேத சித்தாந்தமும், "துவம்" "தத்" "அசி" என்ற பதத்திலடங்கி யிருக்கிறது. அதனால் மூன்றும் ஒன்றேயோகும். இத்தையே "தொந்தத்தசி" என்றுஞ் சொல்லப்படும். இந்த வாக்கியந்தான் சாமவேதத்தின் சாந்தோக்கிய வுபநிஷத்தில் "தத்துவமசி" என வருகின்றது. அதை இதற்கு முந்திய *வியாசத்தில் வியாக்கியானத்தோடு மொழிந்திருக்கின்றோம். 28-ஆகமங்களில் இறுதியான வாதுளாகமத்தில் ஒன்றெனும் இரகசியத்தை யனுசரித்துச் சொல்லப்படுகிற 4-வேதத்துள் பாகமாகிய சாம வேதத்தில் அத்தியான்மிகமாகிய பூர்வபாகமும் சிவாத்துவிதமாகிய உத்திரபாகமும் யுக்திக்கொவ்வும்படி உதாகரிக்கப்படும். அதனால் சாம வேதத்தின் உத்திரபாகமே யதார்த்த மென்றாம். மேனொடித்த தொந்தத்தசி என்னும் பதம் பின்னை அபின்னை நிஷ்களசிவம் எனவும், ஒரு பற்றுமின்றிச் சுத்தமாயிருக்கிற தென்கிற கூடஸ்தனாயிருத்தலும் அதிஷ்டான பிரம்மம் தானாகப் பிரகாசித்தலும் முறையே துவம்பத தத்பதமென தனித்தனி

* வேதத்தைக் குறித்த வியாசம்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஒவ்வொரு வன்னமாய் விளங்குமெனவும், அசி பதத்திற்குமட்டும் அங்கமும் சிவமுமென இரண்டு வன்னமாய் விளங்குமெனவுமாம்.

(2) சிஷி :- புறச்சமயங்களிலும் புறப்புறச் சமயங்களிலும் நம்பிக்கையுண்டாய் அவைகளிற் குறித்த நெறி நிற்பார்கட்கு யாதொரு சித்து அற்புதம் வாய்ப்ப துண்டா?

குரு :- தகுந்த வாற்சல்லியத்துடன் கடவுள்பாற் பக்திபண்ணுவார்கட்கு அற்புதத்திறமையுண்டாவதே. அப்படிப்பட்ட தன்மை அச்சமயங்களில் அருமைதான். அஃது உட்சமயங்களில் மிக்கனவுண்டு. அன்றி, சுண்ணத்தின் மஞ்சளிடச் செவந்து காட்டுவதும் கடுக்காய் நீரில் அன்னபேதியிடக் கறுத்துக்காட்டுவதும் இயல்பனைய யாதொரு கிரியையாலுஞ் சித்தியுண்டாவதுண்டு. சித்திகளெல்லாம் சித்துபுருஷாள் வழியிலேயே சிரேஷ்டம். அச்சித்தர் கணங்களென்கிற எண்ணிறந்த கூட்டங்கள் சிவனடியார்களாகவும், ஈசாரூபம் பெற்றுய்பவர்களாகவும் இருக்கிறார்கள். அஃதெல்லாஞ் சித்துவிலாச லீலா வினோதங்களென்றறிக! (வாற்சல்லியம் = உருக்கம்)

(3) சிஷி :- நன்று. அன்னிய சமயிகட்கும், அகச்சமயிகட்கும் சித்திக்கின்ற கதிவிவரதத்தையும் இங்ஙனம் பிரசாதித்தருள வேண்டும்.

குரு :- எந்தக் கொள்கை யெப்படி யிருந்ததோ அந்தக் கொள்கையிலறிந்த இடமே கதியாகச் சித்திக்கலாகும். எப்படியென்றால்; தூலபஞ்ச பூதத்தை ஆன்மாவென்கிற உலகாயதர் சாருவாகரென்பவருக்கும் பஞ்சபூத பிரபஞ்சம் நித்தியமென்கிற பாட்டாசாரியர் மீமாஞ்சகர் பஞ்சபூதாத்ம வாதியரென்பவருக்கும் தூலபஞ்ச பூதபுவனமும், புத்தியை யான்மா வென்கிற சவுத்திராந்திகர் யோகசாரம் மாத்துமிகர் வைபாடிகர் நையாயிக ரென்பவருக்குப் புத்தி தத்துவத்தின் கீழுள்ள புவனமும், குணத்தை யான்மாவென்கிற நிகண்டவாதியர் ஆசீவகரென்பவருக்குக் குணதத்துவத்தின் கீழுள்ள புவனமும், புருடனை யான்மா வென்கிற சப்தப்பிரமவாதியர் பாற்கரியர்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

மாயாவாதியர் பாதஞ்சல ரென்பவருக்குப் புருடதத்துவ புவனமும், பிரகிருதியை யான்மா வென்கிற நிரீசுரசாங்கியருக்குப் பிரகிருதி தத்துவ புவனமும், அகங்காரத்தை யான்மாவென்கிற வைசேஷிகர்க்கு அகங்காரதத்துவ புவனமும், இந்திரியத்தை யான்மா வென்கிற இந்திரியாத்மவாதியர்க்கு இந்திரியதத்துவ புவனமும், அந்தக்கரணத்தை யாத்மாவென்கிற அந்தக் கரணாத்மவாதியர்க்கு அந்தக்கரண தத்துவ புவனமும் பிராணனை யான்மா வென்கிற பிராணாத்ம வாதியர் பிராணபந்தன அடயோக ரென்பவர்க்குப் பிராணதத்துவ புவனமும், சாத்துவிக குணத்தை யான்மாவென்கிற சாத்விக குணாத்மவாதியர்க்குச் சாத்துவிக குணதத்துவ புவனமும், ஒவ்வாநடையுள்ள பிரம்ம சமாஜர் அனேகேசுரவாதியர் அச்சமனாவாதியர் விஸ்வரூபமதஸ்தர் விருக்ஷார்ச்சனை மதஸ்தர் ஜோதிடர் மந்திரவாதியர் இயந்திரவாதியர் கர்மவாதியர் ஔஷதவாதிய ரென்பவர்க்கு மாயாபோகத்தில் உரிய போகமும், ஒவ்வா நடையுள்ள மதஸ்தர் என்பவர்க்கு நரகமும் அசுத்தமாயாபோகத்தில் ஹீனபோகமும், துவிதவாதியர் அத்துவிதவாதிய ரென்பவர்க்குப் பிரகிருதிக்குக் கீழாக விஷ்ணு விருக்கிற குணதத்துவ புவனமும், பிரஜாபத்தியர்க்குப் பிரம்மாவிருக்கின்ற குணதத்துவ புவனமும், பௌராணிகர்க்கு பிரகிருதிக்கு மேலுள்ள அராகதத்துவபுவனமும், காபாலிகர்க்குக் காலதத்துவ புவனமும், சூரியவாதியர் சந்திரவாதியர் அக்கினிமதஸ்த ரென்பவர்க்கு அவ்வம் மண்டலங்களும், துவிதவாமர் கௌளராதியோர்க்குப் பூதப்பிரேத பைசாசபதமும், அசுத்தசைவர் சித்தாந்த சைவர் அனாதிசைவர் ஒவ்வாநடையுள்ள அனுசைவரென்பவர்க்கு மாயாபோகமும், காளாமுகர்க்கு பிரகிருதிக்கு மேல் அசுத்த மாயாதத்துவத்திலுள்ள ருத்திர பதமும், பேத சைவர்க்கு அசுத்தமாயைக்கு மேற் சுத்தமாயா தத்துவத்திலுள்ள ஈசுரபதமும், வாமதந்திரர் மிச்சிரவாமர் வாமசித்தாந்தர் நிமித்தகாரண பரிணாமவாதியராகிய சாக்தேயருக்குச் சத்திதத்துவ புவனமும், பாசுபதர்க்கு மாயாதத்துவ புவனமும், பைரவர்க்கு மகேசுர தத்துவ புவனமும், மஹாவிரதர்க்குச் சுத்தவித்தியா தத்துவபுவனமும், சுத்தசைவர்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

மிச்சிரசைவர் அவாந்தர சைவர் ஆதிசைவர் ஈசுர ஐக்கியவாதியர் பாஷாண மோக்ஷவாதியர் பேதவாதியர் சிவசமவாதியர் சங்கிராந்தவாதியர் ஈசுர அவிகாரவாதியர் சைவவாதிய ரென்பவர்க்குச் சிவதத்துவத்தில் உரியபதமுத்தியும், காணாபத்தியராதி அந்தந்த மூர்த்தியுபாசனை யோர்க்கு அந்தந்த மூர்த்தியினுடைய பதப்பிராப்தியும் வாய்க்கு மென்றாம். இவற்றுட் பரமுக்தியல்லாத புவன போகங்களெல்லாம் ஜனனமரணத்திற் குடன்படத்தக்கனவாகும்.

உரிய சான்று

பரமேஸ்வரன் பரமேஸ்வரிக்கருளிய தேவிகாலோத்தரம், தமிழ் மொழிபெயர்ப்பு 14 - வது தூக்கு:

"எந்த வாருயிர் யாதோர் பொருளினைச்
சிந்தை யாற்பற்றிக் காரியஞ் செய்திடில்
அந்த யோனிய தாமென் றறிவினால்
பந்த மில்பொருள் பற்றுத றக்கதே"

என்பதாம்.

மேலே சிலர்க்கு நரகமும் வாய்க்குமென்றது யாது காரணமென்னில், வாதுளாகமப்படிச் சீகாழிச் சட்டநாத வள்ளலார் அருளிய சதாசிவரூப மென்னும் நூலில் அதன்ம விலக்கணஞ் சொன்ன 105 -ம் சூத்திரத்தில்:

"ஞானந் தெய்வந் தருமநல் லருத்த
மீனமில் வீடில் வைந்துநிந் தனையே"

அருத்தம் = லௌகிக வைதிக சைவமாதி ஞானத்தை நிந்தித்தல், சிவமூர்த்திப்பபேதங்களான தெய்வங்களை நிந்தித்தல், (ஹிம்ஸை) கொல்லாமை யாதி தன்மத்தை நிந்தித்தல், வேதாகமாதி அர்த்தங்களை யிகழ்தல், மோக்ஷத்தை அல்லவென்னல் என்னும் ஐவகையான மாறுபாடுடைமையே அதன்ம லக்ஷணமென்றபடி. மேற்படி மதஸ்தர் அவ்விலக்ஷணத்தவராவதில் ஊன் புசிப்பு நிமித்தம் கொல்லாமை நீத்து உயிர்க்கொலையை விடா தவராகின்றார். அதனால், நூல் 106-ம் சூத்திரம்:

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

'இந்த வதன்ம மிசைந்தவர் நரகடைந்
தந்தமில் துன்ப மனுபவிப் பாரே'

சிவஞானதேசிகர் பஞ்சாக்ஷரப் பதி பசு பாச விளக்கத்திற் பாசவிளக்கம் 26வது தூக்கு:

"அம்மா வெனவலற வாருயிரைக் கொன்றருந்தி
இம்மா னிடரெல்லா மின்புற் றிருக்கின்றார்
அம்மா வெனுஞ்சத்தம் கேட்டகன்ற மாதவர்க்கும்
பொய்ம்மா நிரயமென்னிற் புசித்தவர்க்கென் சொல்லுவதே"

என்றருளப்படுமாறு அவரும் அவர்போன்ற நடையுளாரும் நரகிடையழுந்தல் திண்ணமே. மேற்கவியில் நிரய மென்றது நரகம்.

காருடம் தக்கிணம் வாமம் பூதம் என்னுந் தந்திரங்களில் தீக்ஷை பெற்றவர்க்கு முறையே சத்தி தத்துவத்திலுள்ள நிவிர்த்தி பிரவிர்த்தி பிரதிஷ்டை வித்தை சாந்தியென்ற புவனங்களும், சைவத்தில் ஔத்திரி தீக்ஷயில் சரியைக்குரிய விசேஷ சமயதீக்ஷ பெற்றவர்க்கும் மேற்படி கிரியா யோகத்திற்குரிய விசேஷ தீக்ஷ பெற்றவர்ககும் சுத்த மாயாதத்துவத்தி லிருக்கிற விஞ்ஞான* — .....மேலாகிய சாலோகாதிபத.........., ஞானத்திற்குரிய—வாண்—யிற் சத்திய நிருவாண தீக்ஷ பெற்றவர்க்குத் தீக்ஷபெற்ற—விதேக கைவல்ய சிவசாயுஜ்யமும், அசத்திய நிருவாண தீக்ஷபெற்றவர் ஓதல் முதலைந்து முடைத்தாய்த் தெளிந்து நிஷ்டை கூடிப் பஞ்ச பாசங்கழன்று முடிவிற்சிவ சாயுச்சியமும் நிஷ்டைகூடாமல் ஓதல் முதலைந்தின்பின் தெளிதலின்றிறந்தோர்க்குச் சுத்த தத்துவ புவனங்களில் அபரமுத்தி கிடைத்துப் பின்னர் இவண்மீளாமல் அவணிருந்தவாறே பரமுக்தியும்,தெளிதலின்றி ஓதல் முதலியவற்றினின் றிறந்தோர்க்குப் பதமுக்தி கிடைத்துச் சிவானுபோகம் அனுபவித்த பின்னர் இவண் மீண்டொரு ஜன்மம் புண்ணியவான்கட்குப் புத்திரராய்த் தோன்றி நிருவாண தீக்ஷபெற்று நிஷ்டைகூடி ஞானமடைந்ததின்மேல் சிவ சாயுஜ்யமும், இன்னணமே சாலோகாதி பதமுக்தி பெற்றவர்க்குச் சிவசாயுஜ்யமும், அனுஷ்டானம் தானம் (நல்லடியார்க் கன்னமளித்தல்) மயேசுர பூஜை இவைகள் செய்கிறவர்க்குச்

* இந்நூலாசிரியராகிய சுவாமிகள் எழுதிவைத்த மூலக் கையேட்டுப் பிரதியில் படிக்க முடியாத வகையில் எழுத்துக்கள் சிதைந்துபோயிருந்த இடங்களில் —— இவ்வித புள்ளிகள் பொறிக்கப்பட்டுள்ளன.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

சுத்தமாயா தத்துவத்திலுள்ள விஞ்ஞானகலர் பிரகிருதக்குமேல் அசுத்தமாயா தத்துவத்திலுள்ள பிரளயாகல ரென்பவர்களுடைய பதமும், விஞ்ஞானகலர் பதத்திலிருப்போரிற் பற்றற்றவர்க்கு அங்ஙனமே பரமுக்தியும், மந்திரஜெப அனுஷ்டானங்கள் செய்கிறவர்க்கு இந்திரன் முதலானவர் பதமும், சாமானிய சமயதீக்ஷை பெற்று அனுஷ்டானங்கள் கைவிட்டுத் திரிந்தோர்க்குப் பிசாசர் குய்யகர் சித்தர் முதலானவர் பதமும், சாமவேத மஹா வாக்கியத்தில் அசிபதம் விளங்கிக் கிரியா சத்தியும் பிராரத்துவ கன்மமும் கன்மமலமும் நீங்கிச் சிவத்திற்கங்கமாய்ப் பிரகாசிப்போர்க்கு அப்பிறப்பிற்றானே தூலவடிவங்கரைந்து மறையும் அசிபத ஐக்கிய பரமுக்தியும் தத்பதம் விளங்கி ஞானசத்தியுஞ் சஞ்சித கன்மமும் மாயாமலமும் நீங்கி அதிஷ்டானப் பிரம்மசொரூபந் தானாகப் பிரகாசிப்போர்க்கு அடுத்த பிறப்பில் அந்த அசிபத ஐக்கிய பரமுக்தியும், தொம்பதம் விளங்கி இச்சாசக்தியும் ஆகாமிய கன்மமும் ஆணவமலமும் நீங்கிச் சுத்தமான கூடஸ்த சொரூபமாய்ப் பிரகாசிப்போர்க்கு அடுத்த பிறப்பிற் கடுத்த பிறப்பாகிய மூன்றாவது பிறப்பில் அந்த அசிபத ஐக்கிய பரமுக்தியும், சிவ யோகிகளுடைய திருவுருவத்தையும் திருவடியையும் அபின்னா பாவமாகப் பரிசித்துத் தொண்டு செய்கிறவர்க்கு 5 வது பிறப்பில் முக்தியும் ஞான சாதனத்தைப் பெற்றவர்களுடைய பாதோதகம் (புசித்து மீந்தது) பரிகலசேடம் இவைகளை யுட்கொள்ளுகிறவர்க்கு 8-வது பிறப்பில் முக்தியும், ஞானநிஷ்டாபரர்க்குரிய பணிவிடைகளைப் பக்தியோடுஞ் செய்கிறவர்க்கு 12 வது பிறப்பில் முக்தியும், ஞானநிஷ்டாபரரிடம் இலிங்காதரணஞ் செய்துகொண்டவர்க்கு 16 வது பிறப்பில் முக்தியும், ஞான நிஷ்டையின் முயற்சி யுள்ளவரது திருவடியிற் சிரசு பொருந்த வந்தித்தவர்க்கு 20 வது பிறப்பில் முக்தியும், ஞான நிஷ்டர் உடுக்க வஸ்திரம் நல்கிறவர்க்கு 22 வது பிறப்பில் முக்தியும், ஞானநிஷ்டாபரர்க்கு நாடோறும் போஜன முதலியன அளிக்கிறவர்க்கு 25 வது பிறப்பில் முக்தியும், ஞான நிஷ்டாபரர்க்கு அன்போடு மாளிகை கொடுத்துச் சந்தோஷிக்கச் செய்கிறவர்க்கு 28 வது பிறப்பில் முக்தியும், ஞான நிஷ்டாபரர் இருக்கு நாட்டில் மஹா வாக்கியத்தைச் சொல்லக் கேள்விப்பட்டவர்க்கு 30 வது பிறப்பில் முக்தியும், ஞானநிஷ்டாபரர் உலகிலுண்டென்று எண்ணிக் களிக்கிறவர்க்கு 34வது பிறப்பில் முக்தியும், ஞானநிஷ்டாபரர் உபதேசத்தைத் தெளியாது சந்தேகமாய் நினைந்து செய்கிறவர்க்கு

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

36 வது பிறப்பில் முத்தியும் இன்னண பக்குவங்கள் வராதார்க்கு அனேக பிறப்பின்மேல் முக்தியுமென்று மேலான ஆகம சாஸ்திரங்கள் அதிர்க்கின்றன.

புவன மென்பது :- ஆங்காங்குரிய தேகத்தைப் பொருந்தி வாழ்வதென்பதே கருத்து.

பஞ்ச பாச விவரம்

மேலே பஞ்ச பாச மென்றது :- 1 வது வியாசத்தின் 31 வது வினாவுத்தரத்தில் விளக்கயபடி தன்னையுஞ் சிவத்தையும் பிரகாசிக்காமல் மறைத்துச் செம்பிற்களிம்பு போன்றும் பரிபாகத்தில் நீங்குஞ் சக்தி யுடைய தாகவுமுள்ள ஆணவமாயும், அனுபவித்தாலன்றித் தீராததாய் விதிப்படியாற்றும் பிராய்ச்சித்தத்தாற் நீர்வதாய் சிருஷ்டி காலத்திலே காரியப்படுவதாயுள்ள சஞ்சித மாதி மூவித கன்மமாயும், பிரளயாகலர்க்கும் சகலர்க்கும் தனு கரண புவன போகங்களாயிரா நின்ற (மாயை) அசுத்த மாயையாயும், விஞ்ஞானகலர்க்குத் தனு கரண புவன போகமும் பிரளயாகலர்க்குஞ் சகலர்க்குஞ் செத்துந் தத்துவமா யிராநின்ற (மஹாமாயை) சுத்த மாயையாயும், சிவனை யறிய வொட்டாது மறைத்து ஆன்மாக்களுக்குப் பிரபஞ்சத்தை மெய்யென்று ருசுப்பிக்கிற (ஆதிசக்தி) திரோதாயியாயும் விளங்கும் ஐந்தையு மென்றறிக!

(4) சிஷி :- அறிந்தேன். சிரேஷ்டமென்றுரைக்கும் உட்சமயம் ஆறு பிரிவாகக் காண்கதென்னை?

குரு :- ஏகபொழுதே, மாலை யாமம் வைகறை விடியல் நண்பகல் எற்பாடு என ஆறு பிரிவாயேற்பட்ட தொப்ப அவ்வறு வகையும் எங்கும் அவிச்சின்ன ஏகாகாரமான பரமசிவத்தைக் குறித்துள்ளதே யொழிய வேறன்று.

(5) சிஷி :- என்னிமித்தம், இதுகாறுமெடுத்திறுத்த சமய விர்த்தாந்தங்களை யெல்லாம் ஓர்ந்தேன். பிறவும் எற்குண்டாகிய அனுமானங்களை அடுத்த திவாத் துவக்கத்தில் வழுத்திக்கொள அபேட்சிக்கின்றேன். விடை தந்தனுப்பியருள்க! தேவரீர் கஞ்சக்கழற்கு வந்தனம் வந்தனம்.

குரு :- நன்று நன்று. கருணாநந்தாலயன் சரணாநந்தம் பெருகுக.

சமயங்களைக் குறித்த வியாசம் முற்றிற்று

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

இக்கடிதம், ஸ்ரீமத் சுவாமிகளால் 7-12-1925 அன்று பெங்களூரில் வதிந்துவந்த தமது சீடர் திரு. K. ஆறுமுகச் செட்டியார் என்பார்க்கு எழுதப்பட்டது. இதில் ஸ்ரீமத் சுவாமிகள் ஸ்ரீ சுப்பிரமணிய பரமனின் பரத்துவமும், அப்பரமன்பால் ஸ்ரீமத் சுவாமிகள் கொண்டுள்ள அசைக்க முடியா நம்பிக்கையையும் ஒரு தெய்வ வழிபாட்டின் மேன்மையையும் பூரணமாக விளக்கியுள்ளார்கள்.

ஓம் குஹேசாய நம:

39, நம்புல் அய்யர் தெரு,
G.T.Madras
7-12-1925

குமரகுருதாசன் விஞ்ஞாபனம் -

யாவன் சுப்பிர மணியன்-
அவனது செப்பரும் பேரருள் யாண்டும் எஞ்ஞான்றும் முன்னின்றருள்க.

அன்பிற் பெரியாய்! நினது கடிதம் நன்கு கவனிக்கப்பட்டது. அது குருவின் உபதேசக் கிரம விருப்பையே குறிப்பாக வெளியிடுகின்றது. அதுபற்றியே யிங்ஙனஞ் சில நியாயங்களை யெடுத்துரைக்கத் துணிந்தேன்:-

சிரஞ்சீவி R. வெங்கோபராவுக்கு ஒரு படத்தை யான் பூஜித்து இதனை நீ பூஜிக்கலாமென உத்தரவளித்தேன். அவ்வளவிலே திருத்தியில்லாமே பெங்களூர் போந்து ஒரு கடிதம் வரைந்தமை கவனிக்கப்பட்டது. அங்ஙனம், தியானம் முதலியன செய்து பெரும்பயன் பெறவேண்டு மெனும் ஆசை தூண்டுதலை யறியலுற்றேன். அப்படியே இன்றுகாறுஞ்செய்து பயன் பெற்றாரையும் பேரருள் பெற்றாரையும் யானறிய கில்லேன். முற்காலக் கதைகளு ளொன்றனையும் யான் நம்பவில்லை. காரணம் அவ்வக்காலங்களில் அவ்வக் கதைகளெழுதப் பட்டனவல்ல; அடைந்தாரே தமக்குற்றபடி யெழுதி

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

வைக்கப்பட்டனவுமல்ல; இத்தேயத்தார்க்கு மதாபிமானத்தின் வழித் தம்மையுயர்த்திக்கொண் டுய்யலாமென்னுங் கருத்துட்பட்டுப் பொய் புகலலிலே பெரும்பான்மையு முடம்பா டெனல் வாய்ப்புடைத்தாகின்றது. ஒரு புத்தகத்திற்கொரு புத்தகத்தையும் ஒருவருக்கு மற்றொருவரையுங் கீழ்ப்படுத்தவோ, உயர்த்தவோவுள்கிய செய்கையால் பண்டைச் சுவடிகளுளொன்றன் கண்ணேனும் வருட மாதங் காட்டுங் கால விரவங் குறிக்கப்படவில்லை யென்பனவே.

ஐய! கால விரவமிருப்பின் ஐரோப்பியரும் பிறரும் இத்தேச சரித்திர உற்பத்தி யொடுக்கங்களுக்குரிய பல புத்தக மெழுதத்துணிவரோ? துணிந்து வரைந்த வற்றுள்ளும் ஒருவர் கொண்ட தீர்வை யொருவர் கொண்டாரல்லரெனலே சித்திப்பதாயிற்று. மாதமும் நக்ஷத்திரமுங் குருபூஜை நாள் குறிக்குமோ றேற்படுத்தின செய்கை யாது காரணம்பற்றி ஆட்சி புரிவாரது ஆண்டு குறித்திலது? கலியுக ஆண்டு இத்தனை யெனக் குறியாதது யாது கொலோ? அந் நக்ஷத்திரங் கடாம் எவ்வாற்றாற் கண்டுபிடிக்கபட்டன வென்னும் ஆசங்கை யொழியும் வழியுணடோ? எனுங் கடாக்கட்குபடுகின்றதே.

பண்டை நாள் முனிவரிரு டிகட்குள்ளேனுஞ் சருவஞ்ஞத்து மிருந்ததெனற்கும் வழியின்று. என்னை? பூதபௌஷிய வர்த்தமான நூலோன்றுமின்றே யென்ற வேற்படுதலின். குப்பல் குப்பலாகக் காணப்படுவனவற்றுள் பௌஷ்யோத்தர புராண மென வருங்கால முணர்த்து நூலொன்றிருந்து குறிப்பிட்ட வற்றொன்றும் நடவாமையாற் பொய்யாகவே யொழிந்து கிடப்பதாயிற்று. கற்பனைகளும் யுக்தி வாதங்களும் இங்ஙனம் யாது செய்யவுள? எம்மதப் புத்தகங்களிலுங் குறிப்பிட்டபடி நடக்கின்றனவெனற்கும் யாதொரு தெளிவுமின்றால். தேவ ரகசியம் இங்ஙனமாயின், எந்த வுலகினர்க்கும் ஈசன் சருவஞ்ஞத்துவம் அருளா னென்பதன்றோ நிலைக்கொள்வதாம். வீண் பெருமைகள் ஈண்டு யாதாம்!

"பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள் ...
சுவாமிகள் சமாதி நிலையம், திருவான்மி...
சென்னை - 600 041.
மஹாதேஜோ மண்டல சபை(ஸ்தாபிதம்: 19...
(பதிவு எண்: 15/1983)

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஒருயிரின் பிறப்பு, உடம்புக்குறி முதலியவற்றாற் கூறு சோதிட சாமுத்திரிகாதி நூல்கள், உலக முடிவுவரை கூறும் பூத பௌஷியார்த்தமான நூலாகமாட்டா. ஒருவரை நோக்கி யொருவர் கூறும் வருங்காலச் செய்திகளும் அற்ப கிராகியமேயல்லாது அந்தப் பூத பௌஷிய வர்த்தமான மெனப்படாதே.

இவை முதலியவற்றுள் எத்துணையும் ஆய்ந்துணரார் புத்தக விருப்பு, குருட்டு நம்புதலுடைத்தே. இந் நம்பலுடையார் செய்கை நிகழ்ச்சியிற் சில விவரிக்கின்றேன் - சுப்பிரமணியனும். உமையும் உமாநாயகனும் பசுவர்க்கத்து இருமலத்தினரெனச் சிலர் கூறினர்; கூறுகின்றனர்.

சிலர், முருகன் சாப வயப்பட்டவன்; அவனொரு பரம்பொருளாகானென்கின்றனர்.

சிலர், சிவனுடைய பரிவார தேவதைகளுளொருவனே கார்த்திகேய னென்கின்றனர்.

சிலர், சிவாலயங்களுட் சிவபூஜை செய்தவனே சேவலங் கொடியோனென்கின்றனர்.

சிலர், குமரன் ஞான சம்பந்தராகத் தோன்றிச் சிவஸ்துதி பல செய்த பரமுத்தனெனச் சென்றுவிட்டன னென்கின்றனர்.

சிலர், தேவார திருவாசகங்களாகிய தமிழ் வேதங்களிலே, சுப்பிரமணியர் தனியே துதிக்கப்படவில்லையாகலின் அவரைச் சிவனாக வழிபடல் சைவர் கொள்கை அன்றென்கின்றனர்.

சிலர், குமரனைப் பெரிய தெய்வமாகக் கோடல் "சிவகுரு" என்னுமுரை கொண்டாகலின் அது கௌமார சமயமாம். அது சைவர்க்குடம் பாடன்று என்கின்றனர்.

சிலர், சைவாகமத்திற் சாற்றப்படுகின்ற 224-புவனங்களுள் 164 -வதான ஸ்ரீ கண்ட புவனத்திற்கும், 163-வதான உமா புவனத்திற்குங் கீழ் நிலைக் களமாய 162 - ஆம் புவனங் கௌமாரமகலிற் குமாரன் எத்துணைக் கீழ் நிலைத் தேவனாகின்றானென்கின்றனர்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

சிலர், ஒரு பழத்திற்காக உலகை வலம் வந்த கந்தர் யுக்தி, கணபதியின் யுக்தி போன்றதன்றென இழிவு கூறுகின்றனர்.

சிலர், வள்ளியின் மோகத்தால், அழுதார்; புலம்பினார்; மடலேறுவேனென்றார். களவொழுக்கமாக அவளைக் கைப்பற்றினார் கந்தராகலின் அவரொரு தமிழரே யென்பதைக் கச்சியப்பர் கந்தபுராணமும் தணிகைப் புராணமு நிச்சயிக்கும். இவ்வாற்றான் அவரொரு தமிழச் சித்தராக மதிக்கப்படுவா றென்கின்றனர்.

சிலர், சேயவனுக்குண்டான வெற்றி, சூரபன்மா காலவயப்பட்டமையே, இராவணனைப்போல என்றிழுக்க மியம்புகின்றனர்.

சிலர், வேலர்க்கு வெற்றி தந்தது சிவன் கொடுத்த வேலே யென்கின்றனர்.

சிலர், ஸ்காந்தமெனும் புராணம் சிவனுக்குங் குகனுக்குஞ் சமத்துவங் கூறுவது- இருமலப் பிரளயாகலருளொருவனாய் பிரமா முதலிய மூவருளொருவனாயுள்ள ஸ்ரீகண்ட ருத்திரனே அந்தச் சிவன்: அவன் 224 - புவனங்கட்கும் அப்பாலேயுள்ள சைவசித்தாந்த சிவனல்லனாகலின் இச் சிவனோடு சமத்துவங் கூறொண்ணாதெனுந்துணிபு பிடித்தென்க என்கின்றனர்.

சிலர், சிவனையும் மகன் முருகனையுந் திரிமூர்த்திகளின் மேம்பட்ட நான்காவது தெய்வமென்று வடமொழிக் காந்தமும், உபநிடதங்களுங் கூறுமேயென வடிவேலனடியர் வழுத்தத் துணிந்தக்கால் அது, சைவர்க்கு முக்கிய நூலாகிய ஆகம விரோதமாம் என்கின்றனர்.

சிலர், மலைக்குறவர் வழிபட்டு குறிஞ்சி நிலத்தேவதையே முருகனென்பதைத் திருமுருகாற்றுப்படையுந், தொல்காப்பியமுந் தாபிக்குமாகலின் அவனொரு பரம்பொருளாகா னென்கின்றனர்.

சிலர், இழிகுலத்து வள்ளுவர் சகோதரியே வள்ளி: அவளை மணந்தமையாற் குமரன் குறிஞ்சி வேந்தனென்பதைக் கபிலரகவல் கழறுமென்கின்றனர். மயில் சேவல்களுங் குறிஞ்சி நிலப்பறவையே யென்கின்றனர்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

சிலர், சைவாகம சமய விசேட நிருவாண தீக்ஷைகளில் வழிபடத்தக்க ஸ்ரீகண்ட ருத்திரர், மகேசுவரர், சதாசிவ ரென்பார் உபதேசிக்கப்பட்டிருத்தல் போலக் கந்தர் உபதேசிக்கப் படவில்லையே என்கின்றனர்.

சிலர், சிவனால் வீடு பேறடைந்த அனேகருள் அறுபான் மும்மை நாயன்மாருமுளர். கந்தரால் வீடு பேறடைந்தார் அத்துணைப் பெயர்கள் காணப்படவில்லையேயாகலின் இவரனுக்கிரகம் விசாலித்து நிற்பது யாங்ஙனம் என்கின்றனர்.

சிலர், நாயன்மார்களுள் நால்வர் சிவனைப் பாடியருள் பெற்றுய்ந்தார். சிறப்பாக: அருணகிரியாரை யன்றிக் கந்தரை அங்ஙனம் பாடினார் அதிகமிலரே இவ்வாற்றானுங் கந்தரைப் பற்றல் சிறப்பிலதன் றெனல் வாய்மையாகின்றதே என்கின்றனர்.

சிலர், குமரனொருவனையே, பரமேசுவரனாகக்கொண்டு நிற்கும் வழிபாடு, இல்லறத்தைக் கெடுக்கும் : இதற்குப் பாம்பன் குமரகுருதாசரே சான்று என்கின்றனர்.

இன்னுஞ் சிலர் தத்தமக்கேற்றவாரெல்லாங் கந்தன் விடயமாகக் கழறலுள்ளன. அக்கழறலுள் சிவநிந்தை பரப்பும் வைணவ புத்தகம் வேலனென்பார்க்கு வேல் கொடுத்தவர் நாராயணரே யென்றுங் கூறகின்றது. கார்த்திகைப் பெண்கள் முலை குடித்து வளர்ந்து வளர்ந்து ஆளான குமரன், பரிணாம தேகியன்றோவென்றும் ஒரு சார்ச் சைவர் கூறவுள்ளாரால்.

ஐய! இவ்வித போராட்டங்களுள் எத்துணை யெத்துணை படித்தனரோ? கேட்டனரோ? அத்துணை யத்துணை நம்புதல் கொண்டு நிற்குநரையிங்குக் கணக்கிட்டுரைத்தலுங் கூடுமோ? நம்பாது போதற்கு வேறு பிரமாணமோ, அனுபவமோ, கொண்டுள்ளாரை யான் சிரேட்ட நிலையிற் கண்டிலேன். இவரோடுதானே நீயுஞ் சேரவேண்டும். குமராலய வழிபாடு செய்வார் பலரையும், கார்த்திகை சஷ்டி விரதர்திகள் அனுட்டிப்பார் பலரையு நோக்கி அனேகர் சுப்பிரமணியரைத் தொழுவாராயுளரே யெனப் பலரும் பகரக்கூடும். அவரெல்லாம், ஆன்மார்த்தமாய்ப் பந்த விடுதலையை நாடி அவனடிமைகளாய்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

நிற்குநரென எண்ண முடியாது. இத்தேயத்தார் பல தெய்வ வழிபாடுடையார். இவருக்கு ஒரு தெய்வ வழிபாடுதான் யாங்ஙனம் பொருந்தும்? அங்ஙனமாயினும் முருகவேள் சரணை நம்பற்குத் தக்க ஆதாரம் யாதாம்? பல தெய்வக் கொள்கையிலே முருகவேளையுஞ் சேர்த்துக்கொண்டுதான் கும்பிடுவது கூத்தாடுவதெல்லாம் வைத்தெண்ணக் கிடக்கின்றன.

இவ்வழி பிடித்தே நிற்பாரோடு சேர வேண்டிய நீயும் நின்போல்வாரும் தங்களாலியன்ற கைங்கரியங்களை உதவிகளைச் செய்து கிடைக்கும் புண்ணியத்தைப் பெறுதலே நியாயமாகும்; செவ்வேட்பரமனது பக்தியிலே. முருகனுக்குமா, சகச்சிரநாம நூலிருக்கிறதென்று வினவினாரையும், "உமை முருகன் கணபதி முதலிய பலரையும் யான் கண்டுவிட்டேன். அந்தச் சிவன்தான் காணக் கிடைக்கவில்லை" என்று செவ்வேளை யிழித்துக் கூறினாரையும் யான் தென்றேயத்திற் கண்டுளேன். இன்னோர்க்கும், இன்னோர் போன்றோர்க்குமோ, அச் செவ்வேட் பரமனது பக்தி தலைப்படும்! கண்ட வடிவு அண்ட கோடிகளை யெல்லாந் தாங்கியுள்ள பரமேச்சுர ருபந்தானோ? சிவபிரான்முன் பிரணவோபதேச பொருளுரைத்த வடிவந்தானோ? மற்றியாதோ? என யான் வினவினேனல்லேன்.

கூறிப்போந்த இழவு இழிவுபாடுகளை யெல்லாம் யான் கண்டித்தொழிக்கும் வன்மை பெற்றேனே யொழி மயங்கியுழிதருஞ் செய்கையினின்றே னல்லேன். என்னை? அவன் வழிபாட்டின் வாயிலாக வெனக்குக் கிடைத்த கல்வி வலியும், யுக்தி வலியும், சாக்கிரத்தும், நிஷ்டையகத்தும் அவனைத் தெரிந்துகொண்ட வாய்மை வலியும், என்னாலுனக்கு விடுதலையில்லையோ என்றருளிய அவனது கருணை வலியும், பிற கிருபானுக்கிரக செய்கைகளும் என்மாட்டு நிகழ்ந்திருத்தலின். அனேகமாக ஸ்ரீமத் குமாரசுவாமியத்துங் கூறியுள்ளேன் உள்ளபடியே. இன்று காறும் என் கூற்றுக்களுள் வெளிப்படாத முக்கியமொன்று மின்று. இவ்வாற்றானே அவ்வொருவனையே நம்பி நிற்கும் யான்:-

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

"விண்ணின் மேலொரு பூதமின்றென வெண்ணு வாரென வேளின்மேல்
எண்ணவோர் பொருளின்றி ருப்பினு மிச்சி யேனதை"

என்று அசோக சாலவர்சத்திற் கூறப்பட்டபடி செவ்வேளின் மேலொரு தெய்வமில்லை. இருப்பினும் அதை விரும்பேனென்னுந் துணிபிலேயுள்ளேன்.

இத்துணிபினின்று கொண்டு :-

"வானமிடிந்து தலையில் விழும்படி வம்பு வந்தாலு மென்னை,
அந்தக் கானமயின் முருகையன்றிருவருள் கைவிட மாட்டாதே"

என்று வைரஞ் சாதிப்பது மென் கடன்மையே. இப்பிடிப்பு, சரியோ, சரித்தப்போ, அவன் செயலின்படி எனக்கு வாய்ப்பது உயர்வுடைமையோ, இழிவுடைமையோ, என்னு நிச்சயத்தில் யாது வரினும் மகிழ்ச்சியோடு இரண்டு கையும் ஏந்தி மனத்தை யொருமுகப்படுத்தி பெறவுள்ளேன்.

அம் முருகநாதனது கந்தலோக வாழ்க்கையிலேயே சாலோக சாமீப சாரூப சாயுச்சியங்களுமுள்ளன; அவன தனுக்கிரகமே அவற்றினை நல்குந்தகைமைத்து; இதற்கு வேறாகக் கூறுவார் கதிகளையெல்லாம் யான் அங்கீகரிக்கவில்லை யென்பதைச் செக்கர்வேள் செம்மாப்புக்குப் பின்னே பிறங்குஞ் செக்கர்வேளிறுமாப்புச் செவ்வனே விளக்கிக் கூறவுள்ளதால், சிவபிராற்கடிய ரெனவே முன்னிருந்தார் பலருங் கைலாய சிவலோகங்களை வருணித்து வருணித்து பாடினாரே யல்லாற் கந்தலோகத்தை வருணித்தாரல்லர்: கந்த பக்தியினமையால். என்போல்வார் யாது செய்வர்!! என் கல்வி யறிவுக்குத் தக்க படி அதுவும் அவ்விறுமாப்பிலும், ஸ்ரீமத் குமார சுவாமியத்திலுங் கூறப்பட்டுள்ளது. வேத முதலிய வைதீக நூல்களுள் பரலோகமே கதியென்பதை ஸ்ரீகண்ட பாஷ்யா சாரியருந் தேவார ஆசிரியன்மாருந் தாபித் துளது மறுக்கற்பாலதோ? ஏகான்மவாதி செய்யும் பொருளை என் நூல்கள் அங்கிகரிக்கவில்லையே. ஆண்டவனெருவனுளன் என்னும் ஆஸ்திகரெல்லாம் அழியாத சொர்க்கலோக மொப்புகின்றனரே. மூர்த்தியனுக்கிரகமே, மோக்ஷமென்பதை இறுமாப்பெடுத்துச் சாதிப்பதுபோல எந் நூலெடத்துச் சாதிக்கவல்லும்?

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

யான் கூறுதல் சிலருக்கு அங்கீகார மில்லா திருத்தல் கூடும். அவரும், அவர் போன்றாரும் எனது வழியைப் பற்றி நின்று கேடடைதல் வேண்டாவென் றிரங்குவோனாகவும் யானுள்ளே னாகலின், மூக்கறையன் கதை போலாகாத வாறு நீ இராஜபாட்டைபோற் காணப்படுகிற அனேகரால் அனுஷ்டிக்கப்படுகிற சைவத்திலே வைணவத்திலே புகலாமே, என்னை யடுத்திருக்குஞ் சீடர் போலக் காணப்படுவார்க்கும் இவ்வாறு போதித்தே வருகிறேன். அவர்களுக்கும் அக்குமரகுரு இரங்கியருளினதாக யாதும் பிரபலமாய்க் காணப்படவில்லை. வாயை வாயைத்தான் சப்புகின்றனர். அவர்களை யானு நம்பவில்லை. என்னாலும் ஒன்றும் செய்யக்கூடவில்லை. கூட்டங் கூட்டி ஆடம்பரஞ் செய்யவு மென் மன மிணங்க வில்லை. இவர்களுட் சிலர் தள்ளினும் போகோம், நன்மை கடைப்பிடியென்றபடி நிற்போமென் கின்றனர். சமீபத்திற் சில பேத சைவர் போதித்தபடி மாற்றுயர்ந்தாரால் வழுததப் பட்ட மாற்றுயர்ந்த புஸ்தகங்களை நீங்கள் பாராயணம் பண்ணிக் கொண்டிருந்து மரணமாவிரேற் சிறந்த கதியடையலாம்: என் புத்தகங்கள் மாற்றுயர்ந்தனவல்ல; அவரபிப்ராயப்படி அருணகிரியாரும் மாற்றுக் குறைந்தவராகலின் அவர் பாடல்களும் பெருநல நல்காதே யென்றும் என்னை யடுத்திருப்பார்க்குப் பன்முறையும் போதிக்கத் துணிந்தேன். அங்ஙனமவர்கள் சண்முகக் கவச மகிமை பலவிடத்தும் பல்கிக்கொண்டு வருகிறதே முருகப் பெருமானை யாங்கள் விட்டுவிட நியாய மேற்படாதென்றும் உறுதி வார்த்தைகள் பேசுகின்றனர். இறைவன் திருச்செந்தூரிலங்கீகரித்துள்ள பஞ்சாமிர்த வண்ணம் இலேசாக நினைக்க வுள்ளதோ? என்றும் பேசத் துணிகின்றனர். உலகம் பலவிதம், அதற்கு எங்களை யுட்படுத்தல் கூடுமோ வென்றும் ஒருவர் அரைமணி நேரம் வாதித்தே சுப்பிரமணிய வியாசம் பெற்றனர். பலவு முணர்ந்தனர்.

எட்டு வருடங்கட்கு முன்னே ஒரு தமிழ்ப் பண்டிதர் தமது கனவிலே குமரகுருதாசர் பாடலை நீ படித்துணரென்று சொன்னதாக என்னிடந் தெரிவித்துக் கொண்டார். அவ்வாறு அவர் படித்ததை யான் கண்டிலேன். எனக்குச் சீடரெனச் சொல்லிக்கொள்வாரும் படித்துப் பொருளறியப் பாடம்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பண்ணித் தோத்தரிக்க யான் கண்டதில்லை. ஊரிலுள்ள பலர் படித்த பாட்டுக்களையும் தேவாரப் பாட்டுக்களையுமே அவர்களுட் சிலர் பாடுவதுண்டென்று என்பாற் சிலர் தெரிவித்துக்கொண்டனர். இதனை யோர்ந்திருந்த யான்-ஐந்து மாதங்களுக்கு முன்னே வாலாஜா பேட்டையிலுள்ள வொருவர், என் சீடராய் ஸ்கூல் இனிஸ்பெக்டராயுள்ள ஒரு பிள்ளையினிடம் சண்முகன் மந்திரத்தை யெனக்கு முபதேசியுங்க ளென்று பன்முறை கேட்டதைப்பற்றி யெனக்குத் தெரிவித்ததன் பின்பு அவரை செய்யுள் நூல் ஆறு மண்டலங்களுக்குள் 100 செய்யுள் பாடங் கொடுக்கும்படி யெச்சரித்திடுக வென்றியம்பினேன். அது செவிக்கொண்ட பின்னர் அவரைக் காணேனெனுஞ் செய்தியைப் பிள்ளை யெனக் கறிவித்துவிட்டுக் கொக்குத் தலையில் வெண்ணெய் வைத்துப் பிடிக்கத் துணிவதை யொத்தனவே யிச்செய்கைகளென நிச்சயித்தனர். இதிலிருந்து 100 செய்யுள்பாடம் விரும்பப்படுவதோடு ஏகதெய்வ வழிபாடும் வன்மையாக எச்சரிக்கப்படுவதாயிற்று. அவ்வெச்சரிப்புப் பிரமாணம் பண்ணி வாங்கப்படுமென்பதோடு நிகழவே, சிலர் விருப்பத்தை விட்டனர். சிலர் பிரமாணத்தையும் மீறிப்புறநடை கொள்வாராயினர். 15 ஆண்டு வரை சீடராய் நடந்து வந்தாரைப் பகைமை நிலை நிற்கவுங் கண்டேன். இவ்வளவிலே யெவரையு மங்கீகரிப்பதை யொழித்து நிற்குநனாயினேன். யாரையு நம்பொண்ணாதெனுந் துணிபு மிங்ஙனமே தான் பிறப்பதாயிற்று.

"நெருப்பாறு மயிர்ப்பாலம்"

என்பதை யெவருணர்ந்து நடப்பவராவர்? துறவற நெறியோன்றே யென்னாற் பேணப்படுவதாகிப் பிறர் வந்தன வழிபாடுகளையும் ஏற்றுகொள்ள மாட்டேனென்னு நியதியிலே உயிரொடு செத்த சவம்போலுள்ளேன். எனது மனத்திற்கு யான் போதித்துத் திருப்தி செய்வது யாதெனில், "பாம்பன் நகரைவிட்டு வருங்கால் இனிச் செவ்வேள் திருவடி சேராமேயிவ்வூருக்கு வருவதில்லை யென்னுந் துணிபிற்கிசைந்த நீ! இனி யெந்த ஆடம்பர ஆசையிலும் புகாதிருத்தல் கடன்மையன்றோ? எக் கூட்ட நாட்டங்களும்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

நினக்கேற்புடைக் காரியமன்றே? கால் இரண்டாக முறிந்து வைத்திய சாலையிற் கிடந்து மரணத்தை யெதிர்பார்த்தபோது நேசித்திருந்த சைவர் முதலினோருள் அனேகரை அங்கே நீ காணவில்லையே? முருகப் பெருமான் கிருபை யிருந்தபடி புதியரும் பழையர் சிலருமன்றோ பரிதபித்தரற்றி உற்ற வுதவி புரிந்தனர். பெருமானன்றோ பெருங்கருணை காட்டித் தெய்வீக வைத்தியமுந் தெரிசனமுங் கொடுத்திரக்ஷித்தருளினன் அவனது பெருங்கருணையைக் கருதிக் கருதி மகிழ்ந்தும் விடுதலையை யவாவியு நிற்கும் எனது நன்மனமே! உலகர் நடை பொறாமையிற்றலைப்பட்டு நிற்பதே, அதற்காகவும் நினக்குக் கவலை வேண்டாம்" என்பதே. மேலும், "பலவகைப் பிரசங்கம், செய்யுனூல்களை யுரைப்படுத்தி யோதல், பரோபகாரஞ் செய்ய வுள்ளே னெனப் பகட்டல், முனிவரென வேடம் போடல், மடந்தடம் முதலியன செய்து அறந்தேட வேண்டுமென்றல், பாட்டுப்பாடல், மத்தளமடித்தல், தாளந்தட்டுதல், வீணை மீட்டுதன் முதலியவெல்லாம் தபமென்பதொரு சிறிதுமில்லாமே, சொன்றிக் குழிசியுஞ் சொர்னப் பேழையும் அவாவுவார் செய்கை யென்பதை நீயுமறிவாய் எனது நன்மனமே!" என்பதே.

அன்பார்ந்த ஆறுமுகமே! விரும்பலுளதேல், நீயுமொரு முருகவேள் படத்தைப் பூஜித்து வரலாமென ஓரளவுரைக்கின்றேன்.

இந்த நீண்ட கடிதத்தை அன்பார்ந்த சுவாமிநாத பிள்ளை முதலினோர் முன்னிலையிலே படித்துணர்.

இங்ஙனம்

நுங்களன்பு

குமரகுருதாசன்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள் வாழ்ந்த பாம்பன் இல்லம்

திருப்பிரப்பன்வலசை திருக்கோயில்

பாம்பன் சுவாமிகள் சமாதி

Center for Shaiva Studies, Pondicherry Collection